# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

பக்கம்

1. கணக்குகளும் நிதியும் 1
2. வங்கி மேற்பார்வை 67
3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் 71
4. தொடர்பூட்டல் 72
5. நாணயம் 74
6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் 76
7. பொருளாதார ஆராய்ச்சி 79
8. ஊழியர் சேம நிதியம் 83
9. செலாவணிக் கட்டுப்பாடு / வெளிநாட்டுச் செலாவணி 87
10. வசதிகள் முகாமைத்துவம் 93
11. நிதித் திணைக்களம் 93
12. நிதியியல் உளவறிதல் பிரிவு 95
13. மனித வளங்கள் 97
14. தகவல் தொழில்நுட்பம் 100
15. உள்ளகக் கணக்காய்வு 102
16. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் 102
17. சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் 105
18. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு 106
19. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் 106
20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு 109
21. பொதுப்படுகடன் 110
22. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 112
23. பிரதேச அலுவலக முகாமைத்துவம் 119
24. இடர்நேர்வு முகாமைத்துவம் 120
25. செயலகம் 123
26. பாதுகாப்புப் பணிகள் 124
27. அலுவலர் பணிகள் முகாமைத்துவம் 125
28. புள்ளிவிபரவியல் 125
29. நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வை 129
30. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை 129
31. பயிற்சி மற்றும் அபிவிருத்தி 134

# 1. கணக்குகளும் நிதியும்

## 2017ஆம் ஆண்டுக்கான நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் செயற்பாட்டு அறிக்கை

1. அறிமுகம்

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது நாணயச் சபையின் உபகுழுவொன்றாகும். இக்குழுவானது நிதியியல் அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடுகளும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளும், இணங்குவிப்பு, உள்ளகக் கணக்காய்வு மற்றும் வெளிவாரிக் கணக்காய்வு என்பவற்றுடன் தொடர்புடைய கொள்கை மற்றும் விடயங்களில் நாணயச்சபைக்கு ஆலோசனை வழங்குகின்றது. மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது காலாண்டுக்கொரு முறை அல்லது தேவைப்படும் போது அதன் விதந்துரைகளையும் செயலாற்றத்தினையும் நாணயச்சபைக்கு அறிக்கையிடுகின்றது.

2. மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் அமைப்பு

மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது நாணயச்சபையின் நியமன உறுப்பினர் ஒருவரினால் தலைமைவகிக்கப்படுவதுடன் இரண்டு வெளிவாரி தொழில்சார் கணக்காய்வு நிபுணர்களையும் உள்ளடக்கியிருக்கிறது. நாணயச் சபைக்கான செயலாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு செயலாளராகவும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உதவிச் செயலாளராகவும் இருப்பார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கான செயலகப் பணி வசதிப்படுத்தல்களை வழங்குகின்றது. கணக்காய்வாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் இலங்கை மத்திய வங்கியின் வெளிவாரிக் கணக்காய்விற்குப் பொறுப்பான கணக்காய்வுக் கண்காணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கு அவதானிப்பாளராக கலந்து கொள்வார். நிதித் திணைக்களத்தைக் கண்காணிக்கும் உதவி ஆளுநர் மற்றும் வங்கியின் இணங்குவிப்பு அலுவலர் ஆகியோர் அவதானிப்பாளர்களாகவும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரை வசதிப்படுத்தும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தொடர்பான அலுவலர் ஆகியோர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் ஏனைய ஒழுங்கான பங்கேற்பாளர்களாவர் தேவைப்படுமிடத்து, மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் தலைவரினால் திணைக்களத் தலைவர்கள் உள்ளீடுகள் மற்றும் விளக்கங்களை வழங்குவதற்காக அழைக்கப்படுவர். வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் போது வெளிவாரிக் கணக்காய்வினை மேற்கொள்வதற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனத்தின் ஈடுபாட்டு பங்காளர் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான குழுவின் அமைப்பு பின்வருமாறு:

i. திரு. ஏ என் பொன்சேகா - தலைவர்

ii. திரு. எச் எம் ஏ ஜெயசிங்க - உறுப்பினர் (15.08.2017 இலிருந்து நடைமுறைக்கு)

நாணயச் சபையானது திரு. எச் எம் ஏ ஜெயசிங்க நியமிக்கப்படும் வரையில் திரு. எம் ஆர் மிகுலர் மற்றும் திரு. ஏ எம் பற்றிக் ஆகியோரின் பதவிக்காலத்தை 2008.02.08ஆம் நாளிலிருந்து நீடித்தது.

குழுவானது ஒரு வருடத்தில் குறைந்தது ஆறு தடவைகள் அல்லது மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் தலைவரின் தீர்மானத்தின் படி அல்லது நாணயச்சபையின் பணிப்புரையின் படி சந்திப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. குழுவின் கூட்டமானது குழுவின் செயலாளரினால் கூட்டப்படும். ஒரு கூட்டத்திற்கு தவைலர் உள்ளடங்கலாக இரண்டு (02) உறுப்பினர்களைக் கொண்ட நிறைவெண் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

3. 2016இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

2017 காலப்பகுதியில் மதியுரைக் கணக்காய்வுக் குழு ஆறு (06) கூட்டங்களை நடத்தியுள்ளதுடன் பின்வருவன தொடர்பில் விதந்துரைப்புக்களை மேற்கொண்டுள்ளது.

அ) நிதியியல் அறிக்கையிடல்:

குழுவானது,

i. 2016 செத்தெம்பர் 30ஆம் நாளுடன் நிறைவடைந்த காலத்திற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு மீதான இடைகால பிரச்சனை தொடர்பான விஞ்ஞாபனத்தினை மீளாய்வு செய்ததுடன் நாணயச்சபைக்கு விதந்துரைப்புக்களை மேற்கொண்டது.

ii. 2015ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்தியவங்கியின் நிதியல் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை மீளாய்வு செய்தது.

iii. 2016ஆம் ஆண்டுக்கான வெளிவாரிக் கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதத்தினை மீளாய்வு செய்ததுடன் கொள்கைகள் மற்றும் கணக்கியல் முறைகள் போன்றவற்றின் மாற்றங்கள் தொடர்பில் விதந்துரைப்புக்களை மேற்கொண்டது.

vi. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் இல. 09 நிதியியல் சாதனங்களுக்கு மாறிச்செல்லுதல் குறித்து கலந்துரையாடப்பட்டது.

ஆ) உள்ளக கட்டுப்பாடுகளும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளும்:

குழுவானது,

i. இலங்கை மத்திய வங்கியிலான தகவல் முறைமைகளின் பாதுகாப்பின் மிதான உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் கண்டறிவுகளை மீளாய்ந்ததுடன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த உரிய நபர்களை வழிநடத்தியது.

ii. இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்களின் உள்ளகக் கட்டுப்பாடுகளும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் திருத்தமச் செயற்பாடுகள் என்பவற்றிலன் போதுமாந்தன்மை மற்றும் வினைத்திறன்கள் என்பவற்றை மீளாய்ந்து ஆலோசனை வழங்கியது.

இ) உள்ளக கணக்காய்வு:

குழுவானது,

i. 2018 - 2020 வரையான காலப்பகுதிக்கு உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட உபாய உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் வருடாந்த கணக்காய்வுத்திட்டம் என்பவற்றை மீளாய்வு செய்ததுடன் நாணயச் சபையின் ஒப்புதலுக்கு பரிந்துரைத்தது.

ii. உள்ளக கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அவதானங்கள் மற்றும் அதனைத் தொடர்ந்த தன்மைகள் என்பன தொடர்பில் திணைக்களத் தலைவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தது.

iii. அனைத்து கணக்காய்வினதும் இடர்நேர்வு கணிப்பீட்டிற்கான பரிதுரைக்கப்பட்ட முறை குறித்து மீளாய்வு செய்தது.

iv. கணக்காய்வு வசதிப்படுத்தல் வழிகாட்டிகளிற்கான திருத்தங்கள் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திணைக்களத்தின் வளங்கள் என்பவற்றை மீளாய்வு செய்தது.

# இலங்கை மத்திய வங்கி

**முகாமைத்துவக் கூற்று**

**2017 திசெம்பர் 31இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரியது**

## இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்பான பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றமும்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச் சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால், மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத் தன்மைக்கான பொறுப்புடைமையின் அடிப்படையானது அதன் பிரதான குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளினூடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக் கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்குள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக் கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமை வாய்ந்ததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோள்களிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது.

இப் பின்னணியில், மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல் ஆகியவற்றை அமுலாக்குகின்ற போது உருவாகின்ற இலாபம் மற்றும்/ அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதால், இக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச் சூழலமைவிற்கிணங்க வரைவிலக்கணம் அளிக்கப்படுதலும் புரிந்து கொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது, நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு கேபிஎம்பி பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக் கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } பீஏஎவ்/எச்/சீபீஎஸ்எல்/1/17/1 — මබේ අංකය / உமது இல. / Your No. } — දිනය / திகதி / Date } 2018 ஏப்ரல் 03

**கௌரவ நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்,**

**இலங்கை மத்திய வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது நாணய அதிகாரச்சட்டத்தின் (422 ஆம் அத்தியாயம்) 42(2) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**அபிப்பிராயம்**

இலங்கை மத்திய வங்கியின் ("வங்கி") 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஏனைய விரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களின் கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் நாணய அதிகாரச்சட்டத்தின் (422 ஆம் அத்தியாயம்) 42(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுடனான இணங்கியொழுகுதலை பரீட்சிப்பதற்காக பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் எனக்கு உதவியளிக்கப்பட்டது.

வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்எஸ்) இணங்க மேற்படி நிதிக்கூற்றுக்கள் அனைத்து பொருண்மையான விடயங்களையும் நியாயமாக பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்ஏ) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பந்தியில் அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Poiduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

மேலும் விபரிக்கப்படுகின்றன. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஒழுக்கநெறிக் கோவைக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வுடன் தொடர்புடைய ஒழுக்கநெறி தேவைப்பாடுகளிற்கு அமைய நான் வங்கியின் செயற்பாடுகளிலிருந்து சுயாதீனமானவனாக உள்ளேன் என்பதுடன் இத் தேவைப்பாடுகளிற்கு இணங்க எனது ஏனைய ஒழுக்கநெறி பொறுப்புக்களையும் நான் நிறைவேற்றியுள்ளேன். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**நாணயச் சபையின் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நாணயச் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு வங்கியின் நாணயச் சபை பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், வங்கியின் தொடந்தியங்கும் நிலையை தொடருவதற்கான இயலுமை, வெளிப்படுத்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பிரயோகித்தக்க விடயங்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்கும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருக் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்துவதற்கும் நாணயச் சபை பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வையிடுவதற்கு ஆளுகைக்குட்பட்ட மேற்படியுள்ளவர்கள் பொறுப்பாவர்.

**நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக உள்ள போதிலும், சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வு பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாக செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கொள்ளப்படும்.

AGDSL

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

சர்வதேச கணக்காய்வு நியமங்களின் (ISA) பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பிடுதல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுக்களை பெற்றுக்கொள்தல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் மற்றும் ஏனைய உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லைமீறல்களை உள்ளடக்குவதால், மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டு பிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறினைவிட கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பிடுதல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நாணயச் சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

அறிக்கைத் திகதி வரையிலும், பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்படுகின்றன. இருப்பினும், எதிர்கால நிகழ்வுகளும் நிலைமைகளும் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமைய முடியும்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பிடுதல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட ஏனைய விடயங்களான கணக்காய்வின் திட்டமிடப்பட்ட நோக்கெல்லையும் காலமும் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள எவையேனும் முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பில் நாணயச் சபையுடன் நான் தொடர்புபடுகின்றேன்.

**பாராளுமன்றத்துக்கான அறிக்கை**

அரசியலமைப்பின் 154(6) பிரிவின் விதிமுறைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்திற்கு எனது அறிக்கை அட்டவணையின் அடிப்படையில் இருக்கும்.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்: எச். எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

# இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் நிலைமைக் கூற்று
## 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறானது

| | குறிப்பு | 2017<br>ரூ.000 | 2016<br>ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவையும் காசுக்குச் சமமானவையும் | 5 | **459,827,641** | 423,783,737 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 6 | **45,264,376** | 43,278,755 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 6 | **566,228,935** | 348,544,650 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 7 | **4,940,455** | 198,880 |
| ப.நா. நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 8 | **126,838,152** | 117,008,340 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | | **3,670,494** | 6,175,049 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **1,206,770,053** | 938,989,411 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 9 | **32,080,086** | 351,426,470 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 10 | **199,800,871** | 83,306,771 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 11 | **223,702** | 484,043 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட பங்குரிமை முதலீடுகள் | 12 | **41,095** | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 13 | **12,882,470** | 12,492,990 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **245,028,224** | 447,751,369 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **1,451,798,277** | 1,386,740,780 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| தங்கம் | 14 | **126,583,727** | 111,009,339 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 15 | **6,875,533** | 6,114,861 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள் | | **1,534,848** | 7,056,407 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள் | 16 | **17,960,517** | 18,132,390 |
| அருவச் சொத்துக்கள் | 17 | **80,623** | 156,320 |
| **மொத்த நிதியல்லாச் சொத்துக்கள்** | | **153,035,248** | 142,469,317 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,604,833,525** | 1,529,210,097 |
| **பொறுப்புக்களும் உரிமை மூலதனமும்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 18 | **8,683,033** | 45,566,681 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 7 | **4,648,449** | 14,573,675 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 19 | **90,868,160** | 79,863,615 |
| ப.நா.நிதியம் | 20 | **318,665,332** | 269,540,596 |
| ஏனையவை | 21 | **64,095,889** | 96,250,032 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **486,960,863** | 505,794,599 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 22 | **341,712,198** | 303,251,290 |
| அரச மற்றும் அரச முயற்சிகளிலுள்ள வைப்புக்கள் | 23 | **324,517** | 450,884 |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 24 | **40,655,278** | 70,054,436 |
| ஊழியர்கள் நன்மைகள் திட்டத்திலுள்ள மீதிகள் | 25 | **4,547** | 51,744 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 26 | **598,053,901** | 552,777,865 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 27 | **8,887,156** | 8,563,548 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **989,637,597** | 935,149,767 |
| **மொத்த நிதியியல் பொறுப்புகள்** | | **1,476,598,460** | 1,440,944,366 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 28 | **45** | 80 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 29 | **671,061** | 2,429,153 |
| பல்வகைப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 30 | **211,720** | 193,297 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | **882,826** | 2,622,530 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,477,481,286** | 1,443,566,896 |
| **உரிமை மூலதனம்** | | | |
| மூலதன நிதியம் | | **50,000,000** | 50,000,000 |
| ஒதுக்குகள் | 31 | **77,352,239** | 35,643,201 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **127,352,239** | 85,643,201 |
| **மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம்** | | **1,604,833,525** | 1,529,210,097 |

நாணயச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2018 மாச்சு 20ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி - ஆளுநர்

யு.எல் முத்துகல - பதில் முதன்மைக் கணக்காளர்

10ஆம் பக்கம் தொடக்கம் 64ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி

**வருமானக் கூற்று**

**2017 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்பு | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 33 | **22,914,716** | 14,869,835 |
| தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான இலாபம் | 34 | **24,000,475** | 9,739,043 |
| தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம் | | **2,772,209** | 1,755,321 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **49,687,400** | 26,364,199 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 35 | **(2,963,231)** | (3,953,835) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(2,963,231)** | (3,953,835) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு நட்டம் | | **(3,808,147)** | (6,775,246) |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்** | | **42,916,022** | 15,635,118 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 33 | **18,768,928** | 21,020,691 |
| வட்டிச் செலவு | 35 | **(2,676,116)** | (2,197,815) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **16,092,812** | 18,822,876 |
| ஏனைய வருமானம் | 36 | **1,602,664** | 1,508,261 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | **60,611,498** | 35,966,255 |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| ஆளணிச் செலவுகள் | 37 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(4,112,349)** | (4,258,884) |
| - கட்டாய பகிர்ந்தளிப்புத் திட்டச் செலவு | | **(610,489)** | (629,786) |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டச் செலவிற்கான பங்களிப்பு | | **(744,356)** | (1,479,963) |
| | | **(5,467,194)** | (6,368,633) |
| பெறுமானத் தேய்வும் கடன் பதிவழிப்பும் | | **(518,716)** | (520,961) |
| பொருட்பட்டியல் செலவு (புதிய நாணயங்களை வெளியிடுவதற்கான செலவு) | | **(2,850,823)** | (3,076,747) |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள் | 38 | **(1,305,649)** | (1,465,584) |
| நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் மீதான தேறிய நட்டம் | | **-** | (378,907) |
| சொத்துக்களின் மீதான பெறுமதியிழப்பு கட்டணங்கள் | | **(274,773)** | (141,556) |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள்** | | **(10,417,155)** | (11,952,388) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்** | | **50,194,343** | 24,013,867 |
| பிடித்துவைத்தல் வரி | 39 | **(1,837,976)** | (1,834,348) |
| **இவ்வாண்டிற்கான இலாபம்** | | **48,356,367** | 22,179,519 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

## இலங்கை மத்திய வங்கி

**அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று**

**2017 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | **48,356,367** | 22,179,519 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| **தொடர்ந்துவரும் காலப்பகுதியில் இலாபம்/ (நட்டம்) இற்கு மீள்வகைப்படுத்துவதற்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | **(6,843,970)** | 2,022,241 |
| **தொடர்ந்து வரும் காலப்பகுதியில் இலாபம்/ (நட்டம்) இற்கு மீள்வகைப்படுத்தப்படாத ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டின் மீதான இலாபம் | **-** | 3,036,305 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | **1,741,622** | 9,485,849 |
| **மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | **43,254,019** | 36,723,914 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

10 தொடக்கம் 64ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## உரிமை மூலதன மாற்றக் கூற்று
## 2017 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | பங்களிக்கப் பட்ட மூலதனம் ரூபா 000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா 000 | ஏனைய ஒதுக்கங்கள் (குறிப்பு 31) ரூபா 000 | திரட்டிய இலாபங்கள் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|
| **2016 சனவரி 01இல் உள்ளவாறு** | 50,000,000 | 5,986,602 | 39,714,048 | (41,605,668) | 54,094,982 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | - | 22,179,519 | 22,179,519 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | 220,272 | (220,272) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | - | - | - | 9,485,849 | 9,485,849 |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு நட்டத்தினை மாற்றல் | - | - | (6,775,246) | 6,775,246 | - |
| இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்ட ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | (175,470) | (175,470) |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம் | - | - | 2,022,241 | - | 2,022,241 |
| இடைக்கால இலாபத்தினை அரசிற்கு மாற்றுதல் - 2016 | - | - | - | (5,000,000) | (5,000,000) |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபம் | - | 3,036,305 | - | - | 3,036,305 |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | (225) | (225) |
| சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து திரட்டிய இலாபத்திற்கு நிதியங்களை மாற்றுதல் | - | - | (4,650,806) | 4,650,806 | - |
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 50,000,000 | 9,022,907 | 30,530,509 | (3,910,215) | 85,643,201 |
| **2017 சனவரி 01இல் உள்ளவாறு** | **50,000,000** | **9,022,907** | **30,530,509** | **(3,910,215)** | **85,643,201** |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | **-** | **-** | **-** | **48,356,367** | **48,356,367** |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | **-** | **-** | **273,918** | **(273,918)** | **-** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | **-** | **-** | **-** | **1,741,622** | **1,741,622** |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு நட்டத்தினை மாற்றல் | **-** | **-** | **(3,808,147)** | **3,808,147** | **-** |
| இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்ட ஒதுக்கிற்கான மாற்றல் | **-** | **-** | **-** | **(166,388)** | **(166,388)** |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி நட்டம் | **-** | **-** | **(6,843,970)** | **-** | **(6,843,970)** |
| திரட்டிய இலாபத்திலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றுதல் | **-** | **-** | **14,028,792** | **(14,028,792)** | **-** |
| பொது ஒதுக்கத்திற்கான மாற்றல் | **-** | **-** | **7,462,613** | **(7,462,613)** | **-** |
| 2016ஆம் ஆண்டிற்கான இலாபப் பகிர்ந்தளிப்பு - வெளிநின்ற இலங்கை அரச கடப்பாடுகளை 2016ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து மீளப்பெறுதல் | **-** | **-** | **-** | **(1,378,272)** | **(1,378,272)** |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | **-** | **-** | | **(321)** | **(321)** |
| தொழிலுக்குப் பின்னைய நன்மைகளின் நிதியிடல் தேவைகளுக்காக ஒதுக்கங்களை மாற்றுதல் | | | **689,025** | **(689,025)** | |
| **2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **50,000,000** | **9,022,907** | **42,332,740** | **25,996,592** | **127,352,239** |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

10 தொடக்கம் 64ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி
**காசுப்பாய்ச்சல் கூற்று**
**2017 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்பு | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **24,380,250** | 11,097,325 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **843,143** | 690,326 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **2,772,208** | 1,755,321 |
| தேறல் செய்யப்பட்ட செலாவணி நட்டம் | | **(14,514,115)** | (19,001,328) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **1,607,790** | 1,500,669 |
| | | **15,089,276** | (3,957,687) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **2,740,357** | 3,922,805 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **2,679,274** | 2,196,385 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **5,245,612** | 5,464,654 |
| வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | | **4,823,628** | 5,557,729 |
| செலுத்தப்பட்ட வரி | | **902,864** | 2,595,700 |
| | | **16,391,735** | 19,737,273 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | 40 | **(1,302,459)** | (23,694,960) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு)/குறைவு | | **(1,524,155)** | (2,100,302) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் தொகை அறவீடுகள் | | **487,927** | 890,497 |
| ஆதனம், பொறி, கருவிகளின் அகற்றுகை மீதான பெறுகைகள் | | **3,088** | 709 |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(29,394,318)** | (35,429,276) |
| | | **(30,427,458)** | (36,638,372) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **211,673,611** | (7,066,141) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **355,012** | 30,222,682 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **60,818,636** | 89,038,712 |
| ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் கொடுபடத்தக்கவையிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(155)** | (791) |
| கொடைகள் தவிர்ந்த ஆதனம், பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் | | **265,725** | 488,036 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | **7,432** | 1,124 |
| குத்தகைச் சொத்துக்களின் கொள்வனவு | | **-** | 5,135 |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் | | **369,684** | 488,183 |
| | | **273,489,945** | 113,176,940 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(303,917,403)** | (149,815,312) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடுதல் | | **628,828,164** | 595,035,881 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை மீளப்பெறல் | | **(583,552,128)** | (533,957,965) |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் தேறிய வழங்கல் | | **45,276,036** | 61,077,916 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| அரச கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | 41 | **(220,649,290)** | 160,378,295 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | 42 | **(38,460,908)** | (121,524,559) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | | **(259,110,198)** | 38,853,736 |
| **சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **304,386,234** | 22,224,180 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | **(28,666,576)** | (13,612,965) |
| ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள் | | **321** | 225 |
| ஓய்வூதிய நிதியத்திற்கான கொடுப்பனவுகள் | | **261,625** | - |
| திரட்டிய நிதியத்திற்கான இலாப மாற்றல் | | **-** | 5,000,000 |
| | | **(28,404,630)** | (8,612,740) |
| **நிதியியல் நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **332,790,864** | 30,836,920 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **27,571,002** | (142,673,352) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **8,472,902** | 8,982,404 |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **423,783,737** | 557,474,685 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 43 | **459,827,641** | 423,783,737 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

10 தொடக்கம் 64ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி

## 2017 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்

### 1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க இலங்கை நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி (வங்கி அல்லது இ.ம.வங்கி) இலங்கையின் நாணய, ஒழுங்குவிதிகள், நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பொறுப்பான அதிகாரசபையாக இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ளது.

இந் நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கு நாணயச் சபையின் சார்பில் ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2018 மாச்சு 20ஆம் திகதி அதிகாரமளிக்கப்பட்டது.

### 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 2.1 தயாரிப்பிற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு, தங்கம் மற்றும் ஒரு சில நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த ஏனையவை சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டு வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.1 அறிக்கையிடல் வடிவம்

வங்கியானது நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்கு வரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறை குறிப்பு 4இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

#### 2.1.2 இணக்கக் கூற்று

2017 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந் நிதிக்கூற்றுக்கள் பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. எனினும், குறிப்பிட்ட வகைப்படுத்தல் வேறுபாடுகள் காரணமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுத் தொகைகள் இந்நிதிக் கூற்றுக்களிலிருந்து வேறுபடலாம்.

#### 2.1.3 சமர்ப்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட நாணயம்

வேறு விதமாக கூறப்பட்டிருந்தாலொழிய அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவின் ஆயிரத்திற்கு கிட்டிய தொகையில் தரப்பட்டுள்ளன.

#### 2.2 முக்கியமான கணக்கியல் திறனாய்வு முடிவுகளும் மதிப்பீடுகளும்

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்தின் திறனாய்வு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன தேவைப்படுவதுடன், இவை வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிவிக்கப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிர்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இக்கருதுகோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதியில் தாக்கத்தினை விளைவிக்கக்கூடும். மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையிலான அனுமானங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் எதிர்கால நோக்கில் இனங்காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளில் மிக முக்கியமான விளைவுகளினைக் கொண்ட கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்துவதில் செய்யப்பட்ட திறனாய்வு முடிவுகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புக்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

#### 2.2.1 கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் பெறுமதியிழப்பு

வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், பதிவழிப்பு நட்டங்கள் வருமானக் கூற்றில் பதிவுசெய்யப்பட வேண்டுமா என்பதை அளவிடுவதற்காக, அதனுடைய தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கடன்கள் மற்றும் முற்பணங்களினை மதிப்பாய்வு செய்கின்றது. பதிவழிப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்ற சொத்துக்களுக்கான வங்கியினுடைய பதிவழிப்பு முறைமையானது பின்வரும் ஏற்பாடுகளுக்கான பதிவினை ஏற்படுத்துகிறது.

- தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வெளிப்படுத்துகைகள் மீது தனியான பதிவழிப்பு நட்டங்கள்;
- தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமற்ற வெளிப்படுத்துகைகள் மீது பொதுவான பதிவழிப்புக்கள்.

அனைத்து வகைகளும் முகாமைத்துவத் திறனாய்வு முடிவினை ஒரு மூலகமாக உள்ளடக்கியுள்ளன. குறிப்பாக, பதிவழிப்பு நட்டங்களை உறுதிப்படுத்தும் போது எதிர்காலக் காசுப்பாய்ச்சல்கள் மற்றும் பிணையத்தொகை என்பவற்றின் தொகை மற்றும் ஏற்படுகின்ற காலப்பகுதியை மதிப்பீடு செய்யும் போதாகும். இம்மதிப்பீடுகள் பல்வேறு காரணிகளால் இயக்கப்படுவதுடன், இவற்றில் ஏற்படும் மாற்றங்கள் வேறுபட்ட ஏற்பாட்டு படிநிலையை விளைவிக்கும்.

#### 2.2.2 ஓய்வூதியமும், தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நலத் திட்டங்களும்

குறித்துரைக்கப்பட்ட நலத் திட்டங்களின் செலவு ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், எதிர்கால இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத் திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. ஆயுட்கால மதீப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் குறிப்பு 29இல் தரப்பட்டுள்ளன.

#### 2.2.3 நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சந்தைப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும்.

#### 2.3 வெளிநாட்டு நாணய மாற்றுவீதங்கள்

வங்கியின் நடைமுறை மற்றும் சமர்ப்பண நாணயம் இலங்கை ரூபாவாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளுக்கு ஏற்புடையதான நடைமுறை நாணயத்திலேயே பதிவு செய்யப்பட்டன. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட

நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியில் ஏற்புடையதாகவிருந்த செலாவணி வீதத்திற்கேற்ப இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான இலங்கை ரூபா செலாவணி வீதங்கள் பின்வருமாறு:

| நாணயம் | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | **119.3796** | 108.2380 |
| 1 கனேடிய டொலர் | **121.8598** | 111.0617 |
| 1 யூரோ | **183.1353** | 158.4959 |
| 1 யப்பானிய யென் | **1.3580** | 1.2818 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | **217.1608** | 201.3811 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | **206.5221** | 184.5087 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | **152.8548** | 149.8000 |
| 1 சீன யுவான் (கரைகடந்த) | **23.4847** | 21.4901 |

நிதியல்லாத விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டுச் செலாவணியின் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் அளவிடப்பட்டுள்ளது.

### 2.4 சந்தைப் பெறுமதி அளவுகள்

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் தங்கம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சந்தைப் பெறுமதியில் அளவிடுகின்றது. அத்துடன், பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி குறிப்பு 47இல் வெளிப்படுத்தப்பட்டன.

சந்தைப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களின் பொருட்டு பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். சந்தைப் பெறுமதி அளவீடு சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச்சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அநுகூலம் நிறைந்த சந்தை

முதன்மை அல்லது மிக அநுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சந்தைப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் பொருளாதாரத்தில் கொண்டுள்ள சிறந்த ஈடுபாடுகளில் அவர்களது ஊகங்களில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை விலையிடும் பொழுது பயன்படுத்தப்படுகிறது. நிதியல்லாச் சொத்தொன்றின் சந்தைப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்தில் சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்தில் சிறந்த முறையில் பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கணக்கில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமான மதிப்பீட்டு நுணுக்கங்களைப் பயன்படுத்துவதுடன் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான சந்தைப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சந்தைப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சந்தைப் பெறுமதிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு பொதுவாக சந்தைப் பெறுமதியின் அளவிடலுக்குப் போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்.

மட்டம் 2 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சந்தைப் பெறுமதியினை அளவிடுவதற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு நேரடியாகவோ மறைமுகமாகவோ அவதானிக்கப்படுதல்.

மட்டம் 3 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சந்தைப் பெறுமதியினை அளவிடுவதற்குக் குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு அவதானிக்கப்பட முடியாதவை.

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் ஒழுங்கமைப்பிலுள்ள மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாவென வகையிடலை மீளமதிப்பிடுவதன் மூலம் (முழுமையான சந்தைப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்த மட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) நிர்ணயிக்கிறது.

### 2.5 நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

வங்கியானது, நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன், இணைந்த வருமானம் மற்றும் செலவுகளையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், ரூபா நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந்நடவடிக்கைகளைத் தனித்தனியாக விளக்குவதன் மூலம் வங்கியின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைத்து அறிக்கையிடுதல் நிதிக் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

#### (அ) நிதியியல் சொத்துக்கள்

வங்கியானது பின்வரும் பிரிவுகளில் ஒன்றில் நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்துகின்றது.

- கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்
- முதிர்ச்சிக் காலம் வரை வைத்திருக்கப்படுபவை
- விற்பனைக்கென உள்ளவை அல்லது
- சந்தை பெறுமதியூடாக இலாபம் அல்லது நட்டம் மற்றும் பின்வரும் வகைக்குள்
    - வர்த்தகத் திற்கென வைத்திருக்கப்படுபவை
    - சந்தைப் பெறுமதியூடாக இலாபம் அல்லது நட்டத்தினைக் பெறுவதற்கான நிர்ணயிக்கப்பட்டவை

#### (ஆ) நிதியியல் பொறுப்புக்கள்

வங்கியானது தொடக்கத்தில் எல்லா நிதியியல் பொறுப்புக்களையும் அவை உருவாகிய திகதியில் இனங்காண்பதுடன், அதனுடைய நிதியியல் பொறுப்புக்களை பதிவழிப்புச் செலவில் அளவிடல் அல்லது சந்தைப் பெறுமதியூடாக இலாபம் அல்லது நட்டம் அல்லது சந்தைப் பெறுமதியூடாக இலாபம் அல்லது நட்டத்தைப் பெறுவதற்கான நிர்ணயிக்கப்பட்டவை என வகைப்படுத்தப்படுகின்றது.

அனைத்து நிதியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங்காணப்பட்டதுடன் இச்செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்கள் அனைத்து கிரமமான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் முறையே வர்த்தகம் நடைபெற்ற திகதியைக் கொண்டு இனங்காணப்படுகின்றன. கிரமமான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் என்பன பொதுவான ஒழுங்குவிதிகளில் அல்லது சந்தையின் மரபுவரி முறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் விநியோகத்தைத் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளாகும்.

### 2.5.1 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள்

வர்த்தகப்படுத்தக் கூடிய நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள "பிணையங்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆரம்ப இனங்காணலின் போது கொடுக்கல்வாங்கல் செலவுகள் இலாபம் அல்லது நட்டத்தில் செலவிடப்பட்டவையாக இனங்காணப்படுகின்றன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்டு சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் வர்த்தகப்படுத்தக்கூடிய பிணையங்கள் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

பிணையம் வங்கிக்குச் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம் அல்லது நட்டம் "விலை மீள் பெறுமதியிடலிலிருந்து தேறல் செய்யப்படாத இலாபமாக / (நட்டமாக)" அறிக்கையிடப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக / (நட்டமாக) அறிக்கையிடப்படும்.

### 2.5.2 விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள்

விற்பனைக்குள்ள முதலீடுகளானவை, விற்பனைக்கென உள்ளவையாக நிர்ணயிக்கப்பட்டவையோ அல்லது மற்றைய நிதியியல் சொத்துக்களின் பிரிவுகளில் வகைப்படுத்த முடியாததாகவோ காணப்படுகின்ற பெறுதிகளல்லாத முதலீடுகளாகும். விற்பனைக்கெனவுள்ள முதலீடுகளானவை உரிமைப் பிணையங்களையும் மற்றும் கடன் பிணையங்களையும் உள்ளடக்கியுள்ளன.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள் தொடர்ந்து விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒதுக்குகளின் கீழ் பிணையங்களின் விற்பனைக்காகவுள்ள பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளம் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபமும் நட்டமும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கப்படும் வரை அல்லது வேறு விதமாக இதனை அகற்றும் வரை அல்லது முதலீட்டினை பதிவழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை நிதி நிலைமை கூற்றில் ஏனைய ஒதுக்குகளின் கீழ் உரிமை மூலதனத்தில் (அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்) நேரடியாக இனங்காணப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் முன்னைய உரிமை மூலதனப் பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படும்.

வட்டி வருமானம் பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

#### 2.5.2.1 விற்பனைக்குள்ளவையாக வகைப்படுத்தப்பட்ட நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

சந்தைப் பெறுமதியை நியாயமான முறையில் அளவிட முடியாத பட்டியலிடப்படாத உரிமைப் பிணையங்கள் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. ஏனைய அனைத்து விற்பனைக்குள்ள பிணையங்களும் ஆரம்ப இனங்காணலிற்குப் பின்னர் சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன.

### 2.5.3 கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள், வங்கி உடனடியாகவோ அல்லது குறுகிய காலத்திலோ விற்பதற்கு உத்தேசித்திருக்காத, செயற்படும் சந்தையொன்றில் பட்டியலிடப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவைக் கொண்ட பெறுமதிகளல்லாத நிதியியல் சொத்துக்களாகும்.

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் ஆரம்பத்தில் சந்தைப்பெறுமதியுடன் தொடர்புடைய நேரடி கொடுக்கல்வாங்கல் செலவுகள் கூட்டப்பட்டு அளவிடப்படுவதுடன், அதன்பின்னர் பயனுள்ள வட்டி வீதத்தைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன.

### 2.5.4 முதிர்ச்சிக் காலம் வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள்

முதிர்ச்சிக்காலம் வரை வைத்திருக்கப்படும் முதலீடுகளானவை, சந்தைப் பெறுமதியூடாக இலாபம் அல்லது நட்டத்தைப் பெற நிர்ணயிக்கப்படாத அல்லது விற்பனைக்கென உள்ளதல்லாத, நிலையான அல்லது நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் நிலையான முதிர்வு அதாவது முதிர்வுக்காலம் வரை வைத்திருப்பதற்கென வங்கியால் உறுதியாக உத்தேசிக்கப்பட்ட பெறுதிகளல்லாத சொத்துக்களாகும். முதிர்ச்சிக் காலம் வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள், பயனுறு வட்டிவீத முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

### 2.5.5 நிதிப் பெறுதிக் கருவிகள்

வங்கி, பெறுதிகளான குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள், வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல் என்பவற்றை இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றதேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. அத்தகைய நிதிப் பெறுதிக் கருவிகள் சந்தைப் பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன், சந்தைப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்தில் சொத்தாகவும், எதிர்க்கணியமாக இருக்குமிடத்தில் பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படும் நிதிப்பெறுதிக் கருவிகளின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் "தேறல் செய்யப்படாத விலை மதிப்பீட்டிருந்தான இலாபத்தில்/ (நட்டத்தில்)" உள்ளடக்கப்படுகின்றன. கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாதனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான திகதியை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை (ஒரு நாள் வேறுபாடு) "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகள் இலிருந்தான 'இலாபம்/ (நட்டம்)" ஆக இனங்காணும் அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சந்தைப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள் அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### 2.5.6 பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்

வங்கியானது இலங்கை அரசின் வைப்பாளராக செயற்படுவதனை காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில், ப.நா. நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன், அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. அனைத்து பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பயனுறு வட்டிவீத முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் இனங்காணப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு அறிக்கையிடல் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

### 2.5.7 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள், சந்தைப் பெறுமதி மாற்றங்களால் குறிப்பிடத்தக்க இடர்நேர்வு இல்லாத மற்றும் குறுங்கால கடப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காக வங்கியால் பயன்படுத்தப்படும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலுள்ள காசு, குறுகிய கால வைப்புக்கள் மற்றும் ஆரம்ப முதிர்வு மூன்று மாதத்திற்கு குறைவாகவுள்ள உயர் திரவத்தன்மை வாய்ந்த நிதியியல் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் நிதி நிலைமைக் கூற்றில் பதிவழிப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

உள்நாட்டு நாணயங்களினது நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவு உட்பட அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நிதிக் கொள்கைப் பொறிமுறையாக வங்கியினால் பிரயோகிக்கப்படுகிறது. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந் நிதிக்கூற்றில் 41, 42 ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தலில் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி காசு/கொடுப்பனவுக் கட்டளைகள் ஊடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்புடன் அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/வெளிநின்ற கொடுப்பனவுக் கட்டளைகள் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 2.5.8 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல்வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

### 2.5.9 துணைநில் வைப்பு மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிகள்

2014 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதியானது (முன்னர் துணைநில் மீள்கொள்வனவு வசதி) பிணை ஒதுக்கங்கள் இல்லாத “தூய வைப்புக்கள்” ஆக மாற்றப்பட்டன. எனவே, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவற்றின் மிகையான நிதியங்களை தூய வைப்புக்களாக துணைநில் வைப்பு வசதி வீதத்தில் நாளாந்த அடிப்படையில் முதலிடலாம்.

துணைநில் கடன் வழங்கல் வசதியின் நடைமுறைகள் (முன்னர் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி) துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றது.

### 2.5.10 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இ.ம.வ. பிணையங்களை வழங்குகின்றது.

வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. வழங்கப்பட்ட விலைக்கும் முகப்புப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் செலவாகப் பதிவு செய்யப்படுகின்றது.

### 2.5.11 இலங்கை அரச பிணையங்கள்

வங்கியின் முதலீட்டுப்பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகின்றது. நிதி நிலைமை பற்றிய கூற்றில் இச் சொத்துப்பட்டியல் கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதியப்படுகிறது.

### 2.5.12 அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை தொடர்ச்சியாக கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதியப்படுகின்றன.

**2.5.13 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் கொண்டு செல்லப்படுவதுடன் அறவிடமுடியாத தொகை ஏதுமிருந்தால் அதைக் கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன் (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஏற்பாட்டுத் தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப் பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிடமுடியாக் கடன்கள் அடையாளம் காணப்படும் போது பதிவழிக்கப்படுகின்றன.

**2.5.14 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்**

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளுக்காக காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது வங்கியிடமிருந்து அப் பிணையங்களை திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்களின் படி) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் நிபந்தனையற்ற பூரணமான உத்தரவாதமெனப்படும்.

கடன்பட்ட பிணையங்கள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத பிணையங்களினதும் சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. தரகு ஒன்று சேர்ந்த அடிப்படையில் செலவிடப்படுகின்றன.

கடன் வழங்கும் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல், சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றம் செய்யப்பட்டால் மட்டுமே நிதிக்கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

**2.5.15 பணியாளர்களுக்கான கடன்கள்**

வங்கியின் பணியாளர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். மேற்படி 2008ஆம் ஆண்டிலிருந்து கடன்கள் ப.க.நி. 39இன் பிரகாரம் கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி நியாயமாகப் பெறுமதியிடப்பட்டுள்ளன.

**கழிவு வீதம்** - மேற்படி வீதமானது இ.ம.வ. யின் (பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால்) ஐ.அ.டொலர் வர்த்தக வட்டி வீதத்துடன் வங்கிக் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு 1 சதவீத இடர்நேர்வுத் தவணைத் தொகையையும் சேர்த்து நீண்டகாலப் பணவீக்க இலக்கின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு கழிவு வீதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திற்கும் இடையிலுள்ள பணியாளர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதியின் வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் கடன்தீர் நிதியாக தீர்க்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக் கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சந்தைப் பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

**2.5.16 நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழக்கக்கூடிய தன்மை**

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து பெறுமதி இழக்கக்கூடியதா என வங்கி மதிப்பிடுகிறது.

கடன் மீதான நட்டத்தின் தேய்வடையக்கூடிய தன்மை மற்றும் கடன்தீர் நிதிக் கிரயத்தின் பெறுகைகள் எடுத்துச் செல்லப்படுதல் ஏற்பட்டு, ஒரு புற உண்மைச்சான்று இருக்குமானால் அந்த நட்டத் தொகையானது சொத்துக்கள் எடுத்துச் செல்லும் தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களின் அசல் பயனுள்ள வட்டி வீதத்தில் கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்கால பெறுமதிக்கும் (ஏற்படாத எதிர்காலக்கடன் நட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை) இடைப்பட்ட வித்தியாசமாக அளவிடப்படுகிறது. (பயனுறு வட்டி வீதம் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டளவில் கணிக்கப்பட்டுள்ளது) சொத்தின் எடுத்துச் செல்லும் தொகையானது ஒன்றில் நேரடியாகவோ அன்றேல் ஏற்பாட்டு கணக்கை உபயோகிப்பதன் ஊடாகவோ குறைக்கப்படும். வருமானக் கூற்றிலே நட்டத் தொகை இனங்காணப்படும்.

தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச்சொத்துகளுக்காக தனிப்பட்ட முறையிலுள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளாக, தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் பெறாத நிதிச் சொத்துக்களுக்காக தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக உள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளா என முதலில் வங்கி மதிப்பிடுகிறது. முக்கியமானதோ இல்லையோ, தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு நிதிச் சொத்துக்கு முடக்கம் இருப்பதற்கான புறவுண்மைச் சான்றுகள் இல்லையென அது தீர்மானிக்குமிடத்து, அச்சொத்தானது ஒத்த கடன் இடநேர்வுக் குண அம்சங்களைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் குழுவில் உள்ளடக்கப்படுகிறது. அத்துடன் நிதிச் சொத்துக்களின் குழுவானது முடக்கத்துக்கு உள்ளானது என கூட்டாக மதிப்பிடப்படுகிறது. முடக்கத்திற்காக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துக்களானவை அவைகளுக்கு முடக்க இருப்பு இருப்பின் அல்லது இனங்காணப்பட்டவையாகத் தொடர்ந்து இருப்பின் முடக்கத்தின் கூட்டு மதிப்பீட்டிற்குள் அவைகள் உள்ளடக்கப்படமாட்டாது.

தொடர்ந்து வந்த ஒரு காலப்பகுதியில் தேய்வடையக்கூடிய இழப்பின் தொகை வீழ்ச்சி அடைந்தால் அந்த வீழ்ச்சியை புறவுண்மை ரீதியாக முடக்கம் இனங்காணப்பட்டதன் பின்பாக கடந்த ஒரு நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடியும். முன்னதாக இனங்காணப்பட்ட முடக்க இழப்பும் நீக்கப்படும். அதைத் தொடர்ந்து வந்த முடக்க இழப்பின் நீக்குதலும் சொத்தின் எடுத்துச் செல்லும் பெறுமதி, அதனுடைய கடன்தீர் நிதிக் கிரயத்தை அந்த நீக்குதல் திகதியில் விஞ்சிவிடாது இருக்கும் அளவிற்கு வருமானக் கூற்றிலே இனங்காணப்படுகின்றது.

விற்பனைக்குத் தயாராகவுள்ள ஒரு சொத்து முடக்கப்படுமாக இருந்தால் அதனுடைய கிரயத்திற்கும் (எந்தவொரு முதன்மைக் கொடுப்பனவும் கடன்தீர் நிதியும் நீங்கலாக) அதன் தற்போதைய நியாயப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசத்தை உள்ளடக்கிய தொகையானது, இலாபத்திலோ நட்டத்திலோ முன்னதாக இனங்காணப்பட்ட எந்தவொரு முடக்க இழப்பையும் கழித்து, நிகரச் சொத்துக்களின் பெறுமதியிலிருந்து வருமானக் கூற்றிற்கு மாற்றப்படுகிறது. விற்பனைக்குத் தயாராகவுள்ளதாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களின் கருவிகள் சம்பந்தமான நீக்குதல்கள் இலாபத்தில் இனங்காணப்படுவதில்லை. கடன் கருவிகளின் மீதான முடக்க நட்டங்களின் நீக்குதலானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நீக்கப்படுகிறது. அந்தக் கருவியின் நியாயப் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுவதானது புறவுண்மை ரீதியாக இலாபம் அல்லது நட்டத்தில் முடக்க நட்டம் இனங்காணப்பட்ட பின்பாக இடம்பெறும் நிகழ்வோடு தொடர்புடையதாக இருக்க முடியும்.

**2.5.17 வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்கள்**

வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்கள், கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப்பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றின் தவணைப் பொறுப்புக்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகிறது. வெளிநாட்டு நாணய

தவணைப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றத்தின் விளைவாகத் தோன்றும் வருமானமும் நட்டமும் உடனடியாகவே வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது நட்டமோ விலை தேறல் செய்யப்படாத மீள்பெறுமதியிடலிலிருந்தான இலாபமாக/(நட்டமாக) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பின் மீள்கொடுப்பனவின் ஊடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபமாக/(நட்டங்களாக) பதிவு செய்யப்படுகிறது.

**2.5.18 ஏனைய நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயத் தாள்கள், காசு வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப்படுவதுடன் கடன்தீர் பதிவழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றது.

**2.6 ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்**

**2.6.1 தங்கம்**

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக்கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67 (2) இன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது நாணய வடிவிலோ வைத்திருப்பதற்கு முயல வேண்டும். ஆதலால், 2017 திசெம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறு வங்கியானது அதன் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக ஒதுக்கப்பட்டது ரூ.126.58 பில்லியன் மற்றும் ஒதுக்கப்படாதது ரூ.15.28 பில்லியன் தங்கத்தில் வைத்திருந்தது. மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருந்தமையால் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதோடு, தங்கமானது சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுகளுக்கு மாற்றப்பட்டன. இலாப ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தீர்க்கப்படாத இலாபங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டன.

**2.6.2 இருப்புக்கள்**

**2.6.2.1 நாணய இருப்பு**

வங்கியின் இருப்புக்களானது, சுற்றோட்டத்திற்கு இன்னும் வெளிப்படாத புதிய நாணயங்களை உள்ளடக்கியுள்ளது. புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் உற்பத்தி மற்றும் வடிவமைப்புடன் தொடர்பான செலவுகள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. சுற்றோட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளிற்கான செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதுடன், வெளியிடப்படும் வேளையில் வருமானக் கூற்றில் பதியப்படுகின்றது. மெதுவாக அசையும் இருப்புக்களுக்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

**2.6.2.2 ஏனைய இருப்புக்கள்**

ஏனைய இருப்புக்கள் கிரயச் செலவு அல்லது தேறிய விற்றுப் பெறக்கூடிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றது. கிரயச் செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

**2.6.3 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

காணி மற்றும் கட்டடம் தவிர்ந்த ஆதனம், பொறி, உபகரணம், பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் பெறுமதி முடக்கத்தை ஒன்று சேர்த்துக் கழித்துக் கிரயத்தில் கூறப்பட்டுள்ளது. இனங்காணல் விடயத்தை பூர்த்தி செய்வதற்காக இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவீனங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது. காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன், மீள் மதிப்பிடப்படும் திகதியில் சந்தைப் பெறுமதியில் பின் தொடர்ந்துவந்த ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமானத் தேய்வுகளும், பின் தொடர்ந்துவந்த ஒன்று சேர்க்கப்பட்ட முடக்க நட்டங்களும் கழிக்கப்பட்டு இருக்கும்.

சொந்தக் காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க இருப்புக்காலத்தைப் பயன்படுத்தி தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது.

| சொத்தின் வகை | பயனுள்ள இருப்புக் காலம் |
|---|---|
| சொந்தக் காணியிலுள்ள கட்டடங்கள் | 50 ஆண்டுகளுக்கு மேல் |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | குத்தகைக் காலம் அல்லது 50 ஆண்டுகளில் குறைந்தது |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 ஆண்டுகள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| உந்து ஊர்திகள் | 5 ஆண்டுகள் |
| 2014 இலிருந்து பெறப்பட்ட உந்து ஊர்திகள் | 10 ஆண்டுகள் |
| கணனி வன்பொருள் | 4 ஆண்டுகள் |
| ஏனையவை | 3 ஆண்டுகள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் எடுத்துச் செல்லும் பெறுமதியானது மீளப்பெற முடியாதென சுட்டிக்காட்டும் பொழுது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் முடக்கத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. கிரயத்தின் ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

வங்கியின் காணி மற்றும் கட்டிடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுக்கொரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும். எந்த மீள்மதிப்பீடு மிகையும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நிகரச் சொத்துப் பிரிவில் உள்ளடக்கப்பட்டு, மீள்மதிப்பீட்டு ஒதுக்கில் செலவு வைக்கப்படுகிறது. வருமானக்கூற்றிலே முன்னதாக இனங்காணப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியானது, மறுதலையாகாத அளவில், இருக்கும் போது அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. அதே சொத்தின் மீதான நேரடியாக குறைநிரப்பும், ஒரு முந்திய தொகையின் பற்றாக்குறையானது மீள்மதிப்பீட்டு ஒதுக்கின் மிகைக்கு எதிராக நேரடியாக மிகை நிரப்புவது தவிர்ந்த நிலைமைகளில், ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. அகற்றும் நிலையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், தக்கவைத்துக் கொள்ளும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது. ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணம், அகற்றுகையின் போது அல்லது அதன் பாவனை அல்லது அகற்றுகையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அதன் இனங்காணல் முடிவடைகிறது.

அச்சொத்தின் இனங்காணல் முடிவடைவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை வருமானத்துக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்து இனங்காணப்படல் முடிவடைந்த வருடத்தின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. மிகுதியாகவுள்ள சொத்தின் பெறுமானங்கள் பயனுள்ள இருப்புக் காலங்கள் மற்றும் முறைகள் மீள்பார்வை செய்யப்படுவதுடன் பொருத்தமாய் இருப்பின் கிரமமாகத் தக்கவாறு அமைத்துக் கொள்ளப்படுகிறது.

நடைபெற்றுவரும் கட்டுமான மூலதனம் செலவில் குறிப்பிடப்படுகின்றது. மூலதனத்தன்மை கொண்ட இச்செலவுகள், கட்டடம், பெரும் பொறிகள் மற்றும் இயந்திரங்களின் நிர்மாணம் மற்றும் முறைமை உருவாக்கம் போன்றவற்றுடன் நேரடியாக தொடர்புபட்ட மூலதனவாக்கத்தை எதிர்நோக்கியிருப்பவையாகும்.

### 2.6.4 அருவச் சொத்துக்கள்

கணனி வன்பொருள்களில் முழுமையாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயச் செலவில் இனங்காணப்பட்டுள்ளன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து திரண்ட கடன்தீர் நிதி மற்றும் திரண்ட பதிவழிப்பு எவையேனும் இருப்பின் கழிக்கப்பட்டு கிரயச் செலவில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

கணணி மென்பொருள் மீதான தொடர்ந்துவரும் செலவுகள், அவை குறித்த சொத்துடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அதிகரித்தால் மட்டுமே மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய அனைத்துச் செலவுகளும் ஏற்படும்போது செலவாக இனங்காணப்படுகின்றன.

பதிவழிப்பானது, சொத்து பாவனைக்குரியதாகவுள்ள திகதியிலிருந்து நான்கு வருட பயனுள்ள ஆயுட்காலத்திற்கு நேர்கோட்டு முறையில் வருமானக் கூற்றில் இனங்காணப்படுவதுடன், இம்முறையானது சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்கால நுகர்வுக் கோலத்தை மிகச் சரியாகப் பிரதிபலிக்கின்றது.

### 2.6.5 ஏனைய சொத்துக்கள்

ஏனைய சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட பெறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

### 2.6.6 நிதிசாராச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

சூழ்நிலைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் முன்கொண்டு செல்லும் பெறுமதியில் முடக்கத்தை உண்டுபண்ணலாம் என்பதைக் காட்டுகின்றனவா என்பதையும் நிதிசாரா சொத்துக்கள் முடக்கப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதையும் அறிக்கை செய்யும் ஒவ்வொரு திகதியிலும் வங்கி மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்ளும். ஒரு சொத்தின் தேய்வடைந்ததாகக் கருதப்படின் அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்தெழுதப்படும். பெறுமதியிழப்பு நட்டங்கள் வருமானக் கூற்றில் இனங்காணபடுகின்றன.

### 2.6.7 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக் கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக் கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியுமாயின் ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

### 2.6.8 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதி நிலைமை பற்றிய கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

### 2.6.9 ஓய்வூதியம் மற்றும் தொழில்நிலைக்குப் பிந்திய ஏனைய நலத்திட்டங்கள்

வங்கியால் கையாளப்படும் ஊழியர் நிலைக்குப் பிந்திய ஓய்வூதியம் மற்றும் ஏனைய நலத்திட்டங்கள் குறிப்பு 29இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.6.10 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களானவை, நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த ஏனைய தொழிலுக்கு பின்னைய நன்மைத் திட்டங்களாகும். ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பிந்திய மருத்துவ நலன்கள் போன்ற குறித்துரைக்கப்பட்ட நலத்திட்டங்களை வங்கி செயற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளியும் பிறிதாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர்.

எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து, ஒவ்வொரு திட்டத்திற்கும் குறித்துரைக்கப்பட்ட திட்டங்களின் கீழ் நன்மை வழங்கும் செலவு நிர்ணயிக்கப்படுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் தொடர்பாக வங்கியின் கடப்பாடு, ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாக, ஊழியர்கள் அவர்களுடைய தற்போதைய மற்றும் முன்யை காலங்களில் வழங்கிய சேவைகளின் மூலம் ஈட்டிய எதிர்கால நன்மைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுவதுடன், அந்நன்மை அதன் தற்போதைய மதிப்பினை நிர்ணயம் செய்வதற்காக கழிவீடு செய்யப்படுகின்றது. இனங்காணப்படாத ஏதாவது கடந்த காலசேவை செலவுகள் மற்றும் திட்டச்சொத்துக்களின் சந்தைப் பெறுமதி என்பன கழிக்கப்படும். கழிவீடு செய்யப்படும் வீதானது, சராசரி மீதமுள்ள சேவைக் காலத்திற்கு அண்ணளவான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அரச பிணையங்களின் மதிப்பீட்டுத் திகதியன்றுள்ள விளைவு வீதமாகும். குறிப்பு 29இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து முதன்மையான காப்புறுதி மதிப்பீட்டு அனுமானங்களும், முழுமையாக காப்புறுதி மதிப்பீடு செய்யப்படும் போது மட்டுமே திருத்தப்படும்.

### 2.6.11 நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள்

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்களாகும்.

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்காக பங்களிப்பிற்கான கடப்பாடுகள், வருமானக் கூற்றில் அவை ஏற்படும் போது செலவாக இனங்காணப்படுகின்றது.

### 2.6.12 கொடைகள்

கொடைகள் (பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்காக உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் சந்தைப் பெறுமதியில் இனங்காணப்பட்டு, உரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சந்தைப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

### 2.6.13 எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

எதிர்பாரா பொறுப்புக்களானவை, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிகழ்காலக் கடப்பாடுகளின் மூலம் உறுதியசெய்யப்படுகின்ற சாத்தியமான கடப்பாடுகளாகக் காணப்படுவதுடன், இங்கு எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் மாற்றல் நிச்சயமற்றதாக அல்லது நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியாததாக காணப்படுகின்றது. படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் நிதி நிலைமைக் கூற்றுக்கு வெளிவாரியான விடயங்களாக வெளிப்படுத்தப்பட்டு எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாகிய உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச்சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றன.

**2.7 வருமானக் கூற்று**

**வருமானங்களும் செலவினங்களும்**

வங்கிக்குப் பொருளாதார நன்மைகளை பெரும்பாலும் கொண்டு வரக்கூடியதாகவும் அவ் வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகும் உள்ள போது வருமானமானது இனங்காணப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் இனங்காணப்பட்டுள்ளன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்:

**2.7.1 வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள்**

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் கொடுபட வேண்டிய கழிவுகளையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

**2.7.2 பங்கிலாபங்கள்**

பங்குடமையாளர்கள் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டதுடன் பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகிறது.

**2.7.3 பல்தரப்பட்டவை**

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் ஒன்று திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

தற்செயலான நடவடிக்கை மற்றும் முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், நட்டங்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

**2.7.4 ஆளணிச் செலவுகள்**

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்று சேரும் விடுவிப்புக்கள் என்பன மற்றைய உள்நாட்டு கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.7.5 தொழிற்படு குத்தகைகள்**

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையைக் கருத்திற் கொண்டு வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது.

**2.7.6 வரி விதிப்பு**

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 118ஆம் பிரிவின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், வங்கியானது 2013ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பொருளாதார பணிகள் விதிப்புச் (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி, பொருளாதார பணிகள் விதிப்பு விலக்களிக்கப்பட்டதுடன், 2013ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி நிதியியல் பணிகள் வழங்கல்கள் மீது பெறுமதிசேர் வரியானது விலக்களிக்கப்பட்டது.

**3. விடுக்கப்பட்டிருந்தும் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாதுள்ள நியமங்கள்**

வங்கிக்கு ஏற்புடைத்தான, வங்கியின் நிதியியல் கூற்றுக்களுக்குட்பட்டு இற்றைவரை வெளியிடப்பட்டு, ஆனால் இன்னமும் நடைமுறைக்குவராத நியமங்கள் மற்றும் விளக்கங்கள் கீழே வெளிக்காட்டப்பட்டுள்ளன. அவை நடைமுறைக்குவரும் பொழுது அந்நியமங்களைப் பின்பற்றுவதற்கு வங்கி எண்ணுகின்றது.

**3.1 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் 9 "நிதியியல் சாதனங்கள்"**

2014 யூலையில் விடுக்கப்பட்ட பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் 9, "நிதியியல் சாதனங்கள்" 2018 சனவரி 1 அன்று அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதிக்கு நடைமுறைக்குவரும் விதத்தில் நேரகாலத்துடன் அவற்றைப் பின்பற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது, பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39 "நிதியியல் சாதனங்கள்: அங்கீகரித்தல் மற்றும் அளவிடல்" இற்குப் பதிலீடாகும்.

வங்கியானது வெளிவாரி ஆலோசனையாளரின் உதவியுடன் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் பிரயோகத்திலிருந்து தோன்றுகின்ற 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களின் மீது ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கத்தின் ஆரம்ப மதிப்பீட்டினைப் பூரணப்படுத்தியிருக்கிறது.

இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில், 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவைகளின் அடிப்படையில் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுகின்ற மொத்த மதிப்பிடப்பட்ட சீராக்கங்கள் பின்வருமாறு:

- பெறுமதியிழப்புத் தேவைப்பாடுகள் தொடர்பில், தேறிய இலாபத்தில் ஏறத்தாழ 1.5-3 சதவீதம் கொண்ட குறைப்பு
- பெறுமதியிழப்பு நீங்கலாக, வகைப்பாடு மற்றும் அளவிடல் தொடர்பில் தேறிய சொத்தில் ஏறத்தாழ 5-8 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பு

மேற்குறிப்பிட்ட மதிப்பீடு பூர்வாங்கமானது, ஏனெனில் அனைத்துப் பரிமாற்றல் வேலைகளும் இன்னமும் இறுதிப்படுத்தப்படவில்லை. 2018 சனவரி 1இல் உள்ளவாறு பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுவதன் உண்மையான தாக்கம் மாற்றமடையக்கூடும். ஏனெனில்

- பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 கணக்கீட்டுச் செயன்முறைகளையும் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் திருத்த வேண்டுமென வங்கியைத் தேவைப்படுத்தும் என்பதுடன் இம்மாற்றங்கள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை அத்துடன்
- 2018 திசெம்பர் 31இல் முடிவடைகின்ற ஆண்டிற்கான முதலாவது நிதியியல் கூற்றுக்களைப் பற்றி இறுதிப்படுத்தும் வரை, புதிய கணக்கீட்டுக் கொள்கைகள் எடுகோள்கள், நியாயத்தீர்ப்புக்கள் மற்றும் பயன்படுத்தப்படுகின்ற மதிப்பீட்டு தொழில்நுட்பங்கள் மாற்றத்திற்குட்பட்டனவாக இருக்கும்.

**நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல்**

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9, வியாபார மாதிரியில் சொத்துக்களை முகாமைப்படுத்தி காசுப்பாய்ச்சல் பண்புகளையும் பிரதிபலிக்கின்ற நிதியியல் சொத்துக்களுக்கான புதிய வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் அணுகுமுறைகளைக் கொண்டிருக்கிறது.

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9, நிதியியல் சொத்துக்களுக்கான மூன்று முக்கிய வகைப்படுத்தல் வகைகளை உள்ளடக்குகின்றது: கடன் பதிவழிப்புச் செலவு மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதி மற்றும் இலாபம் அல்லது நட்டமூடான சீர்மதிப்பு பெறுமதி என்பனவற்றில் அளவிடப்பட்டவை, வர்த்தகப்படுத்தலுக்காக

வைத்திருக்கப்பட்டவை, முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை, கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் மற்றும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை என்பனவற்றைக் கொண்ட தற்போதுள்ள பன்னாட்டுக் கணக்கீட்டு நியமம் 39இனை இது நீக்குகிறது.

**பதிவழிப்புச் செலவு**

பின்வரும் நிபந்தனைகள் இரண்டையும் பூர்த்தி செய்திருக்குமாயின் நிதியியல் சொத்துக்கள் பதிவழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றதுடன் இலாபம் அல்லது நட்டமூடான சீர்மதிப்புப் பெறுமதி குறித்துரைக்கப்பட்டிருக்காது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலைச் சேகரிப்பதற்காக சொத்துக்களை வைத்திருக்கும் நோக்கினைக் கொண்ட வியாபார மாதிரிக்குள் வைத்திருக்கப்படுகிறது அத்துடன்
- வெளிநின்ற பிரதான தொகையின் மீதான முதல் மற்றும் வட்டியின் ஒரே கொடுப்பனவுகளான காசுப்பாய்ச்சல்களுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளின் மீது அதிகரிப்பினை ஏற்படுத்தும் ஒப்பந்த ரீதியான நியதிகள்.

**ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி**

பின்வரும் நிபந்தனைகள் இரண்டையும் பூர்த்திசெய்து, இலாபம் அல்லது நட்டமூடான சீர்மதிப்புப் பெறுமதி குறித்துரைக்கப்பட்டிராதவிடத்து நிதியியல் சொத்துக்கள் மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் மாத்திரம் அளவிடப்படுகின்றன:

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலைச் சேகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துக்களை விற்றல் ஆகிய இரண்டினையும் எய்தும் குறிக்கோளினைக் கொண்ட வியாபார மாதிரிக்குள் வைத்திருக்கப்படுவது மற்றும்
- வெளிநின்ற பிரதான தொகையின் மீதான முதல் மற்றும் வட்டியின் ஒரே கொடுப்பனவுகளான காசுப்பாய்ச்சல்களுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகள் மீது அதிகரிப்பினை ஏற்படுத்தும் ஒப்பந்த ரீதியான நியதிகள்.

வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படாத உரிமை மூலதனமொன்றின் ஆரம்ப அங்கீகரிப்பின் மீது, ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பின்னர் ஏற்படும் மாற்றங்களைக் காட்டுவதற்கு வங்கி மாற்றமுடியாத விடயங்களைத் தெரிவுசெய்யலாம். இத்தேர்வுகள் முதலீட்டிற்கு, முதலீட்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படலாம்.

அனைத்து நிதியியல் செலவுகளும் மேலே குறிப்பிடப்பட்டவை பதிவழிப்புச் செலவில் அல்லது மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானச் செலவினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டனவாக வகைப்படுத்தப்படாததுடன் இலாபம் அல்லது நட்டமூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ், ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் செயற்பரப்பிலுள்ள நிதியியல் சொத்துக்களில் பெருமளவிற்கு உள்ளடக்கப்பட்டிருக்குமிடத்து அவை வெவ்வேறாக்கப்படுவதற்குப் பதிலாக, கலப்பு நிதியியல் சாதனம் பகுப்பாய்விற்காக மொத்தமாக மதிப்பிடப்படுகின்றன.

**தாக்க மதிப்பீடு - வகைப்படுத்தல்**

2018 சனவரி 1இல் வைத்திருக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலிலும் அளவீட்டிலும் நியமமானது பின்வரும் விதத்தில் தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.

- பன்னாட்டுக் கணக்கீட்டு நியமம் 39இன் கீழ், வர்த்தகப்படுத்தலிற்காக வைத்திருக்கப்படுகின்றவையென வகைப்படுத்தப்பட்டவையும் பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39இன் கீழ் இலாபம் அல்லது நட்டமூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவாறான இடர்நேர்வு முகாமைப்படுத்துவதற்காக வைத்திருக்கப்பட்ட வர்த்தகப்படுத்தல் சொத்துக்கள் மற்றும் பெறுதிச் சொத்துக்களும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் இலாபம் அல்லது நட்டமூடான சீர்மதிப்புப் பெறுமதியிலும் அளவிடப்பட முடியும்.
- வங்கிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள், கடன்கள் மற்றும் பெறத்தக்கவையென வகைப்படுத்தப்பட்டு பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39இன் கீழ் பதிவழிப்புச் செலவில் மதிப்பிடப்படுவதுடன் இது. பன்னாட்டு நிதியியல் கணக்கீட்டு நியமம் 9இன் கீழும் பொதுவாக பதிவழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன.
- பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39இன் கீழ் கடன் பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட முதலீட்டுப் பிணையங்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இன் கீழ் பொதுவாகக் கடன் தீர்ப்பனவுச் செலவில் அளவிடப்படுகின்றன.
- பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39இன் கீழ், விற்பனைக்குக் கிடைத்தக்கவையென வகைப்படுத்தப்பட்ட படுகடன் முதலீட்டுப் பிணையங்கள் என வகைப்படுத்தப்படுவதுடன் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் பதிவழிப்புச் செலவில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அல்லது இலாபம் அல்லது நட்டமூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறிப்பிட்ட சூழ்நிலைகளைப் பொறுத்து அளவிடப்படுகின்றன.
- பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39இன் கீழ் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவையென வகைப்படுத்தப்பட்டுள்ள உரிமை மூலதனப் பிணையங்களில் பெரும்பாலானவை பன்னாட்டு நிதியியல் கணக்கீட்டு நியமம் 39இன் கீழ் இலாபம் அல்லது நட்டமூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படும். எனினும், இவ் உரிமை மூலதனப் பிணையங்களில் சில நீண்ட கால உபாய நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுவதுடன் இவை 2018 சனவரி 01 அன்று ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய சீர்மதிப்புப் பெறுமதியாகக் குறித்துரைக்கப்படுகின்றன.

**பெறுமதியிழப்பு - நிதியியல் சொத்துக்கள், கடன் கடப்பாடுகள் மற்றும் நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்**

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9, முன்னோக்கிய - எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு" மாதிரியின் மூலம் பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39 இலுள்ள "உறப்படும் இழப்பு" மாதிரியினைப் பதிலீடு செய்கிறது. இது பொருளாதாரக் காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றிய கணிசமான நியாயத்தீர்ப்பொன்றினைத் தேவைப்படுத்துகிறது. இது நிறையேற்றப்பட்ட நிகழ்தகவு அடிப்படையில் தீர்மானிக்கப்படவுள்ளது.

இலாபம் அல்லது நட்டமூடான சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படாத பின்வரும் நிதியியல் சாதனங்களுக்குப் புதிய பெறுமதியிழப்பு மாதிரி பிரயோகிக்கப்படுகிறது:

- படுகடன் சாதனங்களாகவுள்ள நிதியியல் சொத்துக்கள்
- கடன் கடப்பாடுகள் மற்றும் நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள் (முன்னதாக, பெறுமதியிழப்பானது பன்னாட்டுக் கணக்கீட்டு நியமம் 37 ஏற்பாடுகள், எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாராத சொத்துக்கள் என்பனவற்றின் கீழ் மதிப்பிடப்பட்டன).

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ், உரிமை மூலதனத்தின் மீது பெறுமதியிழப்பு எதுவும் அங்கீகரிக்கப்படவில்லை.

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இழப்புப்படிகள் ஒன்றில் 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களில் அல்லது ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பிற்குச் சமமான தொகையில் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்துகிறது. ஆயுள்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு என்பது நிதியியல் சாதனங்களின் எதிர்பார்க்கப்பட்ட இழப்பு தொடர்பில் சாத்தியமான அனைத்துச் செலுத்தத் தவறும் சந்தர்ப்பங்களிலுமிருந்து தோன்றுகின்ற எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பாக இருக்குமிடத்து 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு என்பது அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் 12 மாதங்களுக்குள்ள சாத்தியமான செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் தோன்றுகின்ற எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் விகிதமென்பதாகும்.

தவணை தவறுகை என்பதன் வரைவிலக்கணம்

கொடுகடன் பெறுமதி இழத்தல் தொடர்பான பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் பரிசீலனையில் கொண்டதன் மூலம் செலுத்தத் தவறும் வரைவிலக்கணத்தினை இலங்கை மத்திய வங்கி மதிப்பீடு செய்திருக்கிறது. இது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

- வழங்குநரின் அல்லது கடன்பாட்டாளரின் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடு
- தவணை தவறுதல் அல்லது முன்னைய காலங்களில் செலுத்தப்படாத சந்தர்ப்பங்கள் போன்ற ஒப்பந்தத்தினை மீறும் செயல்
- கடன் வழங்குநர் கடன்பாட்டாளரின் நிதியியல் இடர்ப்பாடுகள் தொடர்பிலான பொருளாதார அல்லது ஒப்பந்த ரீதியான காரணங்களுக்காக கடன்வழங்குநர் வேறு விதமாகப் பரிசீலனைக்குக் கொள்ளப்பட்டாலன்றி வழங்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கான சலுகைகள் பரிசீலனையில் கொள்ளப்படமாட்டர்.
- கடன்பாட்டாளர் வங்குரோத்து நிலையொன்றினை அல்லது வேறு ஏதேனும் நிதியியல் அமைப்பிற்குள் இந்நிலையினை அடையுமிடத்து அது நிகழ்தகவுடையதாக மாறும்.
- நிதியியல் இடர்பாடுகளின் காரணமாக, நிதியியல் சொத்துக்களுக்கான செயற்படு சந்தையொன்று இல்லாது போதல் அல்லது
- உறப்பட்ட கொடுகடன் இழப்புக்களைப் பிரதிபலிக்கின்ற ஆழமான கழிவிடலில் நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு அல்லது கொடுப்பனவு.

இலங்கை மத்திய வங்கி பின்பற்றுகின்ற தவணை தவறுதல் என்பதன் வரைவிலக்கணம் மூடிஸ், ஸ்டான்டட் அன்ட் புவர் மற்றும் புளும்பேர்க் போன்ற சுதந்திரமான தரமிடல் முகவராண்மைகளினால் பயன்படுத்தப்படுகின்ற வரைவிலக்கணத்தினைப் பெரும்பாலும் ஒத்ததொன்றாகும்.

**கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு**

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ், ஆரம்ப ஏற்பிசைவிலிருந்து நிதியியல் சாதனங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரிப்பதன் மீது கொடுகடன் இடர்நேர்வினை (அதாவது தவணை தவறுதலின் இடர்நேர்வு) தீர்மானிக்கும் பொழுது, வங்கி, வெளிவாரி கொடுகடன் தரமிடலைக் முதலீட்டுத் தரத்திற்குக் கீழே குறைப்பதற்கு அல்லது தவணை தவறும் இரட்டை நிகழ்தகவிற்கு வழிவகுக்கின்ற தரமிடலைக் குறைக்கும் கோட்பாட்டின் அடிப்படையினைப் பரிசீலனையில் கொள்ளும்.

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களின் அளவிடுதலுக்கான முக்கிய உள்ளீடுகள் பின்வரும் மாறிகளின் தவணை அமைப்புக்களாக இருக்கும் போல் தோன்றுகிறது.

- தவணை தவறுதல் நிகழ்தகவு
- இழப்புக்களைத் தருகின்ற தவணை தவறுதல்கள்
- தவணை தவறுதல்களின் வெளிப்படுத்துகை

இவ்வளவுகள் உள்ளக ரீதியாக அபிவிருத்தி செய்யப்பட்ட புள்ளிவிபர மாதிரிகள் ஒழுங்குமுறைப்படுத்தல் மாதிரிகளை உயர்த்தும் மற்றைய வரலாற்று தரவுகளிலிருந்தும் பெறப்படும். அவை கீழே விபரிக்கப்பட்டவாறு முன்னோக்கிய தகவல்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் சீராக்கப்படும்.

**தவணை தவறுகைகளின் நிகழ்தகவு**

தவணை தவறுகைகளின் நிகழ்தகவு மதிப்பீடுகள் குறிப்பிட்ட திகதியில் மதிப்பிடப்படுகின்றன. இணைத்தரப்பினரின் பல்வேறு வகையினருக்கும் வெளிப்படுத்துகைகளுக்குமேற்ற விதத்தில் மாற்றப்பட்ட சந்தைத் தரவுப் புள்ளிவிபர மாதிரிகளைப் பயன்படுத்தி பிரித்தெடுக்கப்பட்டு கணிக்கப்படும்.

**இழப்பினைத் தருகின்ற தவணை தவறுகைகள்**

இழப்பினைத் தருகின்ற தவணை தவறுகைகள் என்பது தவணை தவறுதல் காணப்படுமிடத்து ஏற்படக்கூடிய இழப்பீடாகும். இழப்பினைத் தருகின்ற தவணை தவறும் மாதிரிகள் அமைப்பு, பிணைகள், கோரலின் முதிர்ச்சி, இணைத்தரப்பு தொழில் மற்றும் நிதியியல் சொத்தின் தவிர்க்க முடியாத பாகமாக இருக்கும். எந்தவொரு பிணையுறுதியின் மீள்அளவிடல் செலவாகவும் இருக்கும்.

**தவணை தவறுகைகளின் போதான வெளிப்படுத்துகை**

தவணை தவறுகைகளின் போதான வெளிப்படுத்துகை செலுத்தும் சந்தர்ப்பத்தில் எதிர்ப்பார்க்கப்படும் வெளிப்படுத்துகைகளை எடுத்துக்காட்டுகிறது. வங்கியானது இணைத்தரப்பினரிற்கான தற்போதைய வெளிப்படுத்துகைகளிலிருந்து இணைத்தரப்பினருக்கு ஏற்படும் நடைமுறை வெளிப்படுத்துகைகளிலிருந்து தவணை தவறுகைகளை பெற்றுக்கொள்ளும் என்பதுடன் கடன் பதிவழிப்பு மற்றும் முற்கொடுப்பனவுகள் ஒப்பந்தத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நடைமுறைத் தொகைக்கான சாத்தியமான மாற்றங்களையும் உள்ளடக்கும்.

**முன்னோக்கி தேடும் தகவல்கள்**

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ், வங்கி முன்னோக்கி தேடும் தகவல்களை அதன் மதிப்பீடுகளுக்கு உள்ளீடு செய்து எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் ஆரம்ப அங்கீகாரம் மற்றும் வழிமுறைகளின் காரணமாக கருவியொன்றின் இடர்நேர்வு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரிக்கும். வங்கியானது பல்வேறுபட்ட வெளிவாரி உண்மையான மற்றும் முன்னோக்கிய தகவல்களினைப் பரிசீலனையில் கொள்வதன் மூலம் தொடர்பான பொருளாதார மாறிகள் மற்றும் மற்றைய சாதகமான முன்னோக்கிய தோற்றப்பாட்டின் பிரசன்னப்படுத்தல் வீச்சினைக் கருத்திற்கொண்டு “அடிப்படை விடயம்” ஒன்றினை வடிவமைக்கும்.

**வகைப்படுத்தல் - நிதியியல் பொறுப்புக்கள்**

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9, நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தலுக்காக பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39 இலுள்ள தற்போதைய தேவைப்பாடுகளைப் பிடித்துவைக்கின்றது. எனினும், பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39இன் கீழ் இலாபம் அல்லது நட்டமூடான சீர்மதிப்புப் பெறுமதியாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட நிதியியல் பொறுப்புக்களின் அனைத்துச் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்கள் இலாபம் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுமிடத்து பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழ் இச்சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்கள் பொதுவாகப் பின்வருமாறு காட்டப்படும்:

- பொறுப்புக்களின் கொடுகடன் இடர்நேர்வில் ஏற்பட்ட மாற்றங்களுக்குக் காரணமான சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றத்தின் தொகை அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டப்படும் அத்துடன்
- சீர்மதிப்புப் பெறுமதியில் காணப்பட்ட மாற்றத்தின் எஞ்சிய தொகை இலாபம் அல்லது நட்டத்தில் காட்டப்படும்.

மாற்றிடைக்காலம்

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுவதன் மூலம் தோன்றுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பொதுவாக பின்னோக்கிய முறையில் பிரயோகிக்கப்படும்.

**3.2 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 16 குத்தகைகள்**

பன்னாட்டு கணக்கீட்டு நியமச் சபையினால் 2016 சனவரியில் குத்தகைகளின் கணக்கீட்டிற்கென புதிய கணக்கீட்டு நியமம், ப.க.அ.நியமம் 16 குத்தகைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய நியமம் குத்தகைக்கு விடுபவரின் குத்தகைகளின் கணக்கீட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. எனினும், குத்தகைதாரர் பெரும்பாலான குத்தகைகளை, குத்தகைப் பொறுப்பொன்றாகவும் அதனுடன் தொடர்புடைய சொத்துக்களைப் பாவிப்பதற்கான உரிமையையும் நிதி நிலைமைக் கூற்றில் அடயாளப்படுத்தாதிருப்பதற்கான தெரிவு காணப்படுகின்ற போதும், குத்தகைக்காரர்கள் அடையாளப்படுத்தப்பட்ட அனைத்து குத்தகைகளுக்கும் கட்டாயமாக தனி மாதிரியொன்றைப் பிரயோகிக்க வேண்டும். பொதுவாக, அடையாளப்படுத்தப்பட்ட குத்தகைகளுக்கான இலாபம் மற்றும் நட்டம் ஆகியவற்றின் அடையாளம் காணல்முறை தற்போதைய நிதிக் குத்தகைக் கணக்கீட்டினைப் போன்று காணப்படுவதுடன், வட்டி மற்றும் பெறுமானத்தேய்வு செலவுகள் வருமானக் கூற்றில் வேறாக இனங்காணப்படுகின்றன.

ப.நி.அ. நியமம் 16, 2019 சனவரி 01இல் தொடங்குகின்ற ஆண்டிலிருந்து அமுலுக்கு வருகின்றது. புதிய வருமான நியமம் ப.நி.அ. நியமம் 15 பிரயோகிக்கப்படுகின்ற, அதே திகதியில் பிரயோகிக்கப்பட்டால் மட்டுமே, உரிய நேரத்திற்கு முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்படும்.

குத்தகைதாரர், ப.நி.அ. நியமம் 16 இனை முழுமையான பின்னோக்கிய பிரயோகத்துடன் அல்லது ஒரு மாற்றியமைக்கப்பட்ட பின்னோக்கிய பிரயோக அணுகுமுறையுடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.

வங்கியானது உரிய நேரத்திற்கு முன்னர் பிரயோகிக்க எதிர்பார்க்காதிருப்பதுடன், தற்போது இந் நியமத்தின் தாக்கத்தினை மதிப்பீடு செய்கின்றது.

### 3.3 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15 வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்

ப.நி.அ. நியமம் 15, 2014 மேயில் வெளியிடப்பட்டதுடன் உரிய நேரத்திற்கு முன்னைய பிரயோகத்துடன் 2018 சனவரி 01 இல் அமுலுக்கு வருகின்றது. ப.நி.அ. நியமம் 15, வருமானத்தை இனங்காண்பதற்கான கொள்கைகளை வரையறை செய்வதுடன் வாடிக்கையாளருடனான அனைத்து ஒப்பந்தங்களுக்கும் பிரயோகிக்கப்படக் கூடியது. எனினும், நிதியியல் சாதனங்களின் மூலமான வட்டிகளும் கட்டணங்களும் மற்றும் குத்தைகள் என்பன ப.நி.அ. நியமம் 15இன் வீச்சு எல்லைக்கு வெளியே காணப்படுவதுடன், ஏனைய பொருத்தமான நியமங்களின் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்றன (உ-ம்: ப.நி.அ. நியமம் 9 மற்றும் ப.நி.அ. நியமம் 16 குத்தகைகள்)

ப.நி.அ. நியமம் 15 இன் கீழ் வருமானமானது, பொருட்கள் மற்றும் சேவைகள் மாற்றப்படும் போது, அதனைப் பெற்றுக்கொண்டவர் பொருட்கள் மற்றும் சேவைகளின் உரிமையைப் பெற்றுக் கொள்ளும் அளவிற்கேற்ப அளவிடப்படும். இந் நியமமானது வருமானத்தின் தன்மை, அளவு, காலப்பகுதி, வருமானத்தின் நிச்சயமற்ற தன்மை மற்றும் வாடிக்கையாளருடனான தொடர்புடைய காசுப் பாய்ச்சல்கள் தொடர்பான மிக விரிவான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளையும் குறிப்பிடுகின்றது. வங்கியானது உரிய நேரத்திற்கு முன்னைய பிரயோகத்தை எதிர்பார்க்காதிருப்பதுடன், தற்போது இந்நியமத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்கின்றது.

## 4. நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க திருத்தப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் அல்லது பின்பற்றுவதற்கு அங்கீகாரமளிக்கப்படும் கொள்கைகளை அல்லது நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன ஒப்படைக்கப்பட்டதுடன் பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிர்வாகம் என்பவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறை என்பவற்றின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறை முகவராண்மையாகவும் தொழிற்படுகிறது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்
- நாணய வெளியீடு
- நிதி முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துதல்
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும், முகாமைப்படுத்தலும், மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்துதலும்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குக் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படும்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற நோக்கத்துடனும் அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக்கொள்ள முடியும். மேற்படி நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருனனக்கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4.1 வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழான இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயங்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணயங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண் யப்பானிய யென் மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன காணப்பட்டன. இவ் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதிக் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

### 4.2 உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் துறையிலிருந்து நிதியங்களை மீளப் பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்று வைத்திருக்கப்படுகின்றது. வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

### 4.3 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின் நிதிக்கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

5. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு நிலுவைகள் | **16,518,603** | 68,594,961 |
| வங்கிகளுடனான கால வைப்புக்கள் | **269,193,626** | 281,094,724 |
| ஓரிரவு வைப்புக்கள் | **173,979,333** | 74,031,160 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறவேண்டிய வட்டி | **136,079** | 62,892 |
| மொத்தம் | **459,827,641** | 423,783,737 |

6. வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| **இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள்** | | |
| -வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் | **29,988,753** | 29,882,588 |
| -தங்கம் (ஒதுக்கப்படாதது) | **15,275,623** | 13,396,167 |
| | **45,264,376** | 43,278,755 |
| **விற்பனைக்குள்ள முதலீடுகள்** | | |
| -வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் | **566,228,935** | 341,225,162 |
| -அலகு முதலீடு | **-** | 7,319,488 |
| | **566,228,935** | 348,544,650 |
| **மொத்த வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்** | **611,493,311** | 391,823,405 |

இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியிலான பிணையங்களாக வகைப்படுத்தப்பட்ட வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகளானவை, இலங்கை மத்திய வங்கியால் 2016இல் உலக வங்கியின் ஒதுக்கு ஆலோசனை முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்துடன் செய்யப்பட்ட முதலீட்டை உள்ளடக்கியுள்ளது. 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான இம் முதலீட்டின் பெறுமதியானது ரூ. 29,988.75 மில்லியனாகும்.

7. பெறுதி நிதியியல் சாதனங்கள்

7.1 கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதியினைத் தருகின்றது. மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பெயரளவுத் தொகை, பெறுதித் தொகை, சொத்துக்கள் தொடர்பான வீதங்களை அல்லது சுட்டெண்ணினை சுட்டுகின்றதாக இருந்ததுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுமொன்றாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

| | 2017 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | பெயரளவு தொகை | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | பெயரளவு தொகை |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | **4,939,919** | **3,403,868** | **228,553,847** | 198,880 | 8,659,453 | 374,297,030 |
| முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி | **536** | **-** | **132,773** | - | 2,410 | 2,771,960 |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தெரிவுகள் | **-** | **1,244,581** | **13,374,795** | - | 5,911,812 | 85,524,565 |
| மொத்தம் | **4,940,455** | **4,648,449** | **242,061,415** | 198,880 | 14,573,675 | 462,593,555 |

7.2 நாணய பரஸ்பர பரிமாற்றல்கள், நாணயத் தெரிவுகள் மற்றும் முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய மேற்படி பெறுதிகள், பன்னாட்டு ஒதுக்குகளை பேணுவதற்கான நியதித் தேவை நோக்கங்களை வசதிப்படுத்துவதற்காக வங்கிகளால் பேணப்படும் பன்னாட்டு ஒதுக்குகளின் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. மேலும், வங்கியானது நாட்டின் நிதியியல் முறைமையினை வலுப்படுத்துவதற்காகவும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் வெளிநாட்டு மத்திய வங்கிகளை நீண்ட காலத்திற்கு வெளிநாட்டு நிதியங்களை கொண்டு வருவதற்கு ஊக்குவிப்பதற்காகவும் இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதித்தன்மையினைப் பேணுவதற்காக வெளிநாட்டு ஒதுக்குகளின் மட்டத்தினை உயர்த்தும் பொருட்டு அவ்வங்கிகளுடனான பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறது.

7.3 பெறுதிகள் என்பது வட்டிவீதங்கள், நிதியியல் சாதனங்களின் விலைகள், பண்ட விலைகள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள், கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சுட்டெண்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலிறுத்தும் விதத்தில் அவற்றின் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் நிதியியல் உடன்படிக்கைகளாகும்.

7.4 வங்கியின் பெறுதிகளினது சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க பகுதி குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்கானதொரு உபாயமாக மேற்கொள்ளப்பட்ட நாணய பரஸ்பரபரிமாற்றத்தினை உள்ளடக்குகின்றது. நாணய பரஸ்பர பரிமாற்றலில் வங்கியானது இணங்கப்பட்ட வீதங்களில் மற்றொரு நாணயத்தின் பரிவர்த்தனையில் வேறுபட்ட நாட்களில் நாணயத்தின் குறிப்பிட்ட தொகையினை செலுத்துகிறது/ பெறுகிறது.

7.5 வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தத்திலிருந்து, வங்கியானது இணங்கப்பட்ட எதிர்காலத்திகதியொன்றில் இணங்கப்பட்ட வீதமொன்றில் வெளிநாட்டு நாணயத்தின் குறிப்பிட்டதொரு தொகையினை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான கடப்பாடுகளை பெற்றிருக்கிறது.

7.6 பெறுதி உடன்படிக்கைகளுக்கு வங்கியின் வெளிப்படுத்துகைத் தன்மையானது, அத்தகைய பெறுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் வங்கிக்கு திடமான தன்மை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் ஒட்டு மொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது.

8. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் | **677,131** | 303,070 |
| ப.நா.நிதிய அனுமதிப் பங்கு | **125,996,456** | 116,559,364 |
| ப.நா.நிதியத்துடனான வைப்புக்கள் | **164,565** | 145,906 |
| மொத்த ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | **126,838,152** | 117,008,340 |

8.1 சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்

சிறப்பு எடுப்பனவு உரிமைகளைக் (சிஎஉ) கொண்டிருத்தலென்பது, ப.நா.நி. அங்கத்தவர்களுக்கு எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக் கூடியதாயுள்ள நாணய வகைகளுக்கான நிலையான உரிமையாகும். அதாவது சிஎஉ வைத்திருப்பவர்களால் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைப் பரிமாறிக் கொள்ள முடியும். இவ்வங்கத்தவர்கள் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைத்திருப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் கடப்பாடுடையவர்களாதலாலும் அத்துடன் சிஎஉ முறைமையின் நெறிப்படுத்தல்களுக்கு ஏற்புடையதான நானாவிதப் பொறுப்புகளுக்கு மதிப்பளிப்பதற்கு கடப்பாடுடையவர்களாதலாலும் ஒதுக்குச் சொத்தாக சிஎஉ முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயத்தின் மீது சிஎஉ இற்குள்ள உரிமைக்கு இரண்டு விதத்தில் மதிப்பளிப்பதை ப.நா.நி. உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு

நிலைமைகளிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களைப் பெயரிடுவதன் மூலமும் மற்றும் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் அங்கத்தவர்களிடையே தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்வதன் மூலமுமாகும். மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கையிடல் தினங்களில் வங்கி வைத்திருந்த மொத்தத் தொகை மேலே காட்டப்பட்டுள்ளது.

**8.2 ப.நா. நிதிய அனுமதிப் பங்கு**

அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்ற ப.நா.நிதிய அனுமதிப் பங்கானது (மூலதன சந்தாக்கள்) ப.நா.நிதியத்தின் வளங்களுக்கான முதன்மை மூலமாகும். பரந்தளவில் ஒரு நாட்டின் ஒப்பீட்டளவிலான பொருளாதார நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும். வங்கியொன்றின் ப.நா. நிதியத்துடனான அதன் கொடுக்கல்வாங்கல்கள், ப.நா.நிதியத்தின் உறுப்புரையின்படி, அரசாங்கத்தின் சார்பில் அதன் சொந்தக் கணக்கின் மீது இடம்பெறுவதனால் ப.நா.நிதியத்தின் அனுமதிப் பங்கு வங்கியின் சொத்துக்களைப் பிரதிபலிக்கிறது.

ப.நா. நிதியம், பொது அனுமதிப் பங்கு மீளாய்வு உடன்படிக்கைக்கு அமைவாக, 2016 சனவரியில் ப.நா. நிதியத்தின் 189 அங்கத்தவர்களினதும் அனுமதிப் பங்கினையும் 2016 சனவரியில் அதிகரிக்க முடிவு செய்தது. இதன் விளைவாக, இலங்கையின் ப.நா. நிதிய அனுமதிப்பங்கு 2016 பெப்புருவரி 17இல் முன்னைய அனுமதிப்பங்கு தொகையான சிஎஉ 413.40 மில்லியனிலிருந்து சிஎஉ 578.80 மில்லியனுக்கு அதிகரித்தது.

ப.நா. நிதியத்தின் அனுமதிப் பங்கு தொடர்பில் செலுத்தப்படத்தக்க தொகை குறிப்பு 20இல் அனுமதிப் பங்கு பொறுப்பு என்ற தலையங்கத்தின் கீழ் காட்டப்படுகிறது. உறுப்பினரொருவரின் அனுமதிப் பங்கு பின்வருவன உட்பட ப.நா. நிதியத்துடனான நாட்டின் நிதியியல் மற்றும் நிறுவன ரீதியான தொடர்புகளை நிர்ணயிக்கின்றது.

**(i) சந்தாக்கள்:** ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் பங்களிப்பானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும். அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய கூடியபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நிதியம் தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தும் (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) மற்றும் எஞ்சிய தொகையை அங்கத்தவரின் நாணயத்தின் மூலமும் செலுத்துதல் வேண்டும்.

**(ii) வாக்களிக்கும் அதிகாரம்:** ப.நா.நிதியத்தின் தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் அதிகாரமானது அனுமதிப் பங்கின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் அடிப்படை வாக்குகளுடன், அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர். 2008 சீர்திருத்தமானது மொத்த வாக்குகளின் 5.50 சதவீதத்தில் அடிப்படை வாக்குகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்துள்ளது.

**(iii) நிதியிடலை பெறுவதற்கான வசதி:** அங்கத்தவரால் ப.நா. நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குவிதிகள் மற்றும் விஸ்தரிக்கப்பட்ட திட்டங்களுக்கேற்ப அங்கத்தவரால் தற்காலத்தில் வருடாந்த அனுமதிப் பங்கின் 145 சதவீதமும் திரண்ட ரீதியில் 435 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் இவ்வசதி இதை விட அதிகரிக்கலாம்.

**(iv) சிஎஉ ஒதுக்கல்:** அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குத் தொகை தீர்மானிக்கப்படுகிறது.

**8.3 ப.நா. நிதியத்துடனான வைப்புக்கள் - பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு**

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு-2 (எ.நி.கணக்கு-2) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783 இனை மாற்றுவதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்பு வைப்பு மேற்கொள்ளப்பட்டது. எ.நி. கணக்கை முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக எ.நி. கணக்கில் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றுவதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது.

**9. இலங்கை அரச பிணையங்கள்**

அரச பிணையங்களின் பட்டியலானது நாணய விதிச்சட்டத்தின் 90 (2) பிரிவின் கீழ், நாணய விதிக்கொள்கையை அமுல்படுத்துவதற்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டு பேணப்படுகின்றது.

| | 2017<br>ரூபா 000 | 2016<br>ரூபா 000 |
|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | **9,704,962** | 320,605,802 |
| நேர்மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் | **22,359,000** | 30,807,000 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் மீதான பெறவேண்டிய வட்டி | **16,124** | 14,388 |
| | **32,080,086** | 351,426,470 |

**10. அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்**

இவை நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்களைக் குறிக்கின்றன. இது திரண்ட நிதியத்திலிருந்து உறப்படுவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் செலவுகளுக்கான முற்பணங்களின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

**11. வங்கிகளுக்கான கடன்கள்**

இக்கடன்களானது நாணய விதிச் சட்டத்தின் அத்தியாயம் v இன் பகுதி III 'ஏ' இற்கிணங்க, உற்பத்தித்திறன் தேவைகளுக்காக கடன் கொடுத்தலை வசதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **29,146** | 31,340 |
| மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **28,254** | 112,652 |
| சௌபாக்யா கடன் திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **49,539** | 101,176 |
| - ஏனையவர்கள் | **14,211** | 30,768 |
| கிழக்கின் பொருளாதார நடவடிக்கைகளை மீளமைத்தல் கடன்திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **41,382** | 115,977 |
| - ஏனையவர்கள் | **35,492** | 53,296 |
| வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட வீடுகளின் திருத்தல் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **24,330** | 30,310 |
| வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (மீள்நிதியிடல் கட்டம் II) | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **1,348** | 34,632 |
| - ஏனையவர்கள் | **-** | 1,194 |
| **கழிக்குக:** | | |
| பதிவழிப்பு | | |
| (குறிப்பு 11.1) | **-** | (27,302) |
| **தேறிய பெறத்தக்கவை** | **223,702** | 484,043 |

**11.1 பதிவழிப்பு ஏற்பாட்டிலுள்ள அசைவு**

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| சனவரி 01இல் உள்ளவாறு | **27,302** | 27,302 |
| ஆண்டு காலப்பகுதியில் பதிவழிப்பு/ மீள்பெறுகை | **(27,302)** | - |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **-** | 27,302 |

**12. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்**

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 105 "ஏ" ற்கு அமைய, இம்முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப் பிரிவின் கீழ் நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித்தொழில் மற்றும் நிதித் துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக்கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு வங்கிக்கு வலுவளிக்கப்பட்டுள்ளது.

**(i) முதலீட்டு நிலைமை**

| கம்பனி | வியாபாரத்தின் தன்மை | கொண்டிருக்கும் உடமை % 2017 | 2016 |
|---|---|---|---|
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **19.66** | 19.66 |
| பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | கொடுகடன் தரமிடல் | **10.00** | 10.00 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | தன்னியக்க நிதிய மாற்றல் | **7.50** | 7.50 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் ஏற்பாடு | **19.30** | 19.30 |

**(ii) முதலீடுகளின் கொண்டு செல்லும் பெறுமதி**

| கம்பனி | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | **5,845** | 5,845 |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | **29,500** | 29,500 |
| பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | **3,500** | 3,500 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | **2,250** | 2,250 |
| **மொத்த முதலீடுகள்** | **41,095** | 41,095 |

**13. ஏனைய சொத்துக்கள்**

| **நிதியியல் சொத்துக்கள்** | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| உள்ளக நிதியங்களின் முதலீடு | **6,443,984** | 5,208,837 |
| உள்ளக நிதியங்களின் பெற வேண்டிய வட்டி | **286,564** | 170,394 |
| கழிக்குக: சொத்துக்களின் மீதான பெறுமதியிழப்பு கட்டணம் | **(151,674)** | (139,131) |
| உள்ளக நிதியங்களில் தேறிய முதலீடு | **6,578,874** | 5,240,100 |
| தீர்ப்பனவுச் செலவில் அலுவலர் கடன்கள் | **5,036,028** | 4,588,285 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை | **54,490** | 1,401,497 |
| தீர்ப்பனவுச் செலவில் தொகுதிக் கடன்களில் முதலீடு (குறிப்பு 13.1) | **-** | 11,964 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | **143,276** | 235,918 |
| | **11,812,668** | 11,477,764 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | |
| அலுவலர் கடன் தொடர்பான பிற்போடப்பட்ட சொத்து | **1,069,802** | 1,015,226 |
| | **12,882,470** | 12,492,990 |

13.1 ரூ.11.96 மில்லியன் பெறுமதியுடைய தீர்ப்பனவுச் செலவிலுள்ள தொகுதிக் கடன் முதலீடுகள், இலங்கை சேமிப்பு வங்கியின் தொகுதிக் கடன்களைக் குறிப்பதுடன், இவை 2017 திசெம்பர் 03இல் முதிர்வடைந்தன.

**14. தங்கம்**

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(1) மற்றும் பிரிவு 67(2) இன்படி, தங்கம் வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படுகிறது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(2) இன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது நாணய வடிவிலா வைத்திருப்பதற்கு முயலவேண்டும்.

**15. இருப்புக்கள்**

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | **4,442,014** | 3,402,661 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | **1,850,723** | 1,779,021 |
| வழங்குனரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயக்குத்திகள் | **-** | 116,197 |
| வழங்குனரிடமிருந்தான இடைப்போக்கிலுள்ள நாணயத் தாள்கள் | **568,716** | 803,227 |
| | **6,861,453** | 6,101,106 |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | **(45,000)** | (45,000) |
| | **6,816,453** | 6,056,106 |
| எழுதுகருவிகளும் சில்லறை பொருட்பட்டியல்களும் | **58,881** | 58,557 |
| மருத்துவ நிலைய இருப்புக்கள் | **199** | 198 |
| **கிரயச் செலவு அல்லது பெறத்தக்க தேறிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் மொத்த இருப்புக்கள்** | **6,875,533** | 6,114,861 |

## 16. ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள்

| கிரயம் | காணியும் கட்டடமும் | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் | தளபாடங்களும் கருவிகளும் | உந்து ஊர்திகள் | கணனி | ஏனையவை | | 2017 மொத்தம் | 2016 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வாசிப்புப் பொருட்கள் | நடைபெற்று வரும் கட்டுமானம் | | |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு** | 16,724,361 | 1,495,922 | 1,281,814 | 489,475 | 843,039 | 54,008 | 31,395 | **20,920,014** | 18,603,049 |
| ஆண்டுக்கான மீள் மதிப்பீட்டு இலாபம் | - | - | - | - | - | - | - | - | 1,848,249 |
| மேலதிக சேர்ப்பனவுகள் | - | 1,637 | 27,794 | 125,100 | 20,034 | 1,428 | 91,136 | **267,129** | 493,172 |
| நீக்கப்பட்டவை | - | (3,530) | (6,396) | (12) | (19,708) | - | - | **(29,646)** | (19,321) |
| மாற்றல்கள் | 18,839 | 73,641 | 1,845 | - | - | - | (94,325) | - | (5,135) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 16,743,200 | 1,567,670 | 1,305,057 | 614,563 | 843,365 | 55,436 | 28,206 | **21,157,497** | 20,920,014 |

| தேய்மானம் | காணியும் கட்டடமும் | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் | தளபாடங்களும் கருவிகளும் | உந்து ஊர்திகள் | கணனி | ஏனையவை | | 2017 மொத்தம் | 2016 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வாசிப்புப் பொருட்கள் | நடைபெற்று வரும் கட்டுமானம் | | |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு** | 52,341 | 784,842 | 787,049 | 376,456 | 751,788 | 35,148 | - | **2,787,624** | 3,180,734 |
| ஆண்டிற்கான தேய்மானம் | 199,193 | 76,782 | 81,065 | 33,997 | 42,496 | 1,025 | - | **434,558** | 434,688 |
| மீள் மதிப்பீட்டின் காரணமாக ஏற்பட்ட மாற்றங்கள் | - | - | - | - | - | - | - | - | (809,150) |
| நீக்கப்பட்டவை | - | (677) | (5,019) | (12) | (19,494) | - | - | **(25,202)** | (18,648) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 251,534 | 860,947 | 863,095 | 410,441 | 774,790 | 36,173 | - | **3,196,980** | 2,787,624 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | 16,491,666 | 706,723 | 441,962 | 204,122 | 68,575 | 19,263 | 28,206 | **17,960,517** | 18,132,390 |

காணிகள் கட்டடங்களுக்கான கொண்டு செல்லும் பெறுமதி சந்தைப் பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றது. மிக அண்மைக்கால சுயாதீனமான மதிப்பீடு எவ்.எம். வலுவேர்ஸ் (FM மதிப்பீட்டாளர்) இனால் 2016 திசெம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டதோடு, அது 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

பிரேசில் மற்றும் நியூயோர்க்கிலுள்ள வங்கியின் ஆதனங்களினை வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சின் செயலாளருக்கு கிரயத்தில் மாற்றல் செய்வதற்கு 2016 நவெம்பரில் அதிகாரமளிக்கப்பட்டமையால், சந்தைப் பெறுமதியில் பதிவு செய்யப்படவில்லை. மேலும், மேற்படி ஆதனங்களானவை விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களாக (Assets Held for sale) வகைப்படுத்தப்படாது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

நிதியாண்டுப் பகுதியில் வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் காசு வடிவிலமைந்த மொத்தச் செலவு ரூ.265.73 மில்லியன்களாகும். (2016 - ரூ.488.04 மில்லியன்)

2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகத் தேய்வடைந்த சொத்துக்களின் பெறுமதி ரூ.1,598.17 மில்லியனாக இருந்தது (2016 - ரூ.1,404.91 மில்லியன்).

**வங்கியின் சொந்த உரிமைக் காணி கட்டங்கள் மற்றும் குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள் என்பனவற்றின் மதிப்பீடு தொடர்பான தகவல்கள்**

| ஆதனம் | பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளரின் பெயர் | மதிப்பீட்டு அணுகுமுறை | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை (ரூபா) | சதுர அடி ஒன்றுக்கான மதிப்பீட்டு விலை (ரூபா) | மாத மொன்றுக் கான மதிப்பிடப் பட்ட வாடகை (ரூபா) | வெளிச் செல்லும் செலவுகள் | கொள்வனவு ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| <u>காணி மற்றும் கட்டடம்</u> | | | | | | | |
| தலைமை அலுவலகம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 12,500,000 | 9,000 - 15,000 | - | - | - |
| வைற்ளவேய்ஸ் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 13,500,000 | - | 6,000,000 | 40% | 16.66 |
| லொய்ட்ஸ் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 13,500,000 | - | 6,750,000 | 40% | 16.66 |
| சென்றல் பொயின்ட் கட்டடம் - கொழும்பு 01 | ஏ.ஏ.எம். பாதிகு | வருமான அணுகுமுறை | 14,000,000 | - | 7,500,000 | 35% | 16.66 |
| வங்கிக் கற்கைகளுக்கான மத்திய நிலையம் - இராஜகிரிய | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 2,500,000 - 3,500,000 | 2,500 - 9,500 | - | - | - |
| வங்கி இல்லம் - கொழும்பு 07 | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 7,500,000 | 3,500 - 8,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - மாத்தறை | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 1,500,000 - 3,000,000 | 4,000 - 7,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - மாத்தளை | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 100,000 - 500,000 | 2,500 - 7,500 | - | - | - |
| விடுமுறை இல்லம் - நுவரெலியா | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 1,000,000 | 2,000 - 7,000 | - | - | - |
| விடுமுறை இல்லம் - கதிர்காமம் | ஏ.ஏ.எம். பாதிகு | சந்தை அணுகுமுறை மற்றும் கிரய அணுகுமுறை | 200,000 | 4,500 - 10,000 | - | - | - |
| <u>குத்தகைக் காணியிலுள்ள கட்டடங்கள்</u> | | | | | | | |
| பிரதேச அலுவலகம் - அநுராதபுரம் | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 3,500 - 7,500 | - | - | - |
| விடுமுறை இல்லம் - அநுராதபுரம் | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 5,500 | - | - | - |
| பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 1,500 - 7,000 | - | - | - |
| விடுமுறை இல்லம் - சோமாவதிய | ஏ.ஏ.எம். பாதிகு | கிரய அணுகுமுறை | - | 10,000 | - | - | - |

**காணி, கட்டடங்களின் உள்ளடக்கம்**

| | கொண்டு செல்லும் பெறுமதி 2017 ரூபா 000 | கொண்டு செல்லும் பெறுமதி 2016 ரூபா 000 |
|---|---|---|
| சொந்த உரிமைக் காணி | **8,976,339** | 8,976,339 |
| சொந்த உரிமைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **7,250,954** | 7,424,981 |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | **264,373** | 270,700 |
| | **16,491,666** | 16,672,020 |

மீள் பெறுமதியிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் தேய்மானங்கள் கழிக்கப்பட்ட கிரயச் செலவு எடுத்துச் செல்லல் பெறுமதியாக நிதிக் கூற்றுக்களில் புகுத்தப்பட்டிருப்பின் இது ரூ.8,607.88 மில்லியனாகும் (2016 - ரூ.8,762.63 மில்லியன்).

## 17. அருவச் சொத்துக்கள்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| **கணனி மென்பொருட்கள்:** | | |
| **கிரயச் செலவு:** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **949,772** | 948,648 |
| மேலதிக சேர்ப்பனவு | **7,432** | 1,124 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **957,204** | 949,772 |
| **பதிவழிப்பு மற்றும் பெறுமதியிழப்பு** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **793,452** | 708,038 |
| ஆண்டுக்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம் | **83,129** | 85,414 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **876,581** | 793,452 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **80,623** | 156,320 |

நிதியாண்டுப் பகுதியில் வங்கி காசுக் கொள்வனவு செய்த அருவச் சொத்துக்களின் மொத்தச் செலவு ரூ.7.43 மில்லியனாகும் (2016 - ரூ.1.12 மில்லியன்).

2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு இன்னும் பயன்பாட்டிலிருக்கும் முழுமையாகப் பதிவழிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூ.636.58 மில்லியனாகும் (2016 - ரூ.613.34 மில்லியன்).

## 18. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **8,237,633** | 45,267,025 |
| ஏனைய வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **445,400** | 299,656 |
| | **8,683,033** | 45,566,681 |

## 19. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியமானது, 1974ஆம் ஆண்டில் பங்குபற்றும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கிடையே பிராந்தியங்களுக்கிடையிலான கொடுப்பனவுகளை பல்தரப்பு அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கான முறைமையொன்றாக, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக்குழுவின் முன்னெடுப்புடன் நிறுவப்பட்டது. இலங்கை, பங்களாதேசம், ஈரான், நேபாளம், பாகிஸ்தான், இந்தியா, பூட்டான், மியன்மார் மற்றும் மாலைதீவு ஆகியன பங்குபற்றும் நாடுகளாகும். ஒவ்வொரு மாத இறுதியிலுமுள்ள தேறிய நிலையை இரண்டு மாத கடன்கால கட்டத்தின் பின்னர் தீர்த்து வைத்தல் அல்லது பெற்றுக்கொள்ளல் நடைபெறுகிறது. 2017 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையிலான காலப்பகுதியில், தேறிய கடன்படுநரால் கடன்கொடுத்தோருக்கு தீர்த்து வைக்கும் நாட்களுக்கிடையிலுள்ள நாளாந்த மீதிகளுக்கு 0.63 சதவீதத்திற்கும் 1.28 சதவீதத்திற்குமிடையிலான வட்டி அமெரிக்க டொலரில் (2016 - 0.34 சதவீதம் மற்றும் 0.51 சதவீதம்) செலுத்தப்பட்டது. மேற்படி மீதிகளின் மூலம், குறிப்பிட்ட அறிக்கையிடல் திகதியில் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துக்குச் செலுத்தப்படவேண்டிய தொகை காட்டப்படுகின்றது.

## 20. பன்னாட்டு நாணய நிதியம்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறையல்லாதவை | **116,996,460** | 48,288,764 |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறை | - | 34,687,890 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | **86,086,013** | 79,638,200 |
| ப.நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை | **57,137,759** | 52,858,160 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | **58,445,100** | 54,067,582 |
| | **201,668,872** | 221,251,832 |
| ப.நா.நி. தொடர்பான மொத்தப் பொறுப்புகள் | **318,665,332** | 269,540,596 |

20.1 வட்டியுடனான கடன்கள், ப.நா.நிதியத்திடமிருந்து பெறப்பட்ட நீடிக்கப்பட்ட நிதிய வசதிகளையும் (நீ.நி.வசதி) மற்றும் துணைநில் ஒழுங்குகளையும் உள்ளடக்கியுள்ளது.

20.2 **நீடிக்கப்பட்ட நிதிய வசதி (நீ.நி.வசதி)** என்பது சென்மதி நிலுவை மற்றும் அரசினுடைய பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் என்பனவற்றுக்கு உதவும் ப.நா. நிதியத்தால் வழங்கப்பட்ட மூன்று வருடகால வசதியாகும். ப.நா. நிதியம் சிஎஉ 1.10 பில்லியன் பெறுமதி கொண்ட நீ.நி வசதியினை (அண்ணளவாக ஐ.அ.டொலர் 1.50 பில்லியன்) 2016 யூனில் அங்கீகரித்தது. இத்தொகையானது நாட்டின் தற்போதைய ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கின் 185 சதவீதத்திற்குச் சமனானதாகும். நீ.நி. வசதியின் கீழ் முதற்கட்ட தொகுதிக் கொடுப்பனவு சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 168.10 மில்லியன்) 2016 யூனில் கிடைக்கப்பெற்றது. இரண்டாவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 162.56 மில்லியன்), மூன்றாவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 119.89 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் (167.2 மில்லியன்) மற்றும் நான்காவது தொகுதிக் கொடுப்பனவு பெறுமதியான சிஎஉ 177.77 மில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 251.4 மில்லியன்) முறையே 2016 நவெம்பர், 2017 யூலை மற்றும் 2017 திசெம்பரில் பகிர்ந்தளிக்கப்பட்டது. நான்காவது தொகுதிக் கொடுப்பனவு பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர், நீடிக்கப்பட்ட நிதிய வசதி தொடர்பாக இதுவரை இலங்கை பெற்றுக்கொண்ட மொத்தத் தொகை ஐ.அ.டொலர் 759.9 மில்லியன் ஆகும். மிகுதித் தொகையானது இரண்டு வருட காலத்தில் மூன்று மேலதிக தொகுதிக் கொடுப்பனவாக பகிர்ந்தளிக்கப்பட எதிர்பார்க்கப்படுவதுடன், இறுதித் தொகுதிக் கொடுப்பனவு 2019 ஏப்பிறலில் பெற எதிர்பார்க்கப்படுகின்றது. நீ.நி. வசதிக்கு உரித்தான வட்டி வீதமானது சிஎஉ வட்டி வீதத்திற்கு சமனான (தற்போது வருடாந்தம் 0.05 சதவீத நிலையிலுள்ளது) அடிப்படை வீதக் கட்டணத்துடன் மேலதிகமான 100 அடிப்படைப் புள்ளிகளையும் உள்ளடக்கியுள்ளது.

20.3 **துணைநில் ஒழுங்குகளானது** கடன்பெறும் நாடுகளின் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தின் மீதான குறிப்பிட்ட நிலைமைகள் தொடர்பாக, பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்படுகின்ற சென்மதி நிலுவைக்கு உதவும் நிதியியல் வசதியாகும். ப.நா. நிதியம் சென்மதி நிலுவைக்கு உதவியாக இலங்கைக்கு 2009 யூலையில் சிஎஉ 1.65 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 2.60 பில்லியன்) ஒப்புதலளித்தது. துணைநில் ஒழுங்குகள் 2012 யூலையில் இறுதித்

தொகுதியை பெற்றுக்கொண்டதுடன், 2012இல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. இக்கடன் வசதி 5 ஆண்டுகளுக்குள் மீளச் செலுத்தப்பட வேண்டியதுடன் மீள் கொடுப்பனவுகள் 2012 ஒத்தோபரில் தொடங்கப்பட்டன. துணைநில் ஒழுங்குவசதிகளின் வட்டி வீதம், தீர்ப்பனவுக் கட்டணம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ஆகிய இரண்டு கூறுகளை உள்ளடக்கியதாகும். தீர்ப்பனவுக் கட்டணம் சிஎஉ வட்டி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு வாராந்தம் கணிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கில் 300 சதம் வரையிலான வெளிநின்ற கடன் தொகையில் ஆண்டிற்கு ஒரு சதவீதமாக இருக்கும். வெளிநின்ற கடன் தொகை அனுமதிப்பங்கான 300 சதவீதத்தினை விஞ்சும் பொழுது 300 சதவீதத்தினை விஞ்சிய வெளிநின்ற தொகை மீது ஆண்டிற்கு 2 சதவீதமான மேலதிகக் கட்டணம் விதிக்கப்படும். முதலாவது மீள்கொடுப்பனவான சிஎஉ 25.80 மில்லியன், 2012 ஒத்தோபர் 25ஆம் நாளன்று செலுத்தப்பட்டது.

மொத்தத் தொகையான சிஎஉ 1,455.52 மில்லியன் மீள்கொடுப்பனவுகள் 2013 - 2016 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதுடன், 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான வெளிநின்ற மீதி சிஎஉ 172.25 மில்லியனாக விளங்கியதுடன், இத்தொகை 2017 சனவரி தொடக்கம் யூலை வரையிலான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்பட்டது. துணைநில் ஒழுங்கு வசதி தொடர்பாக 2017 திசெம்பர் 31இல் மீதி எதுவும் காணப் படவில்லை.

12 மாத காலப்பகுதிக்கு முன்பும் பின்பும் அதன் பின்னர் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வட்டியுடன் கூடிய கடன் தொகைகள் பின்வருமாறு:

| | செல்லு படியாகும் வட்டி வீதம் % | முதிர்ச்சி | 2017 ரூ. 000 | 2016 ரூ. 000 |
|---|---|---|---|---|
| **நடைமுறை** | | | | |
| து.நி.ஒ | 0.244 | 2017 | - | 34,687,890 |
| | | | - | 34,687,890 |
| **நடைமுறையற்ற** | | | | |
| நீ.நி.வ | 0.74 | 2027 | **116,996,460** | 48,288,764 |
| | | | **116,996,460** | 48,288,764 |
| **வட்டி உழைக்கும் மொத்தக் கடன்கள்** | | | **116,996,460** | 82,976,654 |

**20.4 சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ)** என்பது கைவசமுள்ள ஒதுக்கச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா. நிதியத்தால் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா.நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தின் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா. நிதியத்திற்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா. நிதியத்தால் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரசு சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா. நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கேற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா. நிதியத்தால் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉவை இரத்துச் செய்வதற்குக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 8 ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும் அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா. நிதியம் சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா. நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

**20.5 ப.நா. நிதியத்திற்குச் செலுத்தப்படத்தக்க ஏனைய தொகைகள்:** தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல்வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

**20.6 அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்:** 8.2ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா. நிதிய அனுமதிப் பங்கிற்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

## 21. ஏனையவை

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் II (குறிப்பு 21.1) | **0** | 364,794 |
| எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள் (குறிப்பு 21.2) | **2,056,009** | 5,857,173 |
| திறைசேரி துணைச் செயலாளர் எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் வீதிச் செயற்றிட்டம் III (குறிப்பு 21.3) | **7,588,467** | 13,245,476 |
| திறைசேரி துணைச் செயலாளர் - எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II (குறிப்பு 21.4) | **8,094,403** | 12,754,696 |
| திறைசேரி துணைச் செயலாளர் சிறப்பு டொலர் க/கு - சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் பசுமை வலு உலகளாவிய கடன் திட்டம் (குறிப்பு 21.5) | **109,808** | 2,195,121 |
| திறைசேரி துணைச் செயலாளர் சிறப்பு டொலர் க/கு - அம்பத்தல் நீர்வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் (குறிப்பு 21.6) | **189,196** | 291,768 |
| திறைசேரி துணைச் செயலாளர் - பெரதேனியா பல்கலைக்கழகத்தின் நொராட் வசோ ஏசியா திட்டம் (குறிப்பு 21.7) | **10,664** | 6,409 |
| சார்க் பரஸ்பர பரிமாற்றல் வசதியின் கீழ் இந்திய ஒதுக்கு வங்கிக்கு செலுத்தவேண்டிய தொகை (குறிப்பு 21.8) | - | 59,920,000 |
| திறைசேரி துணைச் செயலாளர் டொலர் க/கு - ஹம்பாந்தோட்டை துறைமுகம் (குறிப்பு 21.9) | **44,648,475** | - |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | **1,398,867** | 1,614,595 |
| | **64,095,889** | 96,250,032 |

**21.1 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் II**

சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் வசதி உடன்படிக்கையொன்று ஐ.அ.டொலர் 500 மில்லியன்களாக 2011 மாச்சு 31ஆம் நாளன்று கையெழுத்தானது. இவ்வுடன்படிக்கையின் நிதியானது முதன்மை வீதிகளின் அபிவிருத்திக்கும் புனரமைப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. வசதி உடன்படிக்கையின்படி எஸ்குரோ முகவராக, இக்கடன்களை வைப்புச் செய்யும் மற்றும் பெறப்பட்ட நிதிகளைப் பகிர்ந்தளிக்கும் ஒரே நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியில் எஸ்குரோ கணக்கொன்று திறக்கப்பட்டது. இக்கணக்கானது இவ்வுடன்படிக்கையினைத் தொடரும் விதத்தில் கடன் வழங்குநராலும் (சீன அபிவிருத்தி வங்கி) கடன்பெறுநராலும் (இலங்கை அரசாங்கம்) கூட்டாகத் தொழிற்படுத்தப்படும்.

இச்செயற்றிட்டத்தின் கீழான இறுதிப் பகிர்ந்தளிப்பு 2017 யூலை 25இல் செய்யப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை ஐ.அ.டொலர் 0.09 மட்டுமாகும்.

**21.2 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள்**

ஐ.அ.டொலர் 214.20 கொண்ட இவ்வுடன்படிக்கை சீன அபிவிருத்தி வங்கிக்கும் (கடன் வழங்குநர்) இலங்கை அரசாங்கத்திற்கும் (கடன் பெறுநர்) 2012 யூன் 28ஆம் நாளன்று கையெழுத்தானது. இக்கடன் உடன்படிக்கையின் நோக்கம், மொறககந்தையிலுள்ள நீர்மின் வலு நிலையத்தின் கட்டுமானத்திற்கு நிதியிடுவதற்கு வசதியளிப்பதேயாகும். இத்திட்டம் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கி இவ்வுடன்படிக்கையின் வங்கியாளராக வங்கியின் பொதுப் பேரேட்டில் கணக்கொன்றினைத் திறந்ததுடன், வெளிவாரி மூலவளங்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் படி கடன்களைப் பெற்றுக்கொள்ளலும், பகிர்ந்தளித்தலும் நோக்கமாகும். 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 25.65 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31இல் ஐ.அ.டொலர் 13.45 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டது.

**21.3 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III**

இவ்வசதி உடன்படிக்கையானது சீன அபிவிருத்தி வங்கிக்கும் (கடன் வழங்குநராக) இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் (கடன்பாட்டாளராக) 2014 மாச்சு 11ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 300 மில்லியனுக்காக கையெழுத்தானது. இக்கடனின் நோக்கம் யாதெனில் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III - கட்டம் I இன் மேம்பாட்டிற்கும் புனரமைப்பு வேலைகளுக்கும் ஏற்படும் செலவிற்கு நிதியிடுவதேயாகும். வசதி உடன்படிக்கையின்படி, வங்கியானது இலங்கை அரசாங்கத்திற்கான வங்கியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை வீதி அபிவிருத்திக்கு பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 38.78 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31இல் ஐ.அ.டொலர் 49.64 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டது.

**21.4 எஸ்குரோ உடன்படிக்கையின் கீழ் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II**

இவ்வுடன்படிக்கையின் கட்டம் II 2014 நவெம்பர் 24ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 100 மில்லியன் பெறப்பட்டது. 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 32.19 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 52.96 மில்லியனாகக் காணப்பட்டது.

**21.5 சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளும் பசுமை வலு உலகளாவிய கடன் திட்டமும்**

இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஐரோப்பிய முதலீட்டு வங்கிக்குமிடையில் 2013 நவெம்பர் 13ஆம் நாள் இடம்பெற்ற நிதியியல் ஒப்பந்தமாகும். வசதி உடன்படிக்கை என்ற ரீதியில் இலங்கை அரசாங்கத்தின் வங்கியாளராக வங்கி நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை செயற்றிட்டத்திற்குப் பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளும் பசுமைவலு உலகளாவிய கடன்திட்டத்தினதும் இரண்டாவது தொகுதி யூரோ நாணயத்தில் 2015 யூலை 09 ஆம் நாளன்று பெறப்பட்டது. இதன்படி, அக்கடனை வைப்புச் செய்து, அத்தகைய பெறப்பட்ட பணத்தினை செயற்றிட்டத்தின் பகிர்ந்தளிக்கும் ஒரே நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்பேரேட்டில் திறக்கப்பட்டிருக்கிறது.

2017ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 13.94 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 0.71 மில்லியனாகக் காணப்பட்டது.

**21.6 சிறப்பு டொலர் கணக்கு - அம்பத்தல நீர்வழங்கல் மேம்பாட்டுச் செயற்றிட்டம்**

இக்கொடுகடன் வசதி உடன்படிக்கையானது கடன்வழங்குனரான ஏஜென்ஸ் பிரான்கைஸ் டி டெவலப்பெமென்ற்றிற்கும், கடன்பாட்டாளரான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குமிடையில் 2014 செத்தெம்பர் 29 அன்று கையொழுத்தானது. இக்கடனைப்பெற்று பகிர்ந்தளிக்கும் நோக்கத்திற்காக திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க இவ்வுடன்படிக்கையில் வங்கியாளர் என்ற முறையில் வங்கி அதன் பேரேட்டில் கணக்கொன்றினைத் திறந்துள்ளது. 2015 செத்தெம்பர் 14ஆம் நாளன்று மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு ஐ.அ.டொலர் 5 மில்லியன் பெறப்பட்டது.

2017 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 0.71 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31இல் ஐ.அ.டொலர் 1.24 மில்லியன் மீதியாகக் காணப்பட்டது.

**21.7 பெரதேனியா பல்கலைக்கழகத்தின் நொராட் வசோ ஏசியா திட்டம்**

இயலளவைக் கட்டியெழுப்பும் திட்டத்திற்காக நொராட்டிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள பெரதேனியாப் பல்கலைக்கழகத்தின் சார்பில் 2016 இலிருந்து இலங்கை மத்திய வங்கியால் பேணப்படுவதாகும். பெரதேனியா பல்கலைக்கழகமானது, திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தினூடாக மீளெடுப்பனவு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஐ.அ.டொலரில் அல்லது இலங்கை ரூபாவில் மீளெடுப்பனவைப் பெற எதிர்பார்க்கின்றது. 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 0.07 மில்லியன் பெறுமதியான இரண்டு தொகைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், ஐ.அ.டொலர் 0.04 மில்லியன் திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றப்பட்டது. 2017 திசெம்பர் 31இல் நிலுவையாக ஐ.அ.டொலர் 0.07 மில்லியன் காணப்பட்டது.

**21.8 சார்க் பரஸ்பரபரிமாற்றல் வசதியின் கீழ் இந்திய ஒதுக்கு வங்கிக்குச் செலுத்தவேண்டிய தொகை**

2016 திசெம்பர் 31இல் நிலுவையாகவுள்ள தொகை ஐ.அ.டொலர் 400 மில்லியன் பெறுமதியான எடுப்பனவை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், இவ்வெடுப்பனவு 2017 மாச்சு 16இல் மீளச் செலுத்தப்பட்டது.

**21.9 திறைசேரி துணைச் செயலாளர் டொலர் கணக்கு- ஹம்பாந்தோட்டை துறைமுகம்**

இது, இலங்கை துறைமுக அதிகார சபை சைனா மேர்சன்ற் போர்ட் ஹோல்ட்டிங் கோ லிமிடெட்டிற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் தொடர்ச்சியாக, ஹம்பாந்தோட்டை துறைமுகச் செயற்பாடுகளை கையளிக்கும் முகமாக சைனா மேர்சன்ற் போர்ட் ஹோல்ட்டிங் கோ லிமிடெட்டிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையை வைப்பிடுவதற்காக, திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் சார்பாக பேணப்படுகின்ற சிறப்பு டொலர் கணக்காகும். முதற் பெறுகையாக ஐ.அ.டொலர் 292.1 மில்லியன் 2017 திசெம்பர் 22இல் பெறப்பட்டதுடன், அதேதொகை 2017 திசெம்பர் 31இல் நிலுவையாகக் காணப்பட்டது.

### 22. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்

இவை நாணய விதிச் சட்டத்தின் 93ஆம் பிரிவின் கீழ் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் வைப்புக்களாக இருப்பதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியோரினால் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வங்கிகளினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழான கொடுப்பனவுகளை கௌரவிப்பதற்காக பேணப்படும் வைப்புக்களாகவும் காணப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் முழுமையாக பிணையிடப்பட்ட வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவுக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படுகிறது. இவ்வைப்புக்கள் தொடர்பான தரப்பினராலும் (அதாவது அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிறுவனங்கள்) மற்றவர்களினாலும் வைப்புக்கள் போன்ற கணக்கீட்டு வெளிப்படுத்துகைத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக வகைப்படுத்தப்பட்டு தொடர்பான நியதி ஒதுக்கு வீதங்களில் பேணப்பட்டு வருகின்றதேயன்றி அவ்வரச நிறுவனங்களுடனான வங்கியின் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொடர்புகளுக்காகவல்ல.

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| **வங்கிகளினால் செய்யப்பட்ட வைப்புக்கள்** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **215,901,806** | 183,836,224 |
| - ஏனையவை | **125,805,585** | 110,060,140 |
| | **341,707,391** | 293,896,364 |
| **நிதியியல் நிறுவனங்களால் செய்யப்பட்ட வைப்புக்கள்** | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | **94** | 477 |
| - ஏனையவை | **4,713** | 9,354,449 |
| | **4,807** | 9,354,926 |
| **வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினாலும் செய்யப்பட்ட மொத்த வைப்புகள்** | **341,712,198** | 303,251,290 |

### 23. அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| அரச வைப்புக்கள் | **167,492** | 167,615 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | **157,025** | 283,269 |
| | **324,517** | 450,884 |

வங்கி, அரச மற்றும் / அல்லது அரச முகவர்களின் அல்லது நிறுவனங்களின் வைப்புக்களுக்கான அலுவல்சார் வைப்பாளராக இருப்பதனால் நாணய விதிச் சட்டத்தின் 106 (1)ஆம் பிரிவின் நியதிகளில் இவ்வைப்புக்கள் பேணப்படுகின்றன.

### 24. மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| அரச பிணையங்கள் | **6,503,884** | 21,383,724 |
| துணைநில் வைப்பு வசதிகள் (குறிப்பு 2.5.9) | **34,151,394** | 48,670,712 |
| | **40,655,278** | 70,054,436 |

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக, நாணய விதிச் சட்டத்தின் பிரிவுகள் 90 மற்றும் 91 இன் கீழ் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை, பணச்சந்தையின் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இம்மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை காலத்திற்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கைக்கு அமைவாக ஓரிரவு அல்லது தவணை முறையில் அரச பிணையங்களில் ஈடுபடுத்தப்படுகின்றன.

### 25. ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களிற்கு நடைமுறைக் கணக்கு வசதிகளினை வழங்குகின்றது. தனியாக நிருவகிக்கப்படுகின்ற வங்கியின் ஊழியர் நன்மைத் திட்டங்களின் நடைமுறைக் கணக்கு மற்றும் உள்ளக நிருவகக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டுள்ள தொகைகள் பின்வருமாறு:

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| இ.ம.வ சேம நிதியம், ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றின் மீதிகள் | **4,547** | 51,744 |
| | **4,547** | 51,744 |

### 26. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. குறிப்பிட்ட வங்கியினால் வெளியிடப்பட்டு அறிக்கையிடல் திகதிகளில் சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயத் தரவுகள் பின்வருமாறு:

| பெறுமதி | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| **குத்திகள்:** | | |
| சதம் 1 | **3,631** | 3,631 |
| சதம் 2 | **5,707** | 5,703 |
| சதம் 5 | **23,258** | 23,247 |
| சதம் 10 | **39,229** | 39,208 |
| சதம் 25 | **121,039** | 120,586 |
| சதம் 50 | **185,590** | 185,611 |
| ரூபா 1 | **898,148** | 851,968 |
| ரூபா 2 | **1,357,849** | 1,272,301 |
| ரூபா 5 | **4,102,486** | 3,725,947 |
| ரூபா 10 | **5,402,312** | 4,505,834 |
| ஞாபகார்த்த நாணயக் குத்திகள் | **587,075** | 584,177 |
| | **12,726,324** | 11,318,213 |
| **தாள்கள்:** | | |
| ரூபா 1 | **4,981** | 4,981 |
| ரூபா 2 | **26,696** | 26,696 |
| ரூபா 5 | **37,193** | 37,194 |
| ரூபா 10 | **1,340,240** | 1,382,089 |
| ரூபா 20 | **5,758,265** | 5,331,571 |
| ரூபா 50 | **5,561,352** | 5,141,033 |
| ரூபா 100 | **21,599,562** | 20,590,404 |
| ரூபா 200 | **130,040** | 130,526 |
| ரூபா 500 | **38,153,548** | 33,475,699 |
| ரூபா 1000 | **141,832,264** | 141,169,379 |
| ரூபா 2000 | **10,526,029** | 20,436,195 |
| ரூபா 5000 | **360,357,407** | 313,733,885 |
| | **585,327,577** | 541,459,652 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | **598,053,901** | 552,777,865 |

**27. ஏனைய கொடுபடத்தக்கவை**

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| உள்நாட்டு செலுத்த வேண்டிய வட்டி | **1,676** | - |
| ஏற்பாடுகளும் கட்டணங்களும் | **396,531** | 563,783 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வைப்புக்கள் | **2,306,897** | 2,440,187 |
| பெறப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்களுக்கெதிரான பொறுப்பு (குறிப்பு 27.1) | **5,083,171** | 4,094,268 |
| ஏனைய கொடுபடத்தக்கவை | **1,098,881** | 1,465,310 |
| | **8,887,156** | 8,563,548 |

**27.1** கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கொடுபடத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான வழிகாட்டலின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிகக் கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதங்களுடன் சேர்த்து வங்கிகளின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**28. பிற்போடப்பட்ட கொடைகள்**

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறு | **80** | 106 |
| இவ்வாண்டின் கடன் தீர்ப்பனவு | **(35)** | (26) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **45** | 80 |

பிற்போடப்பட்ட வருமானம் அத்தகைய சொத்துக்களின் தேய்மானத்துடன் பொருந்தத்தக்க விதத்தில் இக் காலப்பகுதியில் பதிவழிப்புச் செய்யப்பட்டன. இது, எந்தவித கரிசனைகளுமில்லாது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களின் சந்தைப் பெறுமதி பிற்போடப்பட்ட கொடைக் கணக்கொன்றில் செலவு வைக்கப்படுவதுடன், தொடர்பான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைகளின்படி அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் ஏனைய வருமானமாகக் கொள்ளப்படுகிறது.

**29. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும்**

அனைத்து தகுதியான ஊழியர்களும் உள்ளடங்கக் கூடியவாறான குறித்துரைக்கப்பட்ட ஆறு நலவுரிமைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றன. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட பணிக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். புதிய ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு பின்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட பணிக்காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். ஊழியர் ஓய்வூதியத் திட்டங்களானது பங்களிப்பில்லாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதுடன் இதன் நன்மைக் கிரயச் செலவுகளை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. இத் திட்டத்திற்குத் தகுதி பெற்ற 1994 ஓகத்து 01இற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வதுடன் 1994 ஓகத்து 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தினை பங்களிப்புச் செய்வர்.

வங்கியில் ஐந்து ஆண்டு கால பணியைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெறாத ஊழியர்களுக்காக பணிக்கொடை நன்மைகள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப்பொறுப்புபைப் பூர்த்தி செய்வதற்காக காப்புறுதி மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட, அதற்குச் சமமானதொரு தொகை நிதி நிலைமைகள் பற்றிய கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

தொழில்நிலைக்குப் பிந்திய மருத்துவ நலத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற ஊழியர்களால் அவர்கள் பெயரில் அல்லது அவர்களது துணைவர் பெயரில் மற்றும் ஊழியர்களது விதவைகள்/விதுரர்களாலும் ஏற்கப்படுகின்ற ஒரு சில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டங்கள், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், பணிக் கொடைகள் திட்டம் மற்றும் மருத்துவ நலத் திட்டம் என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட நன்மைகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைப் பணிச் செலவுகள் தொடர்பான காப்புறுதி மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான காப்புறுதி மதிப்பீட்டாளரான கே.ஏ.பண்டிற், ஆலோசகர் மற்றும் காப்புறுதி மதிப்பீட்டாளர் (மும்பாய்) ஆண்டுக் காலத்தில் பணியின் பொருட்டு வங்கியினால் அமர்த்தப்பட்டார்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் என்பனவற்றின் நிதியங்கள் தனித்தனியாக முகாமைப்படுத்தப்படுவதுடன் தனித்தனியாக ஏடுகளும் பேணப்படுகின்றன. எனினும், பணிக்கொடைத் திட்டமும் மருத்துவ நன்மைகள் திட்டமும் வங்கியின் கணக்கேடுகளிலிருந்து வேறாக்கப்படவில்லை. மேலும் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் வங்கி ஏடுகளில் இந்நிதியத்திற்காக தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றதுடன், முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் பங்கிடப்படாமல் மீளமுதலிடப்படுகின்றன.

அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் மொத்தச் சந்தைப் பெறுமதி ரூ.40,816.60 மில்லியனாக (2016 - ரூ.36,145.06 மில்லியன்) அமைந்து ரூ.38,392.29 மில்லியன் (2016 - ரூ.36,065.09 மில்லியன்) கொண்ட தற்போதைய அனைத்து நன்மைகள் கடப்பாடுகளினதும் மொத்தத்திலும் பார்க்க கூடுதலாகக் காணப்பட்டதன் மூலம் ரூ.2,424.31 மில்லியன் (2016 - மிகை ரூ.79.97 மில்லியன்) மிகை தோன்றியது.

2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு

| நன்மைப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 | மொத்தம் 2017 ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மைக் கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதி | 29,232,145 | 718,032 | 5,218,411 | 912,262 | 153,167 | 2,158,269 | 38,392,286 |
| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சந்தைப் பெறுமதி | (28,339,460) | (3,251,092) | (5,643,016) | (2,191,535) | (175,385) | (1,216,111) | (40,816,599) |
| நன்மைப் பொறுப்பு/ (சொத்து) நடைமுறையல்லாதவை | 892,685 | (2,533,060) | (424,605) | (1,279,273) | (22,218) | 942,158 | (2,424,313) |

நிதியியல் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களின் மீதியானது, பின்வரும் காரணங்களின் காரணமாக மதிப்பீட்டாளரின்படி தேறிய பொறுப்புக்களிலிருந்து வேறுபடுகின்றது.

அ) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் எஞ்சிய மீதியை வங்கிக்குப் பகிர்ந்தளிப்பதற்கான சாத்தியம் குறைவாக இருப்பதன் காரணமாக இந்நிதியத்தின் தேறிய சொத்து நிலைமை கணக்குகளில் பிரதிபலிக்கப்படவில்லை.

ஆ) வங்கியானது வெவ்வேறான நிதியத்தில் (உள்ளக ரீதியாக நிர்வகிக்கப்பட்ட) தொடர்பான சொத்துக்களை வைத்திருக்காததன் காரணமாக பணிக்கொடை மற்றும் மருத்துவ நன்மைத் திட்டம் இரண்டிற்குமாக ஏட்டுப் பெறுமதி மொத்தப் பெறுமதியினைக் காட்டுமேயன்றி, மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்ட தேறிய பொறுப்புக்களைக்காட்டாது.

ஓய்வூதியம், விதவைகள் அநாதைகள் நிதியம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் நிதியம், பணிக்கொடை மற்றும் மருத்துவ நலன்கள் திட்டம் போன்ற நிதியங்களின் கீழ் ரூ.485.79 மில்லியன் பெறுமதி கொண்ட பிணைகளற்ற முதலீடு காணப்படுவதுடன், அவற்றுக்கு 100 சதவீத ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் விளைவாக திட்டச் சொத்துக்களில் உள்ளடக்கப்படவில்லை. அத்தகைய முதலீடுகளின் பெறுமதியை உள்ளடக்காத போதும், வங்கியானது காப்புறுதி மதிப்பீட்டின்படி அதன் ஓய்வூதியப் பொறுப்புக்களின் கீழ் தேறிய சொத்து நிலையைக் கொண்டுள்ளது.

| நன்மைப் பொறுப்பு/ (சொத்து)களிலான அசைவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 | மொத்தம் 2017 ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 சனவரி 01இல் உள்ளவாறு | 2,076,018 | (1,834,772) | (187,705) | (1,002,453) | (20,646) | 889,590 | (79,968) |
| நன்மைகளுக்கான செலவு | 480,203 | (208,897) | (24,402) | (130,319) | 12,698 | 144,685 | 273,968 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | (1,017,607) | (308,404) | (180,379) | (136,612) | (14,270) | (84,350) | (1,741,622) |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (645,929) | (180,987) | (32,119) | (9,889) | - | (7,767) | (876,691) |
| **2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான நடைமுறையல்லாதவை** | 892,685 | (2,533,060) | (424,605) | (1,279,273) | (22,218) | 942,158 | (2,424,313) |

| நன்மைகளுக்கான செலவுகள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 | மொத்தம் 2017 ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மைக் கடப்பாடுகளின் மீது வட்டிச் செலவினம் | 269,882 | (238,520) | (24,402) | (130,319) | (2,684) | 115,647 | (10,396) |
| தற்போதைய பணிகளுக்கான செலவு | 210,321 | 29,623 | - | - | 15,382 | 29,038 | 284,364 |
| நன்மைகளுக்கான செலவுகள் | 480,203 | (208,897) | (24,402) | (130,319) | 12,698 | 144,685 | 273,968 |
| திட்டமிடப்பட்ட சொத்துக்கள்/ முதலீடுகள் மீதான உண்மையான வருமானம் | 4,375,497 | 627,231 | 849,631 | 375,242 | 37,653 | 253,174 | 6,518,428 |
| சராசரி நிலுவையின் சதவீதமாக திட்டமிடப்பட்ட சொத்தின்/ முதலீடுகளின் உண்மையான வருவாய் | 16.28% | 22.02% | 15.75% | 18.67% | 22.97% | 21.25% | 16.94% |
| செலுத்தப்பட்ட நன்மைகள் மீது ஈட்டிய மிகை வட்டி | 2,285,220 | 625,357 | 466,108 | 353,400 | 22,966 | 41,801 | 3,794,852 |

29. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும் (தொடர்ச்சி)

| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 | மொத்தம் 2017 ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் / முதலீடுகளின் சந்தைப் பெறுமதி | **25,408,311** | **2,444,748** | **5,144,789** | **1,828,245** | **152,419** | **1,166,543** | **36,145,055** |
| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் உண்மை வருவாய் | **4,375,497** | **627,231** | **849,631** | **375,242** | **37,653** | **253,174** | **6,518,428** |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | **645,929** | **180,987** | **32,119** | **9,889** | **-** | **7,767** | **876,691** |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | **(2,090,277)** | **(1,874)** | **(383,523)** | **(21,842)** | **(14,687)** | **(211,373)** | **(2,723,576)** |
| **ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சந்தைப் பெறுமதி** | **28,339,460** | **3,251,092** | **5,643,016** | **2,191,534** | **175,385** | **1,216,111** | **40,816,598** |

**2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு**

| **நன்மைப் பொறுப்புக்கள்/ (சொத்து)** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000** | **விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **பணிக் கொடைத் திட்டம் ரூ.000** | **மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000** | **மொத்தம் 2016 ரூ.000** |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி | 27,484,329 | 609,976 | 4,957,084 | 825,792 | 131,774 | 2,056,133 | 36,065,088 |
| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சந்தைப் பெறுமதி | (25,408,311) | (2,444,748) | (5,144,789) | (1,828,245) | (152,419) | (1,166,543) | (36,145,055) |
| **நன்மைப் பொறுப்புக்கள்/ (சொத்துக்கள்) நடைமுறையல்லாதவை** | 2,076,018 | (1,834,772) | 187,705 | (1,002,453) | (20,645) | 889,590 | (79,967) |

| **நன்மைப் பெறுப்புக்களின்/ (சொத்துகளின்) அசைவு** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000** | **விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **பணிக் கொடைத் திட்டம் ரூ.000** | **மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000** | **மொத்தம் 2016 ரூ.000** |
|---|---|---|---|---|---|---|---|
| 2016 சனவரி 01இல் | 9,055,520 | (1,245,041) | 819,399 | (612,924) | (33,574) | 786,620 | 8,770,000 |
| நன்மைகளுக்கான செலவு | 1,232,222 | (72,429) | 81,940 | (61,292) | (24,042) | 112,275 | 1,316,758 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | (7,765,143) | (345,098) | (1,055,088) | (316,344) | (11,113) | 7,038 | (9,485,849) |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (446,581) | (172,204) | (33,855) | (11,893) | - | (16,343) | (680,876) |
| **2016 திசெம்பர் 31இல் நடைமுறையல்லாதவை** | 2,076,018 | (1,834,772) | (187,705) | (1,002,453) | (20,645) | 889,590 | (79,967) |

| **நன்மைகளுக்கான செலவுகள்** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000** | **விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **பணிக் கொடைத் திட்டம் ரூ.000** | **மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000** | **மொத்தம் 2016 ரூ.000** |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மைக் கடப்பாடுகள் மீதான வட்டிச் செலவு | 905,552 | (124,504) | 81,940 | (61,292) | (3,358) | 78,662 | 877,000 |
| கடந்த பணிகளுக்கான செலவு | 326,670 | 52,075 | - | - | 27,400 | 33,613 | 439,758 |
| நன்மைச் செலவினம் | 1,232,222 | (72,429) | 81,940 | (61,292) | (24,042) | 112,275 | 1,316,758 |
| **திட்ட சொத்துக்கள்/ முதலீடுகள் மீதான உண்மையான வருமானம்** | 877,139 | 12,576 | 268,269 | 89,924 | (6,438) | (37,029) | 1,204,441 |
| **சராசரி நிலுவையின் சதவீதமாக திட்டமிடப்பட்ட சொத்தின்/ முதலீடுகளின் உண்மையான வருவாய்** | 3.40% | 0.53% | 5.17% | 5.03% | -3.89% | -2.91% | 3.30% |
| **செலுத்தப்பட்ட நன்மைகள் மீது ஈட்டிய மிகை வட்டி** | (1,158,329) | 12,576 | (114,825) | 69,041 | (25,769) | (231,229) | (1,448,535) |

| திட்டச் சொத்துக்களின்/ முதலீடுகளின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 | மொத்தம் 2016 ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டின் தொடக்கத்தில் திட்ட சொத்துக்களின்/ முதலீடுகளின் சந்தைப் பெறுமதி | 26,120,059 | 2,259,968 | 5,225,759 | 1,747,311 | 178,188 | 1,381,429 | 36,912,714 |
| திட்ட சொத்துக்களின்/முதலீடுகளின் மீதான உண்மை வருமானம் | 877,139 | 12,576 | 268,269 | 89,924 | (6,438) | (37,029) | 1,204,441 |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | 446,581 | 172,204 | 33,855 | 11,893 | - | 16,343 | 680,876 |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | (2,035,468) | - | (383,094) | (20,883) | (19,331) | (194,200) | (2,652,976) |
| **ஆண்டின் இறுதியில் திட்ட சொத்துக்களின்/ முதலீடுகளின் சந்தைப் பெறுமதி** | 25,408,311 | 2,444,748 | 5,144,789 | 1,828,245 | 152,419 | 1,166,543 | 36,145,055 |

அனைத்துத் திட்டங்களுக்குமான ஊழியர் நன்மைகளின் கடப்பாடுகளைத் தீர்மானிக்கின்ற போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான எடுகோள்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன:

| | 2017 | 2016 |
|---|---|---|
| கழிவு வீதம் | **13.00%** | 13.00% |
| சொத்துக்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் வீதம் | **13.00%** | 13.00% |
| எதிர்காலச் சம்பள அதிகரிப்பு | **8.50%** | 8.50% |
| சம்பள அதிகரிப்பு வீதம் - புதிய ஓய்வூதியத் திட்டம் | **6.50%** | 6.50% |
| எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு | **7.50%** | 7.50% |
| தேய்வு வீதம் | **2.00%** | 2.00% |
| மருத்துவச் செலவு அதிகரிப்பு வீதம் | **3.00%** | 3.00% |
| எஞ்சியுள்ள சராசரி பணி ஆண்டுகள் | | |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் - புதிய | **41 ஆண்டுகள்** | 41 ஆண்டுகள் |
| விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| பணிக் கொடைத் திட்டம் | **20 ஆண்டுகள்** | 20 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி மருத்துவ நலத் திட்டம் | **32 ஆண்டுகள்** | 32 ஆண்டுகள் |
| ஓய்வுபெறும் வயது | **60 ஆண்டுகள்** | 60 ஆண்டுகள் |

| **உணர்திறன் பகுப்பாய்வு 0.5% இல் (31.12.2017)** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **ஊழியர் ஓய்வூதியத் திட்டம் - புதிய ரூ.000** | **விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000** | **பணிக் கொடைத் திட்டம் ரூ.000** | **மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000** |
|---|---|---|---|---|---|---|
| **நடைமுறை கருதுகோள்களின் மீது எறிவுசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகள்** | **29,232,145** | **718,032** | **5,218,411** | **912,262** | **153,167** | **2,158,269** |
| கழிவிடல் வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,191,585) | (74,437) | (235,086) | (51,577) | (5,314) | (69,405) |
| கழிவிடல் வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | 1,284,348 | 84,978 | 256,050 | 56,341 | 5,668 | 74,344 |
| தேய்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | 30,610 | 13,365 |
| தேய்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | (33,377) | (14,060) |
| சம்பள உயர்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 163,917 | 64,085 | 12,735 | 5,293 | 5,883 | - |
| சம்பள உயர்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (159,677) | (58,265) | (12,410) | (5,165) | (5,551) | - |
| மருத்துவச் செலவு அதிகரிப்பு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | 75,512 |
| மருத்துவச் செலவு அதிகரிப்பு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | (70,491) |
| ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 1,173,562 | - | 254,555 | 53,360 | - | - |
| ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,101,245) | - | (236,091) | (49,459) | - | - |

**30. பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும்**

பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும் கொடுப்பனவு செய்யத்தக்க கணக்குகளிலுள்ள கொடுபடத்தக்க மீதிகள், ஒப்பந்த ரீதியான பிடித்துவைத்தல்கள், மீட்கத்தக்க விலைக்கோரல் வைப்புக்களாக எடுக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் செலுத்தப்படவேண்டிய தண்டப்பணங்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

**31. பங்குரிமை மூலதனம்**

**பங்குரிமை மூலதன விடயங்களின் தன்மை**

**31.1 மூலதன நிதியம்**

**பங்களிப்பு மூலதனம்** - நாணய விதிச் சட்டத்தின் 6ஆவது வாசகத்தின் பிரகாரம் மூலதனக் கணக்கு, வங்கியின் மூலதனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2014ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 6ஆம் பிரிவின்படி, வங்கியின் மூலதனம் ரூ.50 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, வங்கி, 2014 செத்தெம்பரில் நிதி அமைச்சரின் சம்மதத்துடன் அதன் ஒதுக்கங்களை மூலதனமாக்கியதன் மூலம் மூலதனத்தினை ரூ.50 பில்லியனுக்கு அதிகரித்தது.

**31.2 நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் -** ப.க.நி 16 இன் படி இவ்வொதுக்கானது ஆதனம், பொறி மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டு மிகையை உள்ளடக்கியுள்ளது.

**31.3 ஏனைய ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:**

(i) **பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்** - பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்கமாகும். இதன் பிரகாரம், தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களிலுள்ள மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதன் ஊடாக உருவாகின்ற தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு ஒதுக்கத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(ii) **சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் -** வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் சந்தைப்படியான விலைகளின் மோசமான தாக்கத்திற்கு வழிவகுக்கின்ற பன்னாட்டுச் சந்தைகளின் தளம்பல்களின் ஏதேனும் மோசமான தாக்கத்தினை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டுச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து கிடைக்கும் விலைப் பெறுமதி இலாபங்களை மாற்றல் செய்வதற்காக 2003 சனவரி 30ஆம் நாளன்று நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டது. நாணயச் சபையானது இந்த ஒதுக்கினை இலங்கை மத்திய வங்கியின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கில் உயர்ந்தபட்சம் 10 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு தீர்மானித்தது.

மேலும், 29 பெப்புருவரி 2016இல் திகதியிடப்பட்ட வங்கியின் இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை தொடர்பில் பிரேரிக்கப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் எம்பீ/ டீயி (டபிள்யு)/7/1/2016 இற்கமைய, நாணயச் சபையானது அவசியம் எனக் கருதும் பட்சத்திலும், குறிப்பிடத்தக்க தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நட்டத்தின் காரணமாக திரட்டிய இலாபங்கள் எதிர்மறையாகக் காணப்படுமிடத்தும் சந்தை மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து திரட்டிய இலாபத்திற்கு மாற்றல் செய்யமுடியும்.

இதன்படி, கடந்த காலங்களில் திரட்டப்பட்ட குறிப்பிடத்தக்களவிலான தேறல் செய்யப்படாத விலை மதிப்பீடுகளிலிருந்தான நட்டத்தின் காரணமாக உருவான எதிர்மறை திரட்டிய இலாபத்தை மேம்படுத்தும் விதமாக ரூ.4.65 மில்லியன் பெறுமதியான தொகை சந்தை மீள் மதிப்பீடு ஒதுக்கத்திலிருந்து திரட்டிய இலாபத்திற்கு மாற்றப்பட்டது.

தொடர்ந்தேற்பட்ட சந்தைப்படியான இலாபத்தை கருத்திற்கொண்டு, 2017 பெப்புருவரி 20இல் திகதியிடப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் பீபி எம்பீ/எவ்/7/21/2017 இன்படி ரூ.14.03 பில்லியன் தொகை திரட்டிய இலாபத்திலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

(iii) **ஏனைய ஒதுக்குகள்** - பொது ஒதுக்கு, கட்டட ஒதுக்கு மற்றும் கொடுகடன் உத்தரவாத ஒதுக்கு என்பவற்றை உள்ளடக்குகிறது. பொது ஒதுக்கு, நாணயச் சபையினால் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் வருவாய்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது.

(iv) **விற்பனைக்குள்ள பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/(நட்டம்)** - விற்பனைக்குள்ள பிணையங்கள் மற்றும் அலகு முதலீடு என்பனவற்றை மீளமதிப்பிடப்பட்டதன் மூலம் உருவாகிய தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

(v) **அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை கடன்கரைப்பு நிதியம்** - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதில் பங்குபற்றுகின்றவர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந் நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

(vi) **ஓய்வூதிய நிதிய ஒதுக்கம்** - வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் வடுக்களால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் பற்றாக்குறை உருவாகுமாயின், அதனை ஈடுசெய்யும் பொருட்டு 2007ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து மேலதிகமாக ரூ. 3 பில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு இலாபத்திலிருந்து ரூ. 1 பில்லியன் தொகை இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது. 2015 யூனில் ரூ. 2 பில்லியன் ஓய்வூதிய நிதிய ஒதுக்கிலிருந்து, புதிய ஓய்வூதிய பொறுப்புக் கணக்கிற்கு, நாணயச் சபை பத்திர இலக்கம் எம்பீ/எச்ஆர்/11/12/2015 இன்படி புதிய ஓய்வூதியத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக மாற்றல் செய்யப்பட்டது.

(vii) **தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம்** - குறிப்பாக தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைப்பாடுகள், நவீனமயமாக்கல் அல்லது இ.ம.வங்கியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொதுப்பேரேடு, அ.நே.மொ. தீர்ப்பனவு முறை, திறைசேரி முகாமைத்துவ முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை ஆகிய தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இவ்வொதுக்கம் 2007 ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து உருவாக்கப்பட்டது.

(viii) **மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம்** - 2010ஆம் ஆண்டுப் பகுதியில், வங்கி இலாபத்திலிருந்து உருவாக்கிய நிதியத்தின் மூலம் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாகாணங்களுக்கு ரூ.2.90 பில்லியன் கொண்ட நடுத்தர கால மற்றும் நீண்ட கால மீள்நிதியிடல் இலங்கை வங்கியூடாகவும் மக்கள் வங்கியூடாகவும் வழங்கப்பட்டன.

(ix) சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம் - இவ்வொதுக்கானது நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்து ரூ.2 பில்லியனை மாற்றல் செய்ததன் மூலம் 2014இல் ஏற்படுத்தப்பட்டது. இதில் ரூ.1 பில்லியன் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும்

சௌபாக்கியா கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் ஐஐ), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குதல் (கட்டம் ஐஐ) மற்றும் வடக்கு, கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்தல் என்பனவற்றின் மீளமைத்தலுக்கு ஆதரவளிப்பதற்காக ஒதுக்கப்பட்டது. மற்றைய ரூ.1 பில்லியன் வர்த்தக வங்கிகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் வழங்கலுக்கு உதவியளிப்பதற்கான சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத்திட்டத்தினை நடைமுறைக்கிடுவதற்காக ஒதுக்கப்பட்டது.

ஏனைய ஒதுக்கங்களிலான அசைவுகள் பின்வருமாறு:

| | நடுத்தர கால, நீண்ட கால கொடுகடன் ஒதுக்கம் | சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | ஏனைய ஒதுக்கங்கள் | சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம் | அ.நே. மொ. தீ. கடன் கரைப்பு நிதியம் | பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | விற்பனைக்குள்ள பிணையங்களின் தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/(நட்டம்) | ஓய்வூதிய நிதிய ஒதுக்கம் | தொழில் நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம் | மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்ட நிதியம் | தொழில் நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் நிதியிடல் தேவை களுக்கான ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **2017 சனவரி 01இல் உள்ளவாறு** | **2,925,000** | **-** | **2,489,920** | **2,000,000** | **1,552,900** | **12,381,876** | **3,280,813** | **2,000,000** | **1,000,000** | **2,900,000** | **-** | **30,530,509** |
| அ.மொ.தீ. நிதியத்திற்கு வருமானத்தை மாற்றல் | - | - | - | - | **273,918** | - | - | - | - | - | - | **273,918** |
| பொது ஒதுக்கத்திற்கு இலாபத்தை மாற்றுதல் | - | - | **7,462,613** | - | - | - | - | - | - | - | - | **7,462,613** |
| சுசகன கடன் திட்ட நிதியத்தில மிகுதியாகவுள்ள நிலுவையை பொது ஒதுக்கத்திற்கு மாற்றுதல் | **(1,000,000)** | - | **1,000,000** | - | - | - | | - | - | - | - | - |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு நட்டத்தினை மாற்றல் | - | - | - | - | - | **(3,808,147)** | - | - | - | - | - | **(3,808,147)** |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்க பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/நட்டம் | - | - | - | - | - | - | **(6,843,970)** | - | - | - | - | **(6,843,970)** |
| சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றுதல் | - | **14,028,792** | - | - | - | - | - | - | - | - | - | **14,028,792** |
| தொழில் நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் நிதியிடல் தேவைகளுக்கான ஒதுக்கத்திற்கான மாற்றல் | - | - | - | - | - | - | - | - | - | - | **689,025** | **689,025** |
| **2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான** | **1,925,000** | **14,028,792** | **10,952,533** | **2,000,000** | **1,826,818** | **8,573,729** | **(3,563,157)** | **2,000,000** | **1,000,000** | **2,900,000** | **689,025** | **42,332,740** |

## 32. இலாபப் பகிர்ந்தளிப்பு

நாணய விதிச்சட்டத்தின்படி, நாணயச் சபை இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்பிற்கு ஒப்புதலளித்து (2015 இலிருந்து நடைமுறைக்குவரும்) பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் விதத்தில் ப.நி.அறிக்கையிடல் நியம இலாபத்திற்கு/ (நட்டத்திற்கு) பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட்டன.

(அ) செலாவணிவீத இலாபம்/ (நட்டத்தினை) நீக்குதல் (நாணய விதிச்சட்டத்தின் 41ஆம் பிரிவு)

(ஆ) தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிருந்தான இலாபத்தினை நீக்குகிறது (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபங்கள்) எனினும் தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டங்கள்) நட்டங்களை விதிக்கிறது. (இலங்கை மத்திய வங்கியின் இலாப பங்கீட்டு கொள்கையின்படி)

(இ) நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 38 இன்படியான வேறு ஏதேனும் மாற்றல்கள் மற்றும் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 இலிருந்து எழும் வேறு ஏதேனும் சீராக்கங்கள்.

மேலும், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேறு ஏதேனும் சீராக்கங்கள் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் விதத்தில் சீராக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட சீராக்கங்களின் அடிப்படையில், 2017 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பகிரத்தக்க இலாபம் பின்வருமாறு:

| விடயம் | 2017 (ரூ. 000) |
|---|---|
| **ஆண்டிற்கான இலாபம்** | **48,356,367** |
| **கழிக்குக:** | |
| நாணயவிதிச்சட்டத்தின் படி பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கான செலாவணி வீத நட்டத்தை மாற்றல் | (3,808,147) |
| வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்தான சந்தைப் படியான இலாபத்தை சந்தை மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றல் | 24,337,841 |
| ஏனைய கணக்கீட்டுச் சீராக்கங்கள் | 440,627 |
| **நாணய விதிச்சட்டம், வங்கியினுடைய இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை மற்றும் ஏனைய சீராக்கங்கள் என்பவற்றின் படியான பங்கிடத்தக்க இலாபம்/ (நட்டம்)- தேறல் செய்யப்பட்ட இலாபம்/ (நட்டம்)** | **27,386,046** |
| ஒதுக்குகளிற்கான மாற்றல் (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 38இன்படி) | |
| - தொழில் நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் நிதியிடல் தேவைகளுக்காக ஒதுக்கத்திற்கு மாற்றுதல் | 5,372,178 |
| - தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கத்திற்கான மாற்றல் | 2,000,000 |
| - பொது ஒதுக்கத்திற்கு மாற்றறுதல் | 5,013,868 |
| - நிலுவையாகவுள்ள இலங்கை அரச கடப்பாடுகளின் மீள்பெறுகை (நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 39) | 772,903 |
| திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட தொகை (நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 39) | 14,227,097 |

33. நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் | **2,760,599** | 1,479,882 |
| நிதியியல் சொத்துக்கள் | **6,170,100** | 4,628,934 |
| பெறுதிகள் | **13,984,017** | 8,761,019 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **22,914,716** | 14,869,835 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **17,923,374** | 20,333,567 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **845,554** | 687,124 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **18,768,928** | 21,020,691 |
| **நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **41,683,644** | 35,890,526 |

34. விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம்/ (நட்டம்)

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டுப் பிணையங்கள் | **(61,814)** | 3,166 |
| தங்கம் | **13,949,169** | 8,306,063 |
| வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | **9,702,099** | 5,719,563 |
| வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல்கள் | **-** | (1,637) |
| நாணயத் தெரிவுகள் | **411,021** | (4,288,112) |
| **மொத்த விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம்** | **24,000,475** | 9,739,043 |

35. நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | **467,828** | 174,504 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **1,900,742** | 1,180,604 |
| பெறுதிகள் | **210,877** | 396 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்த வேண்டியன | **383,784** | 2,598,331 |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **2,963,231** | 3,953,835 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **1,023,720** | 345,835 |
| துணைநில் வைப்பு வசதி | **1,195,866** | 1,519,585 |
| முறிக் கடன்பாடுகள் | **1,716** | - |
| கைவிடப்பட்ட ஆதனம் | **454,814** | 332,395 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **2,676,116** | 2,197,815 |
| **நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **5,639,347** | 6,151,650 |

பற்றாக்குறை திரவத்தன்மை நிலை காரணமாக, சந்தைக்கு திரவத் தன்மையை உட்செலுத்தும் விதமாக வங்கியின் நடவடிக்கைகளில் ரூ.12,977.01 மில்லியன் (2016 - ரூ.9,366.62 மில்லியன்) தேறிய இலாபம் காணப்பட்டது. பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கான செலவு ஆனது கீழே காட்டப்பட்டுள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், முறிகளின் கடன்பாடு மற்றும் துணைநில் வசதி ஆகியவற்றின் மீதான வட்டிச்செலவுகளிலிருந்து, இலங்கை அரச பிணையங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டவாறான ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகளின் இலாபம் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்ட தேறிய தொகையை உள்ளடக்கிறது.

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மீது ஏற்பட்ட வட்டிச் செலவு | **1,023,720** | 345,835 |
| முறிக் கடன்பாட்டின் மீது செலுத்தப்பட்ட கட்டணம் | **1,716** | - |
| துணைநில் வைப்பு வசதி மீதான வட்டிச் செலவினம் | **1,195,866** | 1,519,585 |
| கழி: | | |
| மீள் விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம் | **1,214,298** | 2,471,022 |
| ஐ.அ.டொலர்/ இல.ரூபா பெறுமதிகள் இலாபம் | **13,984,017** | 8,761,019 |
| | **12,977,013** | 9,366,621 |

36. ஏனைய வருமானம்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| பங்கிலாப வருமானம் - தொடர்புபட்ட நபர்கள் | **104,601** | 37,259 |
| - ஏனையோர் | **2,540** | 1,818 |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் அகற்றல் மீதான இலாபம்/ (நட்டம்) | **(732)** | 424 |
| பிற்போடப்பட்ட கொடைகளின் பதிவழிப்பு | **34** | 34 |
| நிதியியல் நிறுவனங்களின் உரிமக் கட்டணம் | **555,975** | 519,900 |
| வாடகை வருமானம் | **485,515** | 455,514 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் | **119,606** | 112,863 |
| பல்வகை வருமானம் | **335,125** | 380,449 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **1,602,664** | 1,508,261 |

பல்வகை வருமானம் ரூ.1.59 மில்லியன் (2016 - ரூ.1.40 மில்லியன்) கொண்ட இலங்கை சேமிப்பு வங்கி லிமிடட்டின் தொகுதிக் கடன் மீதான கடன் தீர்ப்பனவு இலாபம் மற்றும் எஞ்சிய ஓராண்டு காலப்பகுதியில் ப.நா. நிதியத்துடனான சிஉஉ ரூ.788,783 கொண்ட வறுமைக்குறைப்பு வளர்ச்சி வசதிப்படுத்தலின் பதிவளிப்பு இலாபமான ரூ.6.80 மில்லியனையும் (2016- ரூ.6.17 மில்லியன்) உள்ளடக்குகிறது (குறிப்பு 08).

### 37. ஆளணிச் செலவுகள்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| கூலிகளும் சம்பளங்களும் | **4,112,349** | 4,258,884 |
| குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவுகள் | **610,489** | 629,786 |
| தொழில் நிலைக்குப் பிந்திய குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவு | **744,356** | 1,479,963 |
| **மொத்த ஆளணிச் செலவுகள்** | **5,467,194** | 6,368,633 |

### 38. நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| திருத்தங்களும் பேணல்களும் | **796,595** | 773,239 |
| ரொயிட்டர், புலூம்பேர்க் சுவிப்ற் மற்றும் ஏனையவற்றுக்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள் | **122,260** | 134,648 |
| பயணம் | **114,217** | 116,658 |
| வாடகைச் செலவுகள் | **3,325** | 4,994 |
| அச்சிடல் | **27,728** | 27,468 |
| கணக்காய்வுக் கட்டணம் | **10,412** | 7,846 |
| நாணயச் சபை உறுப்பினர்களுக்கான ஊதியங்கள் | **4,463** | 3,605 |
| இ.ம.வ சேம நிதியம் மீதான வட்டி உதவுதொகை | **-** | 47,877 |
| விளம்பரச் செலவு | **36,045** | 80,519 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் | **87,020** | 68,058 |
| பல்வகைச் செலவினம் | **103,584** | 200,672 |
| **மொத்த நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள்** | **1,305,649** | 1,465,584 |

### 39. பிடித்துவைத்தல் வரி

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 7b (xvi) இன் படி இலங்கை மத்திய வங்கி வருமான வரி செலுத்தப் பொறுப்புடையதல்ல என்பதுடன் வங்கியால் செலுத்தப்படும் பிடித்துவைத்தல் வரி உள்நாட்டரசிறைத் திணைக்களத்திற்கு வங்கி செலுத்தும் இறுதி வரியாகவும் கருதப்படுகிறது.

2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) ஏற்பாடுகளின் பிரகாரம் பங்கிலாபம் அல்லது வட்டி செலுத்தப்படுகின்ற போது அல்லது செலவு வைக்கப்படுகின்ற போது 10 சதவீதம் பிடித்து வைத்தல் வரிக்கு உட்பட்டதாயிருக்கும். அரச பிணையங்களின் வட்டி வருமானத்தின் மீது பிடித்து வைத்தல் வரியானது, முதிர்ச்சித் திகதிக்குச் சீர்செய்யப்பட்ட அண்மிய முதனிலை ஏலத்தின் எடையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினை அடிப்படையாகக் கொண்டது.

2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் அத்தகைய பிடித்துவைத்தல் வரி தொடர்பில் ரூ.1,837.96 மில்லியன் (2016 - ரூ.1,834.35 மில்லியன்) செலவிடப்பட்டதுடன், இது வட்டி வருமானம் ரூ.20,094.54 மில்லியன் (2016 - ரூ.15,623.62 மில்லியன்) மற்றும் பங்கிலாப வருமானம் ரூ.107.14 மில்லியன் (2016 - ரூ.39.08 மில்லியன்) மீதும் செலுத்தத்தக்கதாக விளங்கியது.

### 40. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப் பாய்ச்சலுடன் இணக்கப்படுத்தல்

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிக்கையிடப்பட்ட தேறிய இலாபம்** | **48,356,368** | 22,179,519 |
| **கூட்டுக /(கழிக்குக) காசல்லா விடயங்கள்** | | |
| தேய்மானம் மற்றும் பதிவழிப்பு | **518,716** | 520,961 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(17,911,410)** | (20,333,567) |
| அறவிடமுடியாக் கடன் மீள்பதிவு | **(27,302)** | - |
| மொத்தத் தேறாத வெளிநாட்டுச் செலாவணி (இலாபம்)/நட்டம் | **(9,595,724)** | (12,107,722) |
| நிலையான சொத்து விற்பனை மீதான இலாபம் | **-** | (1,400) |
| ஏற்பாடுகள் மற்றும் அட்டுறுக்கள் | **725,778** | 2,713,774 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | **(34)** | (27) |
| மீள் மதிப்பீட்டிலிருந்தான நட்டம் | **-** | 378,907 |
| வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பின் பதிவழிப்பு | **(6,804)** | (6,165) |
| நிலையான வருமானப் பிணையங்களின் பதிவழிப்புச் செலவினம் | **883,659** | 807,349 |
| **ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு கூட்டுக/ (கழிக்குக)** | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு)/குறைவு | **(760,672)** | (2,694,897) |
| பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு | **579,464** | (4,576,657) |
| பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/ (குறைவு) | **906,181** | (723,637) |
| கொடுபடத்தக்க வட்டியில் அதிகரிப்பு/ (குறைவு) | **219,716** | 32,460 |
| ஏனைய பெறத்தக்கவற்றின் (அதிகரிப்பு) / குறைவு | **(79,675)** | (26,455) |
| **கூட்டுக/ (கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| தேறிய தேறல்செய்யப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **(25,110,720)** | (9,857,403) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(1,302,459)** | (23,694,960) |

### 41. அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/(மீளப்பெறல்)

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | **(315,960,919)** | 246,320,577 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - இலங்கை அரச பிணையங்கள் | **(21,308,838)** | (18,094,641) |
| இலங்கை அரசுக்கான முற்பணங்களின் அதிகரிப்பு/(குறைவு) | **116,494,100** | (67,824,900) |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | **126,367** | (22,741) |
| | **(220,649,290)** | 160,378,295 |

**42. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/(மீளப்பெறல்)**

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்களிலான (அதிகரிப்பு)/குறைவு | (38,460,908) | (121,524,559) |
| | (38,460,908) | (121,524,559) |

**43. இறுதியிலுள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்**

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்** | | |
| வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள் | 459,827,641 | 423,783,737 |
| | 459,827,641 | 423,783,737 |

## 44. நிதியிடலின் திரட்சி

ஆண்டின் இறுதியில் வங்கியின் முக்கியமான நிதியிடலின் திரட்சியானது பின்வருமாறு:

**44.1 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு**

| | மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 8,683,033 | - | - | - | 329,937 | 8,353,096 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 4,648,449 | - | - | 4,648,449 | - | - |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 90,868,160 | - | - | - | 90,868,160 | - |
| ப.நா.நிதியம் | 318,665,332 | - | - | - | 318,665,332 | - |
| ஏனையவை | 64,095,889 | 17,848,687 | - | 1,193,019 | 200,757 | 44,853,426 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 486,960,863 | 17,848,687 | - | 5,841,468 | 410,064,186 | 53,206,522 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 341,712,198 | - | - | 341,707,391 | - | 4,807 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 324,517 | 324,515 | 2 | - | - | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 40,655,278 | - | - | 40,655,278 | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 4,547 | - | - | - | - | 4,547 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 598,053,901 | - | 598,053,901 | - | - | - |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 8,887,156 | 45,734 | - | 2,306,897 | - | 6,534,525 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | 989,637,597 | 370,249 | 598,053,903 | 384,669,566 | - | 6,543,879 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | 1,476,598,460 | 18,218,935 | 598,053,903 | 390,511,035 | 410,064,186 | 59,750,401 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 45 | - | - | - | - | 45 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 671,061 | - | - | - | - | 671,061 |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 211,720 | 82,328 | - | - | - | 129,392 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | 882,826 | 82,328 | - | - | - | 800,498 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,477,481,286 | 18,301,263 | 598,053,903 | 390,511,035 | 410,064,186 | 60,550,899 |

**44.2 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு**

| | மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 45,566,681 | - | - | - | 180,696 | 45,385,985 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 14,573,675 | - | - | 14,573,664 | 11 | - |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 79,863,615 | - | - | - | 79,863,615 | - |
| ப.நா.நிதியம் | 269,540,596 | - | - | - | 269,540,596 | - |
| ஏனையவை | 96,250,032 | 34,417,259 | - | 1,169,177 | 440,328 | 60,223,268 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 505,794,599 | 34,417,259 | - | 15,742,841 | 350,025,246 | 105,609,253 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 303,251,290 | - | - | 293,896,364 | - | 9,354,926 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 450,884 | 450,837 | 47 | - | - | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 70,054,436 | - | - | 67,552,907 | - | 2,501,529 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 51,744 | - | - | - | - | 51,744 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 552,777,865 | - | 552,777,865 | - | - | - |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 8,563,548 | 46,218 | - | 182,000 | - | 8,335,330 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | 935,149,767 | 497,055 | 552,777,912 | 361,631,271 | - | 20,243,529 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | 1,440,944,366 | 34,914,314 | 552,777,912 | 377,374,112 | 350,025,246 | 125,852,782 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 80 | - | - | - | - | 80 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 2,429,153 | - | - | - | - | 2,429,153 |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 193,297 | 62,449 | - | - | - | 130,848 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | 2,622,530 | 62,449 | - | - | - | 2,560,081 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,443,566,896 | 34,976,763 | 552,777,912 | 377,374,112 | 350,025,246 | 128,412,863 |

## 45. இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கி, பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு ஆகிய இரு சட்ட நியதிக் குறிக்கோள்களை கொண்டிருக்கிறது. மத்திய வங்கியிடம் அதன் குறிக்கோள்களை எய்தும் விதத்தில் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பரந்தளவு சட்ட அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியினை ஆளும் சபையான நாணயச் சபை வங்கியின் முகாமைத்துவம், தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம் என்பன தொடர்பான அனைத்துக் கொள்கைத் தீர்மானங்களையும் மேற்கொள்ளுவதற்குப் பொறுப்பானதாகும். இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளும் கொள்கைகளும் இலாபத்தினை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. எனினும் வங்கி அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் காலப்பகுதியில் பல்வேறு இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை காணப்படுகின்றது. ஆகவே வலுவானதும் காத்திரமானதுமான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் இடம்பெற்றிருப்பதனை வங்கி முகாமைத்துவம் உறுதிப்படுத்துகின்றது. காத்திரமான முகாமைத்துவம் மற்றும் இடர்நேர்வுகளின் கட்டுப்படுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்தும் நோக்குடன் நாணயச் சபையானது இப்பணியினை பல்வேறு திணைக்களங்களுக்கும் குழுக்களுக்கும் வழங்கியது. ஆகவே இடர்நேர்வு முகாமைத்துவம் வங்கியிலுள்ள கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் அனைத்து மட்டங்களிலுள்ளவர்களினதும் பொறுப்பாகும்.

இலங்கை மத்திய வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம் "மூன்று மட்டப் பொறுப்பு" மாதிரியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்படி, "முதல் மட்டப் பாதுகாப்புப் பொறுப்பு தொடர்பான திணைக்களங்களிடம் விடப்பட்டிருக்கிறது. "முதல் மட்டப் பாதுகாப்பு" இன் கீழ்வரும் இடர்நேர்வுகள் தொழிற்பாட்டு ரீதியான தன்மையைக் கொண்டிருப்பதனால் அத்தகைய இடர்நேர்வுகள் அவை ஆரம்பிக்கப்படுகின்ற இடத்திலேயே திணைக்களங்களினால் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றன. "முதலாவது மட்டப் பாதுகாப்பு" பொருத்தமான உள்ளக இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளையும் கட்டுப்பாடுகள் நடைமுறையிலுள்ளமையினையும் உறுதிப்படுத்தும். "இரண்டாவது மட்டப் பாதுகாப்பாக" உள்ள இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் நிதியியல் இடர்நேர்வுகளை மதிப்பிடவும் கண்காணிப்பதற்கும் சுயாதீனமாக ஆளுநருக்கு அறிக்கையளிக்கவும் பொறுப்புடையதாகும். உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்திடம் "மூன்றாவது மட்டப் பாதுகாப்பு" இனை இடர்நேர்வு உத்தரவாதத் தொழிற்பாடாக மேற்கொள்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இடர்நேர்வுகளின் இரண்டு முக்கிய பரிமாணங்களாக நிதியியல் இடர்நேர்வு மற்றும் நிதியல்லா இடர்நேர்வு என்பன காணப்பட்டன. நிதியியல் இடர்நேர்வு சந்தை இடர்நேர்வு (வட்டி வீத இடர்நேர்வு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு), கொடுகடன் இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு என்பவற்றை உள்ளடக்குகிறது. இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வெளிநாட்டு ஒதுக்குச் சொத்துப் பட்டியலை முகாமை செய்கின்ற வேளையில், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குச் சொத்துப் பட்டியலுடன் தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பிடல், கண்காணித்தல் மற்றும் நிதியியல் இடர்நேர்வுகளை அறிக்கையிடலில் ஈடுபடுகின்றது. இடர் தணிப்புக் கொள்கைகளை உள்ளடக்கிய விரிவான வழிகாட்டல்களின் தொகுதியொன்று ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் போது பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தால் பின்பற்றப்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் தொடர்பான நிதியியல் இடர்நேர்வு மதிப்பிடல்கள் ஆளுநருக்கும் மற்றும் நாணயச் சபைக்கும் சுயாதீனமாக அறிக்கையிடப்படுகின்றன.

வட்டி வீத இடர்நேர்வு அல்லது வட்டி வீதங்களில் ஏற்படும் அசைவுகளுக்கான வங்கியின் வெளிநாட்டுச் சொத்துப்பட்டியலின் வெளிப்படுத்துகை சொத்துப்பட்டியலின் காலப்பகுதியில் செய்யப்படும் பொருத்தமான சீராக்கங்களின் மூலமாகவும் அதேபோன்று 10 நாட்களைக் கொண்ட நேர எல்லை மற்றும் 99 சதவீதமான தன்னம்பிக்கை என்பனவற்றிற்கான பொருத்தமான சீராக்கங்களினூடாக முகாமைப்படுத்தப்பட்டன. செலாவணி வீதத் தளம்பல்களின் விளைவாக ஏற்படுகின்ற செலாவணி வீத இடர்நேர்வு அல்லது மூலதன இழப்புக்கள் முதலீட்டு நாணயங்களை பன்முகப்படுத்துவதனூடாக முக்கியமாக முகாமைப்படுத்தப்படுகின்றன. திரவத்தன்மை இடர்நேர்வினைத் தணிக்கும் பொருட்டு, சொத்துக்களின் வகுப்புக்களை மட்டுப்படுத்துதல், பிணையங்களின் வழங்குநர்களினால் வழங்கப்பட்ட மொத்தத் தொகை தொடர்பில் உயர்ந்தபட்சக் கொள்வனவுகளை மட்டுப்படுத்தல் என்பன சொத்து ஒதுக்கீட்டுச் செயன்முறையில் பரிசீலனையில் கொள்ளப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்தில் திரவத்தன்மை இடர்நேர்வுகளைக் குறைப்பது காத்திரமான வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு இயலாற்றல் தன்மையொன்றைப் பேணுவதற்கு முக்கிய பரிசீலனையில் கொள்ளப்படுகிறது. கொடுகடன், வட்டி வீதங்கள் வெளிநாட்டுச் செலாவணி மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு என்பனவற்றை முகாமைப்படுத்துவதற்கான கொள்கைகள் முறையே 45.1, 45.2, 45.3, 45.4 மற்றும் 45.5 ஆகிய பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளன.

முதலீடுகள் மற்றும் இணைத்தரப்பினர்களின் கொடுகடன் தரமிடலை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு சொத்துப்பட்டியலின் கொடுகடன் இடர்நேர்வினை முகாமைப்படுத்துவதற்கு இணைத்தரப்பு கொடுகடன் தரமிடல் முகாமை முறைமை பயன்படுத்தப்பட்டது. மேலும், பணச் சந்தை இணைத்தரப்பினர்களுடைய கடன் வழுவுதல் பரஸ்பர பரிமாற்றல்கள்/பங்கு விலைகள் ஆகியன இடர்நேர்வு முகாமைத்தவத் திணைக்களத்தால் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டன.

வங்கியினுடைய உள்ளக முதலீட்டு நிதியங்களின் முதலீடுகளுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளினை மதிப்பிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகிய தொழிற்பாடுகளை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் மேற்கொள்கின்றது. நிதித் திணைக்களம் முன்னிலை அலுவலகமாக, வங்கியினுடைய உள்ளக முதலீட்டு நிதியங்களைத் தற்போது முகாமை செய்வதுடன், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் உள்ளக நிதியங்களின் முதலீடுகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை தொடர்ச்சியான முறையில் கண்காணிக்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் நிதியங்களின் நிலைமை அறிக்கையை சுயாதீனமாக தொடர்ச்சியான முறையில் ஆளுநருக்குச் சமர்ப்பிப்பதுடன், நிதியங்களின் மூலதனப் பாதுகாப்பு மற்றும் திரவத்தன்மை எந்நேரமும் உறுதி செய்வதற்காக முதலீட்டு செயன்முறை மற்றும் முதலீட்டு கொள்கைக் கூற்றினை மேம்படுத்துவதற்கு நிதித் திணைக்களத்திற்கு இடர்நேர்வு தொடர்பான உள்ளீடுகளை வழங்குகின்றது.

நிதியல்லா இடர்நேர்வுகளானவை சட்ட இடர்நேர்வு, இணங்குவிப்பு இடர்நேர்வு, மனித வள இடர்நேர்வு, மோசடி இடர்நேர்வு, உபாய மற்றும் கொள்கை இடர்நேர்வு மற்றும் ஏனைய செயற்பாட்டு இடர்நேர்வு என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. நிதியல்லா இடர்நேர்வுகளைக் கண்காணிப்பது வேலை நடைமுறைகள், விதிகள் மற்றும் வழிகாட்டல்கள் அதேபோன்று முழு வங்கியினதும் பொருத்தமான இடர்நேர்வு ஆளுகை என்பவற்றின் இடர்நேர்வு இணங்குவிப்பினை உறுதிப்படுத்தும். இதனைக் கருத்திற் கொண்டு, தெரிவு செய்யப்பட்ட 17 திணைக்களங்கள் தமது நிதியல்லா இடர்நேர்வு விபரங்களை காலாந்தர அடிப்படையில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதுடன், இத்திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தால் ஒன்று சேர்க்கப்பட்டு மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட்டு முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகள் என்பன வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுகின்றன. இது நடைமுறைகளின் போதுமானதன்மையினையும் நடைமுறைகளுக்கு வங்கியின் இணங்குவிப்புக்களையும் பரீட்சிக்கின்றது. அனைத்துத் திணைக்களங்களும் காலாந்தர உள்ளகக் கணக்காய்வு மீளாய்விற்கு உட்படுகின்றன. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் நிர்வாக ரீதியாக நாணயச் சபையின் தலைவரான ஆளுநருக்கும், செயற்பாட்டு ரீதியாக நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கும் அறிக்கையிடுகின்றது.

நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கு நாணயச் சபையின் நியமன உறுப்பினர் தலைமை தாங்குகின்றார். வருடாந்த மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடங்கிய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் நேர்மையான தன்மை, இடைக்கால முகாமைத்துவக் கூற்றுக்கள் மற்றும் வங்கியின் நிதியியல் செயலாற்றம் தொடர்பான ஏனைய உத்தியோக பூர்வ அறிவிப்புக்கள், முக்கியமான நிதியியல் அறிக்கையிடல் பிரச்சனைகள் மற்றும் தீர்ப்புக்களினை மீளாய்வு செய்தல், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள், வங்கியின் இணங்குவிப்புத் தொழிற்பாட்டின் போதுமான தன்மை மற்றும் செயற்றிறன், வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் வினைத்திறன் மற்றும் தொடர்பான விடயங்கள் மற்றும் வெளியகக் கணக்காய்வு தொடர்பான விடயங்கள் மற்றும் வெளியகக் கணக்காய்வு தொடர்பான விடயங்கள் தொடர்பாக நாணயச் சபையின் மதியுரை கணக்காய்வுக் குழு நாணயச் சபைக்கு மதியுரை வழங்குகிறது. நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழுவின் விதந்துரைப்புக்களும், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயலாற்றங்களும் காலாண்டு அடிப்படையில் நாணயச் சபைக்கு அறிக்கையிடப்படுகின்றன.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 மற்றும் 43இன் கீழ் வங்கி கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்விற்கு உட்படுதல் வேண்டும். அதன் காரணமாக கணக்காய்வாளர் நாயகம் ப.நி.அ நியமங்களுக்கிணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்துவதற்காக ப.க நியமங்களின் கீழ் கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பட்டயக் கணக்காளரான கேபிஎம்யி நிறுவனத்தின் பணியினைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

### 45.1 கொடுகடன் இடர்நேர்வு

#### (அ) புவியியல் பிரதேசங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி

வங்கியின் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி புவியியல் பிரதேசங்களுக்கேற்ப (நாணயக் கூறுக்குரிய நாட்டை அடிப்படையாகக் கொண்டு) பின்வருமாறு:

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை | **249,968,143** | 450,197,249 |
| ஐக்கிய அமெரிக்கா | **643,710,289** | 238,171,318 |
| யப்பான் | **18,253,104** | 42,458,692 |
| பிரித்தானியா | **28,946,605** | 53,470,593 |
| ஐரோப்பா | **94,190,661** | 130,405,122 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **273,831,693** | 373,327,138 |
| ஏனையவை | **142,897,782** | 98,710,669 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,451,798,277** | 1,386,740,780 |

#### (ஆ) நிறுவனங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி

வங்கியின் ஆண்டு இறுதியில் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி நிறுவனங்களுக்கேற்ப வருமாறு:

| | 2017 ரூபா 000 | 2016 ரூபா 000 |
|---|---|---|
| அரசு | **958,345,205** | 844,074,103 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **273,831,693** | 373,327,138 |
| வெளிநாட்டு வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **201,640,454** | 159,700,398 |
| இலங்கை வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **10,308,545** | 3,885,700 |
| ஏனையவை | **7,672,380** | 5,753,441 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,451,798,277** | 1,386,740,780 |

#### (இ) கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை

பின்வரும் அட்டவணை ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் மற்றும் பிச் ரேட்டிங்ஸ் கொடுகடன் தரமிடல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிதிச் சொத்துக்களின் அல்லது வெளியிடுபவர்களின் கொடுகடன் தரமிடல்களை காட்டுகின்றது. ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் தரமிடல்களுக்கும் பிச் ரேட்டிங்ஸ் தரமிடல்களுக்கும் ஏற்ப AAA குறியீடுகள் அதியுயர் கொடுகடன் தரத்தினைக் கொண்ட தரமிடுதல்களையும் மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினையும் காட்டுகின்றது. நிதிக் கடப்பாடுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய சிறப்பான பலம் பொருந்திய நிலை உள்ளதென்பதை இது காட்டுகிறது. AA குறியீட்டின் மூலம் உயர் தரமிடுதல் காட்டப்படுவதோடு மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகின்றது. A குறியீட்டின் மூலம் உயர் மத்திய தரம் காட்டப்படுவதோடு குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகிறது. BBB குறியீட்டின் மூலம் கீழ்மட்ட முதலீட்டுத் தரமிடுதலும் கொடுகடன் இடர்நேர்வு தொடர்பில் நடைமுறையில் குறைந்த எதிர்பார்ப்பு உள்ளதென்பதும் காட்டப்படுவதோடு, பாதுகாப்பு அளவீடுகளின் தேவையை வலியுறுத்துகிறது. AAA குறியீட்டுக்குக் குறைவான தரங்களை பிரதானமான வகைகளுக்கு இடையிலுள்ள நிலைகளைக் காட்டும் பொருட்டு + அல்லது - அடையாளத்தின் மூலம் வகைப்படுத்திக் காட்டலாம். NR குறியீட்டின் மூலம் நிறுவனம், ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ், பிச் ரேட்டிங்ஸ் மற்றும் மூடிஸ் தரமிடலுக்கு உள்ளாக்கப்படவில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

| கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | கொடுகடன் தரமிடல் | 2017 ரூபா 000 | % | 2016 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ரிசர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | **310,350,210** | **21.38%** | 310,794,899 | 22.41% |
| | **AAA** | **50,158,566** | **3.45%** | 53,182,289 | 3.84% |
| | **AA** | **772,746** | **0.05%** | 7,536 | 0.00% |
| | **AA-** | **81,500,623** | **5.61%** | 50,185,913 | 3.62% |
| | **A+** | **3,032,823** | **0.21%** | 8,002,830 | 0.58% |
| | **A** | **13,741,004** | **0.95%** | 946,070 | 0.07% |
| | **A-** | **84,841** | **0.01%** | 138,110 | 0.01% |
| | **BBB+** | **-** | **0.00%** | 37 | 0.00% |
| | **BBB-** | **1,505** | **0.00%** | 29,187 | 0.00% |
| | **NR** | **185,323** | **0.01%** | 496,866 | 0.04% |
| | | **459,827,641** | **31.67%** | 423,783,737 | 30.56% |
| **விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள்** | | | | | |
| பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | **-** | **0.00%** | 8,820,628 | 0.64% |
| | **AAA** | **62,060,643** | **4.27%** | 99,753,201 | 7.19% |
| | **AA+** | **464,672,544** | **32.01%** | 183,643,987 | 13.24% |
| | **AA** | **1,862,308** | **0.13%** | 1,621,201 | 0.12% |
| | **AA-** | **13,360,972** | **0.92%** | 18,981,776 | 1.37% |
| | **A+** | **21,867,283** | **1.51%** | 22,734,638 | 1.64% |
| | **A** | **298,956** | **0.02%** | 3,119,014 | 0.22% |
| | **A-** | **-** | **0.00%** | (120,419) | -0.01% |
| | **NR** | **2,106,229** | **0.15%** | 9,990,623 | 0.72% |
| | | **566,228,935** | **39.00%** | 348,544,650 | 25.13% |
| இலாப நட்டங்களினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | **AAA** | **23,517,574** | **1.62%** | 23,455,657 | 1.69% |
| | **AA+** | **1,393,767** | **0.10%** | 1,620,526 | 0.12% |
| | **AA** | **3,593,798** | **0.25%** | 2,902,494 | 0.21% |
| | **AA-** | **1,174,551** | **0.08%** | 1,586,037 | 0.11% |
| | **A+** | **309,062** | **0.02%** | (224,716) | -0.02% |
| | **A** | **15,275,623** | **1.05%** | 13,396,168 | 0.97% |
| | **BBB+** | **-** | **0.00%** | 542,589 | 0.04% |
| | | **45,264,376** | **3.12%** | 43,278,755 | 3.12% |
| **பெறுதி நிதியியல் சாதனங்கள்** | | | | | |
| | **AAA** | **979,560** | **0.07%** | - | 0.00% |
| உள்நாட்டு ரீதியாகத் தரமிடப்பட்டவை | **AA+** | **-** | **0.00%** | 2,377 | 0.00% |
| | **AA** | **2,749,069** | **0.19%** | 156,660 | 0.01% |
| | **AA-** | **481,327** | **0.03%** | 39,843 | 0.00% |
| | **A+** | **66,030** | **0.00%** | - | 0.00% |
| | **A** | **64,099** | **0.00%** | - | 0.00% |
| | **A-** | **387,706** | **0.03%** | - | 0.00% |
| | **B** | **24,265** | **0.00%** | - | 0.00% |
| | **NR** | **188,399** | **0.01%** | - | 0.00% |
| | | **4,940,455** | **0.33%** | 198,880 | 0.01% |
| ப.நா.நி. தொடர்புடைய சொத்துக்கள் | **AAA** | **126,838,152** | **8.74%** | 117,008,339 | 8.44% |
| | | **126,838,152** | **8.74%** | 117,008,339 | 8.44% |
| ஏனைய பெறத்தக்கவைகள் | **AAA** | **4,794** | **0.00%** | 532 | 0.00% |
| | **AA+** | **3,072,381** | **0.21%** | - | 0.00% |
| | **AA-** | **-** | **0.00%** | 2,299,102 | 0.17% |
| | **A+** | **-** | **0.00%** | 224,742 | 0.02% |
| | **A** | **-** | **0.00%** | 127 | 0.00% |
| | **A-** | **-** | **0.00%** | 120,772 | 0.01% |
| | **BBB+** | **-** | **0.00%** | 237,320 | 0.02% |
| உள்நாட்டில் தரமிடப்பட்டவை | **AAA** | **-** | **0.00%** | 2,247,000 | 0.16% |
| | **NR** | **593,319** | **0.04%** | 1,045,455 | 0.08% |
| | | **3,670,494** | **0.25%** | 6,175,049 | 0.45% |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | **1,206,770,053** | **83.12%** | 938,989,411 | 67.71% |

| | கொடுகடன் தரமிடல் | 2017 ரூபா 000 | % | 2016 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | B+ | 32,080,086 | 2.21% | 351,426,470 | 25.34% |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | B+ | 199,800,871 | 13.76% | 83,306,771 | 6.01% |
| வங்கிகளுக்கான கடன்கள் | AA+ | 96,025 | 0.01% | 244,284 | 0.02% |
| | AA | 2,056 | 0.00% | 4,040 | 0.00% |
| | AA- | 2,493 | 0.00% | 7,902 | 0.00% |
| | A+ | 8,218 | 0.00% | 17,775 | 0.00% |
| | A- | 14,624 | 0.00% | 25,195 | 0.00% |
| | BBB | 1,449 | 0.00% | 3,626 | 0.00% |
| | BB+ | 39,692 | 0.00% | 62,341 | 0.00% |
| | B+ | - | 0.00% | 515 | 0.00% |
| | B | 2,140 | 0.00% | 3,500 | 0.00% |
| | NR | 57,006 | 0.00% | 114,865 | 0.01% |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை முதலீடுகள் | NR | 41,095 | 0.00% | 41,095 | 0.00% |
| ஏனைய சொத்துக்கள் | AAA | 135,457 | 0.01% | 811 | 0.00% |
| | AA+ | 919,142 | 0.06% | 548,609 | 0.04% |
| | AA | - | 0.00% | 167,860 | 0.01% |
| | A | 6,746 | 0.00% | 6,639 | 0.00% |
| | B+ | 5,443,809 | 0.37% | 5,824,867 | 0.42% |
| | B | - | 0.00% | 10,317 | 0.00% |
| | NR | 6,377,316 | 0.44% | 5,933,887 | 0.43% |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | 245,028,224 | 16.88% | 447,751,369 | 32.29% |
| மொத்த நிதியியல் சொத்துக்கள் | | 1,451,798,277 | 100.00% | 1,386,740,780 | 100.00% |
| (ஈ) பிரதானமான கொடுகடன் வகைப்படுத்தலின்படி சாராம்சம் | | | | | |
| வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | | | | |
| ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசேர்வ் வங்கி, அவுஸ்திரேலியாவின் ரிசேர்வ் வங்கி/ பன்னாட்டு தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து ரிசேர்வ் வங்கி | | 310,350,210 | 21.38% | 319,615,527 | 23.05% |
| ப.நா. நிதியம் தொடர்பான சொத்துக்கள் | | 126,838,152 | 8.74% | 117,008,871 | 8.44% |
| | AAA | 135,741,557 | 9.35% | 176,391,148 | 12.72% |
| | AA+/- | 571,403,690 | 39.36% | 262,848,573 | 18.95% |
| | A+/- | 54,609,592 | 3.76% | 48,337,336 | 3.49% |
| | BBB+/- | 1,505 | 0.00% | 809,132 | 0.06% |
| | NR | 2,291,553 | 0.16% | 10,487,489 | 0.76% |
| உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை | AAA | 979,560 | 0.07% | 2,247,000 | 0.16% |
| | AA+ | - | 0.00% | 2,377 | 0.00% |
| | AA | 2,749,069 | 0.19% | 156,660 | 0.01% |
| | AA- | 481,327 | 0.03% | 39,843 | 0.00% |
| | A+/- | 517,835 | 0.04% | - | 0.00% |
| | B | 24,265 | 0.00% | - | 0.00% |
| | NR | 781,718 | 0.05% | 1,045,455 | 0.08% |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | 1,206,770,053 | 83.12% | 938,989,411 | 67.71% |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | AAA | 135,457 | 0.01% | 811 | 0.00% |
| | AA+ | 1,015,167 | 0.07% | 792,893 | 0.06% |
| | AA | 2,056 | 0.00% | 171,900 | 0.01% |
| | AA- | 2,493 | 0.00% | 7,902 | 0.00% |
| | A+ | 8,218 | 0.00% | 17,775 | 0.00% |
| | A | 6,746 | 0.00% | 6,639 | 0.00% |
| | A- | 14,624 | 0.00% | 25,195 | 0.00% |
| | BBB | 1,449 | 0.00% | 3,626 | 0.00% |
| | BB+ | 39,692 | 0.00% | 62,341 | 0.00% |
| | B+ | 237,325,767 | 16.35% | 440,558,623 | 31.77% |
| | B | 2,140 | 0.00% | 13,817 | 0.00% |
| | NR | 6,475,417 | 0.45% | 6,089,847 | 0.44% |
| மொத்த உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | 245,028,224 | 16.88% | 447,751,369 | 32.29% |
| மொத்த நிதிச் சொத்துக்கள் | | 1,451,798,277 | 100.00% | 1,386,740,780 | 100.00% |

45.2 வட்டி வீத இடர்நேர்வு

(அ) வெளிநாட்டு நாணய வட்டி வீதக் கூருணர்திறன்

**வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற நட்டங்களின் இடர்நேர்வாகும்.**

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் தவிர்ந்த நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத கூருணர் திறனானது, வட்டி வீதம் 10 அடிப்படைப்புள்ளிகளினால் அதிகரிப்பதன் காரணமாக உருவாகக் கூடிய இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுவதோடு, கீழே தரப்பட்டுள்ள நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியல் கூறுகளைப் பயன்படுத்தி வங்கியானது இடர்நேர்வுக் கூருணர்திறனை அளவிடுகின்றது:

| பட்டியல் பிரிவு | நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2017 | 2016 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **7.55** | 5.16 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **0.03** | 0.03 |

பின்வரும் உபாய முறைகளைப் பயன்படுத்தி இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வினை முகாமை செய்கின்றது.

(i) வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வட்டி வீத மாற்றங்களின் தாக்கத்தினை வட்டி வீத கூருணர்திறன் அளவிடுகின்ற அதேவேளை, வட்டி வீதத்தினையும் அதேநேரம் முதலீட்டுக் காலவரையறையையும் கவனத்திலெடுக்கின்றதான மாற்றப்பட்ட காலவரையறையை வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுவதற்காக வங்கி பயன்படுத்துகின்றது. மாற்றப்பட்ட காலவரையறையானது வழங்கப்பட்டுள்ள வட்டி வீதத்திலான மாற்றத்திற்கான (விளைவு) பிணையங்களின் விலையிலான மாற்றத்தை அளவிடுகின்றது. உயர்ந்தளவு மாற்றப்பட்ட காலவரையறையானது உயர்ந்தளவு இடர்நேர்வினைக் குறிக்கின்றது. ஆதலால் வங்கியானது நிதிச் சந்தையிலான அபிவிருத்தி, சொத்துப் பட்டியலின் பண்புகள் மற்றும் வங்கியின் இடர்நேர்வு விருப்பினைக் கவனத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் பொருத்தமான மாற்றப்பட்ட காலவரையறையை விதிக்கின்றது. வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் மாற்றப்பட்ட காலவரையறை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மாற்றப்பட்ட காலவரையறை

| முதலீட்டுப் பிரிவு | மாற்றப்பட்ட காலவரையறை | |
|---|---|---|
| | 2017 | 2016 |
| மூலதனச் சந்தை (நிலையான வருமானப் பிணையங்கள்) | **2.02** | 2.26 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **1.39** | 1.42 |

(ii) மாற்றப்பட்ட காலவரையானது விலையிலான அதிகளவு மாற்றத்தினைக் கணிப்பிடாததால், வெளிநாட்டு ஒதுக்குப் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு புறக்குவிவான அளவீடொன்று பயன்படுத்தப்படுகின்றது. காலவரையறையை குறிக்கும் நேர்கோட்டிலிருந்து முறி விலை விளைவு வளையின் வேறுபாட்டினை புறக்குவிவு அளவிடுகின்றது. முறி விலையின் மாற்றத்திற்கான சராசரிக் காலவரையறையின் மேம்பாட்டினை இது அனுமதிக்கின்றது. புறக்குவிவு என்பது விளைவு வீத மாற்றத்திற்கான காலப்பகுதி மாற்றமாகும். இது மாற்றப்பட்ட காலப்பகுதிக்கான ஊகத் தவறுகளை அளவிடுகின்றது. மறுசொல்லில் விளக்குவதாயின் இது, இதன் பிணைய விலைகளினால் வகுக்கப்பட்ட விளைவு தொடர்பான பிணைய விலைகளின் இரண்டாவது பெறுதியாகும்.

கூறாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் புறக்குவிவு

| பட்டியல் பிரிவு | எதிர்பார்க்கப்படும் நட்டம் (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2017 | 2016 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **0.07** | 0.99 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **0.04** | 0.04 |

(iii) இடர்நேர்வேற்புப் பெறுமதி

இடர்நேர்வேற்புப் பெறுமதியானது நிதியியல் சந்தை அசைவுகளிலிருந்தான சாதாரண சந்தை நிலைமைகளின் கீழ் சொத்துப்பட்டியலின் கீழ் நோக்கிய இடர்நேர்வை தனி இலக்கத்தில் சுருக்குகின்றது. எனவே, இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இலக்கிடப்பட்ட அசைவு மீதான உயர்ந்தபட்ச இழப்பாக இருப்பதனால், உண்மையான இழப்பு அதிகமாக இருப்பதற்குரிய முற்குறிப்பிடப்பட்ட நிகழ்தகவு குறைவாகும். இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இடர்நேர்வுகள் மற்றும் நிலைமைகளுக்கிடையில் கூட்டக்கூடிய, பணத்தின் நியதிகளிலான ஒரு இலக்கத்தை எமக்குத் தருகின்றது. வங்கியானது 99 சதவீத நம்பக இடைவெளியில் 10 நாட்களுக்கான இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு முறைமையைப் பயன்படுத்துகின்றது. இடர்நேர்வுப் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான வரலாற்று முறைமை சில சமயங்களில் வரலாற்று உருவகப்படுத்தல் உருவமைப்பாகக் குறிப்பிடப்படுகின்றது. வரலாற்று முறையினைப் பயன்படுத்தி 5 சதவீத நாளாந்த இடர்நேர்வுப் பெறுமதியினைக் கணிப்பதற்கான ஒரு உதாரணமாக கடந்த நாளாந்த வருவாய்கள், உயர்விலிருந்து தாழ்ந்தநிலைவரையில் வருவாய்களைத் தரப்படுத்தல் மற்றும் வருவாய்களில் ஆகக் குறைந்த 5 சதவீதத்தினை அடையாளம் காணல் என்பன கணிக்கப்படுகின்றன. வருவாய்களின் இம்மிகக் குறைந்த 5 சதவீத உயர்ந்த தொகை என்பது 1- நாள் 5 சதவீத இடர்நேர்வுப் பெறுமதியாகும்.

| பட்டியல் பிரிவு | இடர்நேர்வேற்புப் பெறுமதி (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2017 | 2016 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **22.98** | 36.02 |
| ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | **0.64** | 0.65 |

(iv) வர்த்தகப்படுத்தல் மற்றும் திறந்த நிலைமை வரையறைகள்

தனிப்பட்ட வணிகர்களுக்காக "வணிகப்படுத்தல் அதிகாரம்" என்ற முறை மூலம் வங்கியானது ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓரிரவு நிலை வரையறை மீது குறிப்பிட்ட வணிக வரையறைகளை வழங்கியுள்ளது.

ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தில் செய்யப்பட்ட முதலீடுகளுடன் தொடர்பான வட்டி வீத இடர்நேர்வு அளவீடுகளாவை கிரமமான முறையில் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துக் குழுவிற்கு அறிக்கையிடப்படுகின்றன.

**(ஆ) உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன்**

உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் கடன்களைக் குறிப்பதால் அவை இ.ம. வங்கியின் நிதி நிலைமை பற்றிய கூற்றில் கடன்தீர் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. வட்டி வருமானமொன்றை ஈட்டும் நோக்கத்துடன் வங்கி திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யாததால் இந்தப் பட்டியல் ஒரு முதலீட்டுப்பட்டியல் அல்ல. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் என்னும் அதன் மையக் கருப்பொருட்கள் தொடர்பாக நாணயத் தொழிற்பாட்டுக் கொள்கைகளை மேற்கொள்கையில் திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையில் ஏற்படுத்துவதற்காக அல்லது திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையிலிருந்து உள்ளீர்ப்பதற்காக வங்கி திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்கின்றது அல்லது விற்பனை செய்கின்றது. ஆதலால், வங்கியின் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்கள் அதன் நாணயச் கொள்கைத் தொழிற்பாடுகளினால்

நிர்ணயிக்கப்படுகின்றன. அத்துடன், பணச் சந்தையில் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகியவை வங்கியின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அதனால் நிர்ணயிக்கப்படும் கொள்கை வீதங்களாகும். மேலும், சந்தையிலிருந்து ரூபாய் திரவத்தன்மையை ஏற்படுத்துவதில் அல்லது திரவத்தன்மையை உள்ளீர்ப்பதில் வங்கியின் நடவடிக்கைகள் பொதுவான ரூபாய் சந்தை வட்டி வீதங்களில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதன்படி, வங்கியின் திறைசேரி உண்டியல்களின் பட்டியலில் இருந்தும் அவ்வாறே வட்டி வீதங்களின் மாற்றங்களிலிருந்தும் எழுகின்ற திறைசேரி உண்டியல் பட்டியலிலிருந்து ஈட்டப்படும் வட்டி வருமானத்தின் மாற்றங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக உருவாவதேயன்றி முதலீட்டுத் தீர்மானங்கள் காரணமாக அல்ல. எனவே, வங்கியானது உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வட்டி வீதக் கூருணர்திறனைக் கவனத்திற் கொள்வதில்லை.

**(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள் விலையிடப்படும்**

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2017 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 1.5150 | 459,827,641 | 459,827,641 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 1.9158 | 596,217,687 | 87,922,743 | 76,479,327 | 118,516,346 | 313,299,271 | - |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.5392 | 11,094,542 | 11,094,542 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,067,139,870 | 558,844,926 | 76,479,327 | 118,516,346 | 313,299,271 | - |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 115,743,610 | - | 164,564 | - | - | 115,579,046 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 4,940,455 | 4,536,892 | 403,563 | - | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 3,670,494 | 3,670,494 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | | 15,275,623 | 15,275,623 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 139,630,182 | 23,483,009 | 568,127 | - | - | 115,579,046 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 1,206,770,052 | 582,327,935 | 77,047,454 | 118,516,346 | 313,299,271 | 115,579,046 |
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 1.5480 | 116,996,460 | - | - | - | 49,873,486 | 67,122,974 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 1.2800 | 90,868,160 | 90,868,160 | - | - | - | - |
| இந்திய ஒதுக்குவங்கியின் பரஸ்பர பரிமாற்றம் | 0.0000 | - | - | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 207,864,620 | 90,868,160 | - | - | 49,873,486 | 67,122,974 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளும், ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | | 8,683,033 | 8,683,033 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 4,648,449 | 1,048,241 | 2,355,626 | 448,134 | 796,448 | - |
| ப.நா.நிதியம் | | 201,668,872 | - | - | - | - | 201,668,872 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கிகளின் மூலதனம் | | 1,193,019 | - | - | - | - | 1,193,019 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 62,902,870 | 62,902,870 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 279,096,243 | 72,634,144 | 2,355,626 | 448,134 | 796,448 | 202,861,891 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 486,960,863 | 163,502,304 | 2,355,626 | 448,134 | 50,669,934 | 269,984,865 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 859,275,250 | 467,976,766 | 76,479,327 | 118,516,346 | 263,425,785 | (67,122,974) |

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2017 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 8.9863 | 9,704,962 | 9,704,962 | - | - | - | - |
| திறைசேரி உண்டியல் மற்றும் முறி நேர்மாற்று மீள்கொள்வனவு | 8.7500 | 22,375,124 | 22,375,124 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 8.0891 | 223,702 | 110,409 | 44,126 | 54,599 | 10,049 | 4,519 |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 3.9834 | 6,105,830 | 231,580 | 238,514 | 486,331 | 1,543,517 | 3,605,888 |
| - ஏனையவைகள் | 10.2520 | 6,579,629 | 593,501 | 622,037 | 1,142,843 | 1,870,103 | 2,351,145 |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 44,989,247 | 33,015,576 | 904,676 | 1,683,773 | 3,423,669 | 5,961,551 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 199,800,871 | 199,800,871 | - | - | - | - |
| ஏனைய சொத்துக்கள் - ஏனையவைகள் | | 197,011 | 197,011 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 200,038,977 | 199,997,882 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 245,028,224 | 233,013,459 | 904,676 | 1,683,773 | 3,423,669 | 6,002,646 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 7.2500 | 6,503,884 | 6,503,884 | - | - | - | - |
| துணைநில் வைப்பு வசதி | 7.2500 | 34,151,394 | 34,151,394 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 40,655,278 | 40,655,278 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 341,712,198 | 341,712,198 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 324,516 | 324,516 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | | 4,547 | 4,547 | - | - | - | - |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 598,053,901 | 598,053,901 | - | - | - | - |
| ஏனைய செலுத்ததக்கவைகள் | | 8,887,156 | 8,887,156 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 948,982,318 | 948,982,318 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 989,637,596 | 989,637,596 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 4,333,968 | (7,639,702) | 904,676 | 1,683,773 | 3,423,669 | 5,961,551 |

**45.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)**

2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2016 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.6352 | 423,783,737 | 423,783,737 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 1.1792 | 378,427,237 | 82,598,844 | 37,282,832 | 100,641,826 | 117,752,141 | 40,151,594 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.0228 | 9,940,219 | 9,940,219 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 812,151,193 | 516,322,800 | 37,282,832 | 100,641,826 | 117,752,141 | 40,151,594 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 107,068,121 | - | - | - | 145,906 | 106,922,215 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 198,880 | 198,880 | - | - | - | - |
| பெறத்தக்கவை | | 6,175,049 | 6,175,049 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | | 13,396,168 | 13,396,168 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 126,838,218 | 19,770,097 | - | - | 145,906 | 106,922,215 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 938,989,411 | 536,092,897 | 37,282,832 | 100,641,826 | 117,898,047 | 177,073,809 |
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 0.2440 | 82,976,654 | 27,750,312 | 6,937,578 | - | 18,108,285 | 30,180,479 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 0.5100 | 79,863,615 | 79,863,615 | - | - | - | - |
| இந்திய ஒதுக்கு வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றம் | 2.9973 | 59,920,000 | 59,920,000 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 222,760,269 | 167,533,927 | 6,937,578 | - | 18,108,285 | 30,180,479 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளும், ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | | 45,566,681 | 45,566,681 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 14,573,675 | 5,088,148 | 3,564,938 | 3,931,574 | 1,989,015 | - |
| ப.நா.நி. | | 186,563,942 | - | - | - | - | 186,563,942 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கி மூலதனம் | | 1,169,177 | - | - | - | - | 1,169,177 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 35,160,855 | 35,160,855 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 283,034,330 | 85,815,684 | 3,564,938 | 3,931,574 | 1,989,015 | 187,733,119 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 505,794,599 | 253,349,611 | 10,502,516 | 3,931,574 | 20,097,300 | 217,913,598 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 589,390,924 | 348,788,873 | 30,345,254 | 100,641,826 | 99,643,856 | 9,971,115 |

**45.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)**

2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2016 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 9.1639 | 320,605,082 | 233,255,698 | 87,349,384 | - | - | - |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் நேர்மாற்று மீள்கொள்வனவு | 8.5000 | 30,820,231 | 30,820,231 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 8.4016 | 484,043 | 182,396 | 107,091 | 125,390 | 61,511 | 7,655 |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 3.5355 | 5,603,510 | 92,230 | 92,417 | 192,376 | 621,059 | 4,605,428 |
| - ஏனையவைகள் | 10.0079 | 5,252,364 | 661,399 | 183,437 | 843,138 | 2,134,946 | 1,429,444 |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 362,765,230 | 265,011,953 | 87,732,329 | 1,160,904 | 2,817,516 | 6,042,528 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 83,306,771 | 83,306,771 | - | - | - | - |
| ஏனைய சொத்துக்கள் - ஏனையவைகள் | | 1,638,273 | 1,638,273 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 84,986,139 | 84,945,044 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 447,751,369 | 349,956,998 | 87,732,329 | 1,160,904 | 2,817,516 | 6,083,622 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 7.4282 | 21,383,724 | 21,383,724 | - | - | - | - |
| துணைநில் வைப்பு வசதி | 7.0000 | 48,670,712 | 48,670,712 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 70,054,436 | 70,054,436 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 303,251,290 | 303,251,290 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 450,884 | 450,884 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | | 51,744 | 51,744 | - | - | - | - |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | 552,777,865 | 552,777,865 | - | - | - | - |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | | 8,563,548 | 8,563,548 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 865,095,331 | 865,095,331 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 935,149,767 | 935,149,767 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 292,710,794 | 194,957,517 | 87,732,239 | 1,160,904 | 2,817,516 | 6,042,528 |

**45.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு**

வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மூலமாக வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் பிரதானமாக உருவாகின்றன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாற்றங்கள் உருவாகக்கூடிய போக்கின் காரணமாக வங்கியானது செலாவணி இடர்நேர்வுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு உள்ளது. நாணயச் சபையினாலும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினாலும் வங்கியின் பன்னாட்டு ஒதுக்கங்களில் பல்வேறு நாணய வகைகளும் வைத்திருக்கப்பட வேண்டிய வீதத் தொகைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. நாணயங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது அரச கடன்களை மீளச் செலுத்துவதன் தேவைப்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கிணங்க வங்கியானது பிரதானமான நாணய வகைகள் பலவற்றை, அதாவது ஐக்கிய அமெரிக்கா டொலர், ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர், யப்பான் யென், யூரோ மற்றும் நியூசிலாந்து டொலர் ஆகியவற்றை வைத்திருக்கின்றது. வெளிநாட்டு நாணய நிலைமைகளின் உருவாக்கப்பட்ட எல்லைகளுடனான இணங்குவிப்பு கண்காணிக்கப்படுகின்றது.

**வெளிநாட்டு நாணயங்களுக்கான தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை**

2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு:

**நாணயம்**

| 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | ஸ்ரேலிங் பவுண் ரூ.000 | சிஎஉ ரூ.000 | அவுஸ்திரேலிய டொலர் ரூ.000 | கனேடியன் டொலர் ரூ.000 | நியுசிலாந்து டொலர் ரூ.000 | ஏனைய நாணயங்கள் ரூ.000 | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 133,266,127 | (50,974,866) | (58,292,654) | 92,771,973 | - | 124,864,455 | 390,378 | (6,412,537) | 224,214,765 | 459,827,641 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 532,783,747 | 3,676,937 | 6,297,818 | 5,302,523 | - | 34,445,694 | - | 11,011,941 | 17,974,651 | 611,493,311 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 536 | - | - | - | - | - | - | - | 4,939,919 | 4,940,455 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 126,838,152 | - | - | - | - | 126,838,152 |
| ஏனைய பெறத்தக்கவை | 3,665,700 | - | - | - | 4,794 | - | - | - | - | 3,670,494 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 669,716,110 | (47,297,929) | (51,994,836) | 98,074,496 | 126,842,946 | 159,310,149 | 390,378 | 4,599,404 | 247,129,335 | 1,206,770,053 |
| விகிதம் | 55.50% | -3.92% | -4.31% | 8.13% | 10.51% | 13.20% | 0.03% | 0.38% | 20.48% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 8,681,097 | 12 | - | - | - | - | - | - | 1,924 | 8,683,033 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | - | - | - | - | - | - | 4,648,449 | 4,648,449 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 90,868,160 | - | - | - | - | - | - | - | - | 90,868,160 |
| ப.நா. நிதியம் | - | - | - | - | 318,665,332 | - | - | - | - | 318,665,332 |
| ஏனையவை | 19,241,566 | - | - | - | - | - | - | - | 44,854,323 | 64,095,889 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 118,790,823 | 12 | - | - | 318,665,332 | - | - | - | 49,504,696 | 486,960,863 |
| விகிதம் | 24.39% | 0.00% | 0.00% | 0.00% | 65.44% | 0.00% | 0.00% | 0.00% | 10.17% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | 550,925,287 | (47,297,941) | (51,994,836) | 98,074,496 | (191,822,386) | 159,310,149 | 390,378 | 4,599,404 | 197,624,639 | 719,809,190 |

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:

| | இலங்கை ரூபா ரூ.000 | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | ஸ்ரேலிங் பவுண் ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | அவுஸ்திரேலிய டொலர் ரூ.000 | சுவீடன் குரோனா ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | | |
| கொள்வனவு | 260,379,629 | (18,113,664) | 131,788 | (62,622) | (4,876) | (6,352,618) | - |
| விற்பனை | (24,459,676) | (231,780,079) | 5,375,438 | 19,321,868 | 4,876 | 30,444 | - |
| வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தக் கணக்கு | (1,667) | - | - | - | - | - | - |
| பிரிவிற்கு அணித்தாக முன்னோக்கி ஒப்பந்தக் கணக்கு | (4,468,841) | - | - | - | - | - | - |
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | | |
| கொள்வனவு | 399,872,823 | (15,716,215) | (985) | (62,622) | (4,876) | (6,352,618) | - |
| விற்பனை | (26,858,576) | (377,765,524) | 5,375,438 | 19,321,868 | 4,876 | 30,444 | (960) |
| வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தக் கணக்கு | (1,667) | - | - | - | - | - | - |
| பிரிவிற்கு அணித்தாக முன்னோக்கி ஒப்பந்தக் கணக்கு | 2,158,595 | - | - | - | - | - | - |

**45.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு (தொடர்ச்சி)**

2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு

**நாணயம்**

| 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | ஸ்ரேலிங் பவுண் ரூ.000 | சிஎஉ ரூ.000 | அவுஸ்திரேலிய டொலர் ரூ.000 | கனேடியன் டொலர் ரூ.000 | நியுசிலாந்து டொலர் ரூ.000 | ஏனைய நாணயங்கள் ரூ.000 | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 60,672,511 | (52,620,544) | (44,196,304) | 92,331,449 | - | 134,790,117 | (9,651,058) | (5,876,338) | 248,333,904 | 423,783,737 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 243,152,847 | 44,267,349 | 21,813,382 | 11,527,275 | - | 21,471,379 | 9,797,465 | 9,687,691 | 30,106,017 | 391,823,404 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | - | - | - | - | - | - | 198,880 | 198,880 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 117,008,340 | - | - | - | - | 117,008,340 |
| ஏனைய வெளிநாட்டுப் பெறத்தக்கவை | 6,053,745 | 120,772 | - | - | 532 | - | - | - | - | 6,175,049 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 309,879,103 | (8,232,423) | (22,382,922) | 103,858,723 | 117,008,872 | 156,261,496 | 146,407 | 3,811,353 | 278,638,802 | 938,989,411 |
| விகிதம் | 33.00% | -0.88% | -2.38% | 11.06% | 12.46% | 16.64% | 0.02% | 0.41% | 29.67% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 45,566,531 | 10 | - | 139 | - | - | 1 | - | - | 45,566,681 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 11 | - | - | - | - | - | - | - | 14,573,664 | 14,573,675 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 79,863,615 | - | - | - | - | - | - | - | - | 79,863,615 |
| ப.நா.நிதியம் | - | - | - | - | 269,540,596 | - | - | - | - | 269,540,596 |
| ஏனையவை | 95,804,614 | - | - | - | - | - | - | - | 445,418 | 96,250,032 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 221,234,771 | 10 | - | 139 | 269,540,596 | - | 1 | - | 15,019,082 | 505,794,599 |
| விகிதம் | 43.74% | 0.00% | 0.00% | 0.00% | 53.29% | 0.00% | 0.00% | 0.00% | 4.27% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | 88,644,332 | (8,232,433) | (22,382,922) | 103,858,584 | (152,531,724) | 156,261,496 | 146,406 | 3,811,353 | 263,619,720 | 433,194,812 |

45.4 நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள்

2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள் பின்வருமாறு:

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டு களுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு | | | | | | |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 459,827,641 | - | - | - | - | 459,827,641 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 21,369,496 | 4,465,690 | 13,178,459 | 8,851,636 | - | 47,865,281 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 46,372,253 | 94,705,246 | 129,493,457 | 322,848,221 | - | 590,419,177 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 11,094,542 | - | - | 164,565 | 115,579,046 | 126,838,153 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | 3,670,494 | - | - | - | - | 3,670,494 |
| மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள் | 542,334,426 | 99,170,936 | 139,671,916 | 331,864,422 | 115,579,046 | 1,228,620,746 |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 32,288,005 | - | - | - | - | 32,288,005 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 199,800,871 | - | - | - | - | 199,800,871 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 114,827 | 46,409 | 56,593 | 11,274 | 4,697 | 233,800 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 14,901,062 | 1,189,827 | 2,713,417 | 4,296,510 | 8,129,740 | 31,230,555 |
| மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள் | 247,104,765 | 1,236,235 | 2,770,010 | 4,307,784 | 8,175,531 | 263,594,325 |
| மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள் | 789,439,191 | 100,407,171 | 142,441,927 | 336,172,205 | 123,754,577 | 1,492,215,071 |
| வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 9,607,147 | 1,348,974 | 2,678,505 | 7,689,134 | 10,313,402 | 31,637,162 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 90,868,160 | - | - | - | - | 90,868,160 |
| ப.நா.நிதியம் | - | - | - | 30.374,077 | 288,291,256 | 318,665,333 |
| ஏனையவை | 62,902,870 | - | - | - | 1,193,019 | 64,095,889 |
| மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | 163,378,177 | 1,348,974 | 2,678,505 | 38,063,211 | 299,797,677 | 505,266,544 |
| உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 341,712,198 | - | - | - | - | 341,712,198 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 324,517 | - | - | - | - | 324,517 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 40,663 | - | - | - | - | 40,663 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 4,547 | - | - | - | - | 4,547 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 598,053,901 | - | - | - | - | 598,053,901 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 9,189,166 | - | - | - | - | 9,189,166 |
| மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள் | 949,324,992 | - | - | - | - | 949,324,992 |
| மொத்த கழிவுறப்படாத நிதியியல் பொறுப்புக்கள் | 1,112,703,169 | 1,348,974 | 2,678,505 | 38,063,211 | 229,797,677 | 1,454,591,536 |
| தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்) | (323,263,978) | 99,058,197 | 139,763,422 | 298,108,994 | (176,043,100) | (37,623,535) |

| | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு | | |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 178,883,331 | 57,169,395 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 171,988,417 | 56,697,667 |

**வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்**

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய அனைத்து எதிர்கால காசுப்பாய்ச்சல்களும், அறிக்கையிடல் திகதியிலுள்ள செலாவணி வீதத்தை பயன்படுத்தி அறிக்கையிடும் நாணயத்திற்கு மாற்றப்பட்டன.

45.4. நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள் (தொடர்ச்சி)

**2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள் பின்வருமாறு:**

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டு களுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 423,783,737 | - | - | - | - | 423,783,737 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 18,588,564 | 5,033,982 | 12,151,636 | 8,087,248 | - | 43,861,430 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 54,001,291 | 39,271,443 | 104,459,788 | 120,422,348 | 38,708,398 | 356,863,268 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 9,940,219 | - | - | 145,906 | 106,922,214 | 117,008,339 |
| ஏனைய பெறத்தக்கவை | 6,175,049 | - | - | - | - | 6,175,049 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 512,488,860 | 44,305,425 | 116,611,424 | 128,655,502 | 145,630,612 | 947,691,823 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 267,791,962 | 94,425,980 | - | - | - | 362,217,942 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 83,306,771 | - | - | - | - | 83,306,771 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 194,137 | 114,307 | 132,090 | 64,456 | 8,108 | 513,098 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 16,371,699 | 645,307 | 1,684,900 | 4,588,533 | 6,697,731 | 24,592,998 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 367,664,569 | 95,185,594 | 1,684,900 | 4,652,989 | 6,746,934 | 470,671,904 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்** | 880,153,429 | 139,491,019 | 118,428,414 | 133,308,491 | 152,377,546 | 1,418,363,727 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 44,456,357 | 418,671 | 793,905 | 2,337,833 | 3,461,514 | 51,468,280 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 79,863,615 | - | - | - | - | 79,863,615 |
| ப.நா.நிதியம் | 27,750,312 | 6,937,578 | - | 10,060,159 | 224,792,547 | 269,540,596 |
| ஏனையவை | 95,125,637 | - | - | - | 1,124,395 | 96,250,032 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 247,195,921 | 7,356,249 | 793,905 | 12,397,992 | 229,378,456 | 497,122,523 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 303,251,290 | - | - | - | - | 303,251,290 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 450,884 | - | - | - | - | 450,884 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 70,081,240 | - | - | - | - | 70,081,240 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 51,744 | - | - | - | - | 51,744 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 552,777,865 | - | - | - | - | 552,777,865 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 8,563,548 | - | - | - | - | 8,563,548 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | 935,176,571 | - | - | - | - | 935,176,571 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் பொறுப்புக்கள்** | 1,182,372,492 | 7,356,249 | 793,905 | 12,397,992 | 229,378,456 | 1,432,299,094 |
| **தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | (302,219,063) | 132,134,770 | 117,634,509 | 120,910,499 | (77,000,910) | (13,935,367) |

| | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|
| **2016 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 279,092,132 | 93,922,515 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 279,934,575 | 92,340,465 |

45.5 திரவத்தன்மை இடர்நேர்வு

நிதியியல் சாதனங்களுக்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைக் குறுகிய கால அறிவித்தலின் மீது பெற்றுக் கொள்கின்ற போது நிறுவனமொன்று முகம் கொடுக்கின்ற இடர்ப்பாடு திரவத்தன்மை இடர்நேர்வாகும். நிறுவனம் தனது நிதிச் சொத்துக்களை விரைவாக, சந்தைப் பெறுமதியைவிட மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி நேரிடுவதும் திரவத்தன்மை இடர்நேர்வொன்றாகும்.

(அ) வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் உள்ளமைப்பைத் தீர்மானிக்கின்ற போது முக்கியமாக திரவத்தன்மை தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களில் தலையீடு செய்கின்ற போது மற்றும் அரச கடன்கள் மற்றும் ப.நா.நி. கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டு ஒதுக்கங்களை ஒழிக்கின்ற போது இது ஒரு உள்ளார்ந்த தேவைப்பாடாகும். நிதியங்களை விரைவாக அடைவதை உறுதி செய்து கொள்ளும் நோக்கத்துடன் வங்கியானது பின்வரும் அளவீடுகளை மேற்கொள்கிறது:

- வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் திரவத்தன்மை இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட திரவச் சொத்து வீதங்கள்.
- ஒரு இணைத்தரப்பினருடன் ஒரு நாணயத்தில் வைத்திருக்கப்படக்கூடிய ஒதுக்குகளின் உச்சமட்ட விகிதத்தின் மீதான வரையறை

(ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற சந்தைப்படுத்தக்கூடிய அதிக திரவத்தன்மையுடனான கருவிகளை மேலதிகப் பிணையங்களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, மீள்கொள்வனவு/நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கிப் பிணையங்கள் மற்றும் ஐ.அ.டொலர்/ரூபா பரஸ்பர பரிமாற்றல்கள் போன்ற நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி முறைமையினுள் நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப்பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலையைக் கட்டுப்படுத்துகிறது.

46. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு

2017 திசெம்பர் 31இலுள்ளவாறு

| | 12 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 12 மாதங்களுக்கு மேலானவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 459,827,641 | - | 459,827,641 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 23,416,953 | 21,847,423 | 45,264,376 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 134,413,318 | 431,815,617 | 566,228,935 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 4,940,455 | - | 4,940,455 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 11,094,542 | 115,743,610 | 126,838,152 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | 3,670,494 | - | 3,670,494 |
| இலங்கை அரச பிணையங்கள் | 32,080,086 | - | 32,080,086 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 199,800,871 | - | 199,800,871 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 154,536 | 69,166 | 223,702 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 2,180,722 | 10,701,748 | 12,882,470 |
| தங்கம் | - | 126,583,727 | 126,583,727 |
| இருப்புக்கள் | - | 6,875,533 | 6,875,533 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | 1,369,157 | 165,691 | 1,534,848 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | - | 17,960,517 | 17,960,517 |
| அருவச் சொத்துக்கள் | - | 80,623 | 80,623 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 872,948,775 | 731,884,750 | 1,604,833,525 |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 8,683,033 | - | 8,683,033 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 4,648,449 | - | 4,648,449 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 90,868,160 | - | 90,868,160 |
| ப.நா. நிதியம் | - | 318,665,332 | 318,665,332 |
| ஏனையவை | 62,902,870 | 1,193,019 | 64,095,889 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 341,712,198 | - | 341,712,198 |
| அரச, அரச நிறுவனங்களின் நிலுவைகள் | 324,517 | - | 324,517 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 40,655,278 | - | 40,655,278 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 4,457 | - | 4,547 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 598,053,901 | - | 598,053,901 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 8,887,156 | - | 8,887,156 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 34 | 11 | 45 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | - | 671,061 | 671,061 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 160,398 | 51,322 | 211,720 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,156,900,541 | 320,580,745 | 1,447,481,286 |
| **தேறிய** | (283,951,766) | 411,304,005 | 127,352,239 |

**46. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாடு (தொடர்ச்சி)**

**2016 திசெம்பர் 31இலுள்ளவாறு**

| | 12 மாதங்களுக்குக் குறைவானவை ரூ.000 | 12 மாதங்களுக்கு மேலானவை ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 423,783,737 | - | 423,783,737 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 9,948,121 | 33,330,634 | 43,278,755 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 88,536,415 | 260,008,235 | 348,544,650 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 198,880 | - | 198,880 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 9,940,219 | 107,068,121 | 117,008,340 |
| ஏனைய வெளிநாட்டு பெறத்தக்கவை | 6,175,049 | - | 6,175,049 |
| இலங்கை அரச பிணையங்கள் | 351,426,470 | - | 351,426,470 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 83,306,771 | - | 83,306,771 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 289,487 | 194,556 | 484,043 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 2,952,281 | 9,540,709 | 12,492,990 |
| தங்கம் | - | 111,009,339 | 111,009,339 |
| இருப்புக்கள் | - | 6,114,861 | 6,114,8 61 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | 6,659,993 | 396,414 | 7,056,407 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | - | 18,132,390 | 18,132,390 |
| அருவச் சொத்துக்கள் | - | 156,320 | 156,320 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 983,217,423 | 545,992,674 | 1,529,210,097 |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 45,566,681 | - | 45,566,681 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 14,573,675 | - | 14,573,675 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 79,863,615 | - | 79,863,615 |
| ப.நா. நிதியம் | 34,687,890 | 234,852,706 | 269,540,596 |
| ஏனையவை | 95,125,637 | 1,124,395 | 96,250,032 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 303,251,290 | - | 303,251,290 |
| அரச, அரச நிறுவனங்களின் நிலுவைகள் | 450,884 | - | 450,884 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 70,054,436 | - | 70,054,436 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 51,744 | - | 51,744 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 552,777,865 | - | 552,777,865 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 8,563,548 | - | 8,563,548 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 34 | 46 | 80 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | - | 2,429,153 | 2,429,153 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 182,544 | 10,753 | 193,297 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,205,149,843 | 238,417,053 | 1,443,566,896 |
| **தேறிய** | (221,932,420) | 307,575,621 | 85,643,201 |

## 47. சந்தைப் பெறுமதி வெளிப்படுத்தல்கள்

### 47.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதி

சந்தைப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சொத்தொன்றை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற விலை அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்களின் பொருட்டு பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். விற்பனை செய்பவருக்கு எதிராக விலை அசைவொன்று ஏற்படாத விதத்தில் குறிப்பிடத்தக்கதொரு கொடுக்கல்வாங்கலை உள்ளீர்த்துக் கொள்ள முடியுமானவாறு ஒழுங்கமையப் பெற்றதும் திரவத்தன்மையுடன் கூடியதுமான சந்தையில் நிதியியல் சாதனமொன்று விற்பனை செய்யப்படுகின்ற போது குறிப்பிடப்பட்ட நியாயப்பெறுமதி சந்தைப் பெறுமதியாகும்.

மதிப்பீட்டு நுட்பமாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமாக வங்கி பின்வரும் படிமுறையினைப் பயன்படுத்துகிறது:

**மட்டம் 1:** ஒத்த தன்மையான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்காக செயற்பாட்டு சந்தைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) விலைகள்.

**மட்டம் 2:** பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை செலுத்துகின்ற அனைத்து உள்ளீடுகளுக்குமான வேறு நுட்பத்தின்படி ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கப்படுகின்றன.

**மட்டம் 3:** பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைச் செலுத்துகின்ற உள்ளீடுகளைப் பயன்படுத்தும் நுட்பமாக அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

பின்வரும் அட்டவணை சந்தைப் பெறுமதிப் படிமுறையில் பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வொன்றினைத் தருகின்றது:

2017 திசெம்பர் 31

| | மட்டம் 1 ரூ.000 | மட்டம் 2 ரூ.000 | மட்டம் 3 ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | **45,264,376** | **-** | **-** | **45,264,376** |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | **566,228,935** | **-** | **-** | **566,228,935** |
| பெறுதிகள் | **-** | **4,940,455** | **-** | **4,940,455** |
| | **611,493,311** | **4,940,455** | **-** | **616,433,766** |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | **126,583,727** | **-** | **-** | **126,583,727** |
| | **126,583,727** | **-** | **-** | **126,583,727** |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **9,754,483** | **-** | **-** | **9,754,483** |
| | **9,754,483** | **-** | **-** | **9,754,483** |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | **-** | **-** | **8,976,339** | **8,976,339** |
| கட்டடம் | **-** | **-** | **7,515,327** | **7,515,327** |
| | **-** | **-** | **16,491,666** | **16,491,666** |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | **-** | **-** | **1,244,581** | **1,244,581** |
| பெறுதிகள் | **-** | **3,403,868** | **-** | **3,403,868** |
| | **-** | **3,403,868** | **1,244,581** | **4,648,449** |

2016 திசெம்பர் 31

| | மட்டம் 1 ரூ.000 | மட்டம் 2 ரூ.000 | மட்டம் 3 ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 43,278,755 | - | - | 43,278,755 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | 348,544,650 | - | - | 348,544,650 |
| பெறுதிகள் | - | 198,880 | - | 198,880 |
| | 391,823,405 | 198,880 | - | 392,022,285 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 111,009,339 | - | - | 111,009,339 |
| | 111,009,339 | - | - | 111,009,339 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 321,779,576 | - | - | 321,779,576 |
| | 321,779,576 | - | - | 321,779,576 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 8,976,339 | 8,976,339 |
| கட்டடம் | - | - | 7,695,682 | 7,695,682 |
| | - | - | 16,672,021 | 16,672,021 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | - | - | 5,911,812 | 5,911,812 |
| பெறுதிகள் | - | 8,661,863 | - | 8,661,863 |
| | - | 8,661,863 | 5,911,812 | 14,573,675 |

**காணி மற்றும் கட்டடங்கள்**

**மதிப்பிடப்படும் முறை**

சந்தை அணுகுமுறையான நேரடி ஒப்பீட்டு முறையைப் பயன்படுத்தி நிலம் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இம்முறையில் சந்தைப் பெறுமதியியைப் பெறுவதற்கு சொத்துக்கள் புள்ளி வேறுபாடுகளுக்காக சீராக்கப்பட்ட, கூட்டிய அல்லது பெயரளவில் கூட்டி மேம்படுத்தப்பட்ட பெறுமதி அண்மைய விற்பனையுடன் ஒப்பிடப்படுகின்றன. சென்றல் பொயின்ற், வைற் எவேய்ஸ் மற்றும் லொயிட்ஸ் கட்டடங்கள் தவிர்ந்த அனைத்துக் கட்டடங்களையும் பெறுமானத் தேய்விடப்பட்ட நடைமுறை பதிலீட்டுக் கிரயமுறையை பயன்படுத்தி மதிப்பிட்டதுடன், சமூகத்திற்குச் சேவை வழங்குகின்ற பொதுத்துறை நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் திறந்த திரவத்தன்மை சந்தையில் விற்பனை செய்யப்படுவதில்லை என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது.

ஏனைய கட்டடங்களை மதிப்பிடுவதற்கு வருமான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டதுடன் இம்முறையானது ஆதனங்களை எதிர்கால மதிப்பிடப்பட்ட வருமானம், இலாபம் அல்லது காசுப் பாய்ச்சலை தனியொரு நடைமுறைத் தொகைக்கு மாற்றுவதன் (கழிவிடப்படுவதன்) மூலம் மதிப்பிடுகின்றது.

சந்தை அணுகுமுறையின் கீழ், மதிப்பிடப்பட்ட சந்தைப்பெறுமதியானது பின்வருமாறு அதிகரிக்கலாம்/ (குறைவடையலாம்);

பேர்ச் ஒன்றுக்கான விலை அதிகரித்தல்/ (குறைதல்)

சதுர அடி ஒன்றுக்கான விலை அதிகரித்தல்/ (குறைதல்)

கட்டடங்களிற்கான பெறுமானத்தேய்வு வீதம் குறைதல்/ (அதிகரித்தல்)

வருமான அணுகுமுறையின் கீழ், மதிப்பிடப்பட்ட சந்தைப்பெறுமதியானது பின்வருமாறு அதிகரிக்கலாம்/ (குறைவடையலாம்);

மொத்த வருடாந்த வாடகை வருமானம் அதிகரித்தல்/ (குறைதல்)

கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுகள் அதிகரித்தல்/ (குறைதல்)

**பெறுதிகள்**

பெறுமதி மதிப்பீட்டு மாதிரிகள் முன்னோக்கிய விலைகளை (சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முன்னோக்கிய புள்ளிகளுக்கு மேலதிக நிறைகளை அறிவிப்பதன் மூலம் கணக்கிடப்பட்டது) பயன்படுத்தியதுடன் பெறுமதித் திகதியிலுள்ளவாறு தொடர்பான நாணயங்களில் பூச்சிய நறுக்கு விளைவு வளைகோட்டினை அடிப்படையாகக் கொண்டு கழிவின் வீதம் கணிக்கப்பட்டது. சாதனமானது அளவின் உள்ளடக்கத்தினை மதிப்பிடுமிடத்து சீராக்கங்கள் முன்னோக்கிய விலைகளுக்கும் அல்லது அளவுவீதத்தின் தளத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டிவீதங்களுக்கும் செய்யப்படுகிறது.

**உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள்**

உள்ளடக்கப்பட்ட பெறுதிச் சாதனங்களின் சந்தைப் பெறுமதி பிளாக் ஷோல்ஸ் மாதிரியைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டது.

மட்டம் 3

| | 2017 ரூ.000 | 2016 ரூ.000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | **5,911,813** | 10,290,162 |
| பெறுதிப் பொறுப்புக்கள் | **(4,667,231)** | (4,378,349) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | **1,244,582** | 5,911,813 |
| வருவாய்களில் உள்ளடக்கப்பட்ட மொத்தத் தேறல் செய்யப்படாத இலாபங்கள் | 4,667,231 | 4,378,349 |

பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்களவிற்கு அவதானிக்கப்படாத உள்ளீடு

| | |
|---|---|
| கழிவிடல் வீதம் | 10% |
| தளம்பல் | 4% |

| உணர்திறன் பகுப்பாய்வு | கழிவிடல் வீதம் | | தளம்பல்கள் | |
|---|---|---|---|---|
| | 9% | 11% | 3% | 5 % |
| | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** | **ரூ.000** |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | 1,271,115 | 1,218,952 | 1,244,547 | 1,245,000 |

| **உள்ளடக்கப்பட்ட பெறுதிகளிலுள்ள பிற்போடப்பட்ட சொத்து** | 2017 ரூ.000 | 2016 ரூ.000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | **4,625,665** | 13,292,126 |
| ஆண்டு காலப்பகுதியில் பதிவழிக்கப்பட்ட கட்டுப்பணம் | **(4,256,210)** | (8,666,461) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | **369,455** | 4,625,665 |

### 47.2 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2017 திசெம்பர் 31இல் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி ரூ.6,503.88 மில்லியனாக இருந்ததுடன் (2016 - ரூ.21,383.72 மில்லியன்) வழங்கப்பட்ட துணைநில் வைப்பு வசதி ரூ.34,151.39 மில்லியனாக (2016 - ரூ. 48,670.71) காணப்பட்டது. மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி 2017 திசெம்பர் 31இல் ரூ.22,375.12 மில்லியனாக இருந்தது (2016 - ரூ.30,821.39 மில்லியன்).

### 47.3 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் சந்தைப் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

### 47.4 வைப்புக்கள்

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் ஏட்டுப் பெறுமதியானது சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

### 47.5 சந்தைப் பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதி படிநிலைகளை நிர்ணயித்தல்

கொண்டு செல்லும் பெறுமதியானது சந்தைப் பெறுமதிக்கு அண்மைய பெறுமதியைக் கொண்டிராத வங்கியின் நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதிகளும், சந்தைப் பெறுமதிகளும் வகையின்படியான ஒரு ஒப்பீட்டுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | எடுத்துச் செல்லப்படும் தொகை | | சந்தைப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | **2017 ரூ.000** | **2016 ரூ.000** | **2017 ரூ.000** | **2016 ரூ.000** |
| வெளிநாட்டு நாணய வர்த்தகம்/ விற்பனைக்கான பிணையங்கள் | **611,493,311** | 391,823,405 | **611,493,311** | 391,823,405 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **4,940,455** | 198,880 | **4,940,455** | 198,880 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **32,080,086** | 351,426,470 | **32,129,607** | 352,586,576 |
| வங்கிகளுக்கான கடன்கள் | **223,702** | 484,043 | **214,077** | 460,376 |
| ஏனைய சொத்துக்கள் | **12,882,470** | 12,492,990 | **9,702,999** | 9,743,612 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஒதுக்கப்பட்ட தங்கம் | **126,583,727** | 111,009,339 | **126,583,727** | 111,009,339 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **4,648,449** | 14,573,675 | **4,648,449** | 14,573,675 |

**48. ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்**

| **முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு:** | **2016 ரூ.000** |
|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | |
| ஏனைய சொத்துக்கள் | 12,322,596 |
| **நிதியியல்லா சொத்துக்கள்** | |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள் | 7,226,801 |

| **தற்போதைய சமர்ப்பிப்பு:** | **2017 ரூ.000** | **2016 ரூ.000** |
|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | |
| ஏனைய சொத்துக்கள் | **12,882,470** | 12,492,990 |
| **நிதியல்லா சொத்துக்கள்** | | |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள் | **1,534,848** | 7,056,407 |

ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்களின் கீழ் 2016இல் வகைப்படுத்தப்பட்டிருந்த உள்ளக நிதியங்களின் மீதான பெறவேண்டிய வட்டித் தொகையான ரூ.170.39 மில்லியன், சிறந்த சமர்ப்பித்தலுக்காக தற்பொழுது தொடர்புடைய முதலீடுகளுடன் உள்ளடக்கப்படுகின்றது.

## 49. தொடர்புடைய தரப்பினர்கள்

### 49.1 அரச மற்றும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

மத்திய வங்கியின் வழமையான வியாபாரத்தின் போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்பினருள் இலங்கை அரசாங்கம் (அரசு, வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 24 - திருத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களுக்கமைய வங்கியினால் அரசுடனும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்ததும் தனித்தனியாக முக்கியத்துவமில்லாத ஏனைய ஒன்றுசேர்ந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்களின் தரப்பினருள் விபரங்கள் பின்வருமாறு:

| கொடுக்கல்வாங்கலின் இயல்பு | 2017 ரூ.000 | 2016 ரூ.000 |
|---|---|---|
| **கொடுக்கல்வாங்கல்கள்:** | | |
| அரச பிணையங்களின் உடனடி கொள்வனவு | - | 8,065,953 |
| அரச பிணையங்களின் உடனடி விற்பனை | **74,237,317** | 37,375,643 |
| மீள்கொள்வனவு/விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள் | **4,311,989,631** | 6,215,152,910 |
| மீள்கொள்வனவு/ மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட/ விற்பனை செய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்க பிணையங்கள் மீதான வட்டி வருமானம்/ செலவு | **1,210,183** | 1,885,223 |
| அரசாங்கத்தின் சார்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி (குறிப்பு 21.1-21.9) | **44,676,985** | 6,079,600 |
| அரசாங்கத்தின் சார்பாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி (குறிப்பு 21.1-21.9) | **17,346,423** | 31,001,635 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவினம் (குறிப்பு 49.1.3) | **1,906,625** | 3,162,625 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள் (குறிப்பு 49.1.4) | **2,744,815** | 3,063,380 |
| இவ்வாண்டில் அரசிற்கு செலுத்தப்பட்ட மிகை (குறிப்பு 32) | - | 5,000,000 |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் (குறிப்பு 49.1.6) | | |
| விற்பனை | **5,337,500** | 55,884,998 |
| கொள்வனவு | **85,719,851** | 68,112,483 |
| ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகள் | **751,569,889** | 737,197,729 |
| இவ்வாண்டுப்பகுதியில் கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் பெறப்பட்ட நிதியம் | **123,394** | 275,236 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் (குறிப்பு 49.1.7) | - | 28,038 |
| வாடகை வருமானம் | **412,206** | 387,569 |
| ஏனைய கொடுக்கல்வாங்கல்கள் (குறிப்பு 49.1.11) | **996,174** | 966,694 |
| **நிலுவைகள்:** | | |
| மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் (குறிப்பு 49.1.8) | **9,704,962** | 320,605,082 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் (குறிப்பு 10) | **199,800,871** | 83,306,771 |
| சுசகன கட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம், சௌபாக்கிய கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தல் (கட்டம் II) மற்றும் வடக்கு மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் | **28,254** | 112,652 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | **6,443,984** | 5,208,837 |
| அ.நே.மொ.தீ. நிலுவைகள் - வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுடன் (குறிப்பு 22) | **215,901,806** | 183,836,224 |
| இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள் | **185,324** | 168,790 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிடமிருந்து பெறத்தக்கவை | **54,490** | 1,401,497 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு கொடுபடத்தக்கவை (குறிப்பு 21) | **62,576,551** | 32,513,907 |
| அரச மற்றும் அரச முயற்சிகளுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள் திசெம்பர் 31இல் உள்ளவாறு | **84,833** | 198,936 |
| கைவிடப்பட்ட ஆதன நிலுவைகள் | **2,257,579** | 1,952,446 |
| ஏனைய நிலுவைகள் (குறிப்பு 49.1.11) | **599,623** | 700,951 |

**49.1.1** நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 4 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இந்தத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தன.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களமானது வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது அரசினால் நிதியிடப்பட்ட வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

**49.1.2** நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின் பிரகாரம் நாணயச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பணிகளையும் மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் கடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதித் தேவைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் அதனுடைய பணம் செலுத்துதல் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கக் கடனை இது முகாமைத்துவம் செய்கிறது.

**49.1.3** நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தையும் ஏக உரிமையையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஒரே அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள

டி லா ரூ லங்கா கரன்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

**49.1.4** வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பண்டங்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

**49.1.5** மத்திய வங்கியானது, குறிப்பு 51 இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

**49.1.6** நாணய விதிச்சட்டத்தின் படி, வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறத்திலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

49.1.7 இத்தொகையானது சனாதிபதி செயலகத்தால் நடாத்தப்பட்ட தொடர்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வங்கியால் செலுத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் விசாரணைகளுக்குச் செலுத்தப்பட்ட தொழில்சார் நிபுணத்துவக் கட்டணம் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இச்செலவுகள் நிர்வாக செலவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**49.1.8** உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது வங்கியின் நிதிக் கொள்கையை அமுல்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 90 - 92ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நிதி ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் அமுல்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வணிக நிறுவனங்களினதும் வேறும் சில நிதி நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2017 திசெம்பர் 31ஆம் திகதியன்று இந்தத் தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 23 மற்றும் 24இல் தரப்பட்டுள்ளன. முதலீட்டுப் பட்டியலிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 33 இல் தரப்பட்டுள்ளது.

**49.1.9** வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

**49.1.10** வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான 10 சதவீதமான குறைந்தபட்ச முற்பண வரையறையினைப் பேணாத வங்கிகள், வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பற்றாக்குறையாகவுள்ள தொகையினை செலுத்துதல் வேண்டும். 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூ.6.83 மில்லியன் மீதியாகக் காணப்பட்டதுடன், மக்கள் வங்கி - ரூ.2.46 மில்லியன் (2016 - ரூ. 25.57 மில்லியன்), இலங்கை வங்கி - ரூ.1.88 மில்லியன் (2016 - ரூ 7.71 மில்லியன்), பிரதேச சங்வர்த்தன வங்கி - ரூ.0.63 மில்லியன் (2016 - ரூ.23.42 மில்லியன்) மற்றும் லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி ரூ.1.86 மில்லியன் (2016 - ரூ.7.78 மில்லியன்) தொகையைப் பெற்றதுடன், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ரூ.99.19 மில்லியன் வட்டியைப் பெற்றது.

**49.1.11** ஏனைய மீதிகளும் கொடுக்கல்வாங்கல்களும் அரசாங்கம், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமில்லாத கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றன.

**49.2 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்**

ஆளுநர், துணை ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர் உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் (அவ்வாறான அங்கத்தவர்கள் ஏதேனுமொரு வங்கித் தொழில் நிறுவனத்தில் பணிப்பாளராக, அலுவலராக, ஊழியராக அல்லது பங்குரிமையாளராயிருத்தலை நாணய விதிச் சட்டம் தடை செய்கிறது) வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

**49.3 பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான கொடுப்பனவு**

| | **2017 ரூ.000** | **2016 ரூ.000** |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நலன்கள் | **123,072** | 123,948 |

மேற்படி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய வங்கியினால் காசல்லாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

**49.4 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்**

| | **2017 ரூ.000** | **2016 ரூ.000** |
|---|---|---|
| பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான கடன்கள் | **73,141** | 57,793 |

அனைத்துக் கடன்களும் கடன் வகை மற்றும் மாதாந்த மீளச் செலுத்துகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 7 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பாதுகாப்பினைக் கொண்டுள்ளன.

**49.5 தொழில் நிலைக்குப் பிந்திய நலவுரிமைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்**

| | **2017 ரூ.000** | **2016 ரூ.000** |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **69,573** | 69,511 |

குறிப்பு 29 இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத் திட்டத்திற்கும் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளையும் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.542.58 மில்லியன் (2016இல் ரூ.559.67 மில்லியன்) பங்களிப்புச் செய்துள்ளது. வழமையான வியாபார காலப்பகுதியில் வங்கியானது அதன் தொழில்நிலைக்குப் பின்னைய திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது. அத்தகைய திட்டங்களுடனான மீதிகளின் தொகை குறிப்பு 25 இல் தரப்பட்டுள்ளது.

## 50 எதிர்பாராப் பொறுப்புக்களும் கடப்பாடுகளும்

### 50.1 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய தீர்க்கப்படாத பிணைகள் எதுவும் இருக்கவில்லை.

### 50.2 கொடுகடன் உத்தரவாதங்கள்

பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற வெளிவாரியான கடன் தொகைகளின் மூலம் சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகளுக்கு நிதியிடல், இத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கான உத்தரவாதப் பத்திரங்களை வெளியிடல், உத்தரவாதப் பத்திர தவணைப் பணங்களைச் சேகரித்தல், கடன் உத்தரவாதப் பத்திர நிதியத்தின் நிர்வாகம் மற்றும் செலுத்தத் தவறுதல்கள் நடைபெறாதென்பதை உறுதி செய்தல், கடன் நிதியம் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுகின்றதென்பதை உறுதி செய்வதற்காக கடன் வழங்கியதன் பின்னர் கடன் விசாரணைகளை நடத்துதல் ஆகிய மூலம் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மீள்நிதியிடல் கடன் வசதித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது. ஆண்டினுள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொடர்ந்து மீள்நிதியிடல் கடன் வசதிகள் வழங்கப்பட்டனவென்பதோடு, இத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குகின்ற பங்கேற்புக் கடன் நிறுவனங்களில் உருவாகின்ற நட்டங்கள் தொடர்பாக வங்கியானது கடன் உத்தரவாதப் பத்திரங்களை ஏற்பாடு செய்தது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுதல்களுக்கான ஒரு உத்தரவாதப்பத்திரமல்லவென்பதோடு நட்டங்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்புக் கடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற நட்டங்களுக்காக மாத்திரம் உரிமைகள் கோரப்படுதல் வேண்டும். இவ் ஏற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

**உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கடன் உத்தரவாதங்கள் தொடர்பானது:**

| | உத்தர வாத மளிக்கப் பட்ட நாணயம் | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை 2017 ரூ.000 | 2016 ரூ.000 |
|---|---|---|---|
| தொடர்புடைய தரப்பினர்கள் | ரூபா | 1,798 | 54,799 |
| ஏனையோர் | ரூபா | - | 5,311 |
| மொத்தக் கடன் உத்தரவாதங்கள் | | **1,798** | 60,110 |

### 50.3 நம்பகமான செயற்பாடுகள்

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது நம்பகமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ் வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது இடம்பெறச் செய்கின்றது. ஆனாலும் அச் செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

### 50.4 சட்ட ரீதியான உரிமைக் கோரல்கள்

சட்ட உரிமையுடன் ரூ.35 மில்லியன் கோரல் சம்மந்தப்பட்ட ஈடுபாடுடையோரின் நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் வங்கியொரு எதிர்த்தரப்பாகவுள்ளது. வங்கியினால் இவ்வழக்கு எதிர்த்து வாதாடப்படுவதுடன் நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்குகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வங்கி 02 வழக்குகளின் வழக்காளியாக இருந்ததுடன் சட்ட ரீதியாக ரூ.16.57 மில்லியன் நட்ட ஈடாகக் கோரியதுடன், இதற்காக நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை

மேலும் 2017 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஒதுக்குகளும் மேள்கொள்ளப்படவில்லை.

### 50.5 கடப்பாடுகள்

(அ) 2017 திசெம்பர் 31ஆம் திகதியுள்ளவாறு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் கையேற்புத் தொடர்பில் வங்கி ரூ.277.26 மில்லியன் (2016 - 148.30 மில்லியன்) இனை மூலதனக் கடப்பாடாகக் கொண்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31ஆம் நாளன்று வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள் | | 2017 ரூ.000 | 2016 ரூ.000 |
|---|---|---|---|
| முன்னோக்கிய செலாவணி விற்பனைகள் | | | |
| | ஐ.அ.டொலர் | 1,850,735 | 2,501,145 |
| | யூரோ | 2 | - |
| | சுவீடிஸ் குரோனா | - | 58 |
| முன்னோக்கிய செலாவணி கொள்வனவுகள் | | | |
| | ஐ.அ.டொலர் | 5,000 | 15,998 |
| | யூரோ | 400 | - |

### 50.6 பிணையிடப்பட்ட சொத்துக்கள்

பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு அவுத்திரேலிய டொலர் 35.74 மில்லியன் (2016- அவுத்திரேலிய டொலர் 36.02 மில்லியன்) கொண்டு செல்லும் பெறுமதியுடைய அவுத்திரேலிய டொலர் 35 மில்லியன் (2016 - அவுத்திரேலிய டொலர் 35 மில்லியன்) பெறுமதியுடைய பிணையங்கள் வங்கியினால் யூரோ கிளியர் வங்கியில் பிணையிடப்பட்டதுடன், ஐ.அ.டொலர் 30 மில்லியன் (2016 - ஐ.அ.டொலர் 30 மில்லியன்) கொண்ட கொடுகடன் வசதி பெறப்பட்டது. பிணையிடப்பட்ட பிணையங்கள் யூரோ கிளியரில் தனியான கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

இப்பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் "விற்பனைக்குள்ள நிதியியல் சொத்துக்களாக" காட்டப்பட்டுள்ளன. இக்கொடுக்கல் வாங்கல்களை வங்கியானது, "பிணையங்கள் உடன்படிக்கையின் ஆளுகைக்குட்பட்ட யூரோ கிளியர் முறைமையின் பங்கேற்பாளர்களின் பாதுகாக்கப்பட்ட கடன்பாடுகள்" மற்றும் "பொது நிபந்தனைகளின் ஆளுகைக்குட்பட்ட யூரோ கிளியர் முறைமையின் பங்கேற்பாளர்களுக்கான கடன்களின் நீட்சி" ஆகிய வழிகாட்டல்களின் கீழான விதி முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்கின்றது.

பணச்சந்தையில் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்துவதன் மூலம் குறுங்கால வட்டிவீதத்தை பேணுவதற்கான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக, மீள்கொள்வனவு உடன்படிக்கைகளுக்கு (மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்) வசதியளிக்கும் முகமாக, 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு ரூ.6,500 மில்லியன் - கொண்டு செல்லும் பெறுமதி ரூ.6,469 மில்லியன் (2016 - ரூ.21,375 மில்லியன் - கொண்டு செல்லும் பெறுமதி ரூ.21,350 மில்லியன்) பெறுமதியுடைய பிணையங்கள் வங்கியால் பல்வேறுபட்ட முதனிலை வணிகர்களுடன் பிணையிடப்பட்டது.

இப்பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் "இலங்கை அரசாங்கப் பிணையங்களாக" காட்டப்பட்டுள்ளன. வங்கியானது இக்கொடுக்கல்வாங்கல்களை 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் நடாத்துகின்றது.

## 51. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நம்பகத் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

51.1 வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதி உதவியின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கடன் முறைகளின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைக்கிணை நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

51.2 வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் ஆகும். சட்ட நியதிகளின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல், மற்றும் அங்கத்தவர்களுக்கு நலக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் என்பன நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

51.3 மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கியியல் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

51.4 2010 செத்தெம்பர் 28ம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி வங்கி 2010 ஒத்தோபர் 01 ஆம் நாள் தொடக்கம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரில் வைப்பாளர்களின் நிதியினைப் பாதுகாக்கும் தேசிய நல நடவடிக்கையொன்றாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்தியது.

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும். இதன்படி, 76 நிறுவனங்கள் இத்திட்டத்தின் உறுப்பினர்களாகவுள்ளனர். காப்புறுதி செய்யப்படவுள்ள வைப்புக்கள் மேலே சொல்லப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 5.2 இன்படி விசேட விலக்கல்களுடன், அனைத்துக் கடன் கருவிகளும் நீங்கலான அங்கத்துவ நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் ஆரம்பத்தில் வைப்பாளர்களாகயிருந்து பின்னர் அவ்வைப்புக்கள், 2012 சனவரி 01இற்கு முன்னர் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நாணயச் சபையின் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வணிக மீளமைத்தல் திட்டங்களின் ஒரு பகுதியாக உரிமை மூலதனமாக மாற்றப்பட்ட பங்குதாரர்களின் பங்குகளின் பெறுமதி என்பவற்றை உள்ளடக்கும்.

வைப்புக் காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீடான ரூ.350.20 மில்லியன் மாற்றல் மற்றும் கைவிடப்பட்ட சொத்தாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.1,168.31 மில்லியன் முதலீட்டு மாற்றல்களின் மூலமும் உருவாக்கப்பட்டது. 2017 திசெம்பர் 31இல் நிதியத்தின் அளவு ரூ.45.30 பில்லியனாகவும் (தற்காலிகமானவை) தற்பொழுது, வைப்பாளரொருவருக்கு, நிறுவனமொன்றுக்கு கொடுபடத்தக்க இழப்பீட்டுத்தொகை 600,000.00 அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச்சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு நாணயச் சபையோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும். நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிக ஏதாவது பொறுப்பு காணப்படுமானால் நாணயச் சபையோ இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்க மாட்டாது.

தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள வைப்புக் காப்புறுதிப் பிரிவு நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான பணிப்புரைகள்/ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் நியதிகளுக்கிணங்க தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் இப்பிரிவு, இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருப்பதுடன் வங்கியின் நிதியியல் கூற்றுக்களிலிருந்தும் தனித்தனியாக ஏடுகளையும், கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் இப்பிரிவின் கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும்.

2013 நவெம்பர் 22 ஆம் திகதியிலிருந்து இத்திட்டம் “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்” என மீளப்பெயரிடப்பட்டதுடன் வைப்பு காப்புறுதி நிதி “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதி” என மீளப்பெயரிடப்பட்டது.

51.5 நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களை மேற்கொள்கின்றது. இத் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறும் நிதிக் கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதுடன் கடன் தீராற்றலற்ற முறிவு நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களை கையகப்படுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

51.6 வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான குறைந்தபட்ச முற்பணமான 10 சதவீதம் வரையறையினைப் பேணாத வங்கிகள், மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பாற்றாக்குறையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச சங்வர்த்தன வங்கி மற்றும் லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி என்பனவற்றினூடாகத் திரட்டப்பட்ட அத்தகைய தொகையை விஸ்கம் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வேளாண்மைக்கு மீள்நிதியிடலாக வழங்கியது. 2017 திசெம்பர் 31இல், அனைத்து திரட்டப்பட்ட நிதியங்களும் வங்கிகளுக்கு மீளளிக்கப்பட்டன (2016 திசெம்பர் 31இல் வெளிநின்ற தொகை ரூ.554.26 மில்லியன்). 2017 திசெம்பர் 31இல், மீள் நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூ.6.83 மில்லியன் வெளிநின்ற கடனாகக் காணப்பட்டதுடன் (2016 - ரூ.64.48 மில்லியன்), ரூ. 1.83 மில்லியன் வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டியாகப் பெறப்பட்டது. மேலும் முதலீட்டிலிருந்து ரூ.84.72 மில்லியன் (2016 - ரூ.5.69 மில்லியன்) வருமானத்தை உழைத்துக்கொண்டது.

## 51. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள் (தொடர்ச்சி)

51.7 பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், வங்கியின் நாணயச் சபையின் சார்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் வெளிநாட்டுக் கொடையாளர்களின் நிதியிடல் செயற்றிட்டங்கள் தொடர்பாக, இலங்கை அரசாங்கத்தின் முகவராகத் தொழிற்படுகிறது. இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட செற்றிட்டங்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்துகிறது.

### முடிவடைந்த செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் |
|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 24.50 | தேயிலை சிறு உடமையாளர் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலை மேம்படுத்துதல் | 2,550.90 | திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிட மிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | நீண்ட கால பயிர் துறையினை வர்த்தகப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான கையாளல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் | 1,453.11 | |
| பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 40.00 | உற்பத்தித்திறனையும் இலாபத் தன்மையினையும் அதிகரிப்பதற்காக மற்றும் இலங்கையின் பெருந்தோட்டத் தொழில் துறையில் அநுகூலங்களைப் பேணுவதற்காக பெருந்தோட்டத் துணைத்துறையில் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உதவியளித்தல் | 5,200.00 | |
| சுசகன நிதி மற்றும் குத்தகைக் கம்பனி | இல.ரூ | 352.69 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 351.06 | |
| சிறிய வியாபாரங்களை மீள எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | இல.ரூ | 2,656.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 2,663.40 | |
| சிறிய வியாபாரங்களை மீள் எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 150.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 122.72 | |
| தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம் | இல.ரூ | 94.31 | உயர்தர தொழிற்படையை உருவாக்குவதற்காகவும் தேர்ச்சி பொருத்தப்பாடின்மையை நீக்குவதற்காகவும் தேர்ச்சிப் பயிற்சியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்தல் | 94.59 | |
| நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 4.00 | நகரத்திலும் நகர்ப் புறங்களிலும் வசிக்கும் மக்களின் சூழல் வசதிகள், நலம் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துதல் | 369.15 | |
| வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான வீடமைப்பு புகலிடச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 25.00 | நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளைக் கட்ட, புதுப்பிக்க, வாழிடங்களை விரிவாக்க உதவுதல் | 1,362.00 | |
| நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் | சிஎஉ | 15.10 | வீடமைப்பினை முன்னேற்றுவதற்காக குறைந்த வருமான குடியிருப்பாளர்களுக்கு மூலதனத்தினை வழங்குதல் | 1,915.76 | |
| வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 1.80 | செயற்றிட்டப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொருளாதார, சமூக, ஊட்டச்சத்து நலனோம்புகைகளை மேம்படுத்துதல் | 102.76 | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.00 | சிறிய தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தினை நிரந்தரமாக உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்தல் | 249.06 | |
| மத்திய மலைநாட்டு நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | மத்திய மலைநாட்டுப் பகுதியில் நீண்ட காலப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க கடன் வசதி வழங்குதல் | 642.00 | |
| வேளாண்மை புத்தாக்க செயற்றிட்டம் | சிஎஉ | 17.05 | வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் ஐந்து எல்லை மாவட்டங்களிலுமுள்ள சிவில் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கும் சொத்துக்களின் புனரமைப்பிற்கும் உதவுதல் | 843.00 | |
| சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 12.60 | சிறு உடமையாளர் தேயிலை துறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேயிலைக்கான வசதிகளை புனரமைத்தல் | 645.93 | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | யென் | 1,368.00 | வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக முறையான கொடுகடன் வழிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறை யொன்றினை ஏற்படுத்துதல் | 1,402.45 | |
| சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 17.40 | குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே தொழில் உருவாக்கத்தினையும் சேமிப்புப் பழக்கத்தினையும் மேம்படுத்தலும் செலவுச் சிக்கனமானதும் உறுதியானதுமான நுண்பாக கொடுகடன் விநியோக முறைமையை நிறுவுதலும் | 345.69 | |
| கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 1.50 | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளைத் தரமுயர்த்துதல் | 148.00 | |
| தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 27.90 | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழக்கைத் தரத்தினை மேம்படுத்துதல் | 564.00 | |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் பீ | யூரோ | 10.00 | சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளக் கட்டியெழுப்புதல் | 1,553.27 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுசகன | இல.ரூ | 3,000.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,750.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் |
| சுசகன கட்டம் II | இல.ரூ | 500.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 105.54 | |
| வடக்கின் எழுச்சி | இல.ரூ | 2,000.00 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,000.00 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் | இல.ரூ | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவு துறைகளின் நடவடிக்கைகளுக்கு கடன்களை வழங்குதல் | 1,000.00 | |
| வடக்கின் எழுச்சி - கட்டம் II | இல.ரூ | 2,154.25 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில் முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,361.00 | |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,200.00 | நாட்டின் நீண்ட காலப் பயிர்த் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 1,199,82 | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 77.00 | மாத்தளை மாவட்டத்தில் கிராமிய மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துவதற்கும் பண்ணையல்லாத தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்காக நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியங்களை வழங்குவதற்கும் அத்துடன் ஏற்கனவேயிருக்கும் செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கும் | 77.00 | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 100.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 100.00 | |
| கட்டுமானத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | யூரோ | 9.00 | சுனாமிக்குப் பின்னைய மீள்கட்டுமானங்களில் கட்டுமானம் மற்றும் பொதுப் பணிகளில் வினைத்திறனுடன் பங்கேற்பதற்காக தனியார் உள்நாட்டு வியாபாரங்களின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப இயலுமைகளை உறுதிப்படுத்துதல் | 1,399.73 | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் II | இல.ரூ | 70.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 70.00 | |
| சுனாமிக்குப் பின்னைய கரையோர மூலவள முகாமைத்துவச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.09 | சுனாமி அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அவர்களுடைய சொத்துக்களை மீளப்பெறுவதற்கும் அவர்களுடைய வழமையான பொருளாதார நடவடிக்கைகளுக்கான அடித்தளத்தை மீளக்கட்டியெழுப்பும் அதேநேரம் புதிய இலாபமுள்ள வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு பன்முகப்படுத்துவதற்கும் உதவி வழங்குதல் | 190.77 | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) | யென் | 2,381.00 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 3,213.20 | |
| சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சி | இல.ரூ | 250.00 | நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் சித்தியடைந்து பயிற்சிபெற்ற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களைத் தொடங்குவதற்கு நிதியியல் உதவிகளை வழங்குதல் | 232.39 | |
| விஸ்கம் (வேளாண்மைத் துறை அபிவிருத்திக்கான சிறப்புக் கடன் திட்டம்) | இல.ரூ | 1,325.60 | நாட்டில் வர்த்தக வேளாண் வியாபாரத்தின் முதலீடு, பன்முகப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்திற்கான கொடுகடனின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல் | 881.00 | பங்களிக்கும் வங்கிகளால் கட்டாய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் போது நிதியங்கள் திருப்பி அளிக்கப்படும் |
| மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம் | இல.ரூ | 2,900.00 | நாட்டின் சிறிய நடுத்தர தொழில்முயற்சி துறையின் நடுத்தர மற்றும் நீண்ட கால செயற்றிட்டங்களுக்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,900.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் | இல.ரு | 252.95 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்குதல் | 252.95 | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் II | இல.ரு | 1,078.27 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,000.00 | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் III | இல.ரு | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,428.47 | |
| வடக்கு மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் | இல.ரு | 600.00 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரின் போது சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 600.00 | |
| தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஐ.அ.டொலர் | 32.90 | சந்தை/ பெறுமதிச் சங்கிலித் தொடர் அபிவிருத்தியில் நன்மை பெறுநர்களின் வருமானத்தினை அதிகரிப்பதன் மூலம் சிறு உடமை உற்பத்தியாளர்கள் மற்றும் நிலமற்றோரின் குறிப்பாக இளைஞர்களுக்கு உதவியளிப்பதற்கும் தமது வருமானத்தினை மேம்படுத்தும் விதத்தில் தொழில்பெறும் விதத்தில் நிதியினையும் பயிற்சியையும் வழங்குவதற்கும் | 113.13 | |
| சிறிய பெருந்தோட்டத் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம் | சிஎஉ | 2.60 | மொனராகல, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 487.66 | |
| தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - நுண்பாக நிதி | இல.ரு | 1,049.84 | தெரிவு செய்யப்பட்ட செயற்றிட்ட பிரதேசங்களின் வசதி குறைந்தோரின் வருமான மட்டம் மற்றும் சமூக நிலையை முன்னேற்றுதல். | 1,049.84 | |
| தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி மூலதன வேளாண் கடன் திட்டம் | இல.ரு | 135.69 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தித் திறன், தரம் மற்றும் பெறுமதியுயர்வை அதிகரித்தல். | 135.69 | |
| தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி பருவகால வேளாண்மை கடன்திட்டம். | இல.ரு | 302.04 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி, உற்பத்தித் திறன், தரம் மற்றும் பெறுமதியுயர்வை அதிகரித்தல். | 302.04 | |
| அனர்த்தங்களுக்கு பின்னரான பொருளாதார நடவடிக்கைகளை மீளமைப்பதற்கான கடன்திட்டம் | இல.ரு | 134.58 | அண்மைக்கால வெள்ளம் மற்றும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட வியாபாரம்/ சிறிய முயற்சியாண்மைகளின் அனர்த்தத்துக்கு பின்னரான மீளெழுச்சி இயலுமைக்கு, தேவையான நிதியினனை வழங்குவதன் மூலம் அவர்களின் வியாபாரத்தை/ வருமானமீட்டும் நடவடிக்கைகளை மீளஆரம்பிப்பதற்கு கடன்பெறுநர்களுக்கு (தனிநபர்/குழுக்கள்) உதவியளித்தல் | 134.58 | |
| “தருண திரிய” இளைஞர்களுக்கு வலுவளித்தல் மற்றும் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | இல.ரு | 288.48 | முயற்சியாண்மையாளர்களை உருவாக்குவதற்கும் சிறிய வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கும் மற்றும் ஏனைய வடிவங்களிலான சுயமுயற்சி செயற்றிட்டங்களை ஆரம்பிக்கவும் கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் கிராம மட்டத்திலான வசதி குறைந்த இளையோரின் வாழ்வினை மேம்படுத்தல் | 288.48 | |
| வறண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 252.90 | அநுராதபுரம், மொனராகலை, குருநாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமான மீட்டும் நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல். | 252.89 | |
| சிறிய வேளாண்மையாளர்கள், நிலமற்றோர் கொடுகடன் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 345.69 | சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் சிறு அளவு வேளாண்மையல்லா கிராமிய தொழில்முயற்சி நிறுவனங்களினாலும் வேளாண்மை உற்பத்தியை செறிவுபடுத்துவதற்கு ஊக்குவித்தல். | 1,564.75 | |

நடைபெற்று வரும் செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தரவாதங்கள் மற்றும் காப்பீடுகள் | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 1,100.00 | நாட்டின் தேயிலைத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 964.87 | | | |
| சுவசக்தி கடன் திட்டம் | இல.ரு | 4,000.00 | புதிய மற்றும் தற்போதுள்ள முயற்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதனூடாக வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் | 2,146.78 | | | |
| “அத்வெல” - அனர்த்தங்களால்ப் பாதிக்கப்பட்ட இடங்களில் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் | இல.ரு | 2,000.00 | இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டவாறு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைக்க தகுதி வாய்ந்த உபகடன் பெறுநர்களுக்கு நிதியியல் வசதிகளை வழங்குதல் | 100.00 | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் மீள் நிதியிடல் (பிரபோதினி) | இல.ரு | 1,031.00 | முறைமையான கடன் வசதியைப் பெற்றுக் கொள்ள முடியாத, கிராமிய வறியோரால் நடாத்தப்படும் வருமானமீட்டும் செயற்பாடுகளுக்கு வினைத்திறன் வாய்ந்த கடன்வழங்கும் முறைமையை உருவாக்க உதவுதல் | 4,301.45 | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) - சுழலும் நிதி | இல.ரு | 2,764.84 | வறியோர்களின் வருமான மட்டத்தை மேம்படுத்துதல் மற்றும் வருமானமீட்டும் செயற்பாடுகளுக்கு கடன்களை வழங்குவதன் மூலம் முறையான நிதிச் சேவைகளின் உள்ளடக்கத்தை மேம்படுத்தல். | 6,680.66 | | உத்தரவாதமோ காப்பீடோ இல்லை | தொடர்பான அனைத்து தரப்பினர்களினதும் உடன்படிக்கையில்லாமல் உடன்படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப்படவோ இரத்துச் செய்யப்படவோ மாட்டாது. |
| சௌபாக்கிய கடன் திட்டம் | இல.ரு | 22,875.47 | நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகள் மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வழங்குதல் | 22,875.47 | பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காகக அட்வணையிடப்பட்ட திகதியின் படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல். | | |
| சுய தொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு - கட்டம் II | இல.ரு | 225.00 | தேசிய தொழிற் பயிற்சி தகைமையின் சான்றிதழை அல்லது டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு நிதி உதவியை வழங்குதல் | 224.66 | | | |

## 52. அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களைச் சீர்செய்தல் அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதாயுள்ள திடமான நிகழ்வுகள் எதுவும் நிதி அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் நடைபெறவில்லை.

## 2. வங்கி மேற்பார்வை

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வங்கிகளைத் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து, காலாந்தரப் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக நாணய விதிச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க நிறுவப்பட்டது. மேலும், உரிமம் பெற்ற வங்கிகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை, திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆளப்படுகின்றன.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக முன்மதியுடைய ஒழுங்குவிதிகளையும் வழிகாட்டல்களையும் விடுத்தல், தேவையானவிடத்து நாணயச் சபையின் ஒப்புதலுடன் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான ஒப்புதல்களை வழங்குதல், உரிமம் பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வையினையும் காலாந்தரப் பரீட்சிப்புக்களையும் மேற்கொள்ளுதல் மற்றும் வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வினையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புதல் என்பன விளங்குகின்றன. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் தொழிற்பாடுகளையும் நிருவகித்து வருகின்றது.

2017இன் இறுதியிலுள்ளவாறு, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வரம்பிற்குள் 25 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 7 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் 2 பிரதிநிதித்துவ அலுவலகங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. உரிமம் பெற்ற வங்கிகளினதும் பிரதிநிதித்துவ அலுவலகங்களினதும் பட்டியல் இணைப்பு ஐஇல் தரப்பட்டுள்ளது.

2017இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளும் நடவடிக்கைகளும் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 2.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை விடுத்தல்

உரிமம் பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன. முக்கிய முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

**அ. உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக் கடன் விகிதம்**

உந்து ஊர்திகளின் கொள்வனவிற்காக வங்கித்தொழில் துறையில் காணப்படும் மிகையான கொடுகடனைக் கட்டுப்படுத்துமொரு முன்மதியுடைய வழிமுறையாக உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்பாட்டிற்காக கொடுகடன்களை வழங்குகின்ற போது பெறுமதிக்கான கடன் விகிதத்தினைப் பேணுமாறு வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பில் பயன்படுத்தக்கூடிய ஊர்திகளின் மதிப்பீடு, விளக்கங்கள் மற்றும் உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊர்தி வகுப்புக்களின் வகைப்படுத்தல் என்பனவற்றின் அடிப்படைகள் பற்றி அறிவிக்கப்பட்டன.

**ஆ. வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் நடைமுறைப்படுத்தல் - 2017**

அடையாளம் காணப்பட்ட துறைகளுக்கு அதாவது வேளாண்மை, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள், ஏற்றுமதிகள், சுற்றுலா, இளைஞர் மற்றும் மகளிர் என்பனவற்றிற்குக் கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களை அதிகரிப்பதற்கும் 2017 வரவு செலவுத்திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட தேசிய கொள்கையுடன் இணைந்து செல்லும் விதத்தில் வங்கித்தொழில் பணிகளை உயர்த்துவதற்கும் தேவையான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துமாறு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

**இ. உரிமம் பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட அடகுபிடித்தல் நிபந்தனைகளுக்கான திருத்தம்**

தங்கக் கடத்தலை ஒழிக்கும் வழிமுறையொன்றாக, உரிமம் பெற்ற வங்கிகள் ஏலங்களில் கொள்வனவு செய்கின்ற தொகை வடிவிலான தங்க ஆபரணங்களின் விபரங்களை அறிக்கையிடுமாறு தேவைப்படுத்தப்பட்டன.

**ஈ. கொடுகடன் சாதனங்கள் மீதான வட்டி வீதங்கள்**

உரிமம் பெற்ற வங்கிகள் கொடுகடன் சாதனங்களின் மீது அவற்றின் கொள்கைகளுக்கேற்ப வட்டி வீதங்களை விதிப்பதற்கு அனுமதிக்கப்பட்டதுடன், அத்தகைய வட்டி வீதங்களைக் கணித்தல் மற்றும் தண்ட வட்டி வீதங்கள், ஏதேனுமிருப்பின் அவற்றின் அடிப்படையில், அத்தகைய வீதங்களை 2017 யூலை 01 இலிருந்து பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

**உ. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்பான சலுகைகள்**

தேசிய நலன் கருதி பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் வியாபாரம் மற்றும் வழமையான தொழிற்பாடுகளின் புனரமைப்பிற்கு வசதியளிப்பதற்காக பின்பற்றப்பட்ட தேசிய கொள்கையின் நியதிகளில் வெள்ளம், மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் அதனுடன் இணைந்த சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு உரிமம் பெற்ற வங்கிகள் ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையில் சலுகைகளை வழங்குமாறு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டன.

**ஊ. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம்**

2018 கலண்டர் ஆண்டிற்கான உரிமம் பெற்ற வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம், 2017 இறுதியிலுள்ளவாறு உரிமம் பெற்ற வங்களின் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டன.

**எ. குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை உயர்த்துதல்**

வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை வலுப்படுத்தும் பொருட்டும் இலங்கையில் பாசல் III கட்டமைப்பின் நடைமுறைப்படுத்தலுக்கு ஆதரவளிக்கும் பொருட்டும் உரிமம் பெற்ற வங்கிகள் குறைந்தபட்ச மூலதனத்தினை உயர்த்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

இதன்படி, தற்போது உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் 2020 திசெம்பர் 31 அளவில் ரூ.20 பில்லியனையும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள ரூ.100 பில்லியன் வரையிலான சொத்துக்களைக் கொண்டுள்ள வங்கிகள் ரூ.5 பில்லியனையும் ரூ.100 பில்லியனக்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்டுள்ளவை ரூ.10 பில்லியனையும் பேண வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டன. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் ரூ.7.5 பில்லியனைப் பேண வேண்டும்.

மேலும், உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் ரூ.20 பில்லியனையும் உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் ரூ.7.5 பில்லியனையும் நுழைவின் போது கொண்டு வரப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகள் ரூ.10 பில்லியன் மூலதனத்தினைக் கொண்டு வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டன.

**ஏ. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகளுக்கான நிதியியல் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள்**

2018 சனவரி 01 தொடக்கம் உரிமம் பெற்ற வங்கிகள் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களின் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேலும் வலுப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

**ஐ. வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்**

2018 சனவரி தொடக்கம் உரிமம் பெற்ற வங்கிகள், வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேலும் பலப்படுத்தும் பொருட்டு, வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் தொடர்பான புதிய கொள்கைகளுக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீதான வரையறைகள் வங்கிகளின் வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடல் மற்றும் மூலதனப் போதுமை விகிதம் என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு கணிக்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மொத்தச் சொத்துக்களின் குறிப்பிட்ட சதவீதத்துடன் இணைக்கப்பட்டிருந்தன.

**2.2 நாணயச் சபையினால் வழங்கப்பட்ட ஒப்புதல்கள்**

**(அ) உரிமம் பெற்ற வங்கிகளின் கிளைகள், ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள் மற்றும் பிரதிநிதித்துவ அலுவலகங்கள்**

இவ்வாண்டுப் பகுதியில் 704 ஒப்புதல்கள் செயன்முறைப்படுத்தப்பட்டு 662 ஒப்புதல்கள் வழங்கப்பட்ட வேளையில் முன்மதியுடைய காரணங்களுக்காக 42 கோரிக்கைகள் பிற்போடப்பட்டன அல்லது நிராகரிக்கப்பட்டன (அட்டவணை 1). இதற்கமைய 2017 இறுதியில் 3,560 வங்கிக் கிளைகளும் 3,059 மாணவர் சேமிப்பு அலகுகளும் 4,416 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் தொழிற்பாட்டிலிருந்தன. அதேவேளை மாலைதீவில் துணை நிறுவனமொன்றினைத் திறப்பதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வேளையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றாகத் தொழிற்படுவதற்குக் கிளையொன்றினை நிறுவுவதற்கு பாங் ஒவ் சீனாவிற்குத் தற்காலிக ஒப்புதல் கடிதமொன்றும் பிரதிநிதித்துவ அலுவலகமொன்றினைத் திறப்பதற்கு டோகா கியூபிஎஸ்சி இற்கு ஒப்புதலும் வழங்கப்பட்டன. வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநிதித்துவ அலுவலகங்கள் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பரப்புடன் கூடிய நடவடிக்கைகளுக்காக நிறுவப்படுவதுடன் அவை வங்கித்தொழில் வியாபாரங்களை மேற்கொள்ள முடியாது. அவர்களது நடவடிக்கைகள் இலங்கைக்கும் அத்தகைய வங்கிகளின் தாய்நாட்டிற்குமிடையிலான ஒத்துழைப்பினை உயர்த்துவது போன்ற துறைகளில் கவனம் செலுத்துவதிலும் இலங்கைக்கும் அவ்வங்கிகள் ஏற்கனவே பிரசன்னத்தினைக் கொண்டுள்ள நாடுகளுக்கிடையில் வர்த்தகம் மற்றும் முதலீடுகளுக்கு வசதியளிப்பதிலும் பொருளாதார ஒத்துழைப்பு அபிவிருத்தியிலும் முக்கிய கவனத்தினைக் கொண்டுள்ளன.

**அட்டவணை II - 1**

**கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள் தொடர்பான ஒப்புதல்கள்**

| ஒப்புதல்களின் வகைகள் | ஒப்புதல்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | செயன்முறையிலுள்ளவை | வழங்கப்பட்டவை |
| **திறத்தல் மற்றும் நிறுவுதல்** | | |
| கிளைகள் | 105 | 75 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் | 142 | 136 |
| மாணவர் சேமிப்பு அலகுகள் | 143 | 143 |
| காசு வைப்பு இயந்திரங்கள் | 31 | 30 |
| நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் ஊர்திகள் | 113 | 113 |
| செல்லிடத் தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மற்றும் காசு வைப்பு இயந்திரங்கள் | 4 | 4 |
| **வேறிடத்தல் அமைத்தல்** | | |
| கிளைகள் | 95 | 93 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் | 7 | 6 |
| **கிளைகள் மற்றும் ஏனைய பணி நிலையங்களுக்காக வழங்கப்பட்ட ஒப்புதல்களை மூடிவிடுதல் மற்றும் இரத்துச் செய்தல்** | 64 | 62 |
| **மொத்தம்** | **704** | **662** |

**(ஆ) ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்**

2017ஆம் ஆண்டுப்பகுதியில் உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகள், அடுக்கு 2 மூலதனத்தில் தொகுதிக் கடன்களை உள்ளடக்குதல், பங்குடைமையில் பொருண்மிய ஈடுபாடுகளைக் கையேற்றல், கடன்வழங்கலின் உயர்ந்தபட்சத் தொகையினை விஞ்சுதல், புதிதாக நியமிக்கப்படுகின்ற/ தொடர்ந்துமிருக்கின்ற பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரின் நியமனத்திற்கான பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடல், சந்தைப் பெறுமதிக்கும் குறைவாக சொத்துக்களை விற்றல், குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல், வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கைவிடப்பட்ட சொத்துக்களின் பணத்தினை மீளச்செலுத்துதல் என்பன தொடர்பில் மொத்தமாக 437 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

**2.3 தொடர்ச்சியாக மேற்பார்வையினை நடத்துதல்**

(அ) தொடர்ச்சியான மேற்பார்வை என்பது தனிப்பட்ட வங்கிகளின் அலுவல்கள் மீது இடம்பெற்று வருகின்ற கண்காணிப்புப் பொறிமுறையாக இருப்பதுடன் இது முழு வங்கித்தொழில் தொழில்துறையினதும் தொழிற்பாட்டுக்கு வினைத்திறனையும் நீண்ட கால உறுதிப்பாட்டுத் தன்மையினையும் கண்டறிவதற்கானதொரு நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் முறைமையாகவும் செயற்படுவதுடன் தேவையானவிடத்து சரிசெய்யும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதனையும் இயலச் செய்கிறது.

(ஆ) வெப்பினைத் தளமாகக் கொண்ட பின்நெட் முறைமையினூடாக வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் மற்றும் செயலாற்றத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான மேற்பார்வை நடத்தப்பட்டது. பின்நெட் ஊடாக நிதியியல் மற்றும் முன்மதியுடைய தகவல்களை உள்ளடக்கிய விதத்தில் ஒவ்வொரு வங்கிக்காகவும் ஏறத்தாழ 69 நிதியியல் கூற்றுக்கள் மாதாந்த/காலாண்டு வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 18 கூற்றுக்கள் கைகளினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. சிறந்த அறிக்கையினைத் தயாரிப்பதற்கு வசதியளிக்கும் விதத்தில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் ஆலோசனையுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் பேணப்பட்ட தரவுத் தளத்தினைத் திருத்தும் செயற்பாடுகள் 2017இலும் தொடர்ந்தது. இது தொடர்பில், ஏற்கனவேயிருந்த 30 பின்நெட் கூற்றுக்களைத் திருத்துவதற்கு இறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 179 புதிய கூற்றுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டும் வங்கித்தொழில் மேற்பார்வைத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட புதிய வங்கித்தொழில் சட்டத்துடன் இணங்கியொழுகும் விதத்தில் 2 கூற்றுக்கள் பின்நெட் முறைமைகள் திருத்தப்பட்டுமுள்ளன. மேலும், வங்கிகளின் நியதிப் பரீட்சிப்புக்களின் போது அடையாளம் காணப்பட்ட மேற்பார்வைக் கரிசனைகளைக் குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்குள் கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் காலாண்டு அடிப்படையில் கண்காணிக்கப்பட்டன.

(இ) வங்கிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைச் செயன்முறையில், கட்டுமானத் துறைக்கான வங்கித்தொழில் கடன்கள், வங்கித்தொழில் துறையில் கொடுகடன் வளர்ச்சி மற்றும் வங்கித்தொழில் தொழில் துறையில் துறையின் செறிவு, வங்கித்தொழில் தொழில் துறையின் வைப்பு விகிதத்திற்கான கொடுகடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடன் சுமை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் மற்றும் வங்கித்தொழில் கைத்தொழில் செயலாற்றத்தின் மீதான காலாண்டு அறிக்கைகள் என்பன தொடர்பில் சிறப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ஈ) 2017ஆம் ஆண்டுப்பகுதியில் கடன் வட்டி வீதங்கள், மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்கள், கொடுகடன் அட்டைகள், அடகுபிடித்தல் தொழிற்பாடுகள், வங்கித்தொழில் தவறான நடத்தைகள் மற்றும் மோசடிகள், அதிகாரமளிக்கப்படாத நிதியங்களின் எடுப்பனவுகள் மற்றும் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் விதிப்புக்கள் மற்றும் கட்டணங்கள் தொடர்பில் குறைப்புக்களை எதிர்பார்த்தல் என்பன தொடர்பாக ஏறத்தாழ 820 வாடிக்கையாளர் முறைப்பாடுகள் கையாளப்பட்டன. மேலும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் வைத்திருக்கப்பட்ட மூத்த பிரசைகள் நிலையான வைப்புக்கள் மீதான வட்டியின் மீளச்செலுத்தல் தொடர்பான தகவல்களைச் சேகரித்து காலாண்டு அடிப்படையில் நிதி மற்றும் பொதுசன ஊடக அமைச்சிற்குச் சமர்ப்பிப்பதற்கு வசதயளித்தல்.

(உ) 2015இலிருந்து 2017 வரையான வங்கித்தொழில் துறையின் செயலாற்றத்தின் சுருக்கம் கீழேயுள்ள அட்டவணை 2இல் தரப்பட்டுள்ளது. விபரமான மதிப்பீடுகள் அத்தியாயம் 8இல் நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் முறைமை உறுதிப்பாட்டில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II-2**

**வங்கித்தொழில் துறையின் முக்கிய அம்சங்கள்**

| விடயம் | முடிவில் | | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 2015(அ) | 2016(அ) | 2017(ஆ) | 2015/16 | 2016/17 |
| **துறைக் குறிகாட்டிகள் (ரூ. பில்)** | | | | | |
| மொத்தச் சொத்துக்கள் | 8,077 | 9,047 | 10,293 | 12.0 | 13.8 |
| மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 4,715 | 5,541 | 6,431 | 17.5 | 16.1 |
| மொத்த முதலீடுகள் | 2,348 | 2,271 | 2,554 | (3.3) | 12.5 |
| மொத்த வைப்புகள் | 5,403 | 6,296 | 7,399 | 16.5 | 17.5 |
| மொத்தக் கடன்பாடுகள் | 1,758 | 1,696 | 1,607 | (3.5) | (5.3) |
| மொத்த மூலதனம் | 661 | 790 | 871 | 19.5 | 10.2 |
| தேறிய இலாபம் (வரிக்குப் பின்னர்) | 97 | 116 | 139 | 19.9 | 19.2 |
| **வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய பணி நிலையங்கள்** | | | | | |
| கிளைகளின் எண்ணிக்கைகள் | 3,452 | 3,524 | 3,560 | வி.கி | வி.கி |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் எண்ணிக்கை | 3,535 | 3,851 | 4,416 | வி.கி | வி.கி |
| **முன்மதியுடைய விகிதங்கள் (சதவீதத்தில்)** | | | | | |
| மூலதனப் போதுமை விகிதம் | 15.4 | 15.6 | 15.2 | வி.கி | வி.கி |
| நியதி திரவச் சொத்து விகிதம் | 33.9 | 29.9 | 31.3 | வி.கி | வி.கி |
| செயற்படாக் கடன்களின் விகிதம் | 3.2 | 2.6 | 2.5 | வி.கி | வி.கி |
| பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் | 16.2 | 17.3 | 17.6 | வி.கி | வி.கி |
| சொத்துக்கள் மீதான வருவாய் | 1.9 | 1.9 | 2.0 | வி.கி | வி.கி |

(அ) திருத்தப்பட்டது (ஆ) தற்காலிகமானவை

**2.4 காலாந்தரப் பரீட்சிப்புக்களை நடத்துதல்**

(அ) முன்னைய ஆண்டின் தொடர்ச்சியாக இடம்பெற்ற 06 பரீட்சிப்புக்கள் உட்பட 2017ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 38 பரீட்சிப்புக்களை நடத்தியதுடன் தொடர்பான வங்கிகளின் முகாமைத்துவத்துடன் இடம்பெற்ற வழமையான கலந்துரையாடல்களின் மூலமாக 2017இல் 33 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் நிறைவடைந்து நாணயச் சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் 05 பரீட்சிப்புக்கள் முற்றுப்பெறும் நிலையில் இருக்கின்றன. பரீட்சிப்புக்களின் போது எழுந்த முக்கிய கரிசனைகள் குறைந்த மூலதனமயமாக்கல் மற்றும் குறைந்த வினைத்திறன், கம்பனி ஆளுகை மற்றும் முகாமைத்துவம் தொடர்பான குறைபாடுகள், செயற்படாக் கடன்கள் பற்றிய குறைவான மதிப்பீடுகள் மற்றும் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான குறைந்த ஏற்பாடுகள் மற்றும் திறைசேரி தொழிற்பாடுகள் தொடர்பான கரிசனைகளை உள்ளடக்கியிருந்தன. மேலும், பல பரீட்சிப்புக்கள் ஆவணச் சரிபார்ப்புக்கள், அரச பிணையங்களிலான முதலீடுகள், கம்பனி ஆளுகை, வாடிக்கையாளர் முறைப்பாடுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் காசு செயன்முறைப்படுத்தல் மற்றும் ஒழுக்கவியலற்ற வியாபார நடைமுறைகள் ஆகிய துறைகளின் மீது மட்டுப்படுத்தப்பட்டளவில் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கிகளின் வினைத்திறன் மற்றும் உறுதிப்பாட்டுத்தன்மைக்குக் காரணமான கணியம்சார் மற்றும் தரம்சார் இணைப்பினை அடிப்படையாகக் கொண்டு உரிமம் பெற்ற வங்கிகளின் தரத்தினை வழங்குவதற்கான உள்ளக முறையியல் அபிவிருத்தி செய்வதற்காக 2017இல் செயன்முறையினை ஆரம்பித்திருக்கிறது. இந்நோக்கத்திற்காக, இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைக்கு வசதியளிப்பதற்காக வங்கி உறுதிப்பாட்டுத்தன்மை தரமிடல் குறிகாட்டி மாதிரியொன்று பின்பற்றப்படும். இதற்கமைய, இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் கீழ், வங்கிகளின் தலத்திலான பரீட்சிப்புக்களை வலுப்படுத்துமொரு பகுதியாக வங்கி மேற்பார்வைத் திணைக்களம், ஒவ்வொரு வங்கியுடனும் சேர்ந்த இடர்நேர்வுகளின் அடிப்படையிலமைந்த பரீட்சிப்புக்களின் கால இடைவெளி மற்றும் செயற்பரப்பினை தீர்மானிப்பது தொடர்பில் வங்கிகளை வகைப்படுத்துவதற்கான கட்டமைப்பொன்றினைப் பின்பற்றும்.

**2.5 இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினை நிருவகித்தல்**

(அ) 2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு, திட்டமானது 76 உறுப்பு நிறுவனங்களையும் ஏறத்தாழ ரூ.44 பில்லியன் பெறுமதியான மொத்த நிதியையும் (கணக்காய்வு செய்யப்படாதது) உள்ளடக்கியிருந்தது. 2017 திசெம்பர் 31இல் உற்றவாறு நிதியத்தினால் அரச பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மற்றும் 2014 ஆண்டு காலப்பகுதியில் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தின் கீழ் மீள்சீரமைப்பிற்காக ஒரு உறுப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் என்பவற்றின் ஏட்டுப்பெறுமதிகள் முறையே ரூ.39.6 பில்லியானவும் ரூ.6.1 பில்லியனாகவும் காணப்பட்டது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் நிதியியல் தொடர்பான முக்கிய விடயங்கள் கீழே அட்டவணை 03இல் தரப்பட்டுள்ளன.

(ஆ) உடனடியாக முற்போந்த நிதியாண்டின் இறுதியில் 14 சதவீதம் அல்லது அதற்கு மேலான மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணிய உரிமம் பெற்ற வங்கிகள் அனைத்துத் தகுதியான வைப்புக்களின் மொத்தத் தொகையின் மீதும் ஆண்டொன்றிற்கு 0.10 சதவீதமான கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்டதுடன் ஏனைய அனைத்து வங்கிகளுக்கும் ஆண்டொன்றிற்கு 0.125 சதவீதக் கட்டுப்பணம் விதிக்கப்பட்டது. உரிமம்பெற்ற நிதிக்

கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான கட்டுப்பணம் ஆண்டொன்றிற்கு 0.15 சதவீதமாக இருந்தது. ஆண்டு காலப்பகுதியில் உறுப்பு நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டுப்பணம் மற்றும் தண்டப் பணத்தின் பெறுமதி ரூ.8.1 பில்லியனாக இருந்தது.

(இ) 2018 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் நிறுவனமொன்றுக்கு வைப்பாளர் ஒருவருக்கான வைப்புக் காப்புறுதிப் பாதுகாப்பு ரூ.300,000 இலிருந்து ரூ.600,000 இற்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

**அட்டவணை II-3**

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் நிதியியல் தொடர்பான முக்கிய விடயங்கள்**

| விடயம் | தொகை ரூ. மில் | |
|---|---|---|
| | 31.12.2016 இல் உள்ளவாறு | 31.12.2017(அ) இல் உள்ளவாறு |
| நிதியத்தின் அளவு | 34,257 | 44,141 |
| மொத்த வருமானம் | 9,593 | 12,115 |
| மொத்தச் செலவு | 753 | 2,230 (ஆ) |
| ஆண்டுக்கான இலாபம் (வரிக்கு முன்னர்) | 8,839 | 9,884 |
| அரச பிணையங்களிலான முதலீடுகள் | 25,700 | 39,646 |
| கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | 6,179 | 6,129 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்க ஒதுக்குகள் | (665) | 2,392 |

(அ) தற்காலிகமானவை (ஆ) வரிகள் உட்பட

(ஈ) 2018 சனவரி 01ஆம் நாளிலிருந்து திட்டமானது புதிதாக உருவாக்கப்பட்ட தீர்மானித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தின் கீழ் தொழிற்படுத்தப்பட்டு வருகின்றது.

### 2.6 வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வு மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல்

#### (அ) இயலளவைக் கட்டியெழுப்புதல்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித்தொழில் துறையின் இயலாற்றலைக் கட்டியெழுப்புவதற்கான அதன் பங்களிப்பினை தொடர்கின்ற விதத்தில், இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலைத்திலும் ஏனைய வெளிவாரி நிறுவனங்களிலும் நடைபெறுகின்ற கம்பனி ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம், வங்கித்தொழில் வியாபாரம் மற்றும் சட்டம் மற்றும் வங்கித்தொழில் மற்றும் நிதியுடன் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்தி போன்ற துறைகளை உள்ளடக்கிய பல்வேறுபட்ட தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் ஆய்வரங்குகளிலும் பங்குபற்றுவதற்காக மூலவள ஆட்களை வழங்கியிருக்கின்றது.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்களது இயலாற்றலைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் 2017இலும் தொடர்ந்ததுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்கள அலுவலர்கள் இடர்நேர்வு முகாமைத்துவம், பாசல் III நியமங்கள், அழுத்தப் பரீட்சிப்பு, பின்டெக், சைபர் பாதுகாப்பு, நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள், ஒன்று திரண்ட மேற்பார்வை போன்ற துறைகளில் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றனர்.

#### (ஆ) வங்கிகளுடனான கூட்டங்கள்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான ஆளுநரின் கூட்டங்களுக்கான செயலகமாகத் தொடர்ந்தும் பணியாற்றியதுடன் இது இலங்கைப் பொருளாதாரம் மற்றும் வங்கித்தொழில் துறை போன்றவற்றின் அபிவிருத்திகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை முன்னேற்றங்களுடன் தொடர்புபட்ட விடயங்களில் மத்திய வங்கியும் வங்கித்தொழில் துறைக்குமிடையில் கலந்துரையாடல்களை உருவாக்குவதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. உரிமம் பெற்ற வங்கிகள் தீர்மானமெடுப்பதற்கு வசதியளிக்கும் விதத்தில் வங்கித்தொழில் துறையின் செயலாற்றம், உள்நாட்டு மற்றும் உலகளாவிய ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்பில் ஏற்படும் அபிவிருத்தி மற்றும் பொருளாதார, நாணய அபிவிருத்திகள் என்பனவற்றை உயர்த்தும் பொருட்டு வங்கித் தலைவர்களுடன் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

பொருத்தமான மேற்பார்வை மற்றும் திருத்த நடவடிக்கைகள் சரியான நேரத்தில் நடைமுறைக்கிடப்படுவது என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களில் கலந்துரையாடுவதற்காக சபை நியமித்த வங்கிகளின் குழுக்களுடன் கிரமமான முறையில் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேற்பார்வைக் கட்டமைப்பினையும் முறைமையின் உறுதித்தன்மையினையும் வலுப்படுத்துவதற்காக துணை ஆளுநரைத் தலைவராகக் கொண்ட சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்களுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்துடன் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் புதிய இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களைப் பின்பற்றுவது தொடர்பில் தேவையான தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் பெற்றுக்கொள்வதற்கு வங்கிகளுக்கு வசதியளித்தது.

நிதியியல் முறைமை அவற்றின் அதிகாரவரம்பிற்குள் வரும் அவற்றின் வினைத்திறன், ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக உறுப்பு நிறுவனங்களிடையேயான ஒத்துழைப்பிற்கு வசதியளிக்கும் விதத்தில் மைய நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்தும் தலைவர்களை உள்ளடக்கிய நிதியியல் துறை மேற்பார்வைக் குழுவின் கூட்டமொன்றினை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஒழுங்குசெய்தது. மேலும், உரிமம் பெற்ற வங்கிகளின் உறுதிப்பாட்டினை மதிப்பிடுவதற்கான ஒத்துழைப்பு சார்ந்த அணுகுமுறை பற்றி கலந்துரையாடுவதற்காக சபைக் கணக்காய்வுக் குழுக்களின் தலைவர்களுடனும் உரிமம் பெற்ற வங்கிகளின் கணக்காய்வாளர்களுடனும் கூட்டமொன்று நடத்தப்பட்டது. மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பாசல் ஐஐஐ மூலதன ஒழுங்குவிதிகள் தொடர்பில் பத்திரிகையாளர்கள், இடர்நேர்வு தொழில்சார் நிபுணர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுடன் ஒன்றிலொன்று சார்ந்த கூட்டத் தொடர்களை நடத்தியதுடன் நிதியியல் இடர்நோவு அல்லாத மற்றும் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக மேற்பார்வை கலந்துரையாடலிலும் பங்கேற்றது.

#### (இ) பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

2017ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைந்து பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்களைக் கொண்ட நிறுவனங்களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதன் ஆபத்து என்பன தொடர்பில் 15 விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தியதுடன், இது தொடர்பில் சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களினூடாகவும் பொதுமக்களுக்கு அறிவூட்டப்பட்டது.

### இணைப்பு II-1
### உரிமம் பெற்ற வங்கிகளின் பட்டியல்

| | |
|---|---|
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்** | |
| 1. | அமானா பாங்க் பிஎல்சி |
| 2. | அக்சிஸ் பாங்க் லிமிடெட் |
| 3. | இலங்கை வங்கி |
| 4. | கார்கில்ஸ் பாங்க் லிமிடெட் |
| 5. | சிற்றி பாங்க் என்.ஏ |
| 6. | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி |
| 7. | டொயிஷ் பாங்க் ஏஜி |
| 8. | டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி |
| 9. | ஹபீப் பாங்க் லிமிடெட் |
| 10. | அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி |
| 11. | ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட் |
| 12. | இந்தியன் பாங்க் |
| 13. | இந்தியன் ஓவசீஸ் பாங்க் |
| 14. | எம்சிபி பாங்க் லிமிடெட் |
| 15. | நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி |
| 16. | நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி |
| 17. | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி |
| 18. | மக்கள் வங்கி |
| 19. | பப்ளிக் பாங்க் பெர்காட் |
| 20. | சம்பத் பாங்க் பிஎல்சி |
| 21. | செலான் பாங்க் பிஎல்சி |
| 22. | ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க் |
| 23. | ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா |
| 24. | த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் |
| 25. | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** | |
| 26. | இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி |
| 27. | லங்காபுத்ர டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட் |
| 28. | தேசிய சேமிப்பு வங்கி |
| 29. | பிரதேசிய சங்வர்த்தன பாங்க் |
| 30. | சணச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி |
| 31. | அரச ஈட்டு முதலீட்டு வங்கி |
| 32. | சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட் |
| **வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநிதித்துவ அலுவலகங்கள்** | |
| 1. | ஜேபி மோர்கன் ஷேஷ் வங்கி என் ஏ |
| 2. | பாங்க் ஒவ் டோக்கியோ - மிற்சுபிசி யூஎவ்ஜே லிமிடெட் |

## 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம்

இலங்கை மத்திய வங்கியின் பயிற்சிக்கான ஒரு மையமான வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்திடம் இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதித் துறையின் மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்படி, வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையமானது, மத்திய வங்கியின் அலுவலர்கள் உள்ளடங்களாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியியல் துறை வல்லுனர்களால் விருத்தி செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகள் ஆகியவற்றை வடிவமைத்து வழங்குகிறது.

2017 ஆண்டு காலப்பகுதியில், நிதித் துறையின் கேள்விகளை நிறைவேற்றும் முகமாக வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையமானது வர்த்தக வங்கித்தொழில் செயற்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவமும் இணக்குவிப்பும், திறைசேரி தொழிற்பாடுகள், கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவம், கொடுகடன் முகாமைத்துவம், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை, அபிவிருத்தி வங்கித்தொழில், ஆராய்ச்சி மற்றும் தரவு பகுப்பாய்வு, பொருளாதாரம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மனித வளங்கள் ஆகிய பரப்புக்கள் உள்ளடங்களான பரந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கியிருந்தது.

2017 ஆம் ஆண்டில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையமானது 54 கலண்டர் நிகழ்ச்சித்திட்டங்கள், 41 சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், 3 சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள், 4 சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்கள், 4 பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 9 பகிரங்க விரிவுரைகளின் வடிவத்திலான அறிவு பகிர்வு நிகழ்வுகள் ஆகியவற்றை நடாத்தியது. சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்கள் பன்னாட்டு நணய நிதியம் மற்றும் தென் கிழக்கு ஆசிய மத்திய வங்கிகள் நிலையம் என்பவற்றுடன் இணைந்து வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. மேலதிகமாக, பிரதேச அலுவலகங்கள் மற்றும் பிரதேச அலுவலக கண்காணிப்புத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து 11 பிரதேச அளவிலான கருத்தரங்குகள் மற்றும் 12 சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. மேலும், 2017 இல் உயர்தரத்திற்கு தோற்றும் மாணவர்களை இலக்காகக் கொண்டு "தக்சிலாவ" மற்றும் "அறிவூற்று" என்ற தலைப்பில் இரண்டு தொலைக்காட்சித் தொடர்கள் வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்தின் கண்காணிப்பில் ஒளிபரப்பப்பட்டது.

இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் டச் புண்டேஷ் வங்கியில் ஆகியவற்றிலிருந்து இருந்து பெறப்பட்ட சர்வதேச நிபுணர்களின் உதவியுடன் மத்திய வங்கியின் ஊழியர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய 5 சிறப்பாக வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையமானது மத்திய வங்கியின் மனித மூலதனத்தின் திறனை அதிகரிக்க சிறப்பு முயற்சிகள் எடுத்தது. மேலும், வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையமானது 2016 பிற்பகுதியில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட முகாமைத்துவ பயிற்சியாளர்கள் மற்றும் வங்கி உதவியாளர்களுக்கு சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது.

2017 ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட்ட 148 நிகழ்ச்சித்திட்டங்களில், நேபாளம், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவுகள், இந்தோனேசியா, மலேசியா, பப்புவா நியூ கினியா, கொரியா, கம்போடியா, மியான்மர், புருனே, சீசெல்ஸ் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து 126 வெளிநாட்டு பிரதிநிதிகள் உள்ளடங்களாக 6,000 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையமானது அதன் திட்டங்கள் மற்றும் சேவைகளின் தரநிலைகளை மேம்படுத்தும் நோக்குடன், நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பின்னரான விரிவான மற்றும் ஆழமான மதிப்பீட்டு செயல்முறையை மேற்கொண்டதுடன் தொடர்ச்சியாக தனது சேவைகளை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையமானது 2017 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், நிதித் துறைக்கான தற்போதைய மற்றும் எதிர்கால பயிற்சி தேவைகளை கவனமாக மதிப்பிட்டு தொடர்ச்சியான முன்னேற்றங்களைக் கொண்ட அதன் திட்டங்களின் அனைத்து அம்சங்களிலும் உயர்ந்த தரநிலைகளை பேணி 2018 ஆம் ஆண்டிற்கான அதன் கலண்டர் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்துள்ளது.

## 4. தொடர்பூட்டல்

வெளிவாரி மற்றும் உள்ளக தொடர்பூட்டல் அணுகுமுறைகள், பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மூலமான வினாவிடை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நூலகமும் தகவல் நிலையமும் போன்ற வழிகளில், மத்திய வங்கியின் ஆர்வலர்களுக்கு தகவல் பரப்புவதனூடாக 2017 காலப்பகுதியில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டைப் பேணுதல் போன்ற மத்திய வங்கியின் பணியினை நிறைவுசெய்வதற்கு அதன் ஆதரவினை வழங்கியதன் மூலம் தொடர்பூட்டல் திணைக்களம் வகிபாகத்தினை வலுப்படுத்தியது.

### 4.1 வெளிவாரித் தொடர்பூட்டல்

தகவல் தொழில்நுட்ப திணைக்களத்துடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியின் நிறுவன வெப்தளத்தினை சீரமைப்பது தொடர்பூட்டல் திணைக்களத்தின் பிரதான பணியொன்றாக விளங்கியது. அதிநவீனத்துவம் வாய்ந்த அம்சங்களுடன் நிறுவனத்தின் வெப்தளத்தினை உருவாக்கும் இலக்கானது திணைக்களத்திற்கு மிகப்பெரிய சவாலினை தோற்றுவித்ததுடன் இந்நோக்கத்திற்காக முன்னைய ஆண்டில் செயலணி நிறுவப்படும் வரை இது தொடர்ந்து எதிர்நோக்கப்பட்டது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலுமான புதிய வெப்தளம் 2018ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளது.

2017 காலப்பகுதியில், தொடர்பூட்டல் திணைக்களமானது 1,115 பத்திரிகை வெளியீடுகள் (நாணயக் கொள்கை மீளாய்வு, வெளிநாட்டுத்துறை செயலாற்றம் மற்றும் பணவீக்கம் போன்ற 183 முக்கிய வெளியீடுகள் உள்ளடங்கலாக), 5 வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் 135 அறிவித்தல்கள் (விளம்பரங்கள் உள்ளடங்கலாக) போன்றவற்றை வெளியிட்டது. மேலும், இலங்கையின் மத்திய வங்கியின் ஆர்வலர்களுடனான தொடர்பூட்டலினை மேம்படுத்துவதற்காக டுவிட்டர், முகநூல் மற்றும் யுடியூப் ஆகிய அதன் நிறுவன சமூக வலைத்தள கணக்குகளை தொடர்பூட்டல் திணைக்களம் நிர்வகித்து கண்காணிக்கின்றது. 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளின் இலங்கை மத்திய வங்கியின் சமூக வலைத்தள கணக்குகள் தொடர்பிலான செயலாற்றம் பற்றிய ஒப்பீடொன்று கீழே அட்டவணை ஐஐ-3 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II-4**

**இலங்கை மத்திய வங்கி சமூக வலைத்தள தொடர்பூட்டல் விபரங்கள்**

| ஊடக வகை | 2016 | 2017 |
|---|---|---|
| யூ ரியூப் (இலங்கை மத்திய வங்கி காணொளி தரவேற்றம்) | 54 | 63 |
| யூ ரியூப் பார்வைகள் (கூட்டுமொத்தம்) | 131,000 | 177,454 |
| முகநூல் விருப்பங்கள் (கூட்டுமொத்தம்) | 11,630 | 18,146 |
| டுவிட்டர் பின்தொடர்பவர்கள் (கூட்டுமொத்தம்) | 8,791 | 17,990 |

மேலும், 2017 காலப்பகுதியில் வங்கியுடன் தொடர்புடைய பல்வேறு முக்கிய கொள்கை விடயங்கள் தொடர்பாக 15 ஊடக மாநாடுகள் நடத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, ஸ்ரேட் பாங்க் ஒப் பாகிஸ்தானின் முன்னால் ஆளுநர் திரு. அஷ்ரப் மஹ்மூத் வத்ரா அவர்களினால் நிகழ்த்தப்பட்ட "பேரண்டப் பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் கட்டமைக்கப்பட்ட மறுசீரமைப்புகள் பன்னாட்டு நாணய நிதியத்துடனான பாகிஸ்தானின் அண்மைக்கால அனுபவங்கள்" என்ற தலைப்பில் இலங்கை மத்திய வங்கியின் 67வது ஆண்டு நிறைவு சொற்பொழிவு மற்றும் வங்கித்தொழில் கற்கை நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆண்டறிக்கை 2016 காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரை உள்ளடங்கலாக 5 பொது விரிவுரைகள் போன்ற வங்கி நிகழ்வுகளுக்கு தொடர்பூட்டல் திணைக்களம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. இதற்கு புறம்பாக, தொடர்பூட்டல் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கி குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களின் 21ஆவது ஞாபகார்த்த நிகழ்வு மற்றும் 34வது சார்க் நிதிய குழுக்கூட்டம் அத்துடன் சார்க் நிதிய ஆளுநர்களின் ஆய்வரங்கு, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நிலையியல் தொழிநுட்ப குழுக்கூட்டம், மற்றும் பணம் தூய்தாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழு - 20ஆவது வருடாந்த மற்றும் தொழிநுட்ப உதவிக் கூட்டம் ஆகியவற்றுக்கு வசதியளித்தது.

இலங்கை மத்திய வங்கி வெளியீடுகளின் விற்பனை மற்றும் விநியோகங்கள் மூலம் இலங்கை மத்திய வங்கியின் கொள்கைகள், செயற்பாடுகள், பிரதேச அபிவிருத்திகள் தொடர்பான செயற்றிட்டங்கள் மற்றும் ஏனைய தொடர்பான விடயங்கள் மீதான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடன், 2017 செத்தெம்பர் 15-24 வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாடு மண்டபத்தில் நடைபெற்ற "கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி" இல் தொடர்பூட்டல் திணைக்களம் பங்குபற்றியது.

"சனாதிபதிக்குத் தெரிவிக்கும் மனக் குறைகளைக் கையாளுகின்ற முறைமை" களினூடாக இலங்கை மத்திய வங்கிக்கு நெறிப்படுத்தப்பட்ட மனக் குறைகளை தொடர்பூட்டல் திணைக்களம் கையாண்டதுடன் வங்கியிலுள்ள தொடர்பான திணைக்களங்களுடன் இணைப்புக்களை மேற்கொண்டதன் பின்னர் 2017இல் 86 மனக்குறைகளுக்கு பதிலிறுத்தது.

2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கத் தகவல்களைப் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பிரசைகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை இணைக்கின்ற பணி 2017 மாச்சில் தொடர்பூட்டல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்பூட்டல் திணைக்களம் 71 கோரிக்கைகளையும் 12 மனுக்களையும் கையாண்டதுடன் தொடர்பான திணைக்களங்களின் உதவியுடன் அவற்றிற்குப் பதிலிறுத்தது.

### 4.2 உள்ளக தொடர்பூட்டல்

பொருளாதாரம் தொடர்பான நடப்பு விடயங்களில் மூத்த முகாமைத்துவத்தினர் சிறந்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதனை இயலச்செய்வதற்காக, தொடர்பூட்டல் திணைக்களம் நிதியியல் துறை மற்றும் வங்கி தொடர்பான விடயங்கள் பற்றி மும்மொழிகளிலும் வெளிவந்த பதினைந்து தேசிய செய்தித் தாளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட 8,466 செய்தி நறுக்குகள், கட்டுரைகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் என்பனவற்றை மூத்த முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பித்தது.

ஆண்டுக் காலப்பகுதியில் அலுவல்சார் உள்ளக செய்திமடலான "கவுளுவ" (கருத்து "யன்னல்") இன் இரண்டு தொகுதிகள் தொடர்பூட்டல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன.

### 4.3 பொதுமக்கள் விழிப்புணர்வு

நாட்டின் பாடசாலை மாணவர்களின் பொருளாதாரம் தொடர்பான அறிவினை அதிகரிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட "ஈகோன் ஐகோன்" தொலைக்காட்சி வினாடி வினாப் போட்டியின் கட்டம் III 2017 பெப்புருவரியில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளிலும் இறுதிச்சுற்றுடன் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது.

அட்டவணை II-4 இல் காட்டப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாடுகள், இலங்கைப் பொருளாதார நிலைமை போன்ற பல்வேறு தலைப்புக்களில் 7,289 பங்குபற்றுநர்களுக்காக விழிப்புணர்வு செயற்றிட்டங்களை தொடர்பூட்டல் திணைக்களம் ஒருங்கிணைத்தது. இதற்கு புறம்பாக 2500 மேற்பட்ட ஆர்வலர்களுக்கு மத்தியில் அறிவினைப் பகிர்ந்துகொள்கின்ற விதத்தில் 17 செயற்றிட்டங்கள் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு அப்பால் ஒருங்கிணைக்கப்பட்டன.

அட்டவணை II - 5

2017இல் நடாத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளின் விபரங்கள்

| நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாடசாலைகள் | 100 | 6,776 |
| பல்கலைக்கழகங்கள் | 6 | 289 |
| இலங்கை ஆயுத படைகள் மற்றும் பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 4 | 106 |
| வெளிநாட்டு பிரதிநிதிகள் (தேசிய பாதுகாப்பு கல்லூரி) | 5 | 118 |
| பிரதேச அலுவலகங்களினூடாக பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்கள் | 5 | வி.கி. |
| நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்கள் (தொடர்பூட்டல் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது) | 17 | 2,500 |

இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட “அறிவூற்று” தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தில் தொடர்பூட்டல் திணைக்களத்தின் வளவாளர்கள் கலந்துகொண்டனர். மேலும், பிரதேச அலுவலகங்களினால் (02) முன்னெடுக்கப்பட்ட 05 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தொடர்பூட்டல் திணைக்களம் வளவாளர்கள் மற்றும் வெளியீடுகளை வழங்கியதன் மூலம் உதவியளித்தது.

ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்பூட்டல் திணைக்களமானது பொருளாதார வரலாற்று அருங்காட்சியகத்திலுள்ள விற்பனை நிலையம், இராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம், நூலகம் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் மற்றும் கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி போன்றவற்றினூடாக ரூ.5.6 மில்லியன் பெறுமதியான மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனையை மேற்கொண்டதுடன் 16,698 பல்வேறு வெளியீடுகளின் பிரதிகளை நாடு முழுவதிலுள்ள பாடசாலைகள் மற்றும் பொதுநூலகங்கள் போன்றவற்றிற்கு இலவசமாக வழங்கியது.

இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் சேவைகள் தொடர்பாக மத்திய மாகாணத்திலுள்ள பொதுமக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் அறிவூட்டுவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்றாக வெற்றிகரமான முழுநாள் நிகழ்ச்சித் திட்டத்தினை தொடர்பூட்டல் திணைக்களம் மாத்தளை பிரதேச அலுவலகத்தில் 2017 மே 5 மற்றும் 6 திகதிகளில் நடாத்தியது. இதற்கு மேலதிகமாக வருகைதருநர்கள் இலங்கை மத்திய வங்கி மூலம் வழங்கப்படும் பணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பினை பெற்றிருந்ததுடன் தமது குறைகளுக்கு/ முறைப்பாடுகளுக்கு தீர்வுகளையும் பெற்றுக்கொண்டனர்.

#### 4.4 தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகள்

தமிழ் மொழிபெயர்ப்பு பிரிவானது இலங்கை மத்திய வங்கியின் முக்கியமான வெளியீடுகளை தமிழ்மொழியிலும் வெளியிடுவது உள்ளடங்கலான அனைத்து தொடர்பூட்டல்களையும் இயலச்செய்கின்ற அதன் மதிப்பற்ற சேவைகளைத் தொடர்ந்து வழங்கியதன் மூலம் தேசிய மொழிக்கொள்கைக்கு இசைவாக அனைத்து மூன்று மொழிகளிலும் தகவல்களை வழங்குவது என்ற தொடர்பூட்டல் திணைக்களத்தின் பணிக்கு அதன் பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்கியது.

#### 4.5 புகைப்படமெடுக்கும் வசதிகள் மற்றும் காணொளிப் பதிவு வசதிகள்

தொடர்பூட்டல் திணைக்கள ஊடகப்பிரிவின் புகைப்பட அலகானது கட்புல ஊடகம் மூலம் வங்கியின் பிரதான நிகழ்வுகளை புகைப்படம் பிடித்தல் மற்றும் காணொளி பதிவுகளை மேற்கொள்ளுவதன் மூலம் அதன் சேவைகளை வழங்கியது. 2016இல் நிகழ்ந்த 379 நிகழ்வுகளுடன் ஒப்பிடுகையில் 2017இல் வங்கியின் 730 நிகழ்வுகளுக்கு அலகு அதன் சேவைகளை வழங்கியது. அச்சிடல் மற்றும் புகைப்படங்களுக்கு சட்டமிடுதல், காணொளிகள் தொகுப்பு, அல்பங்கள் மற்றும் இறுவட்டுக்களை தயாரித்தல் உள்ளிட்ட அனைத்துத் தொடர்பான பணிகளையும் வழங்கியதன் மூலம் உயர் தொழில்சார் நிபுணத்தவத்தரத்தினை பேணியது.

#### 4.6 அச்சகம்

இலங்கை மத்திய வங்கியின் அச்சக தேவைப்பாடுகளை உயர்தர நியமத்துடன் நிறைவு செய்வதற்காக தொடர்பூட்டல் திணைக்களமானது வடிவமைத்தல், தட்டச்சு ஒழுங்கமைப்பு மற்றும் அச்சிடல் போன்ற பணிகளை வழங்கியது. இது தொடர்பில் 2017 காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் அச்சகத்தினால் 219 எண்ணிக்கையிலான வங்கியின் அச்சிடல் ஒப்படைகள் நிறைவுசெய்யப்பட்டன. இவ் ஒப்படைகள், சட்டகன (04 தொகுதிகள்), நியூ சேர்வே (02 தொகுதிகள்), குறிப்பேடு/ வைப்பகம் (03 தொகுதிகள்), கவுலுவ, சென்தேவ போன்ற காலாந்தர வெளியீடுகளையும் நிதியியல் முறைமை பற்றிய ஓர் அளவீடு, இலங்கையின் நிதியியல் பணிகளுக்கான ஒரு வழிகாட்டி (மூன்று மொழிகளிலும்), இலங்கை மத்திய வங்கியின் செயற்பாடுகளும் குறிக்கோள்களும் (சிங்களம்), “முதல் கணுதெனு, பங்கு கா ஆர்திகய” மற்றும் “உத்தமனய கதாவ” போன்ற புத்தகங்களையும் உள்ளடக்குகின்றன. மேலும், வங்கிக்கான வர்ணச் சுவர்ரொட்டிகள், கையேடுகள், துண்டுபிரசுரங்கள், கடிதத்தலைப்புகள் அனைத்து வகையான சான்றிதழ்கள் வங்கி அலுவலர்களின் வியாபார அட்டைகள், வங்கியின் பல்வேறு படிவங்கள் மற்றும் வாழ்த்து அட்டைகள் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

#### 4.7 நூலகமும் தகவல் நிலையமும்

நூலகமும் தகவல் நிலையமும் இலங்கை மத்திய வங்கியின் அறிவு மையமாக விளங்குகின்றது. வங்கி அலுவலர்களுக்கும் அதேபோன்று பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் போன்ற அனுமதிக்கப்பட்ட வெளிவாரிப் பாவனையாளர்களினதும் அறிவினை அதிகரிக்கின்ற முக்கிய வளநிலையமாக இது காணப்படுகின்றது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் இது 667 நூல்கள், 153 அறிக்கைகள், 77 இறுவட்டுக்கள் மற்றும் 48,000ற்கும் அதிகமான சஞ்சிகை வெளியீடுகள் போன்றவற்றின் புதியபதிப்புக்கள் உள்ளடங்கலாக 30,600 நூல்கள், 19,500 அறிக்கைகள், 1,935 இறுவட்டுக்கள் போன்ற சேகரிப்புக்களுடன் அதன் பணிகளை வழங்கியது. குறிப்பாக, பொருளாதாரம், முகாமைத்துவம் மற்றும் நிதியியல் மீதான தகவல்களின் பரந்தளவான அறிவுவளத்தினை வழங்குகின்ற “சயன்ஸ் டிரெக்ட்” மற்றும் “ஈகோன்லிட்” போன்றவற்றிற்கான சந்தாத் தொகையை அதேநேர கணனிவழி தரவுத் தளங்களுக்கு நூலகம் மற்றும் தகவல் நிலையம் தொடர்ந்தும் செலுத்தியது. மேலும், மத்திய வங்கித்தொழில் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் பல்வேறு ஏனைய அதேநேரக் கணனிவழி மூல வளங்களுக்கு நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினால் சந்தா செலுத்தப்பட்டது. இவற்றிற்கிடையில், தகவலுக்கான இலகுவான அணுகுவழியினை வழங்கும் பொருட்டு வங்கி வளாகம் முழுவதும் www. centralbanking.com, றறற.சளைம.நெவ மற்றும் www.ft.com போன்றவற்றினை அணுகும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமது வதிவிடங்களில் இருந்தும் கூட அலுவலர்களுக்கு அணுகுவழியினை வழங்குகின்ற ஓபன்ஏதன்ஸ் இற்கு சந்தா செலுத்தியமை 2017ஆம் ஆண்டின் பாரிய சாதனையொன்றாகும். அத்துடன் வைலி இணையத்தள சஞ்சிகைக்கான நூலகம் மற்றும் தகவல் நிலையத்தின் சந்தா செலுத்தலானது 12 இற்கு மேற்பட்ட இணையத்தள சஞ்சிகைகளுக்கு ஒரே நேரத்தில் அணுகுவழியினை ஏற்படுத்தியது.

நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினால் சந்தாசெலுத்தப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சஞ்சிகைகளின் மொத்த எண்ணிக்கையானது முறையே 83 மற்றும் 17 ஆக காணப்பட்டது. இதற்கு புறம்பாக, நூலகம் மற்றும் தகவல் நிலையமானது அண்மையில் புதிதாக சேர்க்கப்பட்டவை (அதாவது புதிய நூல்கள்), நடைமுறை விடயங்களின் உள்ளடக்கம், பன்னாட்டு செய்தி விழிப்புகள், பொருளாதாரம் பற்றிய அச்சிலான குறிப்புக்கள், வங்கித்தொழில் மற்றும் நிதி தொடர்புபட்ட அறிக்கைகள் மீதான குறிப்புகள் மற்றும் தொடர்புடைய விடயங்களிலான பொருளாதாரம், போன்ற இலத்திரனியல் செய்தி அறிக்கைகளை தொடர்ந்தும் தொகுத்ததுடன் அவற்றை உள்ளக வலையமைப்பூடாக பரவச்செய்தது. சாத்தியமானளவிற்கு மொழிக் கொள்கையுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் ஆங்கில சிங்கள மற்றும் தமிழ் செய்தித் தாள்களினை உள்ளடக்கி உள்ளூர் அச்சிலான திரட்டுக்கள் தொகுக்கப்பட்டன. தெரிந்தெடுக்கப்பட்ட தகவல் பரப்பும் பணிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

நூலகம் மற்றும் தகவல் நிலையமானது மின்னஞ்சல் மற்றும் நூல்களைக் கடனாக வழங்கியதனூடாக பயனுள்ள தகவல்களை வழங்கியதன் மூலம் இலங்கையிலுள்ள பொருளாதார மற்றும் வங்கித்தொழில் நூலகங்களுக்கு தனது பணியினை தொடர்ந்தும் வழங்கியது. மேலும், மூலவளங்களையும் அனுபவங்களையும் உலகளாவிய மத்திய வங்கிகள் மற்றும் பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களுக்கிடையில் பகிர்ந்துகொண்டதனூடாக, நூலகம் மற்றும் தகவல் நிலையமானது உலகளாவிய மத்திய வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் நூலக மற்றும் தகவல் தொழில்சார் நிபுணத்துவ வலையமைப்பில் ஒரு செயற்படும் அங்கத்தவர் என்ற நிலையைப் பெற்றுக்கொண்டது. நூலகத்தின் உள்ளக வலையமைப்பினூடாக வங்கி அலுவலர்கள் இலத்திரனியல் நூலகப் பணியினை அணுகுவதற்கான வசதியை வழங்கியதன் மூலம் தொடர்ந்தும் பேணப்பட்டது.

## 5. நாணயம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு நாணயத்தாள்கள் மற்றும் குத்திகள் இரண்டினையும் உள்ளடக்கி இலங்கையில் நாணயத்தினை வெளியிடுகின்ற ஏகபோக உரிமையினையும் அதிகாரத்தினையும் இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது. இக்கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதில் இலங்கை மத்திய வங்கிக்கு நாணயத் தாள்களை வடிவமைத்தல், அச்சிடுதல், குத்திகளை வார்த்தல் மற்றும் நாணயத் தாள்களையும் குத்திகளையும் விநியோகித்தல் ஆகியன பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களமானது நாணயச் சபையின் நியதிச்சட்ட பொறுப்புடமையுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளைக் கையாளுகின்றது. பொருளாதாரத்தின் சீரான தொழிற்பாட்டுக்கு அத்தியாவசியமான நாணயத்தின் பெறுமதியினையும் ஒருமைப்பாட்டினையும் பேணிக்காத்தல் மற்றும் நாணயத்திற்கான கேள்வியினை நிறைவுசெய்வதற்குப் போதுமான இருப்புக்களை கிடைக்கச்செய்தல் என்பன மூலம் நாணயத்தின் மீது பொதுமக்கள் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதிலும் பேணுவதிலும் நாணயத் திணைக்களம் தொடர்ச்சியாக ஈடுபட்டது.

### 5.1 நாணயத்தை அச்சிடுதலும் வார்த்தலும்

2017இன் போது பொருளாதாரத்தில் நாணயத்தாள்களுக்கான கேள்வியினை நிறைவுசெய்யும் பொருட்டு 270 மில்லியன் எண்ணிக்கையிலான நாணயத்தாள்களையும் 970 மில்லியன் எண்ணிக்கையான குத்திகளையும் அச்சிடுவதற்கு நாணயத் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டதுடன் சிறந்த தரத்திலான நாணயத்தாளை சுற்றோட்டத்திலுள்ளதினை உறுதிசெய்வதற்கும் பொதுமக்களின் கேள்வியினை நிறைவுசெய்வதற்குப் போதிய இருப்புகளை உறுதிசெய்வதற்கும் முன்வருகின்ற ஆண்டுகளில் தொடர்புடைய ஒப்படைப்புகள் மேற்கொள்ளப்படும்.

ரூ.1, ரூ.2, ரூ.5 மற்றும் ரூ.10இன் வகைகளுக்கான குத்திகளின் அளவுகளைக் குறைத்து துருப்பிடிக்காத உருக்கு உலோகத்தினாலான புதிய சுற்றோட்ட நியம குத்தித்தொகுதியொன்றினை வடிவமைப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொண்டிருந்தன. இப்புதிய குத்திதொடரானது வார்ப்புச் செலவினைக் குறைக்குமெனவும் குத்திகளை கையாள்வதினை எளிதாக்குமென்றும் எதிர்பார்க்கின்றது.

### 5.2 நாணய விநியோகம்

#### (அ) சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

காசற்ற கொடுப்பனவு வழிமுறைகளால் உந்தப்பட்ட தொழில்நுட்பத்தின் தொடர்ச்சியான பயன்பாடு தொடர்ந்தமை எவ்வாறிருப்பினும், இலங்கைப் பொருளாதாரத்தில் பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் என்பவற்றுடன் இணைந்து செல்லும் வகையில் 2017இல் நாணயத்தாள்களுக்கும் குத்திகளுக்கும் கேள்வி அதிகரித்தது.

அதற்கமைய அட்டவணை 6 இல் காட்டப்பட்டவாறு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 31.12.2017 இல் உள்ளவாறு சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பெறுமதி ரூ.598 பில்லியனாக 8.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

**அட்டவணை 11.6**

**2017.12.31இல் உள்ளவாறு சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**


| விடயம் | பெறுமதி (ரூ. பில்லியன்) | | | | | மாற்றம் (%) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| தாள்கள் | 332.4 | 408.8 | 482.0 | 541.5 | 585.3 | 6.8 | 23.0 | 17.9 | 12.3 | 8.0 |
| குத்திகள் (அ) | 6.8 | 7.5 | 9.1 | 10.7 | 12.1 | 7.5 | 10.3 | 21.3 | 17.5 | 13.0 |
| **மொத்தம்** | **339.2** | **416.3** | **491.1** | **552.2** | **597.4** | **6.8** | **22.7** | **18.0** | **12.4** | **8.3** |

(அ) சுற்றோட்டத்திலற்ற ஞாபகார்த்த நாணயக் குத்திகள் நீங்கலாக

2017இல் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் பெறுமதி 585.3 பில்லியனாக 8.0 சதவீதத்தினால் அதிகரித்தது. வரைபடம் 1 தரப்பட்டுள்ளவாறு நாணயத் தாள்களுக்கு மத்தியில் 2017.12.31இல் உள்ளவாறு ரூ.5,000 மற்றும் ரூ.1,000 இன் வகையான நாணயத்தாள்கள் என்பன இணைந்து சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் மொத்தப் பெறுமதிகள் ஏறக்குறைய 85.8 சதவீதத்தினை கொண்டிருந்தன.


**வரைபடம் II - 1**

**சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் பெறுமதி**




2011இல் 4.0 சதவீதமாக இருந்த உள்நாட்டு மொத்த உற்பத்திற்கான பொதுமக்களினால் வசமிருந்த நாணய விகிதமானது (சுற்றோட்டத்திலுள்ள) நாட்டில் முக்கிய கொடுப்பனவு வழிமுறையொன்றாக நாணயத்திற்கான அதிகரித்த கேள்வியினை எடுத்துக்காட்டி 2017இன் மூன்றாவது காலாண்டு இறுதியில் ஏறத்தாழ 6.2 சதவீதமாக இருந்தது. (வரைபடம் 2)

வரைபடம் II - 2
சுற்றோட்டத்திலுள்ள நாணயம்/ மொத்த உள்நாட்டு உற்பத்தி




**(ஆ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நாணயம் வழங்குதல்**

நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளுக்கான பொதுமக்களின் கேள்வியினை நிறைவுசெய்யும் பொருட்டு நாணயத் திணைக்களமானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் புறக்கோட்டை இலங்கை வங்கி கிளையில் நிறுவப்பட்டுள்ள விசேட பொதுமக்கள் கருமபீடம் என்பனவற்றினூடாக நாணயத்தாள்களினதும் குத்திகளினதும் கிரமமான வழங்கல்களை தொடர்ந்தும் உறுதிசெய்தது.


அதற்கமைய 2017இன் போது நாட்டில் சுற்றோட்டத்திற்காக நாணயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நாணயத்தாள்களும் குத்திகளும் முறையே ரூ.628.0 பில்லியன் மற்றும் 1.4 பில்லியன் ஆகவிருந்தன (அட்டவணை 7).

**அட்டவணை II-7 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயத்தாள்களும் குத்திகளும்**

| விடயம் | பெறுமதி (ரூ. பில்லியன்) | | | |
|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 |
| தாள்கள் | 431.8 | 503.4 | 594.0 | 628.0 |
| குத்திகள் | 0.8 | 1.6 | 1.6 | 1.4 |
| **மொத்தம்** | **432.6** | **505.0** | **595.6** | **629.4** |

பிரதேச மட்டத்திலான குத்தி தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு நாடளாவிய குத்தி விநியோகத்திற்கான புதிய பொறிமுறையொன்றினை உருவாக்குவதற்கு நாணயத் திணைக்களம் முயற்சியெடுத்தது. அதற்கமைய இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் ஊடாக நாட்டின் பிரதேச மட்டத்தில் குத்திகளை விநியோகிப்பதற்கான முன்மொழிவொன்றினை நாணயத் திணைக்களம் பரிசீலித்தது.

வரைபடம் II - 3
நாணயம் வழங்குதல் - குத்திகளினதும் நாணயத் தாள்களினதும் எண்ணிக்கை




**(இ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து நாணய வைப்புகளை ஏற்றுக்கொள்ளல்**

நாணயத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக நாணயத் திணைக்களமானது நாணயக்கொள்கை கருவியொன்றாக, இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்படும் நியதிச்சட்ட ஒதுக்கீட்டு தேவைப்பாட்டினை பேணுவதற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து நாணய வைப்புகளை ஏற்றுக்கொள்கின்றது. 2017இன் போது அட்டவணை 3இல் தரப்பட்டுள்ளவாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து பயன்படுத்தத்தக்க (பொருத்தமானது) மற்றும் பயன்படுத்தமுடியாதவை (பொருத்தமற்றது) ஆகிய இரண்டு வடிவங்களிலும் நாணயத் தாள்களை ஏற்றுக்கொண்டது. 2017இல் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நாணயத் திணைக்களத்தினுடனான நாணய வைப்புகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 9.2 சதவீதத்தினால் அதிகரித்தன.

**அட்டவணை II-8 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயம்**

| விடயம் | பெறுமதி (ரூ. பில்லியன்) | | | மாற்றம் (%) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2015 | 2016 | 2017 |
| தாள்கள் | 429.6 | 534.5 | 584.0 | 21.1 | 24.4 | 9.2 |

*குறிப்பு : உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நாணயக் குத்திகளின் பெறுமதி குறிப்பிடத்தக்களவானவையல்ல*

**(ஈ) ஞாபகார்த்த நாணயக் குத்திகளின் வெளியீடும் ஞாபகார்த்த சேகரிப்பாளர் பொருட்கள் விற்பனையும்**

2017 சனவரியில் நாணயத் திணைக்களமானது அடையாளப்படுத்தி அங்கீகரித்து நாட்டில் முன்னணி பாடசாலையொன்றாக தேசத்திற்கான அதன் பங்களிப்பினை வழங்கிய கொழும்பு 05 விசாகா வித்தியாலயத்தின் நூறாவது ஆண்டு நிறைவினை அடையாளப்படுத்துவதற்கு ரூ.2,000 முகப்பெறுமதியுடனான சுற்றோத்திற்குவிடப்படாத வெள்ளி ஞாபகார்த்தக் குத்தியொன்றினை வெளியிட்டது.

தேயிலைச் சபையின் 150 வருடத்தினைக் கொண்டாடுவதற்கும் இலங்கையில் முக்கியமான அத்துடன் நீண்டகாலம் நிலைத்திருக்கின்ற ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்ட பண்டமொன்றாக தேசிய பொருளாதாரத்திற்கான அதன் பண்டமொன்றினை பங்களிப்பினை வழங்கிய அங்கீகரிப்பதற்கும் 2017 யூலையில் ரூ.10 முகப்பு பெறுமதியுடன் சுற்றோட்ட நியமத்திலான ஞாபகார்த்தக் குத்தியொன்று வெளியிடப்பட்டது.

நாட்டின் 70ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தினைக் குறிக்கும் முகமாக ஞாபகார்த்த நாணயத்தாளொன்றினை இலங்கை மத்திய வங்கி 2018 பெப்புருவரியில் வெளியிட்டது.

இதற்குப் புறம்பாக ஞாபகார்த்த சேகரிப்பாளர் பொருட்கள் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் மற்றும் கொழும்பு கோட்டை பொருளாதார வரலாற்று அரும்பொருட் காட்சியகம் ஊடாக விற்பனை செய்யப்பட்டன.

### 5.3 தூய நாணயத் தாள் கொள்கை

சுற்றோட்டத்திலிருந்து பொருத்தமற்ற பயன்படுத்தமுடியாத நாணயத்தாள்களை புறக்கீடு செய்யும் அதேவேளை சிறந்த தரமிக்க நாணயத் தாள்கள் சுற்றோட்டத்தில் உள்ளதினை உறுதி செய்கின்ற நோக்குடன் கடந்த பல வருடங்களாக நாணயத் திணைக்களம் தூய நாணயத் தாள் கொள்கையினை நடைமுறைப்படுத்தியது.

சுற்றோட்டத்திலுள்ள தூய நாணயத் தாள்கள் நாடு பற்றிய தெளிவான எண்ணப்பாங்கினை பிரதிபலிப்பதனால், தூய நாணயத்தாள் கொள்கையினை உறுதிப்படுத்துவதற்கு நாணயத் திணைக்களம் 2017இல் நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

2017இன் போது ரூ.94.2 பில்லியன் முகப்பெறுமதியினைக் கொண்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்பிலிடப்பட்ட 177 மில்லியன் எண்ணிக்கையிலான பொருத்தமற்ற நாணயத் தாள்களை அழிப்பதன் மூலம் சிறந்த தரத்திலான (பொருத்தமான) நாணயத்தாள்களின் கிரமமான வழங்கல்களையும் பொருத்தமற்ற நாணயத்தாள்களை அகற்றுவதனையும் நாணயத் திணைக்களம் தொடர்ந்தும் உறுதிசெய்தது. நாணயத் திணைக்களமானது ரூ.504.6 பில்லியன் தொகைக்கான 311.7 மில்லியன் எண்ணிக்கையிலான பயன்படுத்தத்தக்க நாணயத் தாள்களை சுற்றோட்டத்திற்கு மீள வழங்கியது.

கிரமான அடிப்படையொன்றில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நாணய வைப்புகள் மத்தியில் வேண்டுமென்று சேதப்படுத்தப்பட்ட மாற்றம் செய்யப்பட்ட அத்துடன்/ அல்லது உருச்சிதைக்கப்பட்ட நாணயத்தாள்களின் அதிகரித்த எண்ணிக்கையினைக் கருத்தில்கொண்டு நாணயத் தாள்களை வேண்டுமென்று சேதப்படுத்துதல் மாற்றச்செய்தல் மற்றும் உருச்சிதைத்தல் மீதான சட்டத்தினை கடுமையாக நடைமுறைப்படுத்த நாணயத் திணைக்களம் வழிமுறைகளை எடுத்தது.

அத்தகைய நடத்தையிலிருந்து தவிர்த்துக்கொள்வதற்கு பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கும் ஆற்றல் வாய்ந்த விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டதுடன் 2017.12.31 ஆம் திகதியின் பின்னர் அத்தகைய நாணயத்தாள்கள் மீது கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதனால் 2017.12.31ஆம் திகதியன்று தம்வசமுள்ள அத்தகைய நாணயத் தாள்கள் மாற்றுவதற்கும் அறிவிக்கப்பட்டது.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மத்தியில் நாணய முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகளின் வினைத்திறனையும் காத்திரமான தன்மையினையும் மேம்படுத்துவதற்கு நாணயம் தொடர்புபட்ட பிரச்சினைகளையும் நாணயத்தாள்களின் காத்திரமான ஆயுளை நீடிப்பதற்காக நாணயத்தாள்களின் வகைப்படுத்தல் மற்றும் கையாளுதல் நடைமுறையிலுள்ள முன்னேற்றங்களுடன் தொடர்புபட்ட விடயங்களை கலந்துரையாடுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் பண முகாமையாளர்களுடன் நாணயத் திணைக்களம் கூட்டங்களை நடாத்தியது.

### 5.4 சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட உதவி

2017இல் நாணயத்தை போலியாக தயாரித்தல் தொடர்பில் நாணய விதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது தொடர்பில் நாணயத் திணைக்களம் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும் பின்வரும் விதத்தில் தொடர்ந்தும் வசதி வழங்கியது.

(அ) போலி நாணயத் தாள்களை தயாரிப்பதற்கான முயற்சி தொடர்பில் பொலிஸ் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயப் பணியகத்துடனும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுடனும் நெருக்கமான ஒத்துழைப்பு வழங்கியது. 2017இல் 5,812 எண்ணிக்கையிலான போலி நாணயத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சுற்றோட்டத்திலுள்ள போலி நாணயத் தாள்கள் 2017இன் போது மில்லியன்களுக்கான பகுதிகளாக அளவிடும் பொழுது 5 விகிதமாகக் காணப்பட்டது.

(ஆ) நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைக்கு வசதியளிக்கும் விதத்தில் போலி நாணயத் தாள்களுக்கான முடிவுச் சான்றுகளை ஆளுநரின் கையொப்பத்துடன் கூடிய 138 சான்றிதழ்கள் நாணய விதிச் சட்டத்தின் 59ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக புறக்குறிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

(இ) போலி நாணயத் தாள் வழக்குகளில் சாட்சியமளிப்பதற்கு 10 நீதிமன்ற வழங்குகளில் கலந்து கொண்டது.

### 5.5 பொதுமக்கள் விழிப்புணர்வு

இலங்கை நாணயத்தின் வரலாறு இலங்கை நாணயத் தாள்களின் பாதுகாப்பு அம்சங்கள் நாணயத்தாள்களை சிறப்பாகக் கையாளும் நடைமுறைகள் மற்றும் நாணயக் குத்திகளின் காத்திரமான பயன்பாடு என்பன மீது பொதுமக்கள், பொலிஸ் அலுவலர்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரச அலுவலர்கள் போன்றோருக்கு அறிவூட்டும் பொருட்டு நாணயத் திணைக்களம் 2017இன் போது பின்வரும் விதத்தில் பல பொதுமக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.

(அ) வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம், பல்வேறுபட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் தேசிய பாடசாலைகள், போன்ற இடங்களில் 31 ஆய்வரங்குகள்/ செயலமர்வுகள் நடைபெற்றன.

(ஆ) நாடு முழுவதும் இடம்பெற்ற 15 கண்காட்சிகளில் நடமாடும் நாணய அரும்பொருட்காட்சிசாலை காட்சிப்படுத்தப்பட்டது.

(இ) இலங்கை மத்திய வங்கியின் மூன்று நாணய அரும்பொருட்காட்சிச்சாலைகளும் முக்கியமாக பள்ளிக்கூடங்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை முக்கியமாக உள்ளடக்கிய 8,760 பேரின் விஜயத்திற்கு வசதியளித்ததுடன் தூய நாணயத் தாள் கொள்கை மற்றும் நாணயத் தாள்களை போலியாகத் தயாரிப்பதன் விளைவுகள் போன்ற தொடர்பில் தகவல் விடயங்களும் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

(ஈ) முன்னணி தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் வானொலிகள் ஊடாக 05 கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

### 5.6 நாணயத் தாள்களின் மீள உற்பத்திக்கான அனுமதிகள்

நாணயச் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கை நியதிகளுக்கமைவாக 2017இல் நாணயத்தாள்களை மீள உற்பத்தி செய்வதற்கான ஒன்பது அனுமதிகள் வழங்கப்பட்டன.

### 5.7 முறைமை மேம்படுத்தல்கள்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற நாணயத் தாள்களின் தரநியமத்தினை மேம்படுத்தும் பொருட்டு அச்சகரின் உற்பத்திச் செயன்முறையின் இறுதியில் ஒவ்வொரு தனி நாணயத்தாளினதும் பரீட்சிப்பினை உறுதிசெய்வதற்கு நாணயத் திணைக்களம் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. நாணயத் தொழிற்பாடுகளின் வினைத்திறனையும் காத்திரத்தன்மையையும் அதிகரிக்கும் பொருட்டு நாணயக் கோரிக்கையினையும் வழங்கலினையும் தன்னியக்கப்படுத்துவதற்கு பலமுன் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

### 6.1 உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் நடவடிக்கைகள்

நாணய விதிச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் பல தொழிற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவையாவன (அ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துதல் (ஆ) வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்குகளை ஒழுங்குமுறைப்படுத்தல் (இ) அரசாங்கம், அரசாங்க முகவர்கள் மற்றும் அரசாங்கம் ஆகியோர் சார்பில் தொழிற்படுகின்ற ஏனைய நிறுவனங்களின் அலுவல்சார் வைப்பகத்தின் வங்கியாளராகவும் மற்றும் வர்த்தக வங்கிகளுக்கான வங்கியாளராகவும் தொழிற்படுதல் (ஈ) அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களை வழங்குதல் (உ) நேரடி பங்கேற்பாளர் வணிகர்களுக்கான கணக்குகளைப் பேணுதல் (ஊ) பங்கேற்பாளர்களுக்கும் வணிகரல்லாத விலைக் குறிப்பீட்டாளர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான கொடுகடனினை வழங்குதல் மற்றும் (எ) தேவையான வேளைகளில், வங்கித்தொழில் நிறுவனங்களுடன் கொடுகடன் தொழிற்பாடுகளில் ஈடுபடுதல் ஆகியனவாகும்.

### 6.2 நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

மத்திய வங்கியின் தற்பொழுது நிலவும் நாணயக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் குறுங்கால வட்டி வீதங்களைப் பேணும் குறிக்கோளுடன் திணைக்களம் நாணயக் கொள்கையைத் தொடர்ந்தும்

நடைமுறைப்படுத்தியது. விரும்பத்தக்க மட்டமொன்றினை நோக்கிச் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை வழிப்படுத்தும் விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் தங்கியிருந்தது. அதேவேளை துணைநில் வசதிகளும் சந்தைப் பங்கேற்பாளர்களுக்குத் தொடர்ந்தும் கிடைக்கச் செய்யப்பட்டன.

மத்திய வங்கியின் கோரல்கள் பிரதானமாக முன்னைய ஆண்டின் இறுதியிலிருந்து அதிகரித்து அதன்பின்னர் குறைவடைந்ததுடன் பெப்புருவரி நடுப்பகுதியிலிருந்து யூலை நடுப்பகுதிவரையான காலப்பகுதிகளில் மிகை மற்றும் பற்றாக்குறை மட்டங்களிடையே மாற்றமடைந்ததன் விளைவாக, வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தை திரவத்தன்மையானது ஆண்டின் தொடக்கத்தில் மிகவுயர்ந்ததொரு மிகையினைப் பதிவுசெய்தது. கிட்டத்தட்ட யூலை நடுப்பகுதியிலிருந்து உள்நாட்டு வெளிநாட்டு செலாவணி சந்தையிலிருந்தான வெளிநாட்டு செலாவணிகளின் மத்திய வங்கி கொள்வனவுகளின் பிரதான விளைவாக மேற்படி நிலைமை மாறியது. இதன் விளைவாக, பணச்சந்தை திரவத்தன்மையானது ஆண்டின் முடிவுவரை தொடர்ந்தும் அதிகரித்தது.

சந்தை மிகையான திரவத்தன்மையைக் கொண்டிருக்கையில், இந்த தற்காலிக மிகையான திரவத்தன்மையானது குறுங்கால மற்றும் நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்களினூடாகத் தற்காலிக அடிப்படையிலும் திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகள் மூலம் நிரந்தர அடிப்படையிலும் ஈர்த்துக்கொள்ளப்பட்டது. நேர்மாற்று துணைநில் கடன்வழங்கல் வசதியினூடான திரவத்தன்மை ஏற்பாடுகளுக்கு புறம்பாக திரவத்தன்மை பற்றாக்குறைகள் காணப்படும் போது திரவத்தன்மையினை வழங்குவதற்காக மீள்கொள்வனவு ஏலங்கள் மேற்கொள்ளப்பட்டன.

திறைசேரி முறிகளிலான மத்திய வங்கியின் உடைமைகள் திறந்த சந்தை தொழிற்பாடுகளின் நோக்கத்திற்கு போதுமானதாகக் காணப்படாமையினால் மீள்கொள்வனவு ஏலங்களின் கீழான கொடுக்கல்வாங்கல்களின் போது பிணையங்களாக வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேம நிதியத்திடமிருந்து திறைசேரி முறிகளை கடன்படுவதற்கான முறிகளை கடன்படும் நிகழ்ச்சித்திட்டமானது 2017 நவெம்பரில் மீளெழுச்சிப்பட்டது.

பணச்சந்தை கொடுக்கல்வாங்கல்கள் மீதான அதேநேர துல்லியமான தகவல்களின் அணுகுமுறையானது பணச்சந்தையில் விலையினை கண்டுபிடிக்கும் செயன்முறைக்கு வசதியளிப்பதில் மிக முக்கியமானதாகும். அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்கள் அவர்களால் கையாளப்படும் கொடுக்கல்வாங்கல்களின் விபரங்களை அறிக்கையிடுவதற்காக 2016இல் அதேநேர முறைமையொன்று உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையானது 2017இல் அறிமுகப்படுத்தப்பட்ட மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை கண்காணிப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டது. அனைத்து பங்கேற்கும் நிறுவனங்கள் (உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள்) மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள் ஆகியோர் 2018 சனவரியில் தொழிற்பாட்டுக்கு வந்த மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை கண்காணிப்பு ஊடாக அழைப்பு, அரச பிணையங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி சந்தைகளில் அவர்களின் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுகின்றனர். மேலும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் அவர்களது நாளாந்த திரவத்தன்மை நிலைமைகளை மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை கண்காணிப்பு ஊடாக அறிக்கையிடுகின்றனர். மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை கண்காணிப்பானது முன்னர் காணப்பட்ட பணத்தரகர்கள் அறிக்கையிடல் முறைமை, திரவத்தன்மை கண்காணிப்பு முறைமை பணச்சந்தை கண்காணிப்பு முறைமை மற்றும் விதேச வினிமய முறைமை போன்ற பல்வேறு அறிக்கையிடல் முறைமைகளை பதிலிட்டது. மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தை கண்காணிப்பானது அழைப்பு, அரச பிணையங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி சந்தைகளிலிருந்தான மிக முக்கிய சந்தை தகவல்களினை உள்ளீர்க்கின்றது.

### 6.2.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

#### (அ) திரவத்தன்மை எதிர்வு கூறல்கள்

குறிப்பிட்ட நாளொன்றிற்கு நடத்துவதற்கு தேவைப்படும் திறந்த சந்தை தொழிற்பாடுகளின் வகை மற்றும் காலத்தினை நிர்ணயிப்பதற்காக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நாளாந்த அடிப்படையில் சந்தை திரவத்தன்மை எதிர்வுகூறலை மேற்கொள்கின்றது. திரவத்தன்மையின் எதிர்வுகூறலுக்காக, நாணயக் கொள்கை நடவடிக்கைகள் மற்றும் சுயநிர்ணய காரணிகள் பரிசீலனையில் கொள்ளப்படுகின்றன. சுயநிர்ணய காரணிகள் என்பது சுற்றோத்திலுள்ள நாணயம், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள், வர்த்தக வங்கி ஒதுக்கு நிலைமைகள் மற்றும் அரசாங்கத்துடனான இலங்கை மத்திய வங்கியின் கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. பணச்சந்தை திரவத்தன்மையின் அத்தகைய நாளாந்த எதிர்வுகூறல்களின் வெளியீடுகளின் அடிப்படையில், 2017இல் பின்வரும் திறந்த சந்தை தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (ஆ) ஏலங்கள்

##### (i) மீள்கொள்வனவு ஏலங்கள்

பணச்சந்தை திரவத்தன்மையானது மிகையாக காணப்பட்ட போது ஓரிரவு அடிப்படையில் அத்திரவத் தன்மையினை ஈர்த்துக்கொள்ளும் நோக்குடன் 2017இல், 163 நாட்களின் ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்டது. இவ்ஏலங்களில் முன்வைக்கப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த தொகைகள் முறையே ரூ.4,284.5 பில்லியன் மற்றும் ரூ.3,261.46 பில்லியன் ஆகும். இவ்ஏலத்தின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 7.25 சதவீதத்திற்கும் 7.75 சதவீதத்திற்குமிடையிலான வீச்சில் காணப்பட்டது.

குறுங்கால ஏலங்கள் அதேநாள் தீர்ப்பனவு அடிப்படையில் அதேநாளில் ஒருவாரம் வரையிலான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்ளும் உபாயமொன்றாக நடத்தப்படுகிறது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 8 குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியதுடன் இதில் ரூ.115.0 பில்லியன் கொண்ட மொத்தத் தொகை முன்வைக்கப்பட்டது. இதில் 7.31 சதவீதத்திற்கும் 7.43 சதவீதத்திற்குமிடப்பட்ட வீச்சிலான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் ரூ.49.23 பில்லியன் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 நாட்களுக்கு மேலதிகமான காலப்பகுதிக்கான சந்தை திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்ளும் நோக்குடன் நீண்டகால நேர்மாற்று ஏலங்கள் நடாத்தப்பட்டன. 2017 சனவரி மற்றும் செப்தெம்பர் மாதங்களில் ரூ.225.0 பில்லியன் மொத்த முன்வைக்கப்புக்களுடன் மொத்தமாக 11 நீண்டகால மீள்கொள்வனவு ஏலங்கள் நடாத்தப்பட்டது. இரண்டு ஏலங்களில் மட்டும் விலைக்குறியீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீடுகளின் பெறுமதி ரூ.17.0 பில்லியனாகும். இவ்விரண்டு ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 7.44 சதவீதமாகக் காணப்பட்டது. நீண்டகால மீள்கொள்வனவுகளின் காலம் 8 நாட்களுக்கும் 16 நாட்களுக்குமிடையில் வேறுபட்டது.

##### (ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

பணச்சந்தையானது பற்றாக்குறை நிலைமையில் காணப்பட்டபோது திரவத்தன்மையின் வழங்கும் நோக்குடன் 66 நாட்களில் ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நடாத்தப்பட்டன. இந்த ஏலங்களில் முன்வைக்கப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள் முறையே ரூ.1,292.0 பில்லியன் மற்றும் ரூ.1,049.62 பில்லியன் ஆகும். இவ்ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 8.47 சதவீதத்திற்கும் 8.75 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டன. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது 2017ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் குறுங்கால மற்றும் நீண்ட நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்தவில்லை.

**(இ) உடனடி கொடுக்கல்வாங்கல்கள்**

மிகையான திரவத்தன்மையினை நிரந்தர அடிப்படையில் ஈர்த்துக்கொள்வதற்காக திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைக்காக ஏலங்கள் நடாத்தப்பட்டன. 2017இல் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் ரூ.380.0 பில்லியன் பெறுமதியினை திறைசேரி உண்டியல்களின் முன்வைக்கப்பட்ட தொகையுடன் 71 உடனடி விற்பனைகளை நடாத்தியது. விலைக்குறிப்பீடுகள் 40 ஏலங்களில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்ஏலங்களின் ஊடாக ஈர்க்கப்பட்ட மொத்த தொகையானது ரூ.110.33 பில்லியனாக காணப்பட்டது. இவ்ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதமானது 7.78 சதவீதத்திற்கும் 9.23 சதவீதத்திற்குமான வீச்சில் காணப்பட்டது. நடத்தப்பட்ட 20 ஏலங்களில் எந்தவித விலைக்குறிப்பீடுகளும் பெறப்படாததுடன், 11 ஏலங்களில் பெறப்பட்ட விலைக்குறிப்பீடுகள் நிராகரிக்கப்பட்டன. 2017 காலப்பகுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களமானது, திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைக்காக எந்தவித ஏலங்களையும் மேற்கொள்ளவில்லை.

### 6.2.2 துணைநில் வசதிகள்

வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தை மற்றும் நாளாந்த திறந்த சந்தை ஏலங்களினூடாக தமது குறுங்கால திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை முழுமையாக முகாமைத்துவப்படுத்த முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பனவற்றினூடாக ஆண்டு முழுவதும் துணைநில் வசதிகள் வழங்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டுப்பகுதியில் துணைநில் வைப்பு வசதி கொடுக்கல்வாங்கல்கள் ஏறத்தாழ ரூ.13.89 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரியினையும் ரூ.3,346.67 பில்லியன் கொண்ட மொத்தத் தொகையினையும் பதிவு செய்திருந்தது. 2017இல் துணைநில் கடன்வழங்கல் வசதியின் கீழான கடன் வழங்கலின் மொத்த அளவு ரூ.8.84 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரி அளவுடன் ரூ.2,129.53 பில்லியனாகக் காணப்பட்டது.

### 6.2.3 நியதி ஒதுக்குத் தேவைப்பாடு

நியதி ஒதுக்குத் தேவைப்பாடு என்பது இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க, ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அவற்றின் மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களில் ஒரு பகுதியினை மத்திய வங்கியுடனான ஒதுக்குக் கணக்கில் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்ற குறைந்தபட்ச ஒதுக்குத் தொகையொன்றினை தீர்மானிக்கின்றது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நியதிஒதுக்குத் தேவைப்பாட்டின்படி நியதி ஒதுக்கின் பேணலை நிருவகித்தல் மற்றும் இது தொடர்பில், வர்த்தக வங்கிகளின் இணங்குவிப்புக்களைக் கண்காணித்தல் ஆகிய இரண்டிற்கும் பொறுப்பாக இருக்கிறது. 2016 சனவரி 16ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 7.5 சதவீதமான திருத்தப்பட்ட நியதிஒதுக்குத் தேவைப்பாடு 2017 காலப்பகுதியிலும் அதே மட்டத்தில் மாறாது தொடர்ந்தது.

### 6.2.4 வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ், மத்திய வங்கியால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுங்கால முற்பணங்கள் மீதான வட்டி வீதம் வங்கி வீதம் ஆகும். 2017 காலப்பகுதியில் வங்கி வீதமானது 15 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், 2017 காலப்பகுதியில் மத்திய வங்கி எந்தவொரு வர்த்தக வங்கிக்கும் இவ்வீதத்தில் நிதியினை வழங்கவில்லை.

## 6.3 வர்த்தக வங்கிகள் மற்றும் அரசிற்கான வங்கியாளர்

### 6.3.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நடைமுறைக் கணக்கு வசதிகளைத் தொடர்ச்சியாக வழங்கியதன் மூலம் வங்கிகளுக்கான வங்கியாளர் என்ற மத்திய வங்கியின் வகிபாகத்தினைச் செயற்படுத்துவதற்கு வசதியளித்தது. முதனிலை வணிகர்கள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் பங்கேற்பாளர்களாகவும் திறந்த சந்தை தொழிற்பாடு மற்றும் துணைநில் வசதிகள் போன்றவை தொடர்பில் மத்திய வங்கியின் இணைத்தரப்பினராக காணப்படுவதால், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் முதனிலை வணிகர்களுக்கு நடைமுறைக் கணக்கினை தொடர்ச்சியாக தொழிற்படுத்தியதுடன் தொடர்பான வசதிகளையும் அவர்களுக்கு வழங்கியது. இது நாட்டின் கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமைகளின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு உதவியது. 2017இன் இறுதியில் இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக 25 கணக்குகளையும் முதனிலை வணிர்களுக்காக 8 கணக்குகளையும் பேணியது. இக்கணக்குகள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன.

### 6.3.2 அரச கணக்குகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், அரச திணைக்களங்கள், அரச முகவர்கள், நிறுவனங்கள் மற்றும் நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைப் பேணியதுடன் அவற்றிற்குத் தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் வழங்கியதன் மூலம் அரசிற்கான வங்கியாளர் என்ற அதன் வகிபாகத்தினையும் ஆற்றியது. 2017 இறுதியில் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்ட கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 61 ஆகக் காணப்பட்டது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், இவ்வாண்டுப் பகுதியில், அரசாங்கத்தின் சார்பில் ரூ.15,767.4 பில்லியன் கொண்ட 20,114 கொடுக்கல்வாங்கல்களைக் கையாண்டது. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவை திறைசேரிக் கணக்குகளுக்கான துணைச் செயலாளர், பொதுப்படுகடன் திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கு, உள்நாட்டரசிறை ஆணையாளர் பெறுமதிசேர் வரி மீளளிப்புக் கணக்கு மற்றும் சனாதிபதி நிதியக் கணக்கு என்பனவற்றுடன் தொடர்பானவையாகக் காணப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு இறையாண்டில், மதிப்பிடப்பட்ட அரச அரசிறையில் 10 சதவீதம் என்ற உச்சமட்ட வரையறைகளுக்குட்பட்டு, கட்டணங்களெதுவுமின்றி அரசாங்கத்திற்கு முற்பணங்களை வழங்குகின்றது. 2017இன் தொடக்கத்தில், 2017ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட அரச அரசிறையின் அடிப்படையில், தற்காலிக முற்பணங்களின் தொகை 2016ஆம் ஆண்டிற்கான ரூ.185.1 பில்லியன் கொண்ட தற்காலிக முற்பணங்களுடன் ஒப்பிடுகையில் ரூ.18.8 பில்லியனால் ரூ.203.9 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் நாடாளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

## 6.4 ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ஏற்பாடு

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி ஏற்பாட்டினூடாக ஒரு நாளுக்குள்ளேயான நிதி கிடைப்பதனை ஏற்படுத்தியதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமானதும் வினைத்திறன்மிக்கதுமான தொழிற்பாட்டினை நோக்கித் தொடர்ந்தது. இவ்வசதியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பிணையங்களுக்கெதிராக கட்டணமெதுவுமின்றி வழங்கப்பட்டதுடன் இவை அதேநாளன்று சந்தை விலைகளில் ஏற்படக்கூடிய ஏதேனும் வேறுபாடுகளை ஈர்த்துக் கொள்வதற்கேதுவாகப் போதுமான இலாபத்துடன் அவற்றின் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்டன.

இவ்வாண்டுப் பகுதியில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் மொத்தப் பெறுமதியும் சராசரி நாளாந்தப் பெறுமதியும் முறையே ரூ.11,428 பில்லியனாகவும் ரூ.47.42 பில்லியனாகவும் காணப்பட்டன. இது ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் பயன்பாடு முன்னைய ஆண்டின் முறையே ரூ.9,351 கொண்ட பில்லியன் மொத்தப் பெறுமதி மற்றும் ரூ.38.8 பில்லியன் கொண்ட சராசரிப் பெறுமதி என்பனவற்றினைவிடக் கூடுதலான அதிகரிப்பொன்றினைக் காட்டியது.

### 6.5 பணத் தரகர்களின் மேற்பார்வை

2018 மாச்சு 05ம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 2018ம் ஆண்டின் 1ம் இலக்க பணத்தரகர் ஒழுங்கு விதி மூலம் 2013ம் ஆண்டின் 1ம் இலக்க பணத்தரகர் ஒழுங்கு விதி திருத்தப்பட்டதான 2016ம் ஆண்டின் 1ம் இலக்க பணத்தரகர் ஒழுங்கு விதிகள் ரத்தாவதுடன் பதிலிடப்படுகிறது. இந்த ஒழுங்கு விதிகள் பணம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் அரச பிணையங்கள் சந்தைகளில் விலையினைக் கண்டறியும் செயன்முறையில் பணத்தரகர்களின் வகிபாகத்திற்கு வசதியளிப்பதிலும் வழிகாட்டுவதிலும் அதிக வினைத்திறனுடையதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2018 மாச்சு முடிவில் இவ்வொழுங்கு விதியின் கீழ் மொத்தமாக ஒன்பது கம்பனிகள் "அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள்" குறித்துரைக்கப்பட்டனர். இவ்வாண்டுப் பகுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 8 தலத்திலான பரீட்சிப்புக்களை மேற்கொண்ட வேளையில் இக்கம்பனிகளின் பணிப்பாளர் சபையுடன் 10 கூட்டங்கள் நடத்தப்பட்டன. 2017இல், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் பணத்தரகர் ஒழுங்குவிதிகளின் மீறல்களுக்காக ஒரு அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகருக்கெதிராக ஒழுங்குபடுத்தல் நடவடிக்கையினை எடுத்தது.

**பணத் தரகர்களின் பட்டியல்**

1. பார்ட்லீட் மெக்லய் அன்ட் றோய் (பிறைவேற்) லிமிடட்
2. பெர்ஸ்ட் அலையன்ஸ் மணி புறோக்கர்ஸ் (பிறைவேற்) லிமிடட்
3. ஜோர்ச் ஸ்ருவர்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிறைவேற்) லிமிடட்
4. எம்விஎஸ் மணி புறோக்கர்ஸ் லிமிடட்
5. சென்றல் பெறேக்ஸ் அன்ட் மணி புரோக்கர்ஸ் லிமிடட்
6. பிக்கொட் சாப்மான் அன்ட் கம்பனி (பிறைவேற்) லிமிடட்
7. எஸ்எம்பி மணி புறோக்கர்ஸ் (பிறைவேற்) லிமிடட்
8. தப்றொபேன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேற்) லிமிடட்
9. விஷ்வின் மணி அன்ட் எக்ஸ்சேன்ஜ் புறோக்கர்ஸ் லிமிடட்

## 7. பொருளாதார ஆராய்ச்சி

1949ஆம் ஆண்டின் நாணய விதிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கி தாபிக்கப்பட்ட போது சட்டரீதியாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் உருவாக்கப்பட்டது. மத்திய வங்கியின் "பொருளியல் சிந்தனை மையம்" என்ற ரீதியில் கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் என்பனவற்றிற்கு நாணயச் சபைக்கும் ஆளுநருக்கும் வழிகாட்டுவதற்காகவும் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதற்காகவும், பணம், வங்கித் தொழில் மற்றும் பொதுவான ஈடுபாடுமிக்க ஏனைய பொருளாதார விடயங்கள் தொடர்பான தரவுகளை தயாரித்தல் மற்றும் பொருளாதார ஆராய்ச்சியை மேற்கொள்ளும் கடமை அளிக்கப்பட்டுள்ளது. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை பேணுதல் மற்றும் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டை பேணும் நோக்குடன் தனது பிரதான கடமைகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நிறைவேற்றியது. மேலும், அரசிற்கான பொருளாதார ஆலோசகர் என்ற பாத்திரத்தில் செயற்படும் வகையில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட இறைக் கொள்கை வழிமுறைகளின் விளைவை ஆராயும் அதே வேளையில் தோற்றம்பெற்று வரும் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் அரசிற்கு பரிந்துரைப்புக்களையும் கொள்கை ஆலோசனைகளையும் வழங்கியது. மேலும், வினைதிறனான கொள்கை வடிவமைத்தலை வசதிபடுத்துவதற்கான கொள்கை ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டதுடன், ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நியதிச்சட்ட அறிக்கைகளின் வெளியீடு தொடர்பான நியதிச்சட்டத் தேவைப்பாடுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பூர்த்திசெய்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்து சகல ஆர்வலர்களுக்கும் தகவல்கள் மற்றும் தரவுகளைப் பரப்பியதுடன், அரசாங்கத்தின் சார்பில் பன்னாட்டு நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியது.

பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரிவு, வேளாண்மைப் பிரிவு மற்றும் கைத்தொழில் பிரிவு என்ற மூன்று நடைமுறையிலிருந்த பிரிவுகளை ஒன்றுசோர்த்து ஓர் "உண்மைத் துறை" பிரிவை உருவாக்கும் வகையில் திணைக்களம் 2017ல் மீளமைக்கப்பட்டது. திணைக்களத்திற்குள் பிரிவுகளை சீரமைத்ததனால் ஆண்டுப்பகுதியில் அலுவலகர்களின் எண்ணிக்கையை முகாமைத்துவஞ்செய்யக்கூடியதாக இருந்ததுடன் ஆய்வுகளின் தரத்தையும் ஆழத்தையும் மேம்படுத்துவதற்கு உதவியது.

### 7.1 பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணல்

நாட்டின் மக்களின் உயர்ந்து செல்லும் வாழ்க்கைத் தரத்தினைப் பெறுவதற்கும் நிலைத்துநிற்கக்கூடிய வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய சூழலை பேணுவதற்கான முக்கிய தேவைப்பாடான மற்றும் ஒப்படைக்கப்பட்ட செய்பணியான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டின் பேணலை எய்தும் வகையில் நாணயக் கொள்கையை நடத்துவதற்கு மத்திய வங்கிக்கு வசதியளித்ததுடன், தேவையான தருணங்களில் முன்மதியான கொள்கை நடவடிக்கைகளை வசதிபடுத்தும் வகையில் உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டினதும் தொடர்பிலான பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. இதற்கேற்ப, நாணயக் கொள்கைக் குழுவின் செயலகம் என்ற ரீதியில், நாணயக் கொள்கையின் நடத்தல் தொடர்பில் நாணயச் சபைக்கு முன்மதியான கொள்கை ஆலோசனையை நாணயக் கொள்கை செயற்குழு வழங்குவதை இயலச்செய்யும் முகமாக தொடரும் கடுங்கண்காணிப்பு, மாதிரியுரு அடிப்படையிலான பேரண்டப்பொருளாதார எறிவுகள், பேரண்டப்பொருளாதார புள்ளிவிபரங்கள் மற்றும் மதிப்பீடுகளுடன் நிபுணத்துவ கருத்துக்களை பயன்படுத்தி முழுமையான முன்னோக்கிய பொருளாதார மற்றும் நாணய பகுப்பாய்வுகளுடன் அதன் தீர்க்க ஆலோசனைகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வசதிப்படுத்தியது. சந்தை அடிப்படையிலான செலாவணி வீத முறைமையிற்குட்பட்ட உண்மைத் துறை உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிக்கும் வேளையில், நடுத்தர இலக்குடன் விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்கான நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பை நோக்கிய நகர்வு மூலம் நாணயக் கொள்கையின் நடத்தல் வலுவூட்டப்படும் என்று இலங்கை மத்திய வங்கியால் "2018 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்" என்ற வருடாந்த கொள்கை அறிக்கையை தயாரிப்பதற்கு பொருளாதார ஆரயச்சித் திணைக்களம் உதவியது. இந்த தீர்மானத்திற்கேற்ப, 2017 யூன் முதல் நாணயக் கொள்கை செயற்குழு குழுமங்களில் நடுத்தரக் கால மாதிரியுரு அடிப்படையிலான எறிவுகளின் அடிப்படையிலான முன்னோக்கிய கொள்கை ஆய்வு மற்றும் நடுத்தரக் கால தோற்றப்பாட்டை நாணயக் கொள்கை வழிமுறையிற்குள் இணைத்தது. மேலும், நாணயக் கொள்கை செயற்குழு கலந்தாய்வுகளிற்கு முன்னராக திணைக்களங்களுக்கிடையிலான மற்றும் அலுவலகர்மட்ட குழுமங்கள் என்பன நாணயக் கொள்கை தீர்மானித்தல் வழிமுறைக்கு சேர்க்கப்பட்டன. இதே வேளையில், நாணயக் கொள்கை செயற்குழுவிற்கும் நாணயச் சபைக்கும் ஆழ்ந்த பொருளாதார ஆய்வுகளை நடத்துவதற்கு அலுவலர்கள் சிறந்த உள்ளீடுகளை வழங்குவதற்கும் அதிக நேரம் வழங்கும் முகமாக ஓராண்டிற்கான நாணயக்கொள்கை செயற்குழு குழுமங்களின் எண்ணிக்கை 12இலிருந்து 8ஆக குறைக்கப்பட்டது. நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடலை நோக்கிய நகர்விற்கு இலங்கை மத்திய வங்கியின் படிப்படியான ஆயுத்தத்தை இந்த மாற்றங்கள் வசதிபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆர்வலர்களின் கருத்துக்களை பெற்று ஆர்வலர்களும் மத்திய வங்கி இரண்டும் பயன்பெறும் வகையில் கொள்கைகளை ஒழுங்கமைப்பதற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் செயலக உதவியுடன் நாணயக் கொள்கை கலந்தாய்வுக் குழுவை இலங்கை மத்திய வங்கி மீள்நிர்மாணித்தது. நாணய மற்றும் நிதியியல் புள்ளிவிபரங்கள்

2016இன் அடிப்படையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாணய புள்ளிவிபரங்களை தொகுத்து, இதனை பன்னாட்டு நிதியியல் புள்ளிவிபரங்களில் பிரசுரிக்கப்படுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. பல தனித்துவமான மாதிரியுருக்களால் ஈடுசெய்யப்பட்ட நடுத்தரக் கால எறிவுகூறல் மற்றும் கொள்கை பகுப்பாய்வு முறைமையின் அடிப்படையிலான நாணயக் கொள்கை தீர்மானித்தல் வழிமுறையின் வலிமையை மேம்படுத்துவதற்காக பேரண்டப்பொருளாதார மாதிரியுருவமைத்தல் தொடர்பிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவித் தூதுக்குழுவுடன் 2017இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்து பணிபுரிந்தது. மேலும், நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்கு 2020ற்குள் நகர்வதை நோக்கிய ஓர் விரிவான வழிகாட்டலை உருவாக்குவதற்கு நாணய மற்றும் செலாவணி வீத கொள்கை பற்றிய பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவித் தூதுக்குழுவுடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் செயற்பட்டது.

### 7.2 வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டை பேணுவது

பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு உதவி புரியும் நோக்குடன், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பான விரிவான கணிப்பீட்டை தொடர்ந்து மேற்கொண்டதுடன், பொருத்தமான கொள்கை ஆலோசனை மற்றும் பரிந்துரைப்புக்களை வழங்கியது. பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நிதி தொடர்பான வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்கள் மற்றும் பெயரளவு மற்றும் உண்மைச் செலாவணி வீதங்களின் அசைவுகள் அடிப்படையிலான வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் பற்றிய ஆய்வுகள் பொருத்தமான கொள்கை தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நாணயக் கொள்கை செயற்குழு மற்றும் நாணயச் சபைக்கு அறிவிக்கப்பட்டது. செலாவணி வீதம் மீதான அழுத்தம் மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குககள் மீதான சாத்தியமான விளைவு என்பவற்றை அடையாளங் காண்பதற்காக சந்தை அபிவிருத்திகளை கண்காணித்த அதே வேளையில், நாணய விதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின்படி, அரசு பெறவிருக்கும் பல வெளிநாட்டுக் கடன்களின் நாணயக் கொள்கை மீதான விளைவை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்து மதிப்பிட்டது.

பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான சிறப்பு எடுப்பனவு உரிமை 1.1 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொ. 1.5 பில்லியன்) மூன்றாண்டு விரிவாக்கப்பட்ட நிதி வசதிக்கு கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட கணியஞ் சார் செயலாற்ற பிரமாணங்கள், குறிப்பீடுசெய்யப்பட்ட இலக்குகள் மற்றும் அமைப்பியல் ரீதியான அடித்தள அளவு குறியீடுகள் தொடர்பான செய்றபாட்டை தொடர்ந்து கண்காணிப்பது மற்றும் தீர்மானமெடுத்தலில் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு உதவும் வகையில் அடிக்கடி புதிய தகவல்களை வழங்குவதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் துணைச்சாதகமாகக் காணப்பட்டது. இதற்கேற்ப, இலங்கை மத்திய வங்கியின் ஏனைய தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் தொடர்புடைய அமைச்சுக்களின் உதவியுடன், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஒருங்கிணைப்பின் குவியப் புள்ளியாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நிகழ்ச்சித்திட்ட இலக்குகள் மற்றும் செயலாற்றம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்களில் மையப்புள்ளியாகச் செயற்பட்டது.

பன்னாட்டு ரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்ட தரவுசார் தரங்களுக்கு இணங்கும் வகையில் வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களின் தொகுத்தல் மற்றும் பரப்பலை மேம்படுத்துவதற்காக ஆண்டுப்பகுதியில் பல முன்னெடுப்புக்கள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டன. இதற்கேற்ப, படிநிலை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 04க்கு இணங்க வாணிகச் சரக்கு வர்த்தக புள்ளிவிபரங்கள் தொகுக்கப்பட்டதுடன், நடைமுறையிலுள்ள வகைப்படுத்தலின் அடிப்படையிலான தரவுகள் மற்றும் புதிய வகைபடுத்தலின் அடிப்படையிலான தரவுகள் ஆண்டறிக்கை 2017 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. சென்மதி நிலுவை புள்ளிவிபரங்கள் மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலை புள்ளிவிபரங்களை சென்மதி நிலுவை கையேடு 6 இன் வடிவமைப்பிற்குக் கீழ் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ச்சியாக காலாண்டு அடிப்படையில் வெளியீடு செய்த வேளையில், உலக வங்கிக்கு காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களை உரிய நேரத்தில் சமர்ப்பித்ததுடன், ஆண்டடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீட்டிற்கு நேரடி முதலீட்டுத் தரவுகளையும் அனுப்பீடு செய்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் சிறப்புத் தரவு பரப்பல் தரங்களின் முன் வெளியீடு நாட்காட்டிற்கேற்ப தரவுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆண்டுக்காலப்பகுதியில் வெற்றிகரமாக பரப்பியது. மேலும், தரவுகளின் துல்லியம் மற்றும் குறித்த காலந்தவறாமை என்பவற்றை நிச்சயப்படுத்தும் வகையில், பொருளாதார ஆரய்ச்சித் திணைக்களம் ஆண்டுப்பகுதியில் பல அளவீடுகளை மேற்கொண்டது. தனியார் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய தரவுகளையும் சேகரிப்பதற்கான வருடாந்த பன்னாட்டு முதலீடு அளவீடு மற்றும் தகவல் தொழில்நுட்பம், தொடர்பூட்டல், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதி போன்ற பல கைத்தொழில்களை உள்ளடக்கிய பணிகள் வர்த்தகம் தொடர்பான அளவீடுகளை இந்த அளவீடுகள் உள்ளடக்கியது. உள்நோக்கிய தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் தொடர்பான வர்த்தக வங்கிகளுடனான மாதாந்த அளவீடும் ஆண்டுப்பகுதியில் தொடரப்பட்டது.

### 7.3 முன்கூட்டிய கொள்கை மதியுரைகளை வழங்குதல்

முக்கியமாக நாணயக் கொள்கை, செலாவணிக் கொள்கை மற்றும் இறைத் துறை தொடர்பான விடயங்கள் பற்றி பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது 2017ஆம் ஆண்டிலும் மத்திய வங்கியின் மூத்த முகாமைத்துவத்திற்கும் அரசாங்கத்திற்கும் முன்கூட்டிய கொள்கை மதியுரைகளைத் தொடர்ந்தும் வழங்கியது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 116 (1) இற்கேற்ப, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆண்டின் முதலரையாண்டில் பொருளாதாரத்தின் அபிவிருத்திகளினை வெளிப்படுத்துகின்ற இரகசிய அறிக்கையான செத்தெம்பர் 15ஆம் திகதி அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சருக்கு சமர்ப்பித்தது. இந்த அறிக்கையானது 2018 இற்கான அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்கும் செய்முறையில் பயன்படுத்தக்கூடிய கொள்கைக் குறிப்புக்களையும் உள்ளடக்கியிருந்தது. இதற்கு மேலதிகமான, நாணய விதிச் சட்டத்தில் பல்வேறு பிரிவுகளின் சட்ட ரீதியான தேவைப்பாட்டிற்கேற்ப மாண்புமிகு நிதியமைச்சருக்கு கொள்கை மதிப்பீடுகளையும் ஆலோசனையையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியது. மேலும், பல எண்ணிக்கையான அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் தேசிய வர்த்தகக் கொள்கை மற்றும் தேசிய ஏற்றுமதி தந்திரோபாயம் போன்ற பல்வேறு கொள்கை ஆவணங்களின் பேரண்டப் பொருளாதாரத் தாக்கங்கள் பற்றிய சுயாதீனக் கருத்துரைகளையும் இக்காலப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் குழுவில் சேவையாற்றுவதுடன், திணைக்களத்தின் சிரேஸ்ட அலுவலகர்கள் சந்தை தொழிற்பாடுகள் குழு, உள்நாட்டு படுகடன் முகாமைத்துவக் குழு, முதலீட்டு மேற்பார்வைக் குழு, வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழு மத்திய வங்கியின் மூலதனத்தின் முன்மதியுடைய மட்டத்தினைத் தீர்மானிப்பதற்கான குழு, நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடலினை நிறைவேற்றுவதற்கான குழு, இலங்கையில் நிலைத்துநிற்கும் நிதிக்கான வழிகாட்டலொன்றினை நிறைவேற்றுவதற்கான ஆலோசனைக் குழு, நூலக ஆலோசனைக் குழு மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள் குழு மற்றும் எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமைக்கான குழு மற்றும் நிதியியல் வலையமைப்பு முறைமையைப் புதுப்பிப்பதற்கான குழு போன்ற பல உள்ளகக் குழுக்களிலும் அங்கத்தவர்களாகத் தொடர்ந்தும் பணியாற்றினர்.

பல்வேறுப்பட்ட வெளிவாரியான நிறுவனங்களின் பல செயற்குழுக்களிலும் சபைகளிலும் உறுப்பினர்களாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணியாளர்கள் தொடர்ந்தும் சேவையாற்றி கொள்கை ஆலோசனைகளையும் வழங்கினர். இது, ஹெக்டர் கொப்பேக்கடுவ வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நீதிமன்றம் வெகுசன ஊடக அமைச்சு, வலு மற்றும் சக்தி அமைச்சு மற்றும் இலங்கை மின்சபை போன்றவற்றுடன் தொடர்புபட்ட செயற்குழுக்கள் மற்றும் சபைகளை உள்ளடக்குகின்றது. தேசிய ஏற்றுமதி உபாயத்தினை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப மையக் குழுவில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலரொருவர் பணியாற்றினார். இதற்கு மேலதிகமாக, கெரவலப்பிட்டிய வலுப் பொறியினை நிர்மாணிப்பதற்கான செயற்றிட்டத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள், ஆனையிறவு உப்பளத்தினைப் புனரமைப்பது, வரையறுக்கப்பட்ட பரந்த இரசாயனக் கம்பனியை மீளக்கட்டியமைப்பது, வரையறுக்கப்பட்ட இலங்கை கனியுப்பு நிலங்களை மீள்கட்டியமைப்பது போன்ற செயற்றிட்டக் குழுக்கள், குடும்ப வரவு செலவுத்திட்ட அலகு மற்றும் தேசிய வர்த்தக இயக்கச் செயற்குழு மற்றும் அரச நிதிப் புள்ளிவிபரங்கள் போன்ற ஏனைய தேசிய மட்டத்திலான குழுக்கள் போன்றவை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்களினால் இவ்வாண்டுப்பகுதியில் பணியாற்றப்பட்ட ஏனைய குழுக்களாகும்.

### 7.4 நியதிச்சட்ட வெளியீடுகளும் தரவுகள் மற்றும் தகவல்களைப் பரப்புதலும்

இலங்கை மத்திய வங்கியின் முதன்மைப் பொறுப்பாக நியதிச்சட்ட வெளியீடுகளை வெளியிடுதல் மற்றும் காலந்தவறாமலும் சரியான முறையிலும் தரவுகளையும் தகவல்களையும் பரப்புவதற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தால் ஏனைய திணைக்களங்களின் பங்களிப்புடன் இரு பாரிய ஆண்டு வெளியீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 35 இன் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில் 2016இற்கான ஆண்டறிக்கை மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டது. ஆண்டறிக்கை 2016 பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உலகளாவிய பொருளாதாரச் சூழல், நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடு, ஆண்டுப்பகுதியில் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கி பிரச்சனைகள் மற்றும் கொள்கைப் பதிலிறுப்புக்களின் அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வுடன் மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள் வங்கித்தொழில் முறைமையின் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய முக்கிய சட்டவாக்கங்கள் மற்றும் புள்ளிவிபரப் பின்னிணைப்பினையும் வழங்கியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது “அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் 2017இன் முக்கிய பண்புகள் மற்றும் 2018 இற்கான வாய்ப்புக்கள்” என்ற பொருளாதாரத்தின் இடைக்கால மீளாய்வினை 2017 நவெம்பரில் மூன்று மொழிகளிலும் வெளியிட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ச்சியாக பதினொரு ஆண்டுகளாக 2018 சனவரி 03ஆம் நாளன்று பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்ட “வழிகாட்டல் 2018: 2018 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்” எனும் மத்திய வங்கியின் கொள்கை அறிக்கையை 2017 திசெம்பரில் தயாரிப்பதற்கு ஆளுநருக்கு உதவிபுரிந்தது. ஆர்வலர்கள் தமது உபாயங்களை அதிக நிச்சயத்துடன் வடிவமைத்துக் கொள்வதற்கும் திட்டமிட்டுக் கொள்வதற்கும் துணைபுரிவதற்காக மத்திய வங்கியின் எதிர்காலக் கொள்கைப் போக்கு மற்றும் செயற்பாடுகளை மேம்பட்ட வெளிப்படைத்தன்மை மற்றும் விளக்கத்துடன் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் வழிகாட்டல் அறிவிக்கப்பட்டது.

பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களுக்கும் நன்மையளிக்கும் வகையில் பொருளாதார தரவு மற்றும் தகவல்களைப் பரப்புவது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் வசமுள்ள முக்கியதொரு கடப்பாடாகும். இதன்படி, பொருளாதாரத்தின் அனைத்து துறைகளினதும் தரவுகளை உள்ளடக்கிய மாதாந்த புள்ளிவிபரக் குறிப்புடன் ஏனைய பொருளாதார மற்றும் நிதியியல் குறிகாட்டிகளை நாளாந்த, வாராந்த, மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டு அடிப்படையில் மத்திய வங்கியின் இணையத்தளத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியிட்டது. இவ்வாண்டு காலப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வாராந்த மற்றும் நாளாந்த பொருளாதாரக் குறிகாட்டிகளுக்கான உள்ளீட்டினைத் தொடர்ந்தும் வழங்கியதுடன் முக்கிய பொருளாதார மற்றும் நிதியியல் புள்ளிவிபரங்களின் கட்புலன் வெளிப்படுத்துகையான பேரண்டப் பொருளாதார வரைபடத் தொகுதியினை மும்மொழிகளிலும் வெளியிட்டது. இதற்கு மேலதிகமாக, நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளினை மேம்படுத்துவதற்காக மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்பான கிரமமான பத்திரிகை வெளியீடுகளையும் இலங்கையின் வெளிநாட்டுத் துறையின் தற்போதைய அபிவிருத்திகளைத் தொடர்பூட்டும் நோக்கில் நேரந்தவறாமல் வெளிநாட்டுத் துறைச் செயற்பாடு தொடர்பான பத்திரிகை வெளியீடுகளையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியிட்டது. இதற்கு மேலாக, பொதுமக்களுக்கு ஈடுபாடுடைய பொருளாதாரத்தின் பல்வேறு நிகழ்வுகள் பற்றிய பத்திரிகை வெளியீடுகளையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியிட்டது.

### 7.5 கொள்கை ஆராய்ச்சியில் ஈடுபடுதலும் அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதலும்

மத்திய வங்கியின் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளின் இன்றியமையாததொரு பகுதியாக ஆராய்ச்சியும் பகுப்பாய்வும் முன்னணியிலிருந்து வருவதனால், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாணயக் கொள்கைக் குழுவும் நாணயச் சபையும் நாணயக் கொள்கை தொடர்பில் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த தீர்மானங்களை எடுப்பதற்கு வசதியளிக்கும் விதத்தில் கிரமமான அடிப்படையில் சமகால முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார பிரச்சனைகள் மீது கொள்கை ஆய்வுகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய, பிந்திய அபிவிருத்திகள் உட்பட, உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட்டு வருவதுடன் முக்கிய பேரண்டப் பொருளாதாரத் துறைகளிலும் அதேபோன்று மூலதன மற்றும் நிதியியல் சந்தைகளிலும் காணப்பட்ட பிரச்சனைகள் தகவல் தொடர்களைக் கொண்ட சபைப் பத்திரங்கள், நாணயக் கொள்கை சபைப் பத்திரம், அவதானிப்பு அறிக்கைகள் மற்றும் விளக்கவுரைகள் ஆகிய வடிவங்களில் நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

மத்திய வங்கியில் ஆராய்ச்சி கலாச்சாரத்தினை வளர்த்தெடுக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட உள்ளகக் குழுவான ஆராய்ச்சி மதியுரைக் குழு ஆண்டு முழுவதும் ஆராய்ச்சியுடன் தொடர்புபட்ட பணிகள் மற்றும் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியான வழிகாட்டல்களை வழங்கியது. இவ்வாண்டுப் பகுதியில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் ஒத்துழைப்புடன் ஆராய்ச்சி மதியுரைக் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சி முறையியல் மீதான குறுகிய கால பாடநெறியான “பொருளாதாரத்தில் ஆராய்ச்சி” வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தில் நடத்தப்பட்டதுடன் ஆராய்ச்சி மதியுரைக் குழு உறுப்பினர்கள் பாடநெறியினை மூலவள ஆளணியினராக பணியாற்றினார். இப்பாடநெறியாது, ஆராய்ச்சி முறையியல் தொடர்பில் பெறுமதிமிக்க ஆழ்ந்த சிந்தனைவாதங்களை வழங்குகின்றதன் மூலம் மத்திய வங்கி மற்றும் ஏனைய கல்வியியல் நிறுவனங்களிலிருந்தான பங்கேற்பாளர்களின் பல்வேறு வகையான ஆராய்ச்சி தேர்ச்சிகளை அதிகரிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கி மத்திய வங்கியின் ஆராய்ச்சிச் சஞ்சிகையான உயர் அலுவலர் ஆய்வின் 2016ஆம் ஆண்டின் தொகுதி 46 எண் 1 மற்றும் எண் 2, 2017ஆம் ஆண்டின் தொகுதி 47 எண் 1 என்பனவற்றைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியிட்டது. இது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களினாலும் மற்றைய திணைக்களங்களின் அலுவலர்களினாலும் நிறைவு செய்யப்பட்ட அனைத்தையுமுள்ளடக்கிய 6

ஆராய்ச்சிக் கட்டுரைகளை உள்ளடக்கியிருந்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொருளாதாரத் துறையில் தோற்றம் பெற்றுவரும் பிரச்சனைகள் தொடர்பிலான அறிவினை உயர்த்தும் மற்றும் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் திணைக்களத்திற்குள்ளே ஆய்வரங்குத் தொடர்களை நடத்தியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இவ்வாண்டுப்பகுதியில் அநேக பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலிருந்து உள்ளக பயிற்சிக்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு வருகைதந்த குழுவினருக்கு மத்திய வங்கித்தொழிலின் நடைமுறை அம்சங்கள் தொடர்பில் அவர்களது விழிப்புணர்வினை அதிகரித்தமையின் மூலம் தொடர்ச்சியாக அறிவூட்டியது.

மத்திய வங்கியின் 10ஆவது பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு 2017 திசெம்பரில் ஆராய்ச்சி மதியுரை குழுவினால் வெற்றிகரமாக ஒழுங்கு செய்யப்பட்டது. "வீரியம் மிக்க எதிர்காலத்தினை நோக்கிய பேரண்டப் பொருளாதார சீர்திருத்தங்கள்" என்ற தொனிப்பொருளின் கீழ் மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது. தற்போதைய பேரண்டப் பொருளாதாரக் கொள்கைப் பிரச்சனைகள் மீதான புதுமை வாய்ந்த கோட்பாட்டு மற்றும் அனுபவ ரீதியான ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடனும் அதேவேளையில் பன்முகத்தன்மை கொண்ட நோக்குகளிலிருந்து அவர்களது அனுபவங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் கொள்கை வகுப்பு மற்றும் கல்வியியல் நிறுவனங்களிலிருந்து வந்த ஆராய்ச்சியாளர்களுக்கு தளம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு - 2017இன் முக்கிய உரையினை அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் கெய்த் ஹோட்டன் "சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட பொதுக் கொள்கை: வினைத்திறன் வழிமுறைகளைப் பிரயோகித்தல் - பகிரங்கமாக நிதியிடப்படுகின்ற அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள்" என்ற தொனிப்பொருளில் ஆற்றினார். கடந்த காலங்களைப் போன்றே 10ஆவது பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி நிறுவனங்கள் அவுஸ்திரேலியா பிரான்சு, ஜேர்மனி, இந்தியா அதேபோன்று இலங்கை உள்ளிட்ட உலகம் முழுவதிலுமுள்ள மத்திய வங்கிகள் என்பனவற்றிலிருந்தான புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர்களைக் கவர்ந்தது. கடுமையான மீளாய்வுச் செயன்முறைகளின் பின்னர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களிடமிருந்தான மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகள் உட்பட எட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுவதற்காக தெரிவுசெய்யப்பட்டன. பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு - 2017இல் மிகச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கான முனைவர் டி.எஸ். விஜேசிங்க ஞாபகார்த்த விருது கல்விக்கான விடுப்பில் இருக்கும் மத்திய வங்கி அலுவலராக திரு ஹர்ச பரானவிதானவிற்கு "செலாவணி வீத இலக்கிடலிலிருந்து மாறிச் செல்லுதல்: இலங்கை பற்றிய சிறப்பு ஆய்வு" என்ற தலைப்பிலான கட்டுரைக்கு வழங்கப்பட்டது. பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு - 2016இன் மாநாட்டு முன்னோட்டமும் இம்மாநாட்டில் வெளியிடப்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளை உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வெளியீடுகளில் தொடர்ந்தும் பிரசுரித்தனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களுடன் இணைந்து "இலங்கைக்கான திறந்த பொருளாதார காலாண்டு மாதிரியொன்று" என்ற தலைப்பில் கட்டுரையொன்றினை வரைந்துள்ளனர். மேலதிகப் பணிப்பாளர் முனைவர் சி. அமரசேகர கூட்டாக "நாணயக் கொள்கை அதிர்வுகளின் பேரண்டப் பொருளாதாரத் தாக்கங்கள்: இலங்கையிலிருந்தான சான்றுகள்" என்ற தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியிருக்கிறார். இது 2017 மாச்சின் சவுத் ஏசிய எக்கனமிக் ஜேர்னலில் பிரசுரமாகியிருக்கிறது. 2017இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள துணைப் பணிப்பாளர் முனைவர் சுமிலா வானகுரு "நாணயச் சந்தைகளுக்கு உலகளாவிய திரவத்தன்மையின் சமநிலையற்ற தன்மையின் கசிவுகள்: தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரத்தின் நோக்கில்" என்ற தலைப்பிலான கட்டுரை தென்னாசிய மத்திய வங்கிகள் நிலையத்தினால் வெளியிடப்பட்ட "உலகளாவிய திரவத்தன்மையும் தென்னாசிய மத்திய வங்கி பொருளாதாரங்களின் மீதான தாக்கமும்" என்ற நூலில் வெளியாகியிருக்கிறது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் முனைவர் ரசிக்கா யட்டிகம்மன்னவினால் ஆக்கப்பட்ட "திரவத்தன்மை மற்றும் விலை இயக்காவற்றலுடன் தொடர்புபட்ட தன்னியக்கமான பின்னோக்கிய நிபந்தனை ரீதியான கால மாதிரி" என்ற தலைப்பிலான கட்டுரை 2017 யூனில் அவுஸ்திரேலியன் கணிதவியல் சங்கத்தின் செய்தித்திரட்டில் வெளியாயிற்று. பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் மற்றும் மேலதிகப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பல்வேறு ஆராய்ச்சி அரங்குகளில் கட்டுரைகளைச் சமர்ப்பித்ததுடன் கலந்துரையாடுபவர்களாகவும் பணியாற்றினார். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் இவ்வாண்டுப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற காலாண்டு ஆங்கில காலாந்தர வெளியீடான நியூஸ் சேர்வே உட்பட காலாந்தர வெளியீடுகளில் தொடர்ந்தும் வெளியிடப்பட்டனர்.

அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், மற்றைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் நன்மைக்காக மத்திய வங்கியின் தொடர்பூட்டல் திணைக்களம், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் மற்றும் பிரதேச அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் பொதுமக்களின் பொருளாதார அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் அறிவு பகிர்வு முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. ஆண்டறிக்கை 2016 தொடர்பான பகிரங்க விரிவுரைகள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள மூத்த அலுவலர்களினால் அனைத்து மூன்று மொழிகளிலும் நடத்தப்பட்டன. மத்திய வங்கியின் குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாடுகள், நாணயக் கொள்கை, இறைக் கொள்கை, வெளிநாட்டுத் துறைக் கொள்கை போன்ற துறைகளிலும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகளிலும் நாடு முழுவதும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களினால் பெரும் எண்ணிக்கையான கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் வங்கிக்கு விஜயம் செய்யும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு மத்திய வங்கித்தொழில் மற்றும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் மீதான விளக்கவுரைகளையும் ஆற்றியிருக்கின்றனர். அத்துடன், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்களினால் உள்ளக பட்டப்பின்படிப்பில் ஆர்வம் கொண்டவர்களுக்கு ஆராய்ச்சி தேர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்கு உயர்தர ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தயாரித்தல் மூலம் உதவியதுடன் மத்திய வங்கியின் பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில் திட்டத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக பேரண்டப் பொருளாதாரம், நுண்பாகப் பொருளாதாரம் மற்றும் கணிதவியலில் குறுங்கால பாடநெறிகள் நடத்தப்பட்டன. அவர்கள் கனிஷ்ட அலுவலர்களுக்கு ஆராய்ச்சிக்கு முன்னரான ஆலோசனைப் பணிகளை வழங்கியதுடன் மற்றைய திணைக்களங்களிலுள்ள அலுவலர்களுக்கும் தேவையான அடிப்படையில் எப்பொழுது தேவையோ அப்பொழுதெல்லாம் ஆராய்ச்சி மேற்பார்வைகளை வழங்கினர். தென்கிழக்காசிய மத்திய வங்கி நிலையத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்குப் புறம்பாக பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் கோரிக்கைப்படி, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் 15 ஆராய்ச்சி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்ததுடன் 12 ஆராய்ச்சிக் கட்டுரைகளை நிறைவு செய்திருந்தனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு - 2017இற்காகப் பெறப்பட்ட 70 ஆராய்ச்சி முன்மொழிவுகளையும் மதிப்பீடு செய்துள்ளனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பல அலுவலர்கள் தொடர்பூட்டல் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட முறையே சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் நடத்தப்பட்ட தகிஷிலாவ மற்றும் அறிவூற்று ஆகிய தொலைக்காட்சிக் கல்விசார் தொடர் விரிவுரைகளில் வள ஆளணியினராகக் கலந்து கொண்டிருக்கின்றனர். அவை மட்டுமன்றி திணைக்கள அலுவலர்கள் தொலைத்தொடர்பூட்டல் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் நடத்தப்பட்ட

பாடசாலைகளுக்குமிடையேயான வினாடிவினாப் போட்டியான ஈகோன்-ஐகோன் நிகழ்ச்சிக்கும் ஆதரவளித்துள்ளனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் வங்கிகளுக்கிடையிலான வினாடி வினாப் போட்டி ஒழுங்கமைப்பிற்கும் தீவிரமான பங்களிப்பினைச் செலுத்தியுள்ளனர்.

### 7.6 பன்னாட்டு உறவுகளைப் பேணுதல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பன்னாட்டு நாணய நிதியம், தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் தென்கிழக்காசியா நியூசிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் சார்க் நிதியம் போன்ற பல்புடை நிதிய பன்னாட்டு அமைப்புக்களுக்கான மத்திய தொடர்பு மையமாக மத்திய வங்கியினதும் அரசாங்கத்தினதும் சார்பில் முக்கியமான பங்கினைத் தொடர்ந்தும் ஆற்றி வருகின்றது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அரசாங்கம் மற்றும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய முக்கிய பன்னாட்டு அமைப்புக்களுக்கிடையேயான இணைப்பு முயற்சிகளுக்கு ஆதரவளித்து வருகின்றது.

பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நாட்டிற்கான தரமிடல் முகவர்கள் உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு அமைப்புக்களுக்கு 2017இலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பேரண்டப் பொருளாதார புள்ளிவிபரங்களை வழங்கியிருக்கிறது. இவ்வாண்டுப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வருடாந்த உறுப்புரை IV ஆலோசனைக்குழுவுடன் சேர்த்து பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபட்ட இரண்டு பன்னாட்டு நாணய நிதிய தூதுக்குழுக்களின் பணியினை இணைத்தது. இவற்றிற்குப் புறம்பாக, எதிர்வுகூறல் மற்றும் கொள்கை பகுப்பாய்வு முறைமையுடன் தொடர்பான மூன்று பன்னாட்டு நாணய நிதிய தொழில்நுட்ப உதவி தூதுக்குழுக்களுக்குடன் தொடர்பான இணைப்புக்களையும் மேற்கொண்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பல்வேறு தென்கிழக்காசிய மத்திய வங்கியின் நிகழ்வுகள் தொடர்பில் இப்பிராந்தியத்திலுள்ள மற்றைய மத்திய வங்கிகளுடன் தொடர்புகளை மேற்கொண்டிருந்தனர். தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர் சபையின் 37ஆவது கூட்டத்தில் 2018ஆம் ஆண்டிற்கான 38ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கியின் ஆளுநர் சபைக்கான தலைமைப் பதவியும் 2019ஆம் ஆண்டிற்கான தென்கிழக்காசிய நிறைவேற்றுக் குழுவின் தலைமைப் பதவியும் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் அநுசரணையுடனான இம்மாபெரும் நிகழ்வில் 19 தென்கிழக்காசிய மத்திய வங்கியின் மூத்த உறுப்பினர்களும் தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் நிலையத்தின் மூத்த உறுப்பினர்களம் கலந்து கொள்வர். அதுமட்டுமன்றி, இலங்கை மத்திய வங்கி 2017 யூலையில் நடைபெற்ற 34ஆவது சார்க் நிதிய குழுக் கூட்டத்திற்கும் அநுசரணை வழங்கியது. இக்கூட்டத்தில் சார்க் பிராந்தியத்திலுள்ள மத்திய வங்கிகள் மற்றும் நிதி அமைச்சுக்களிலிருந்தான ஆளுநர்கள், நிதிச் செயலாளர்கள் மற்றும் ஏனைய தூதுக்குழுவினர்கள் கலந்து கொண்டனர். சார்க் நிதியக் குழுமத்தின் கூட்டத்தினைத் தொடர்ந்து, "உலகளாவிய நிச்சமற்ற தன்மைகளுக்கு மத்தியிலும் இவ்விடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான சாத்தியமான கொள்கை வழிமுறைகள்: சார்க் பிராந்தியத்திற்கான சவால்கள்" என்ற தொனிப்பொருளில் சார்க் நிதிய ஆளுநர்கள் மாநாடு இலங்கை மத்திய வங்கியின் ஜோர்ன் எக்ஸ்ரர் பன்னாட்டு மாநாடு மண்டபத்தில் நடைபெற்றது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இதனை ஒழுங்குசெய்த திணைக்களமாக விளங்கியது. மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட "சார்க் பிராந்தியத்தில் நிதியியல் உள்ளீடுகள்" என்ற விடயம் தொடர்பில் சார்க் நிதிய ஒத்துழைப்பு ஆராய்ச்சியினை நடத்திய குழுவின் உறுப்பினர்களிரொருவராக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களிலொருவர் விளங்கினார். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளரொருவர் இவ்வாராய்ச்சி ஆய்வின் கலந்துரையாளரொருவராகக் கலந்து கொண்டார். இது இலங்கைப் பொருளாதாரத்தின் மீது உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளின் தாக்கம் மற்றும் இவ்விடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான சாத்தியமான கொள்கை வழிமுறைகள் எனும் தொனிப்பொருளில் ஒரு பத்திரத்தை திணைக்களப் பணிப்பாளர் வெளிப்படுத்தினார். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2016இல் ஆரம்பிக்கப்பட்ட சார்க் நிதியத்தின் தரவுத் தளத்திற்கு மாதாந்த அடிப்படையில் தொடர்பான தரவுகளைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. மேலும், 2017இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஏழு பாதிக்கப்படக்கூடிய குறிகாட்டிகள் தொடர்பான தரவுகளை சார்க் நிதியத்தின் தரவுத் தளத்திற்கு காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கத் தொடங்கியுள்ளது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொருளாதாரத்தின் அண்மைய அபிவிருத்தி, போக்கு மற்றும் முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகள் மற்றும் பொருளாதார தோற்றப்பாடு என்பனவற்றினை எடுத்துக்காட்டும் பல்வேறுபட்ட முதலீட்டாளர் அரங்கங்களுக்கான விளக்கவுரைகளைத் தயாரிக்கும் பணிகளை இணைத்து வருகிறது. இவ்வாண்டுப்பகுதியில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஸ்டான்டட் அன்ட் புவர் மூடிஸ் மற்றும் பிட்ஜ் போன்ற நாட்டிற்கான பன்னாட்டு கொடுகடன் தரமிடல் முகவர்களுடன் தொடர்ந்தும் பணியாற்றியதன் மூலம் இலங்கையின் கொடுகடன் நன்மதிப்பினை அதிகரிக்கும் விதத்தில் நாட்டிற்கான செல்வ நிதியம், ஓய்வூதிய நிதியம் மற்றும் ஏனைய முதலீட்டாளர் நிதியம் என்பனவற்றிற்கு வசதியளித்தது.

## 8. ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேம நிதியம் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, நிதியத்தின் அனைத்து நிருவாக அதிகாரங்களும் செயற்பாடுகளும் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில் நிதிய முகாமைத்துவத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற முறையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாணயச் சபை அதன் செயற்பாட்டினை ஆற்றுவதில் ஒரு தொழிற்பாட்டு சக்தியாக தொழிற்படுவதற்காக ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திற்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது.

### 8.1 திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திடம் உறுப்பினர் பங்களிப்புக்களையும் மேலதிகக் கட்டணங்களையும் சேகரித்தல், பொதுக் கணக்குகளையும் உறுப்பினர் கணக்குகளையும் பேணுதல், உறுப்பினர் கணக்குகளுக்கு வட்டியை வரவு வைத்தல், நிதியத்தின் பயனாளிகளுக்கு நன்மைகளைக் கொடுப்பனவு செய்தல், மிகையான நிதியங்களை முதலீடு செய்தல் மற்றும் நாணயச் சபையும் தொழில் ஆணையாளரும் தமது கடமைகளையும் தொழிற்பாடுகளையும் மேற்கொள்ளும் வேளையில் ஏற்படும் செலவினங்களை விதித்தல் ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேம நிதியத் திணைக்களம் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் கொள்கைகளின்படி 2017ஆம் ஆண்டுப் பகுதியில் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன் தொழில் ஆணையாளருடன் நெருக்கமான விதத்தில் ஒத்துழைத்தது.

### 8.2 நடவடிக்கைகளின் செயலாற்றம்

#### அ) நிதியத்தின் பெறுமதி, உறுப்பினர் நிலுவைகள் மற்றும் மீளளிப்புக்கள்

2017 இறுதியில், நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2016 இறுதியின் ரூ.1,841.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.2,066.3 பில்லியனுக்கு 12.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முதலீடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருவாயும் பெறப்பட்ட தேறிய பங்களிப்புக்களுமே (பங்களிப்புக்களிலிருந்து மீளளிப்புக்களைக் கழித்த பின்னர்) காரணங்களாகும். உறுப்பினர்களின் வட்டி உட்பட உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்புக்கள் 2017 இறுதியில் ரூ.2,020.8 பில்லியனாக விளங்கி 2016 இறுதியின் ரூ.1,810.6

பில்லியனிலிருந்து 11.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது (அட்டவணை II-9). பங்களிப்பு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.118.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.133.3 பில்லியனுக்கு 12.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் 2017இல் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட மொத்த மீளளிப்புக்கள் ரூ.117.5 பில்லியனாக விளங்கின. வீடமைப்பு மற்றும் மருத்துவ தேவைப்பாடுகளுக்கான 30 சதவீதம் கொண்ட மீள்எடுப்பனவு வசதியின் கீழ் செய்யப்பட்ட கொடுப்பனவுகளே 2016இன் மொத்த மீள்எடுப்பனவுகளைவிட 8.4 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பிற்கு காரணமாகும். இதற்கமைய, தேறிய பங்களிப்பு 2016இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.9.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.15.8 பில்லியனுக்கு அதிகரித்தன. நிதியத்தின் தேறிய வருமானம் முன்னைய ஆண்டின் ரூ.175.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ரூ.202.9 பில்லியனுக்கு அதிகரித்து 15.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

### அட்டவணை II - 9
### நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய குறிகாட்டிகள்

| விடயம் | 2016 | 2017(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| நிதியின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்.) | 1,841.5 | 2,066.3 | 12.2 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்.) | 1,810.6 | 2,020.8 | 11.6 |
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 17.3 | 17.3 | - |
| பங்களிப்புச் செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் (மில்) | 2.6 | 2.6 | - |
| பங்களிப்புச் செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் (மில்) | 14.7 | 14.7 | - |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 118.3 | 133.3 | 12.7 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்.) | 108.4 | 117.5 | 8.4 |
| தேறிய பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 9.9 | 15.8 | 59.6 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 187,147 | 260,989 | 39.5 |
| தேறிய வருமானம் (ரூ.பில்.) | 175.9 | 202.9 | 15.3 |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊ.சே.நி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

#### ஆ) நிதியங்களின் முதலீடும் வருமானமும்

#### (i) முதலீட்டுச் சொத்துப்பட்டியல்:

நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ஏட்டுப்பெறுமதி) 2016இன் ரூ.1,772.2 பில்லியனிலிருந்து 2017இல் ரூ.1,992.4 பில்லியனுக்கு 12.4 சதவீதத்தினால் அதிகரித்தது (அட்டவணை ஐஐ-10). நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது உறுப்பினர்களுக்கு நீண்ட கால நேர்க்கணிய உண்மை வீத வருமானத்தினை வழங்குவதன் மீது தொடர்ந்தும் கவனத்தினைச் செலுத்திய வேளையில் நிதியத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதுடன் மீளளிப்புக் கொடுப்பனவுகளையும் நிதியத்தின் ஏனைய செலவுகளையும் ஈடுசெய்யக்கூடிய விதத்தில் திரவத்தன்மையும் போதுமான மட்டத்தில் பேணப்பட்டது.

முதலீட்டுச் சொத்துப்பட்டியல் அரச பிணையங்களில் 91.3 சதவீதத்தினையும் பங்குரிமை மூலதனங்களில் 4.2 சதவீதத்தினையும் கம்பனித் தொகுக்கடன்கள், மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்களில் 2.1 சதவீதத்தினையும் உள்ளடக்கியிருந்தது. எஞ்சிய 2.4 சதவீதம் நாளாந்த திரவத்தன்மை தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக அரச பிணையங்கள் தொடர்பான நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் போன்ற உயர்ந்த திரவத்தன்மை சொத்துக்களில் காணப்பட்டன. அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு விளைவு வீதங்களுடன் அட்டவணை II-10இல் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை II - 10
### முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

| முதலீட்டின் வகை | 2016 | | 2017(அ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | பங்கு (%) | தொகை (ரூ.பில்) | பங்கு (%) |
| திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் | 1,650.4 | 93.1 | 1,818.6 | 91.3 |
| பங்கு | 80.9 | 4.6 | 84.3 | 4.2 |
| கம்பனிக் கடன்கள் | 38.2 | 2.1 | 41.5 | 2.1 |
| நிலையான வைப்புக்கள் | - | - | 48.0 | 2.4 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகள் | 2.7 | 0.2 | - | - |
| மொத்தம் | 1,772.2 | 100.0 | 1,992.4 | 100.0 |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை II - 11
### அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு (2017 இறுதியிலுள்ளவாறு)

| முதிர்ச்சிக் காலம் | முதிர்ச்சிப் பெறுமதி (ரூ.மில்) (அ) | பங்கு (%) | நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு (%) |
|---|---|---|---|
| 1 ஆண்டுக்குக் குறைந்தது | 185,904.1 | 9.6 | 10.72 |
| 1 - 2 ஆண்டுகள் | 186,896.3 | 9.7 | 9.97 |
| 3 - 4 ஆண்டுகள் | 157,652.7 | 8.2 | 10.82 |
| 5 ஆண்டுகளுக்கும் கூடியது | 1,399,687.6 | 72.5 | 11.03 |
| மொத்தம் | 1,930,140.7 | 100.0 | 10.88 |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

#### (ii) முதலீட்டு வருமானம்:

2017இல் நிதியம் ஈட்டிய மொத்த முதலீட்டு வருமானம் ரூ.222.6 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15.04 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது (அட்டவணை ஐஐ-12). நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக (வருமானத்தின் 84.6 சதவீதம்) வட்டி வருமானம் காணப்பட்டது. வட்டி வருமானம் 2016இன் ரூ.165.5 பில்லியனிலிருந்து 2017இல் ரூ.188.3 பில்லியனுக்கு 13.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கழிவிடப்பட்ட திறைசேரி முறிகளிலிருந்தான கடன் தீர்ப்பனவு இலாபங்களும் 2016இல் ரூ.28.2 பில்லியனிலிருந்து 2017இல் ரூ.31.3 பில்லியனுக்கு 11.0 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், மூலதன இலாபங்கள் மற்றும் பங்கிலாபம் இரண்டினையும் உள்ளடக்கிய பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் 2016இல் உழைக்கப்பட்ட ரூ.4,714.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ரூ.2,993.6 மில்லியனுக்கு 36.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தன. இரண்டாம்நிலை சந்தை நடவடிக்கைகளின் தற்காலிக இடைநிறுத்தலின் காரணமாக 2016இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.611.8 உடன் ஒப்பிடுகையில் 2017இல் அரச பிணையங்கள் மீதான மூலதனம் எதுவும் ஈட்டப்படவில்லை. பொதுவாக நிதியத்தின் முதலீடுகளிலிருந்தான வருமானம் 2016இன் 11.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 11.8 சதவீதமாக பதியப்பட்டிருந்தது.

### அட்டவணை II - 12
### முதலீடு மீதான வருமானம்

| வருமானத்தின் மூலம் | 2016 | | 2017(அ) | |
|---|---|---|---|---|
| | தொகை ரூ. மில் | பங்கு (%) | தொகை ரூ. மில் | பங்கு (%) |
| வட்டி | 165,485.4 | 85.8 | 188,346.1 | 84.6 |
| கடன் தீர்ப்பனவு இலாபம் | 28,170.8 | 14.6 | 31,289.3 | 14.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம் | 611.8 | 0.3 | - | - |
| அரச பிணையங்களிலிருந்தான சந்தைப்படியான இலாபம்/ இழப்புக்கள் | (584.4) | (0.3) | 1,640.2 | 0.7 |
| பங்குகளிலிருந்தான சந்தைப்படியான மூலதன இலாபம்/ இழப்புக்கள் | (257.7) | (0.1) | (163.4) | (0.1) |
| பங்குரிமை மூலதனத்திலிருந்தான மூலதன இலாபம் | 452.1 | 0.2 | - | - |
| பங்குலாபம் | 4,262.6 | 2.2 | 2,993.6 | 1.3 |
| நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு | (5,231.6) | (2.7) | (1,502.1) | (0.7) |
| **மொத்தம்** | **192.909.1** | **100.0** | **222,603.7** | **100.0** |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேறி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

(iii) செலவினம்:

நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம் 2016இன் ரூ.1,487.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ரூ.1,347.2 மில்லியனுக்கு 9.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் மொத்த வருமானத்தின் விகிதமாக இது 2016இன் 0.69 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 0.61 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. (அட்டவணை ஐஐ-13). இவ்வாண்டுகளில், நிதியமானது அதன் தொழிற்பாட்டுச் செலவினத்தினை மொத்த வருமானத்தின் 1 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் பேணக்கூடியதாக இருந்தது.

### அட்டவணை II - 13
### தொழிற்பாட்டுச் செலவினங்கள்

| விடயம் | தொகை (ரூ.மில்.) 2016 | 2017(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| ஆளணிச் செலவினங்கள் | 861.1 | 847.3 | (1.6) |
| நிருவாகச் செலவினங்கள் | 402.8 | 454.1 | 12.7 |
| ஏனைய செலவினங்கள் | 223.3 | 47.3 | (78.8) |
| **மொத்தம்** | **1,487.2** | **1,348.7** | **(9.3)** |
| **மொத்த வருமானத்தின் % ஆக மொத்தச் செலவினங்கள்** | **0.77** | **0.61** | |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேறி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

#### இ) உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவு

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, ஊ.சே. நிதியம் அதன் சட்ட ரீதியான குறைந்தபட்ச வீதமான 2.5 சதவீதத்திற்கும் மிகக் கூடுதலாக அதன் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்தும் உயர்ந்த வட்டி வீதங்களை செலுத்தக்கூடியதாக இருந்தது. 2017ஆம் ஆண்டிறுதியில் உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவாக பகிர்ந்தளிப்பதற்கு கிடைக்கத்தக்கதாக இருந்த தொகை 2016இன் ரூ.171.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.197.5 பில்லியனாகக் காணப்பட்டது (அட்டவணை II-14).

### அட்டவணை II - 14
### உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவு

| விடயம் | தொகை (ரூ.மில்.) 2016 | 2017(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| மொத்த வருமானம் | 193,071.4 | 223,192.5 | 15.6 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (1,487.2) | (1,348.7) | (9.3) |
| வருமான வரி | (15,657.2) | (18,897.1) | 20.7 |
| ஆண்டுக்கான தேறிய வருமானம் | 175,927.0 | 202,946.8 | 15.4 |
| முன்னைய ஆண்டு பிடித்துவைத்தல் இலாபம் | 215.6 | 189.3 | (12.2) |
| நடைமுறை ஆண்டு மீளளிப்புக்கள் மீதானவட்டிக் கொடுப்பனவு | (4,645.8) | (4,624.3) | (0.5) |
| பகிர்ந்தளிப்புக்காக கிடைக்கத்தக்க தாகவுள்ள தேறிய வருமானம் (நடைமுறை மீளளிப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளுக்குப் பின்) | 171,496.8 | 198,511.8 | 15.8 |
| ஒதுக்குகளில் இருந்து/ (இற்கு) மாற்றல்கள் | 250.0 | (7,000.0) | (2,900.0) |
| ஒதுக்குகளில் இருந்து/ (இற்கு) மாற்றல்களுக்குப் பின் பகிர்ந்தளிப்புக்காகக் கிடைக்கத்தக்க தாகவுள்ள தேறிய வருமானம் | 171,746.8 | 191,511.8 | 11.5 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி | (171,557.4) | (191,243.8) | 11.5 |
| பிடித்து வைத்தல் இலாபம் | 189.4 | 268.0 | 41.5 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம் % | 10.5 | 10.5 | - |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேறி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை II - 15
### உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம்

| ஆண்டு | வழங்கப்பட்ட வட்டிவீதம் (%) | பயனுறு வட்டிவீதம் (%)[1] |
|---|---|---|
| 2007 | 11.20 | 11.40 |
| 2008 | 13.20 | 13.44 |
| 2009 | 13.75 | 13.92 |
| 2010 | 12.50 | 12.65 |
| 2011 | 11.50 | 11.58 |
| 2012 | 11.50 | 11.62 |
| 2013 | 11.00 | 11.14 |
| 2014 | 10.50 | 10.60 |
| 2015 | 10.50 | 10.57 |
| 2016 | 10.50 | 10.51 |
| 2017 (அ) | 10.50 | 10.51 |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேறி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

[1] பயனுறு வட்டிவீதம் = (உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி) /[(வருட ஆரம்பத்தில் உறுப்பினர் நிலுவை + வட்டி வரவு வைப்பதற்கு முன்பு வருட இறுதியில் உறுப்பினர் நிலுவை)/2]

#### (ஈ) இடர்நேர்வு முகாமைத்துவம்

நிதியின் நிதியியல் மற்றும் நிதியியல்அல்லா இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றை பலப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி மற்றும் ஊழியர் சேம நிதியத் திணைக்களம் என்பன பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. கடமைகளின் பாகுபாடு மற்றும் ஒளிப்பதிவு முறைமை உள்ளடங்களான ஏனைய உட்புறக் கட்டுப்பாடுகள் 2017இல் அறிமுகப்படுத்தப்பட்டன.

#### (உ) முறைமை அபிவிருத்தி

ஊழியர் சேம நிதியமானது நிதியியல் துறையின் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் அதன் முதலீட்டு உபாயம் மற்றும் கட்டமைப்பினை மீளாய்வு செய்து மீள்கட்டுமானம் செய்யும் செயல்முறையில் ஈடுபட்டு வருகின்றது. ஊழியர் சேம நிதியத்திற்கான பரந்த தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கான நிதியியல் உதவியினையும் உலக வங்கி வழங்குகின்றது. இந்நோக்கில் மூலதன சந்தை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் வர்த்தக செயன்முறை மீளாய்வினை முன்னெடுத்து வருகின்றது.

### 8.3 உறுப்பினர் பணிகள்

#### அ) உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள்

2017ஆம் ஆண்டின் முதலரைப் பகுதி 2018 மாச்சு இறுதியிலிருந்து ஆரம்பமானது. 2016ஆம் ஆண்டின் முதலரைப் பகுதிக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் அவர்களது தொழில்தருநர்களினூடாக வழங்கும் பணி 2016 2015இன் 1ஆம் அரைப்பகுதி மற்றும் 2ஆம் அரைப்பகுதிக்கான உறுப்பினர் கணக்குகள் கூற்றுக்கள் தொடர்பான தொழில்தருநர்களுக்காக 2017ஆம் ஆண்டுப்பகுதியில் அனுப்பி வைக்கப்பட்டன. 2017இன் முதலரைப் பகுதிக் கூற்றுக்கள் 2018 மாச்சு இறுதியில் தொடங்கும்.

**அட்டவணை II - 16**

**வழங்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை**

| அரையாண்டு | தொழில்தருனர்களின் எண்ணிக்கை | கூற்றுக்களின் எண்ணிக்கை (செயற்பாட்டு உறுப்பினர்கள்) |
|---|---|---|
| 2016 முதல் அரையாண்டு | 71,310 | 2,141,812 |
| 2016 இரண்டாம் அரையாண்டு | 73,076 | 2,568,104 |

மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

#### ஆ) வீடமைப்புக் கடன் வசதி

வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஆகிய பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் குறிக்கோளுடன் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டத்தினை 2017இலும் தொடர்ந்ததுடன் ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு இன்றியமையாத பணிகளையும் வழங்குகின்றது. இத்திட்டத்தின் கீழ், ஊழியர் சேம நிதியம் ரூ.4,946 மில்லியன் கொண்ட வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கின்ற கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர்களின் ஊழியர் சேம நிதிய நிலுவைகளுக்கெதிராக அவர்களுக்கு 10,998 உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்கியது (அட்டவணை ஐஐ-17). மேலும், 2017இல் தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து ஏறத்தாழ ரூ.2,485 மில்லியன் கழிக்கப்பட்டு, 2016ஆம் ஆண்டுப் பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக பங்கேற்கின்ற கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு 2017இல் அனுப்பி வைக்கப்பட்டது.

**அட்டவணை II - 17**

**வீடமைப்புக் கடன் வசதி**

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் (ரூ.மில்) | கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 | 16,268 | 6,914 | 2,178 |
| 2014 | 17,786 | 8,021 | 2,394 |
| 2015 | 13,132 | 5,489 | 2,522 |
| 2016 | 12,780 | 5,414 | 2,541 |
| 2017 (அ) | 10,998 | 4,946 | 2,485 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊ.சே.நி. திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

#### இ) இளைப்பாறுவதற்கு முன்னதான மீளளிப்புத்திட்டம்

2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகள் மற்றும் அதன் பின்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள் என்பனவற்றின் அடிப்படையில் 30 சதவீத ஊழியர் சேம நிதிய இளைப்பாறுவதற்கு முன்னதான மீளளிப்புத் திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் 2015 யூலை 1 இலிருந்து தொழிற்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் நன்மைபெறுநர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருப்பதுடன் 2017 இறுதியளவில் 100,000 இற்கு மேற்பட்ட நன்மைபெறுநர்களுக்கு ரூ.58.3 பில்லியன் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. 2017இன் இந்நன்மை 32,789 நன்மைபெறுநர்களினால் பெறப்பட்டிருப்பதுடன் ரூ.17.29 பில்லியன் விடுவிக்கப்பட்டிருக்கிறது.

#### ஈ) பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம்

கிட்டத்தட்ட காகிதங்களற்ற தொழிற்பாட்டு முறைமையினை நிறுவுவதன் மூலம் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தினால் வழங்கப்படும் பணிகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

செயற்றிட்டத்தின் 1ஆவது கட்ட நிறைவுடன் ஊழியர் சேம நிதியத்தின் பாரம்பரிய பதிவு அறையின் பாரம்பரிய மாதிரியானது இலத்திரனியல் பதிவு அறையாக மாற்றப்பட்டது. அனைத்து முதன்மை கோப்புகள் படிவம் "ட" மற்றும் மீளப்பதிவு செய்யும் ஆவணங்களும் ஆவணப்படுத்தல் முகாமைத்துவ முறையில் பிரதிமை செய்யப்பட்டு குறியீடு வழங்கப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்டன. அலுவலக பயனாளிக்கு ஆவணங்களை புதுப்பித்தல், கோவை பதிவேற்றம், அறிவுறுத்தல்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்களை அனைத்தையும் தமது சொந்த கணனியிலேயே நிறைவேற்றிக்கொள்ளக் கூடியதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. உயர்பதவி அலுவலர்களின் உள்வாங்களை குறைப்பதற்கான பெரும்பாலான மனித செயன்முறைகள் தன்னியக்க முறைப்படுத்தப்பட்டன. இந்த மாற்றமானது கணிசமான அளவான நேரசேமிப்பு இடைவெளி மற்றும் மனிதவள சேமிப்பு என்பவற்றினை உண்டுபண்ணியது.

கட்டம் 1 இல் பெறப்பட்ட செயன்முறை வினைத்திறன் தன்மையின் அடிப்படையில், அடுத்தடுத்து பயன்படுத்தப்படுகின்ற பதிவுகளை எண்ணியல்படுத்துகின்ற செயன்முறையானது இத்திட்டத்தின் 11ஆம் கட்டமாக 2016ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. 11ஆம் கட்டத்தில் எண்ணியல்மயப்படுத்தப்பட்ட ஆவணங்கள், 2013,2014 மற்றும் 2015ஆம் ஆண்டிற்குரிய தொழில்தருனர்களிடமிருந்தான பங்களிப்பின் சேகரிப்பிற்கு பயன்படும் ஊ மற்றும் ஊ3 படிவம், 2013 தவிர்ந்த 2012 தொடக்கம் 2015 வரையான மீள்நிதியளிப்பு பணித்தாள்கள் 1974 தொடக்கம் 2009 வரையான தனிநபர் தொழில்தருனர் பேரேடு 2010 இல் இருந்து தொடர்ந்து வருகின்ற திருத்தக்கடிதங்கள் மற்றும் 2014 இற்குரிய மீள்பதிவு ஆவணங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. செயற்றிட்டத்தின் செயற்பரப்பு 2017ஆம் ஆண்டுப் பகுதியில் நிறைவு செய்யப்பட்டது.

2001இல் இருந்து கொடுப்பனவுடன் தொடர்புடைய கடிதங்கள் அனைத்தும் பிரதிமை செய்யப்பட்டு முறைமையில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த காரணத்தினால் இப்போது மீள்நிதியிடல் கொடுப்பனவு மற்றும் பகுதி கொடுப்பனவு செயன்முறை என்பன வினைத்திறன் தன்மைப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் ஏனைய உறுப்பினர் சேவைகளுக்கான பெயர் திருத்தம் மற்றும் மீள்பதிவு செய்த உறுப்பினர்களின் விபரத் திருத்தம் என்பனவும் வினைத்திறன் தன்மைப்படுத்தப்பட்டன.

2017இன் இறுதியில் செயற்றிட்டத்தின் 11ஆம் கட்டத்தின் நோக்கமானது 2016 மற்றும் 2017 ஆண்டிற்குரிய ஊ மற்றும் ஊ3 வடிவ படிவங்களை பிரதிமை செய்து கட்டிடல் போன்ற அம்சங்களை உள்ளடக்குவதனை நோக்கு விரிவுபடுத்தப்பட்டது.

உ) ஊழியர் சேவை நிதிய செல்லிட பணிகள் நிகழ்ச்சித் திட்டம்

உறுப்பினர் பணிகளின் விநியோகத்தில் சௌகரியத்தை மேம்படுத்தல் மற்றும் ஊழியர் சேம நிதியத்தின் செயற்பாடுகள் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வினை மேம்படுத்தல் என்பவற்றினை நோக்காகக் கொண்டு 2017ஆம் ஆண்டில் ஊழியர் சேம நிதிய செல்லிடப் பணிகள் நடத்தப்பட்டன.

அதன்படி அந்த ஆண்டு காலப்பகுதியில் திணைக்களமானது 22 செல்லிட பணிகளை நடத்தின. இந்த செல்லிடப் பணிகளில் சில, ஊழியர் திணைக்களம், ஆட்கள் பதிவு திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய மாவட்ட∴ பிரதேச செயலகப் பிரிவுகள் என்பவற்றுடன் இணைந்து நடத்தப்பட்டன.

ஊழியர் சேம நிதியத்தோடு தொடர்புபட்ட பணிகளை வழங்குவதற்காக அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊழியர் சேம நிதியத்துடன் தொடர்புடைய செல்லிடப் பணிகளிலும் ஊழியர் சேம நிதியம் பங்குபற்றியது. தமது சொந்த இடத்தில்∴ வேலைத்தளத்தில் இருந்து கொண்டே உறுப்பினர் ஒருவர் செல்லிட பணிகள் மூலமாக வழங்கப்படுகின்ற பணிகள் ஊழியர் சேம நிதிய உறுப்பினர் நிலுவைக் கூற்றுக்கள் ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களின் விபரங்கள் மற்றும் கணக்குகளின் திருத்தம் உறுப்பினர் விபரங்களின் மீள்பதிவு இணையத்தினூடான உறுப்பினர் நிலுவை விசாரணைப் பணிகளை மேம்படுத்தல் இ-கூற்று பணிகள் மற்றும் ஊழியர் சேம நிதிய நடைமுறைகள் மீதான முழுமையான ஆலோசனை வழங்கல் என்பவற்றினை உள்ளடக்குகின்றன.

மின்னஞ்சல், சுவரொட்டி துண்டுப்பிரசங்கள் காணொலி காட்சிகள் மற்றும் முன்னிலைப்படுத்தல் போன்ற வேறுபட்ட தொடர்பூட்டல் மாதிரிகளைப் பயன்படுத்தி ஊழியர் சேம நிதியத்தினால் வழங்கப்படுகின்ற செல்லிட பணிகள் இலக்கு உறுப்பினர்கள், தொழில்தருனர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் மீதான சேவைகளுக்கு சமாந்திரமான விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஊழியர் சேம நிதியத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஒவ்வொன்றிற்கும் முதன்மையான செல்லிட பணி செல்லிட பணிகளின் வினைத்திறன் தன்மையினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு தொடர்புடைய தொழில்தருனர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தொழில்தருனர்களின் நிர்வாக உயர்நிலை அலுவலர்களிற்காக விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஊ) ஊழியர் சேம நிதியக் கொடுப்பனவுகளுக்கான இ-கூற்று முறைமை

பதிவு செய்யப்பட்ட தொழில்தருநர்களுக்கு, இ-கூற்று முறைமையில் ஊழியர் சேம நிதியத்தின் பங்களிப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய உறுப்பினர்களின் ஆகியோரின் விபரங்கள் சேகரிப்பானது அறிமுகப்படுத்தப்பட்டமையினால் ஊழியர் சேம செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன அதிகரித்தன. இந்தநடைமுறையானது தன்னார்வ அடிப்படையிலே ஆரம்பிக்கப்பட்டதுடன், 2012ஆம் ஆண்டில் ஐம்பதுக்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட தொழில்தருனர்களுக்கு கட்டாயமானதொன்றாக மாற்றப்பட்டது. இ-கூற்று வழங்கல் முறைமையில் தொழில்தருனர்களுக்கான அணுகல் தன்மையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் 2017இல் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக ஊழியர் சேம நிதியமானது இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் இணைந்து பரந்துபட்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்ததுடன் அது 2018, சனவரியில் இருந்து ஒன்றிற்கு மேற்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் இருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ள உதவியது. அதன்படி முகவர்களாக ஏழு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஏற்கனவே ஊழியர் சேம நிதியத்துடன் இணைந்திருப்பதுடன் அவற்றுள் மூன்று உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் உறுப்பினர் தகவல் சரிபார்ப்பு மற்றும் அதேநேர உறுப்பினர் கணக்கு தரவேற்றல் நடைமுறை என்பவற்றுடன் நேரலை ஊழியர் சேம நிதிய கொடுப்பனவு வாடிக்கையாளர்களை தொழில்தருனர்களை வசதிப்படுத்துகின்றன. மேலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியதன் மூலமும் கடிதங்களை அனுப்பியதன் வாயிலாகவும் இ-கூற்று முறைமைகள் தொடர்பான தொழில்தருனர்களின் அறிவினை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன்பெறுபேறாக இ-கூற்ற முறைமையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தொழில்தருனர்களின் எண்ணிக்கை 6,955 இலிருந்து 2,017இன் இறுதியில் 7,900இற்கு அதிகரித்தது. இது 64 சதவீதமான செயற்படும் உறுப்பினர்களின் ஏறத்தாழ 80 சதவீதத்தினரை பிரதிநிதித துவப்படுத்தியிருக்கின்றது.

எ) ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு

ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு வினைத்திறன்மிக்க பணியினை வழங்கும் நோக்குடன் அவர்களின் பெயரினை அவர்களின் தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு மீள்பதிவு செய்து கொள்வதற்காகவும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை தனித்துவமான அடையாள இலக்கமாக அவர்களுக்கு வழங்குவதற்காகவும் ஊழியர் சேம திணைக்களமும் தொழில் திணைக்களமும் சிறப்புச் செயற்றிட்டமொன்றினை மேற்கொண்டன. இது இரண்டு தரப்பினர்களும் பொதுவான உறுப்பினர் மையத் தரவுத் தளமொன்றினைப் பயன்படுத்துவதனை இயலச்செய்யும்.

2017 இறுதியில் ஏறத்தாழ 1.86 மில்லியன் செயற்படும் ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களின் (பங்களிக்கும் உறுப்பினர்கள்) தேசிய அடையாள அட்டை விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இவற்றில் 81 சதவீதமான உறுப்பினர்களுக்கு (1.51 மில்லியன் கணக்குகள்) தனித்துவமான அடையாள அட்டை இலக்கங்கள் வழங்கப்பட்ட வேளையில் மீதி உறுப்பினர்கள் தொடர்பில் அவர்களின் தொழில்தருநர்களிடமிருந்து சரிபார்ப்புக்கள் பெறப்பட்டவுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

புதிதாக இணைகின்ற ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களை அதேநேர அடிப்படையில், தேசிய அடையாள அட்டை விபரங்களின் கீழ் பதிவுசெய்வது 2010 நவெம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கிணங்க ஒவ்வொரு மாதமும் முதல் தடவையாக ஊழியர் சேம நிதியத்தினால் பங்களிப்புக்கள் பெறப்படுகின்ற புதிய அனைத்து உறுப்பினர்களினதும் தேசிய அடையாள அட்டை விபரங்களைப் பதிவதற்கான மாதாந்த கண்காணிப்பு முறைமையொன்று செயற்பாட்டிற்கிடப்பட்டது.

ஏற்கனவேயுள்ள உறுப்பினர்களின் பதிவும் புதிய உறுப்பினர்களின் பதிவும் 53,091ஆகக் காணப்பட்டதுடன் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் உறுப்பினர் மையத் தரவுத் தளத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட பதிவுகளின் மொத்த எண்ணிக்கை 71,234 ஆகக் காணப்பட்டது.

9. செலாவணிக் கட்டுப்பாட்டு / வெளிநாட்டுச் செலாவணி

1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளினை கொண்டுநடாத்தும் நோக்கில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் நிறுவப்பட்டதுடன் இது 2017 நவெம்பர் 19 வரை வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களினை நிருவகித்ததுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளினை நடைமுறைப்படுத்தி தொழிற்பட்டது.

மூலதனப் பாய்ச்சல்களினை மேலும் தாராளமயப்படுத்தல், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான தொழிற்பாடுகளினை இலகுவாக்கும் நோக்குடனும் 2016 மற்றும் 2017 இற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலினை நிறைவேற்றும் நோக்கம் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளுக்காக புதிய சட்டம் மற்றும் கொள்கைக் கட்டமைப்பொன்று 2017ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன்படி, இலங்கை அரசின் முகவர் என்ற ரீதியில் வெளிநாட்டுச் செலாவணியின் ஊக்குவிப்பினையும் ஒழுங்குபடுத்தல்களையும் மேற்கொள்ளும் பொறுப்பினை இலங்கை மத்திய வங்கிக்கு வழங்குகின்ற

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் 2017 நவெம்பர் 20இல் நடைமுறைக்கிடப்பட்டது. புதிய சட்டத்தின் ஏற்பாடுகள் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளரை தலைவராகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் மூலம் நிறுவப்படுவதுடன் சட்டத்தின் தொழிற்பாடுகளின் மூலம் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் 2017 நவெம்பர் 19இலிருந்து நிறுத்தல்.

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் 2017 நவெம்பர் 19 வரை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளினை இக் குறிப்பின் பந்தி 9.1 எடுத்துக்காட்டுவதுடன் பந்தி 9.2 வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினை எடுத்துக் காட்டுகின்றது.

### 9.1 செலாவணிக் கட்டுப்பாடு

2017இல் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் சுருக்கம் பின்வருமாறு.

#### 9.1.1 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களிற்காக பொது அனுமதி வழங்கல்

அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு அதாவது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் வெளிநாட்டுச் செலாவணிகளில் ஈடுபடுகின்ற ஏனைய நிறுவனங்களிற்கு பணிப்புரைகளினை வழங்கல்.

2017இல் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள் இவ் அறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளதுடன் அதன் சுருக்கம் பின்வருமாறு.

i. 2017இன் 01ஆம் மற்றும் 02ஆம் இலக்க பணிப்புரைகள்: நிரந்தர வதிவிட விசா மற்றும் இரட்டைப் பிரஜாவுரிமையில் இலங்கைக்கு வெளியில் வதியும் இலங்கையர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

ii. 2017இன் 03, 04, 05 மற்றும் 06ஆம் இலக்க பணிப்புரைகள்: வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகள் என்பன தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளிற்கிணங்க அத்தகைய கணக்குகளினை தொழிற்படுத்துவதற்கு தேசிய சேமிப்பு வங்கிக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

iii. 2017இன் 07ஆம் இலக்க பணிப்புரைகள்: உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் (விலக்களிக்கப்பட்ட செயற்றிட்டங்களில்)ஈடுபட்டுள்ள தொழில்சார் நிபுணத்துவ பணிகளை வழங்குவோருக்கு அனுமதிக்கப்பட்ட வருமான வரி விலக்கல்கள் இல்லாமல் போனமையின் காரணமாக பன்னாட்டு சேவைகள் வழங்குநர்கள் மற்றும் அவர்களின் ஊழியர்களுக்கு புதிய வெளிநாட்டு நாணயக் கணக்குகளை ஆரம்பிப்பது புறக்கீடு செய்யப்பட்டுள்ளதென அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

iv. 2017ஆம் ஆண்டின் 08, 09, 10, 11, 12 மற்றும் 13ஆம் இலக்க பணிப்புரைகள்: வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி, பீப்பிள் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் எல்பி பினான்ஸ் பிஎல்சி இற்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

v. 2017ஆம் ஆண்டின் 14ஆம் மற்றும் 15ஆம் இலக்க பணிப்புரைகள்: தகுதிவாய்ந்த ஆட்களுக்கு வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளினை ஆரம்பிப்பதற்கு மெல்ஸ்ரா றீகல் பினான்ஸ் லிமிடெட் அனுமதிக்கப்பட்டது.

#### 9.1.2 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்காக சிறப்பு அனுமதி வழங்கல்

(அ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகள் அட்டவணை 1இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை II - 18**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்காக வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகள்**

| நோக்கம் | அனுமதிகளின் எண்ணிக்கை | ஐ.அ.டொலர். பெறுமதி மில்லியன் |
|---|---|---|
| வதியும் கம்பனிகள் வெளிநாட்டில் முதலிடுவதற்கு | 9 | 23.10 |
| வதியும் கம்பனிகள் வெளிநாட்டிலிருந்து கடன் பெறுவதற்கு | 19 | 177.7 |
| வதிவற்றவர்களின் பெயரில், கம்பனிகள் பங்குகளை வழங்கல்/ பதிவு செய்தல்/ உரிமமாற்றல் செய்வதற்கும் தனிப்பட்டவர்கள் பங்குகளினை உரிமமாற்றல் செய்வதற்கும் | 78 | வி.கி |
| அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளின் கீழ் உள்ளடக்கப்படாத பல்வகைக் கொடுக்கல் வாங்கல்களில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஈடுபடுவதற்கு | 58 | வி.கி |
| அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளினை திறந்து பராமரிப்பதற்கு | 10 | வி.கி |
| வதியும் கம்பனிகளுக்கு கம்பனி உத்தரவாதங்களை வழங்குவதற்கு | 15 | 83.12 |

(ஆ) நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிப் பத்திரங்களை

வழங்கல்

நாணயமாற்று வியாபாரத்திலிருந்து ஒரு கம்பனி நீங்கிக் கொண்ட

அதேவேளை 2017 நவெம்பர் 19 வரை நாணயமாற்று வியாபாரத்தில்

ஈடுபடுவதற்கு பின்வரும் ஐந்து கம்பனிகளுக்கு புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இதன்படி, 70 கம்பனிகள் நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளன. அதாவது 57 கம்பனிகள் வெளிநாட்டு நாணயங்களை வாங்குவதற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் 13 கம்பனிகள் வெளிநாட்டு நாணயங்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவேயுள்ள நாணயமாற்றுநர் ஒருவர் புதிய கிளையொன்றினை திறப்பதற்கும் 2017இல் அனுமதி வழங்கப்பட்டது.

அட்டவணை 2 II - 19

நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட கம்பனிகள்.

| நிறுவனத்தின் வகை | அனுமதிக்கப்பட்ட வியாபாரங்கள் | வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தனியே நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கூறும் கம்பனிகள் (நாணயமாற்றுநர்கள்) | வெளிநாட்டு நாணயங்களை வாங்குதல் மற்றும் பரிமாற்றல் | 3 |
| | வெளிநாட்டு நாணயங்களை வாங்குதல், பரிமாற்றல் மற்றும் விற்பனை செய்தல | - |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | வெளிநாட்டு நாணயங்களை வாங்குதல், பரிமாற்றல் மற்றும் விற்பனை செய்தல் | - |
| சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் | வெளிநாட்டு நாணயங்களை வாங்குதல், பரிமாற்றல் மற்றும் விற்பனை செய்தல | 1 |
| சுற்றுலா விடுதிகள் | வெளிநாட்டு நாணயங்களை வாங்குதல் | 1 |
| மொத்தம் | | 5 |

### 9.1.3 புதிய வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவ கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளித்தல்

(அ) வெளிநாட்டுச் செலாவணி உண்டியல் மீதான அவதானிப்புக்களின் ஏற்பாடுகள்

வெளிநாட்டுச் செலாவணி சந்தை தொடர்பில் முன்மொழியப்பட்ட கொள்கைகளின் சாத்தியமான தாக்கங்கள் மற்றும் இலகுவான நடைமுறைப்படுத்தல்களிற்கான தொழிற்பாட்டு அம்சங்களினை கருத்திற் கொண்டு சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்துடன் இணைந்து செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமானது வெளிநாட்டு செலாவணி உண்டியல் மீதான அவதானிப்புக்களினை பல்வேறு தடவைகள் வழங்கியுள்ளது.

(ஆ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளினை வடிவமைத்தல்

2017 யூலை 28இல் கௌரவ சாபாநாயகர் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினை உறுதிப்படுத்தியதனைத் தொடர்ந்து வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் அமைச்சரினால் வழங்கப்பட வேண்டிய ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளினை வடிவமைப்பதில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஈடுபட்டது. அத்தகைய ஒழுங்குவிதிகள் 2017 நவெம்பர் 17இல் அரச வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டமானது 2017 நவெம்பர் 20இல் தொழிற்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் இவ் அறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளதுடன் அதன் சுருக்கம் இக் குறிப்பேட்டின் பந்தி 5.2இல் தரப்பட்டுள்ளது.

### 9.1.4 புலம்பெயர்ந்தவர்களின் நிதிய மாற்றல்கள்

2013 யூன் 12இற்கு பின்னர் வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிடத்தினைப் பெற்றுக் கொண்ட இலங்கையர்களுக்கு புலம்பெயர் முற்பணத்தினை விடுவிக்கும் பொருட்டு 108 புலம்பெயர்ந்தோர் தடுத்துவைக்கப்பட்ட கணக்குகளினை திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். மேலும், 2013 யூன் 12 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வேறொரு நாட்டில் நிரந்தர வதிவிடத்தினைப் பெற்றுக் கொண்ட 207 புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கு வதிவற்றோர் தடுத்துவைக்கப்பட்ட கணக்கின் ஊடாக இலங்கைக்கு வெளியே நிதியங்களினை அனுப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### 9.1.5 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை / விசாரணைகள்

(அ) தலத்திலான மேற்பார்வை

வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் தொடர்பில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் விதிக்கப்பட்டுள்ள பணிப்புரைகள் மற்றும் ஏனைய வேறு தேவைப்பாடுகளுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணங்கியொழுகுவதனை பரீட்சிக்கும் நோக்கில் 32 தலத்திலான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நாணயமாற்றுநர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் நாணயமாற்றுநர்கள் இணங்கியொழுகும் தன்மையினை உறுதிப்படுத்தும் முகமாக 31 தலத்திலான மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) விசாரணைகள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 244 விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. 45 விசாரணைகளை முடிவுக்கு கொண்டுவந்ததன் பின்னர் அத்தகைய விசாரணைகளுடன் தொடர்புடைய குழுக்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட ரூ. 82.33 மில்லியன் தண்டப்பணம் ஒன்றுதிரட்டப்பட்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டது. மிகுதி 199 விசாரணைகளையும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 30 (2) (ஆ) இன் நியதிகளில் 2018 மே 20இற்கு முன்னர் பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இவ் விசாரணைகளில் பெரும்பாலானவை பிணையங்கள் / பங்குகளின் வழங்கல் மற்றும் உரிமை மாற்றலின் பொது அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுடன் இணங்கியொழுகாமை, வதிவற்றவர்களுக்கு வதிவோரினால் மேற்கொள்ளப்பட்ட அனுமதியளிக்கப்படாத கொடுப்பனவுகள், செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.'. தொழிற்பாட்டு அறிவித்தல்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணங்கியொழுகாமை, அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை அவர்கள் மீறியமை மற்றும் வெளிநாட்டு நாணயங்களை அனுமதியின்றி உடமையில் வைத்திருந்தமை என்பனவாக காணப்பட்டன.

(இ) நிபுணத்துவ சான்றுகள் / அத்தாட்சிகளினை வழங்குவதன் மூலம் வழக்கு மற்றும் சட்ட நடவடிக்கைகளில் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு மேலும் உதவிகள் வழங்கப்பட்டன.

### 9.1.6 செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் மீதான விழிப்புணர்வினை மேம்படுத்தல்

நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இயன்றவரையான அறிவினைக் கொண்டுள்ளனர் என்பதனையும் முன்மொழியப்பட்ட புதிய ஒழுங்குவிதிகள் தொடர்பில் அவர்களின் கருத்தினை பெற்றுக் கொள்வதனையும் மதிப்பிடுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக ஐந்து இடைக்கால சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், வெளிநாட்டு செலாவணி ஒழுங்குவிதிகள் மீது ஆர்வலர்களின் அறிவு இடைவெளியினை நிரப்பும் நோக்குடன் பதுளை, நுவரெலியா, மாத்தறை மற்றும் அம்பாறை ஆகிய வெளிப்பிரதேசங்களில் நான்கு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 9.2 வெளிநாட்டுச் செலாவணி

நாட்டிற்குள்ளும் நாட்டிற்கு வெளியிலுமான மூலதனப் பாய்ச்சல்கள் சிறந்த முறையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன எனும் நிலவுகின்ற நோக்கினை வலியுறுத்தும் விதத்தில் பன்னாட்டு நிதியியல் கொடுக்கல்

வாங்கல்களினை மேற்கொள்வதில் பாரிய வினைத்திறனையும் விளைதிறனையும் அடைந்து கொள்ளல் மற்றும் பொருளாதார செயற்பாடுகளினை பேரண்ட மட்டத்தில் வசதிப்படுத்தல் ஆகியவற்றின் நோக்கில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நீக்குவதன் மூலம் புதிய வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் நடைமுறைக்கிடப்பட்டது.

புதிய ஒழுங்குவிதிகள் கட்டுப்பாடுகளினை தளர்த்தல், இருபொருள் மயக்கத்தினை நீக்குதல், கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான நடவடிக்கைகளினை இலகுவாக்கல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களினை மேற்கொள்வதில் வினைத்திறனை மேம்படுத்தல் ஊடாக ஆர்வலர்கள் மற்றும் தகுதிவாய்ந்த முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களினை கட்டுப்படுத்துவதினை காட்டிலும் வசதிப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது.

இதன்படி, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களிற்கு அதிகாரங்கள் / அனுமதிகளினை வழங்கல், அதிகாரமளிக்கப்ட்ட வணிகர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களிற்கு பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களினை வழங்கல், பொது மக்களுக்கு வர்த்தமானி அறிவித்தல்களினை வழங்குவதனை உறுதிப்படுத்தல், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் / மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் தீர்மானங்களிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகளை கருத்தில் கொள்ளல், வெளிநாட்டுச் செலாவணியினை கண்காணித்தலும் விசாரணை செய்தலும், ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் விழிப்புணர்வு மற்றும் இயலுமையை கட்டியெழுப்புதலினை மேம்படுத்தல் என்பன வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பிரதான நடவடிக்கைகளாகும்.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான தொழிற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் சுருக்கம் பின்வருமாறு.

### 9.2.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் / மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களிற்கு அதிகாரமளித்தல் / அனுமதியினை வழங்கல்

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளில் ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி (அனுமதியினை விரிவுபடுத்தலின் மூலம்) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகத் தொழிற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. நாணயமாற்றுநர்கள், சுற்றுலாவிடுதிகள், உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகள் போன்றவை மட்டுப்படுத்தப்பட்ட முகவர்களாக வெளிநாட்டுச் செலாவணியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டன. இதன்படி, 2017 திசெம்பர் 31இல் 26 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் 70 மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களும் காணப்பட்டதுடன் அவர்களின் பெயர்கள் பின்னிணைப்பு II-2 இல் தரப்பட்டுள்ளன.

### 9.2.2 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்காக பொது அனுமதியினை வழங்கல்

(அ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினால்

வசதிப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களின் வழங்கல்

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 5, 7 மற்றும் 8 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 29இன் கீழ் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் 2017 நவெம்பர் 17 திகதியிடப்பட்ட 20145∴56 இலக்கமுடைய அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 8 மற்றும் 31இன் கீழ் வழங்கப்பட்ட கட்டளைகள் என்பன ஆண்டறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன. இவ் ஒழுங்குவிதிகள்∴ கட்டளைகள் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட பாரிய மாற்றங்களின் சுருக்கம் பின்வருமாறு.

i) 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதன கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்குவிதிகள்

- அதிக முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்தும் முகமாக, இலங்கையில் வதிபவர்களினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மீது நிலவிய வரையறைகள் உயர்த்தப்பட்டதுடன் அத்தகைய முதலீடுகளிற்கு கிடைக்கப்பெறத்தக்கதாகவுள்ள வகைகளும் விரிவுபடுத்தப்பட்டன. (பங்குகள் மற்றும் நாட்டிற்கான முறிகளிலிருந்து கூறுகள் மற்றும் படுகடன் பிணையங்களுக்கு)
- தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிப்பதனூடாக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் பராமரிக்கப்படும் மூலதன கொடுக்கல் வாங்கல்கள் ரூபாக் கணக்கினூடாக தகுதிவாய்ந்த புலம்பெயர் முற்பணங்களினை மாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டதுடன் ஏனைய நாடுகளில் புலம்பெயர்ந்தோர் குடியேறுவதனை வசதிப்படுத்துகின்ற புலம்பெயர்ந்தோர் மாற்றல்கள் மீது முன்பு நிலவிய வரையறைகள் உயர்த்தப்பட்டன.
- நிதியியல் நிறுவனங்களில் நிலையான வைப்புக்கள், மத்திய வங்கியால் அல்லது வேறு ஏதேனும் நியதிச் சட்ட நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பிணையங்கள், இலங்கையில் கூட்டிணைக்கப்படாததும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ளதுமான கம்பனிகளில் பங்குகளை உள்ளடக்குவதன் மூலம் இலங்கையில் முதலிடுவதற்காக வதிவற்றவர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள விடயப்பரப்புக்கள் விரிவுபடுத்தப்பட்ட அதேவேளை முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்களுக்கு புதிய சந்தர்ப்பங்களை உருவாக்கல் மற்றும் முதலீட்டின் வழிவகைகளின் கிடைக்கப்பெறும் தன்மை என்பன மேம்படுத்தப்பட்டன.
- பிரயோகிக்கக்கூடிய ஒழுங்குவிதிகளை இலகுபடுத்துவதற்காக முன்பு காணப்பட்ட மூன்று வகையான கடன் திட்டங்களினை கூட்டிணைப்பதன் மூலம் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கான ஒற்றைக் கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

ii) 2017ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதன் நோக்கத்திற்காக கணக்குகளினை திறத்தல் மற்றும் பராமரித்தல்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளினை திறத்தல் மற்றும் பராமரித்தல்) ஒழுங்குவிதிகள்

- வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் தெளிவையும் வசதியையும் உறுதிப்படுத்தும் நோக்கில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்த பதினெட்டு வகையான கணக்குகள் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள், உள்முக முதலீட்டுக் கணக்குகள், மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் ரூபாக் கணக்குகள் மற்றும் வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் என ஐந்து பிரதான வகைகளாக வகைப்படுத்தப்பட்டன.

iii) பிரிவு 8இன் கீழான கட்டளை

பன்னாட்டு விதிமுறைகளை பின்பற்றுகின்ற விதத்தில், அத்தகைய நாணயங்களை மீண்டும் கொண்டு செல்லும் நோக்குடன் இலங்கைக்கு கொண்டுவரக்கூடிய வெளிநாட்டு நாணயத் தாள்களின் பிரகடனப்படுத்தப்பட்ட வரையறையானது ஐ.அ.டொலர் 10,000இற்கு அல்லது அதற்கு சமமான தொகைக்கு உயர்த்தப்பட்டது. மேலும், இலங்கையில் இருக்கும் அல்லது வதியும் எவரேனும் ஒருவர் இக் கட்டளையில் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஐ.அ.டொலர் 10,000 அல்லது அதற்கு சமமான பெறுமதி வரை வெளிநாட்டு நாணயத் தாள்களை ஏதேனும் காலத்திற்கு தன் உடமையில் வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

iv) பிரிவு 31இன் கீழான கட்டளை

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டது போன்று இருப்பிடத்தின் நிரந்தர வதிவிடத்தின் மீது கவனம் செலுத்துவதைக் காட்டிலும் இலங்கையில் செலவு செய்த மொத்த நாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் (அதாவது 183 நாட்கள் அல்லது அதற்கு அதிகமாக) ஆளொருவரின் வதிவிட அந்தஸ்தினை தீர்மானிக்கின்ற புதியதொரு பிரமாணம் அறிமுகப்படுத்தப்பட்டது.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களிற்கு பணிப்புரைகளினை வழங்கல்

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களிற்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள் இவ் அறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளதுடன் அதன் சுருக்கம் பின்வருமாறு.

i) 2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரைகள்:

பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ii) 2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள்: இராஜதந்திர கடவுச்சீட்டு மற்றும் இராஜதந்திர அடையாள அட்டையினை வைத்திருக்கும் வெளிநாட்டு பிரஜைகளுக்கும் இலங்கையிலுள்ள அவர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியில் 90மூ எல்லைவரை துணையாதாரமாக வைத்திருப்பதன் மீது இலங்கைக்கு வெளியே வதிபவர்களிற்கும் கடன் அட்டைகளினை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

iii) 2017ஆம் ஆண்டின் 03, 04, 05, 08ஆம் இலக்கப் பணிப்புரைகள்: ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு மேலதிகமாக, தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள், இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள், இராசதந்திர ரூபாக் கணக்குகள், மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகளிற்கு பிரயோகிக்கக்கூடிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

iv) 2017ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வதியும் விருந்தினர் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வருகை தரும் முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் மற்றும் இலங்கைக்கு வரும் தொழில்சார் நிபுணர்களின் பெயரில் வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியும் விருந்தினர் ரூபா நாணயக் கணக்குகளினைத் திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

v) 2017ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரைகள்: "இலங்கை - எனது கனவு இல்ல நிகழ்ச்சி" இன் கீழ் இலங்கையில் வதிவிட விசாவினைப் பெற்றுள்ள மூத்த வெளிநாட்டு பிரஜைகளின் பெயரில் மூத்த வெளிநாட்டவர்கள் நிலையான வைப்புக் கணக்குகள் மற்றும் மூத்த வெளிநாட்டவர்கள் ரூபாக் கணக்குகளினைத் திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

vi) 2017ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளினைப் பராமரிக்கும் இலங்கையில் இருக்கும் ஆளொருவருக்கு வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

vii)2017ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கப் பணிப்புரைகள்: இலங்கையில் ஏதேனுமொரு நோக்கத்திற்காக பயன்படுத்துவற்கு, தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளினைப் பராமரிக்கும் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களினை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

viii) 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள்: இலங்கையில் வதியும் ஒருவர் சொத்தொன்றின் கொள்வனவு/ கட்டுமானம்/ அபிவிருத்தி/ மீள்புனரமைப்பின் நோக்கத்திற்காக அவர்களின் வதிவிட அந்தஸ்தினைக் கருத்தில் கொள்ளாது இலங்கைக்கு வெளியே வேறொரு நாட்டில் நிரந்தரமாக வதியும் மற்றும் இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்ட இலங்கையர்களுக்கு கடன்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

xi) 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள்: இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவு செய்தல், உடமையில் வைத்திருத்தல் மற்றும் உரிமை மாற்றல் நோக்கத்திற்காக 'இலங்கை அபிவிருத்தி முறிகள் முதலீட்டுக் கணக்குகள்' மற்றும் 'முறி முதலீட்டிற்கான டொலர் கணக்குகளினைப்' பராமரிப்பதற்காக இலங்கை அபிவிருத்தி முறிகளினைக் கொள்வனவு செய்தல் மற்றும் சந்தைப்படுத்தலுக்காக குறித்துரைக்கப்பட்ட வணிகர்களாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் முதனிலை வணிகர்கள் நியமிக்கப்பட்டனர்.

x) 2017ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கப் பணிப்புரைகள்: உள்முக முதலீட்டுக் கணக்குகளினை திறந்து பராமரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டதுடன் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக பிரயோகிக்கத்தக்க நியதிகளும் நிபந்தனைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

xi) 2017ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினை திறந்து பராமரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டதுடன் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக பிரயோகிக்கத்தக்க நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

xii) 2017ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள்: வங்கி உத்தரவாதங்கள், முறிகள், துணைநில் நாணயக் கடிதங்களினை வழங்கிப் புதுப்பிப்பதற்கும் கம்பனி உத்தரவாதங்களுடன் தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

### 9.2.3 வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்காக சிறப்பு அனுமதியினை வழங்கல்

அட்டவணை II-20 இல் தரப்பட்டுள்ளவை குறிப்பிட்ட நோக்கங்களிற்காக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகள்.

**அட்டவணை II-20**
**வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதிகள்**

| நோக்கம் | அனுமதிகளின் எண்ணிக்கை | ஐ.அ.டொலரில் பெறுமதி (மில்லியன்) |
|---|---|---|
| வெளிநாட்டில் முதலிடுவதற்கு வதிவிடக் கம்பனிகளுக்கு | 1 | 30 |
| சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளினை திறந்து பராமரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு | 3 | வி.கி |

#### 9.2.4 புலம்பெயர்ந்தோர் நிதிகளின் மாற்றல்

புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கு புலம்பெயர் முற்பணங்களை மற்றும் இலங்கையரல்லாதவர்களிற்கு மரபுரிமை நிதியங்களை விடுவிக்கும் நோக்கில் 148 மூலதன கொடுக்கல் வாங்கல்கள் ரூபாக் கணக்குகளினை திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

#### 9.2.5 வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதியின் மீதான விழிப்புணர்வை அதிகரித்தல்

புதிய வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவக் கட்டமைப்பின் மீது வங்கியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு அறிவூட்டும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், புதிய வெளிநாட்டுச் செலாவணி நடைமுறைகளின் மீது பொது மக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள குழுக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தில் றறற.னகந.டம எனும் உத்தியோகபூர்வ வெப்தளம் ஆரம்பிக்கப்பட்டது.

பின்னிணைப்பு II - 2

2017.12.31இல் உள்ளவாறான அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் பட்டியல்

| உரிமமளிக்கப்பட்டட வர்த்தக வங்கிகள் | |
|---|---|
| 1 | அமானா பாங்க் பிஎல்சி |
| 2 | அக்சிஸ் பாங்க் லிமிடெட் |
| 3 | இலங்கை வங்கி |
| 4 | கார்கில்ஸ் பாங்க் லிமிடெட் |
| 5 | சிட்டி பாங்க் என்.ஏ |
| 6 | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி |
| 7 | டொச் பாங்க் ஏஜி |
| 8 | டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி |
| 9 | ஹபிப் பாங்க் லிமிடெட் சிறிலங்கா |
| 10 | ஹட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி |
| 11 | த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் விமிடெட் |
| 12 | ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட் |
| 13 | இந்தியன் பாங்க் |
| 14 | இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் |
| 15 | எம்சிபி பாங்க் லிமிடெட் |
| 16 | நஷனல் டிவலப்மன்ட் பாங்க் பிஎல்சி |
| 17 | நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி |
| 18 | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி |
| 19 | மக்கள் வங்கி |
| 20 | பப்ளிக் பாங்க் பெர்ஹெட் |
| 21 | சம்பத் பாங்க் பிஎல்சி |
| 22 | செலான் பாங்க் பிஎல்சி |
| 23 | ஸ்ரான்டேட் சார்ரட் பாங்க் |
| 24 | ஸ்டேட் பாங்க் ஒவ் இந்தியா |
| 25 | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |
| உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் | |
| 26 | தேசிய சேமிப்பு வங்கி |

| 2017.12.31இல் உள்ளவாறான மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் | |
|---|---|
| உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள் | |
| 1 | ஏசியா அசட் பினான்ஸ் பிஎல்சி |
| 2 | பிம்புத் பினான்ஸ் பிஎல்சி |
| 3 | சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி |
| 4 | எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி |
| 5 | எல் பி பினான்ஸ் பிஎல்சி |
| 6 | செங்கடகல பினான்ஸ் பிஎல்சி |
| 7 | சிங்கபுத்ரா பினான்ஸ் பில்சி |
| 8 | சிங்கர் பினான்ஸ் (லங்கா) பில்சி |
| சிறப்பியல்புவாய்ந்த குத்தகை கம்பனிகள் | |
| 9 | எஸ்எம்பி லீசிங் பிஎல்சி |
| சுற்றுலா விடுதிகள் | |
| 10 | பேள் சிற்றி ஹோட்டல் |
| 11 | ஷங்கிரி லாஸ் அம்பாந்தோட்டை ரிசோர்ட் அன்ட் ஸ்பா |
| 12 | சீகிரிய யங்கிள்ஸ் |
| நாணய மாற்றுநர்கள் | |
| 13 | எ.ஓ. லக்ஷ்மி ஜிவல்ஸ் பிரைவட் லிமிடெட் |
| 14 | ஆப்டீன் மணி சேஞ்ஜர்ஸ் பிரைவட் லிமிடெட் |
| 15 | ஆரியவன்ச என்ரபிரைசஸ் பிரைவட் லிமிடெட் |
| 16 | அர்ஜுனா ஜீவெலரி பிரைவட் லிமிடெட் |
| 17 | அருணா போரொக்ஸ் பிரைவட் லிமிடெட் |
| 18 | எசியன் மணி எஸ்க்சேஞ் பிரைவட் லிமிடெட் |
| 19 | பிரஸ்யா கிராமின் பிரைவட் லிமிடெட் |
| 20 | புள்ளியன் மணி எஸ்க்சேஞ் பிரைவட் லிமிடெட் |
| 21 | கெபிடல் எஸ்க்சேஞ் பிரைவட் லிமிடெட் |
| 22 | சிட்டி எஸ்க்சேஞ் பிரைவட் லிமிடெட் |
| 23 | கொழும்பு மணி எஸ்க்சேஞ் பிரைவட் லிமிடெட் |
| 24 | க்றவுன் மணி எஸ்க்சேஞ் பிரைவட் லிமிடெட் |
| 25 | தெடிகம குறூப் பிறைவேட் லிமிடெட் |
| 26 | டேடா எஸ்க்சேஞ் இன்டநேஷனல் பிரைவட் லிமிடெட் |
| 27 | தயா ஓதரைஸ்ட் மணி சேஞ்ஞர்ஸ் பிறைவேட் லிமிடெட் |
| 28 | டெல்டா சரத் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிடெட் |
| 29 | தேவி பொரேக்ஸ் பிறைவேட் லிமிடெட் |
| 30 | ஜோர்ஜ் மைக்கல் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிடெட் |
| 31 | குளோபல் விலேஜ் எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 32 | கோல்ட்ன் மணி சேஞ்ஞர்ஸ் பிறைவேட் லிமிடெட் |
| 33 | இன்டர்நஷனல் எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 34 | ஜயஸ் இன்வஸ்மன்ட்ஸ் லிமிடெட் |
| 35 | ஜுவெல் லங்கா மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 36 | கமல் என்டர்பிறைசஸ் பிறைவேட் லிமிடெட் |
| 37 | கேசேர் எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 38 | குடாமடு மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |

| | |
|---|---|
| 39 | எம்.பி. மணி எஸ்க்சேஞ்ஞர் பிறைவேட் லிமிடெட் |
| 40 | மஜெஸ்ரிக் ஜுவலெரி பிறைவேட் லிமிடெட் |
| 41 | மாருதி மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 42 | மயூரி மணி எஸ்க்சேஞ்ஞர் பிறைவேட் லிமிடெட் |
| 43 | மெற்றோ போரெக்ஸ் பிறைவேட் லிமிடெட் |
| 44 | மிட்னா மினி மார்கெட் பிறைவேட் லிமிடெட் |
| 45 | மிலானோ மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 46 | மொன்டி கார்கோ எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 47 | நர்மதா கோல்ட் சென்டர் பிறைவேட் லிமிடெட் |
| 48 | நியூ நடாசா பிறைவேட் லிமிடெட் |
| 49 | நியூ ரீகல்ஸ் மணி சேஞ்ஞர் பிறைவேட் லிமிடெட் |
| 50 | பாத்பயின்டர் பிறைவேட் லிமிடெட் |
| 51 | பேர்ல் எக்சி பிறைவேட் லிமிடெட் |
| 52 | பிரசன்னா மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 53 | புஸ்பா மணி சேஞ்ஞர் பிறைவேட் லிமிடெட் |
| 54 | றபிக்ஸ் ஜெம்ஸ் பிறைவேட் லிமிடெட் |
| 55 | ரவி பேரெக்சா பிறைவேட் லிமிடெட் |
| 56 | றிம்ஹா ஜுவலெரி பிறைவேட் லிமிடெட் |
| 57 | ரவிந்து என்டர்பிறைசஸ் பிறைவேட் லிமிடெட் |
| 58 | றெட் ரூபி ஜுவலெர்ஸ் பிறைவேட் லிமிடெட் |
| 59 | றோயல் மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 60 | றோயல் மணி மார்ட் பிறைவேட் லிமிடெட் |
| 61 | சாலாகா டிரஸ்ட் இன்வஸ்ட்மன்ட் பிறைவேட் லிமிடெட் |
| 62 | சாரங்க மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 63 | சிபாஸ் மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 64 | எஸ்எஸ்டீட மணி எஸ்க்சேஞ்ஜிங் பிறைவேட் லிமிடெட் |
| 65 | சுவிஸ் மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 66 | தோமஸ் குக் லங்கா பிறைவேட் லிமிடெட் |
| 67 | யுனிக் பேரெக்ஸ் பிறைவேட் லிமிடெட் |
| 68 | வசந்தாஸ் இன்டநேஷனல் மணி எஸ்க்சேஞ பிரைவட் லி-மிடெட் |
| 69 | வெஸ்டன் மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |
| 70 | வின்சர் மணி எஸ்க்சேஞ் பிறைவேட் லிமிடெட் |

## 10. வசதிகள் முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு/ ஆர்வலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பணியாற்றும் நிலைமைகளை உறுதிசெய்யும் நோக்குடன் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களமானது 2017இல் இலங்கை மத்திய வங்கி தலைமை அலுவலக செம்மைப்படுத்தல் செயற்றிட்டத்தினை ஆரம்பித்தது. இச்செயற்றிட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலக கட்டடத்தின் மின்சார மற்றும் இயந்திரவியல் சேவைகளின் நம்பகத் தன்மையினையும் கட்டமைப்புசார் ஆற்றல்வாய்ந்த தனிமையினையும் அதிகரிப்பதன் மீது அதிக அழுத்தம் கொடுக்கப்படும்.

ஆண்டின் போது இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள் ஏதேனும் இடையூறுகள் இன்றி தமது பணியினைக் கொண்டு நடாத்துவதற்காக பொருத்தமான பணியாற்றும் சூழலினை உறுதிசெய்கின்ற முக்கிய கட்டட வசதிகளின் நம்பகத் தன்மையினையும் வினைத்திறனையும் உறுதிசெய்வதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன. முக்கிய பணிகளின் முறையான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்கு கிரமமான பரிசோதனைகள் கொண்டு நடாத்தப்பட்டன. மேலும், சிறந்த கண்காணிப்பிற்கும் விழிப்பிற்கும் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலக கட்டடத்தில் சிசிரிவி கெமராக்களின் செயற்பரப்பினை தரமுயர்த்தல் மற்றும் விரிவாக்கல் மீதான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

நாணய விதிச்சட்டத்திற்கு இணங்க இலங்கை மத்திய வங்கியின் சொத்துகள் மற்றும் கட்டடங்களை வாடகைக்கு விடுவதன் மீது பிரதான கொள்கைத் தீர்மானமொன்ற எடுக்கப்பட்டதுடன் இதன் விளைவாக, 2019இன் இறுதியளவில் அனைத்து இலங்கை மத்திய வங்கி சொத்துக்களிலிருந்தும் வெளியேறுவதற்கு அனைத்து உள்நாட்டு குத்தகைத்தாரர்களுக்கும் நாணயச் சபையின் தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

சோமாவதி விடுமுறை விடுதி மற்றும் கிளிநொச்சி, மாத்தறை, மற்றும் மாத்தளை பிரதேச அலுவலகங்களை புதுபித்தல் உள்ளடங்களாக பல நிருமாண மற்றும் பராமரிப்புச் செயற்றிட்டங்கள் வேண்டப்பட்ட தரநியமங்களுடன் குறித்துரைத்த காலம் மற்றும் செலவுகளினுள் நிறைவு செய்யப்பட்டன. சவரின் வதிவிடங்களின் சில அடிப்படைத் தேவைப்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டன.

இலங்கை மத்திய வங்கி வாகனத்தொகுதிக்கு ஆறு (06) புதிய வாகனங்களைச் சேர்த்ததன் மூலம் போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட்ட அதேவேளை குறைந்தது ஒரு தசாப்தத்திற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட பதினொரு (11) சிக்கனமற்ற வாகனங்களை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. போக்குவரத்து வசதிகள் கிடைக்கப்பெறும் தன்மை, நம்பகத்தன்மை மற்றும் செலவுச்சிக்கனம் என்வற்றை அதிகரிப்பதற்காக வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் 2018 ஆம் ஆண்டுக்காக இணையத்தளமூடான விலைப்பட்டியல் மற்றும் வாகன நடமாட்டத்தின் வழியறிதல் உள்ளடங்கலாக நவீன வசதிகளுடன் கூடிய வினைத்திறன்மிக்க போக்குவரத்து சேவைவழங்கும் இயலளவுடைய பல வெளியிலிருந்து சேவைப்பெற்றுக்கொள்ளப்படும் வாகன சேவை வழங்குனர்களின் சேவைகளைப் பெற்றுக்கொண்டது.

மேலும், வசதிகள் முகாமைத்துவ திணைக்களம், 2017 யூலையின் போது இடம்பெற்ற பணம் தூயதாக்கல் மீதான ஆசிய/ பசுபிக் குழுக் கூட்டத்தின் போது வெளிவாரி சேவை வழங்குநர்களின் உதவியுடன் 400இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் உரியகால போக்குவரத்து வசதிகளை வழங்கக்கூடியதாகவிருந்தது.

இலங்கை மத்திய வங்கி ஊழியர்களினதும் ஓய்வுபெற்றவர்களினதும் வசதியினை மேம்படுத்துவதற்காக சீரமைக்கப்பட்ட செயன்முறையொன்றுடன் தொடர்ந்தும் விடுமுறை விடுதி வசதிகளை வழங்கியது. வருடாந்த பயன்பாட்டாளர் திருப்தி அளவீடு 2017 - மூன்றாம் காலாண்டில் நடாத்தப்பட்டதுடன் பயன்பாட்டாளர் மனநிறைவினை மேம்படுத்துவதற்கு அவசியமான வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

## 11. நிதித் திணைக்களம்

நிதித் திணைக்களம், பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள்/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் நாணய விதிச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாட்டு நியதிகள் என்பனவற்றிற்கிணங்க இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது. நிதித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், மத்திய வங்கியின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், மத்திய வங்கியின் உள்ளக மற்றும் வெளியக நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்காக கொடுப்பனவு முறைமையொன்றைப் பேணுதல், கொடையாளர் நிதியங்களை பகிர்ந்தளித்தல் மற்றும் அரச வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்தல், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளக

அறிக்கையிடலுக்கான முறைமைகளைப் பேணுதல், 17 உள்ளக நிதியங்களை முகாமைப்படுத்தல், மத்திய வங்கியின் நிலையான சொத்துப் பதிவேட்டினைப் பேணுதல் மற்றும் அலுவலர் கடன்களின் தரவுத்தளத்தைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### 11.1 நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு

(அ) **மாதாந்த ஐந்தொகை:** நாணய விதிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க, 2016 திசெம்பர் மற்றும் 2017 சனவரி - நவெம்பர் காலப்பகுதிக்கான மாதாந்த ஐந்தொகைகள் தயாரிக்கப்பட்டது.

(ஆ) **காலாண்டு ரீதியான அறிக்கைகள்:** காலாண்டு நிதியியல் செயலாற்றம் மற்றும் நிலைமை என்பன 2017இல் நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டன.

(இ) **வருடாந்த நிதியியல் கணக்குகள்:** 2002 தொடக்கம் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களும் பின்பற்றப்பட்டன. இக்கூற்றுக்கள் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டன. 2017ஆம் ஆண்டுப் பகுதியில் தொடர்பான கணக்கீட்டு நியமங்களுடனும் தேவைப்பாடுகளுடனும் இணங்கிச் செல்வதற்காக கணக்கீட்டு முறைமைகளும் நடவடிக்கை முறைகளும் தொடர்ச்சியான அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டன. 2017ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஆண்டறிக்கையின் பகுதி II இன் தொடக்கத்தில் காட்டப்பட்டுள்ளன.

(ஈ) **பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 09 இற்கான தயார்ப்படுத்தல்:** 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில், 2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 09இன் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுக்காக பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

i. தொடர்புடைய திணைக்களங்களின் மூத்த முகாமைத்துவம் மற்றும் அலுவலர்களுக்கு பல்வேறுபட்ட விழிப்புணர்வுக் கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டன.

ii. கணக்காய்வு நிறுவனமொன்றிடமிருந்து தொழில்நுட்ப உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது.

iii. சொத்து வகைப்படுத்தல் மதிப்பிடப்பட்டு, பெறுமானத் தேய்வு மாதிரி தீர்மானிக்கப்பட்டது.

iv. கணக்காய்வாளர் நாயகத்தால் தெரிவு செய்யப்பட்ட வெளியகக் கணக்காய்வாளரிடமிருந்து அனுமதி பெறப்பட்டது.

v. கணக்காய்வு ஆலோசனைக் குழுவுடன் கலந்துரையாடப் பட்டதுடன் முறைமைகளுக்காக நாணயச் சபையின் ஒப்புதல் பெறப்பட்டது.

vi. சொத்து வகைப்படுத்தலுடன் தொடர்புடைய கணக்கீடு மற்றும் திறைசேரி முறைமைகளுக்கு தேவையான மாற்றங்கள் பரிசோதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், தேவைப்படுமிடத்து கணக்கீட்டு செயன்முறைக்கான மாற்றங்கள் இறுதியில் செய்யப்படும்.

### 11.2 வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினை தயாரித்தல்

2018ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் வருடாந்த வருமானம் மற்றும் செலவின வரவு செலவுத்திட்டமும் மூலதன வரவு செலவுத்திட்டமும் மத்திய வங்கியின் ஒவ்வொரு திணைக்களத்தினதும் உபாயத் திட்டத்தின் கீழான நடவடிக்கைத் திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டன. இது தொடர்பான செயன்முறைகள் 2017 ஓகத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2017 நவெம்பரில் இறுதிப்படுத்தப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் வரவுசெலவுத் திட்டத்திற்கான நாணயச் சபையின் ஒப்புதல் 2017 நவெம்பரில் பெறப்பட்டதுடன் வரவுசெலவுத் திட்டம் 2018இன் முதல் வேலை நாளன்று திணைக்களங்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டது. வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாட்டின் காத்திரமான கண்காணிப்பினைக் கருத்திற்கொண்டு 2017ஆம் ஆண்டிற்கான காலாண்டு ரீதியான வரவுசெலவுத் திட்டச் செயலாற்றக் கூற்றுக்கள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### 11.3 உள்ளக மற்றும் வெளிவாரி நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவு முறைமை

(அ) ஊழியர் ஊதியங்கள், அலுவலர் கடன்கள், தொழிற்பாட்டுச் செலவினங்கள் போன்ற அனைத்து உள்ளகக் கொடுப்பனவுகளும் 2017இல் நேர இலக்குகளுக்குள் செய்யப்பட்டன.

(ஆ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கான அனைத்து வெளிவாரிக் கொடுப்பனவுகளும் மத்திய வங்கியின் துணைநில் சட்டங்களின்கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. 2017ஆம் ஆண்டுப் பகுதியில் மொத்த கொடுப்பனவுகள் 4,978ஆகக் காணப்பட்டதுடன் இது 4,722 உள்நாட்டு வழங்குநர்களையும் 256 வெளிநாட்டு வழங்குநர்களையும் உள்ளடக்கியிருந்தது.

(இ) 2017ஆம் ஆண்டுப் பகுதியில் பொதுத் திறைசேரி மற்றும் தொடர்பான செயற்றிட்டங்களுக்காக ஏறத்தாழ ரூ.1,103.9 பில்லியன் பெறுமதியான 2,776 பகிர்ந்தளிப்புக்களும் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவு மீதான ரூ.727.6 பில்லியன் பெறுமதியான 617 தவணைக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பல்வேறு செயற்றிட்டங்களுக்காக வெளிநாட்டு வங்கியொன்றுடன் 9 வங்கித்தொழில் ஒழுங்குபடுத்தல்களும் கையொப்பமிடப்பட்டன.

### 11.4 உள்ளக நிதியங்களின் முகாமைத்துவம்

(அ) நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி, இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களின் (ஊ.சே. நிதியம் தவிர்ந்த) முதலீடுகளை மத்திய ரீதியில் முகாமை செய்வதற்காக நிதித் திணைக்களத்தின் கீழ் ஒரு தனியலகு நிறுவப்பட்டதுடன் 2016 மார்ச்சில் தொழிற்பாடுகளை தொடங்கியது. இதன்படி, நிதித் திணைக்களம் அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்றவர்களின் 8 ஓய்வூதிய நிதியங்கள், நிதித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 4 ஏனைய நிதியங்கள், வங்கி மேற்பார்வை திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம், அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 3 நிதியங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் செயற்றிட்ட நிதியங்கள் என்பனவற்றை உள்ளடக்கி 17 உள்ளக நிதியங்களை முகாமை செய்கின்றது. அனைத்து நிதியங்களும் நிதித் திணைக்களத்தினால் பொது முதலீட்டுக் கொள்கையொன்றின் கீழ் முதலிடப்பட்டதுடன் தொடர்பான உரிமைத் திணைக்களங்கள் அத்தகைய நிதியங்களின் நிர்வாகதாரராகவும் செயல்படுகின்றன. நிதிய முகாமைத்துவ ஆளுகை முறைமையானது, ஒரு சுயாதீனமாகத் தொழிற்படுகின்ற முன் அலுவலகம், மத்திய அலுவலகம் மற்றும் ஒரு பின் அலுவலகம் போன்றவற்றையும் உள்ளடக்குவதுடன், தீர்மானங்கள் துணை ஆளுநரின் தலைமையிலான முதலீட்டுக் குழுவினால் எடுக்கப்படுவதுடன், இம்முதலீட்டுக் குழுவானது நிதியங்களின் முதலீடுகளிற்கு ஆலோசனை மற்றும் கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் 12 தடவைகள் சந்தித்துக் கொண்டது. முதலீடுகளின் ஒப்புதலுக்காக நாணயச் சபைக்கு மாதாந்தம் அறிக்கையிட்டுள்ளது.

(ஆ) நிதியங்கள் முக்கியமாக அரச பிணையங்கள், அரச வங்கிகளின் (இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கி)

நிலையான வைப்புக்கள், உயர் வட்டிவீதங்களைக் கொண்ட கம்பனித் தொகுதிக் கடன்கள் மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவுகள் என்பனவற்றில் முதலீடு செய்யப்பட்டன. 2016ஆம் ஆண்டிற்கான 5 ஓய்வூதிய நிதியங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இந்நிதியங்களின் விதிகளுக்கிணங்க நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 2017 இறுதியிலுள்ளவாறு, மொத்த நிதியமட்டம் ரூ.93.88 பில்லியனுக்கு அதிகரித்தது.

அட்டவணை II - 21

**நிதிய முகாமைத்துவத்தின் செயலாற்றம் - 2017**

(ரூ. பில்லியன்)

| திணைக்களம் | 31 திசெம்பர் 2017இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி) | 31 திசெம்பர் 2016இல் உள்ளவாறான சொத்துப் பட்டியல் பெறுமதி (முதலிடப்பட்ட பெறுமதி) |
|---|---|---|
| நிதி | 52.22 | 48.90 |
| வங்கி மேற்பார்வை | 38.47 | 27.21 |
| பிரதேச அபிவிருத்தி | 3.12 | 3.09 |
| அலுவலர் பணிகள் முகாமைத்துவம் | 0.07 | 0.06 |
| **மொத்தம்** | **93.88** | **79.26** |

### 11.5 நிலையான சொத்துக்களின் பதிவேடுகளைப் பேணுதல்

நிதித் திணைக்களம் பொதுப் பேரேட்டு முறைமையின் நிலையான சொத்து மாதிரியிலுள்ள நிலையான சொத்து பதிவேட்டில் மத்திய வங்கியின் நிலையான சொத்துக்களின் அனைத்துப் பதிவுகளையும் பேணுகின்றது. 2017இல் புதிய கொள்வனவுகள் மற்றும் அமைவிடங்கள், அமைவிடங்களின் மாற்றங்கள், மீள்மதிப்பீடுகள், தேய்மானங்கள் மற்றும் அகற்றல்கள் போன்ற அனைத்து மாற்றங்களும் இப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன. 2017இல் இப்பதிவேடானது 760 விடயங்களின் கொள்வனவுடனும் 423 பொருட்களின் அகற்றல்களுடனும் இற்றைப்படுத்தப்பட்டது.

### 11.6 அலுவலர் கடன்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்

நிதித் திணைக்களம், 2017ஆம் ஆண்டுப்பகுதியில் கடன்களின் அறவிடல் பதிவு செயன்முறையினை வசதிப்படுத்துவதற்காகவும் ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் தகவல்களை வழங்குவதற்காகவும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் கடன் தரவுத் தளத்தை தொடர்ச்சியாகப் பேணியது. 2017 காலப்பகுதியில் ரூ.1.08 பில்லியன் பெறுமதியான 942 கடன்கள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 11.7 ஏனைய தொழிற்பாடுகள் - கொள்வனவுச் செயன்முறை

மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின்படி, நிதித் திணைக்களத்தின் அலுவலர்கள், பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலைக்கோரல் சபைகளிலும் அளவீட்டுச் சபைகளிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இக்கொள்வனவுகள் தொடர்பாக, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் ஏறத்தாழ 151 விலைக்கோரல் சபைகளிலும் 45 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிலும் கலந்து கொண்டனர்.

## 12. நிதியியல் உளவறிதல் பிரிவு

நிதியியல் உளவறிதல் பிரிவு, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், சுயாதீனமான நியதிச்சட்ட ரீதியான அதிகாரபூர்வமான நிறுவனமாக 2006இல் நிறுவப்பட்டது. நிருவாக நோக்கங்களுக்காக, நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், நிதி அமைச்சரினால் செய்யப்பட்ட கட்டளையொன்றின் நியதிகளின்படி, 2007 மாச்சிலிருந்து இலங்கை மத்திய வங்கிக்குள்ளே ஒரு திணைக்களமாகத் தொழிற்பட்டு வருகின்றது. நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகள், பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள சட்டத்திற்கு மாறான ஏனைய நடவடிக்கைகளுடன் சாத்தியமான தொடர்புகளைக் கொண்டுள்ள விடயங்களைக் கண்டறியும் நோக்குடன் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல், மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கையுடன் தொடர்பான சந்தேகத்திற்குரிய நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய புலனாய்வுகளையும் அத்தகைய பகுப்பாய்வுத் தகவல்களையும் விபரங்களையும் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அத்துடன் அல்லது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளிடம் வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவின் தொழிற்பாடுகள் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடுத்தல் சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் என்பனவற்றின் கீழும் நடைமுறைக்கிடப்படுகின்றது.

### 12.1. தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரப்புதல்

நிதியியல் உளவறிதல் பிரிவு, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மீதான அறிக்கையிடலுக்கு உதவுவதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட வெப்தள முறைமையான “லங்கா பின்” ஊடாக அறிக்கையிடும் நிறுவனங்களிடமிருந்து சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் உட்பட, நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைப் பெற்றுக்கொள்கிறது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், பங்குத்தரகர்கள் மற்றும் பணம் அல்லது பெறுமதியான மாற்றல் பணிகளை வழங்குவோர் ரூ.1.0 மில்லியன் மற்றும் அதற்கு மேற்பட்ட அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களிலான காசுக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்களை (உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டும்) நிதியியல் உளவறிதல் பிரிவிற்குத் தொடர்ந்தும் அறிக்கையிடுகின்றன. மேலும், சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 7இன் நியதிகளில் அறிக்கையிடும் நிறுவனங்களின்படி நிதியியல் உளவறிதல் பிரிவில் கோவைப்படுத்தப்படுகின்றன. இதற்கமைய, 2017ஆம் ஆண்டில் ரூ.8.82 மில்லியனுக்கு மேற்பட்ட காசு/ நிதிய மாற்றல்களும் 925 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்கள் அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர் துறையினைக் கண்காணித்து ஒழுங்குமுறைப்படுத்துபவரான செலாவணிக் கட்டுப்பாட்டாளரினூடாக கீழ்மட்ட தொகையினை விஞ்சுகின்ற அவர்களின் காசுக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றி அறிவிக்கின்றனர். 2017இல் நிதியியல் உளவறிதல் பிரிவு, சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு மேலதிக விசாரணைகளுக்குகாக 418 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிட்டது.

### 12.2. அறிக்கையிடும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தல்

ஏதேனும் சட்டத்துக்குப்புறம்பான நடவடிக்கை/ குற்றவியல் தவறினை இழைப்பதுடன் தொடர்புபடக்கூடிய எவையேனும் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கான கடப்பாட்டினை குறித்துரைக்கின்ற 2017இன் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் (படிவம்) ஒழுங்குவிதிகள் மீது 2017 மாச்சு 30ஆம் திகதிய 2015/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

மேலும், 2017 இற்கான இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறை பரீட்சகத் திட்டத்தின் நியதிகளுக்கமைவாக தலத்திலான பரீட்சிப்பு பற்றிய சுற்றறிக்கைகளும் 2017இன் 01ஆம் இலக்க பணப்பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் இணங்கியொழுகுதல் கடப்பாடுகள் மீதான வழிகாட்டல்கள் என்பன முறையே 2017 சனவரி 17 மற்றும் 2017 சனவரி 20ஆம் திகதிகளில் வெளியிடப்பட்டன.

### 12.3. உள் நாட்டு மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பு

#### (அ) புரிந்துணர்வு ஒப்பந்தம்

2016இல் நிதியியல் உளவறிதல் பிரிவு, ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் இலங்கைப் பொலிஸ் ஆகியவற்றுடன் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் பன்னாட்டு ரீதியாக தாய்லாந்து இராச்சியத்தின் பணம் தூயதாக்குதலுக்கெதிரான அலுவலகம், பூட்டான் இராச்சியத்தின் நிதியியல் உளவறிதல் பிரிவு, சீனாவின் பணம் தூயதாக்கலுக்கெதிரான கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு, கட்டார் நிதியியல் தகவல் பிரிவு நிலையம், ரினிடாட் மற்றும் டொபேகோவின் நிதியியல் உளவறிதல் பிரிவு என்பனவற்றுடன் நிதியியல் உளவறிதல் நோக்கங்களுக்கான தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும்/ பெற்றுக் கொள்வதற்குமாக ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் செய்து கொண்டது. இதன்படி, 2017இன் இறுதியில் வெளிநாட்டு இணைத்தரப்பினருடனும் உள்நாட்டு முகவர்களுடனும் நிதியியல் உளவறிதல் பிரிவு கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மொத்த எண்ணிக்கை முறையே 37 ஆகவும் 05 ஆகவும் அதிகரித்தது.

#### (ஆ) எக்மன்ட் குழுமம்

நிதியியல் உளவறிதல் பிரிவு, புலனாய்வுகளை மேற்கொள்வதற்காகவும் அவர்களின் புலனாய்வுகள் மீதான சான்றுகளைத் திரட்டிக் கொள்வதற்காகவும், உறுப்பு நாடுகளுடன் ஒத்துழைப்பினை மேற்கொள்ளும் பொருட்டு உலகளாவிய ரீதியில் 152 உறுப்பினர் நாடுகளை உள்ளடக்கிய நிதியியல் உளவறிதல் சங்கமான எக்மன்ட் குழுமத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொண்டது. 2017இல் எக்மன்ட் உறுப்பினர்களுடன் நிதியியல் உளவறிதல் பிரிவு பரிமாறிக் கொண்ட தகவல் நிகழ்வுகளின் மொத்த எண்ணிக்கை 104ஆகக் காணப்பட்டது. முன்னெடுக்கப்படும் புலனாய்வுகள் தொடர்பிலான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இணைத்தரப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளிடமிருந்து 50 கோரிக்கைகளைப் பெற்றதுடன் இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இணைத்தரப்பு நிதியியல் உளவறிதல் பிரிவுகளிடம் 54 கோரிக்கைகளையும் விடுத்தது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள், 2017 பெப்புருவரியில் டோஹா கட்டாரில் நடைபெற்ற நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் எக்மன்ட் குழுமத்தின் கூட்டத்திலும் 2017 யூலையில் மாக்கோவில் நடைபெற்ற எக்மன்ட் கொள்கை நடவடிக்கை முறை தொழிற்பாட்டுக் குழுவின் உள்ளகத் தொடர் கூட்டத்திலும் கலந்து கொண்டனர்.

#### (இ) பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுமம்

பணம் தூயதாக்கல் மீதான ஆசிய/ பசுபிக் குழுவின் 20ஆவது வருடாந்தக் கூட்டத்தை, ஆசிய/ பசுபிக் குழுவின் 41 உறுப்பு நாடுகளிலிருந்து 408 பேராளர் பிரதிநிதிகளினதும் பல பன்னாட்டு அவதானிப்பு அமைப்புகளிலிருந்தான 24 அவதானிப்பாளர்களினதும் பங்கேற்புடன் 2017யூலை 15-21 வரை நிதியியல் உளவறிதல் பிரிவு கொழும்பில் நடாத்தியது. அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கௌரவ மங்கள சமரவீர அவர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். பன்னாட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தரநியமங்களை எய்துவதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பினை நாடு மேலும் எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் 2016-2018 ஆண்டுகளுக்காக இலங்கை, ஆசிய பசுபிக் குழுமத்தின் இணைத் தலைமைக்கு தெரிவுசெய்யப்பட்டமையின் பயனாக இவ்வருடாந்தக் கூட்டம் இலங்கைக்கு விசேட முக்கியத்துவமிக்கதாகும்.

#### (ஈ) பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தொடர்பான பிம்ஸ்டெக் துணைக் குழுமம்

2017 ஏப்பிறல் 26-27 காலப்பகுதியில் மியன்மாரில் நடைபெற்ற பல்துறைவாரியான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காளவிரிகுடாவின் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான துணைக் குழுமத்தின் 9ஆவது கூட்டத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள் பங்கேற்றனர்.

### 12.4. நிறுவன ரீதியான இயலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களைக் கண்டுபிடித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல் மீதான விழிப்புணர்வினை அதிகரிக்கும் தொடர்ச்சியான முயற்சியாக இவ்வாண்டுப் பகுதியில் 31 விழிப்புணர்வு/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் இதில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் பணம் அல்லது பெறுமதிமிக்க மாற்றல் சேவைகளை வழங்குவோர் ஆகியவற்றிலிருந்து 2,548 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் 1ஆவது, 2ஆவது தொழில்நுட்ப உதவிச் செயலமர்வு முறையே 2017 மாச்சு 6-14 மற்றும் 2017 செத்தெம்பர் 25 - ஒத்தோபர் 05 வரையான காலப்பகுதியில் பன்னாட்டு நாணய நிதிய நிபுணர்களால் நடாத்தப்பட்டது. இலங்கையில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் ஆட்சிமுறையின் கீழ் இடர் அடிப்படையிலான மேற்பார்வை, நிதியில் உளவறிதல் பிரிவு இயலளவு அபிவிருத்திகள் மற்றும் சட்டவாக்கத் திருத்தங்கள் ஆகிய மூன்று முக்கிய விடயப்பரப்புக்களை வலுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியினை வழங்கியது. ஐக்கிய அமெரிக்கத் திறைசேரித் திணைக்களத்தின் வதிவிட ஆலோசகர், நிதியியல் உளவறிதல் பிரிவில் 2017 மேயில் தனது கடமையினைப் பொறுப்பேற்றார். நிதியியல் உளவறிதல் பிரிவின் காத்திரமான தொழிற்பாட்டுத் தன்மை, நிதியியல் துறை மேற்பார்வை மற்றும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் விடய அபிவிருத்தி மற்றும் சொத்து முகாமைத்துவம் ஆகிய முக்கியமாக இனங்காணப்பட்ட மூன்று விடயப்பரப்புக்களின் கீழ் அவர் இலங்கைக்கு தொழில்நுட்ப உதவியினை வழங்கிவருகின்றார்.

### 12.5. பரஸ்பர மதிப்பீடு மற்றும் பின்தொடர் வேலைகள்

நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் திருத்தப்பட்ட விதந்துரைப்புக்களுக்கு இசைவான விதத்தில், இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் நடவடிக்கைகளுடனும் பன்னாட்டுப் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் நியமங்களுடனும் இணங்கிச் செல்வதனை மதிப்பிடும் நோக்குடன் இலங்கை மீதான மூன்றாவது சுற்று பரஸ்பர மதிப்பீடு ஆசிய பசுபிக் குழுமத்தினால் 2014/15 காலப்பகுதியில் நடத்தப்பட்டது. 2015 செத்தெம்பரில் பின்பற்றப்பட்ட பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கை, ஆசிய பசுபிக் குழுமத்தின் ‘ விரைந்து அதிகரிக்கப்பட்ட பின்தொடர்’ செயன்முறைகளின் கீழ் இலங்கையினால் நடைமுறைப்படுத்துவதற்கென ஒரு தொகுதி நடவடிக்கைகளை விதந்துரைத்தது. 2016 ஒத்தோபரில், நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழு, பணம் தூயதாக்கலுக்கெதிரான/

பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தலின் காத்திரமான முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்கு இலங்கை நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் பன்னாட்டு ஒத்துழைப்பு மீளாய்வுக் குழுவின் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என தெரிவித்தது. பல எண்ணிக்கையான கலந்துரையாடல்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளின் பின்னர் இலங்கை 4 விடயப்பரப்புக்களில் அதாவது, பன்னாட்டு ஒத்துழைப்பு, மேற்பார்வை, சட்ட ரீதியான ஆட்கள் மற்றும் ஒழுங்குகள், ஆயுதப்பெருக்கம், (வடகொரியா மற்றும் ஈரான்) மீதான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள் என்பவற்றில் போதியளவு முன்னேற்றமடையவில்லை என நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழு தெரிவித்தது. இதன் விளைவாக, 2017 ஒத்தோபரில் ஆஜன்ரீனாவின் புவனஸ் அயர்ஸில் இடம்பெற்ற அதன் முழு நிறைவான சமவாயத்தில் நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவானது, நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் இணங்குவித்தல் ஆவணத்தில் உபாய பணம் தூயதாக்கல்/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் குறைபாடுகளுடன் கூடிய ஆட்சிப் பிரதேசமொன்றாக இலங்கையினை அட்டவணைப்படுத்தியது. இவ்வாவணம் பொதுவாக "சாம்பல் பட்டியல்" என அறியப்படுகின்றது. அட்டவணைப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, இனங்காணப்பட்ட உபாயக் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நேரம் வகுக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டமொன்று இலங்கைக்கு வழங்கப்பட்டது. நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் மூலம் விதந்துரைக்கப்பட்ட நடவடிக்கைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவும் ஏனைய ஆர்வலர்களும் அவசியமான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளன.

## 13. மனித வளங்கள்

2017இல் மனித வளங்கள் திணைக்களம் நன்கு ஊக்கப்படுத்தப்பட்ட அர்பணிப்பு மற்றும் திறன்மிக்க ஊழியர் குழாமினை பேணுவதற்கான அதனது முயற்சிகளை தொடர்ந்தது. மனித வளங்கள் திணைக்களமானது, மனித வளங்கள் முகாமைத்துவக் கொள்கைகளை அபிவிருத்தி செய்வதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்ததுடன் வங்கியின் மையக்குறிக்கோள்களை அடைவதில் ஊழியர்களது ஈடுபாட்டினை மேம்படுத்தும் வகையில் சிறப்பான பயிற்சிகளையும் பின்பற்றியது. மேலதிகமாக, மனித வளங்கள் திணைக்களமானது செயற்பாடுகளை மதிப்பிடுதல், ஊழியர்களது வேலைச் சுழற்சி, தொடர்ச்சியான திட்டமிடல்கள், வகுப்பு மற்றும் தர பதவியுயர்வுகளை வழங்குதல் மற்றும் சிறப்பான தொழில்தருநர் - ஊழியர் தொடர்பினை பேணுவதற்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கு கைத்தொழில் நல்லிணக்கத்தை பேணுதல் ஆகியவற்றை நிறைவேற்றுவதையும் தொடர்ந்தது. 2017ஆம் ஆண்டில் மனித வளங்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் சாராம்சமும் வங்கியின் மனிதவள அமைப்பும் கீழே தரப்பட்டுள்ளன.


### 13.1 மனித வளங்கள் அமைப்பு

2017இன் இறுதியிலுள்ளவாறு, இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1,405 ஆக விளங்கி 645 உயர் பதவி அலுவலர்களையும் 601 உயர் பதவியல்லாத அலுவலர்களையும் 159 சிற்றூழியர்களையும் உள்ளடக்கியுள்ளது. வங்கியின் ஊழியருடைய சராசரி வயது 2017ஆம் ஆண்டின் முடிவில் 39 வருடங்களாகவிருந்தது. வரைபடம் ஐஐ - 6இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மொத்த அலுவலர்களின் உயர் பதவி அலுவலர்கள், உயர் பதவியல்லாத அலுவலர்கள் மற்றும் சிற்றூழியர்களின் உள்ளமைப்பானது, அதற்கு முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் பொழுது மாற்றமின்றிக் காணப்பட்டது. 2017இல் இறுதியில் உள்ளவாறு வகுப்பு அடிப்படையிலான பால் அடிப்படையிலான மற்றும் வயது அடிப்படையிலான அலுவலர் உள்ளமைப்பு பின்வரும் வரைபடம் II - 6இல் காட்டப்பட்டுள்ளது.


**வரைபடம் - II - 4**

**2017.12.31 இல் உள்ளவாறு அலுவலர்களின் உள்ளமைப்பு**


**(அ) ஊழியர்களின் உள்ளமைப்பு : வகுப்பு ரீதியாக**




**(ஆ) ஊழியர்களின் உள்ளமைப்பு : பால் ரீதியாக**




**(இ) ஊழியர்களின் உள்ளமைப்பு : வயது ரீதியாக**




### 13.2 ஊழியர்களின் கல்வி மற்றும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள்

அட்டவணை II - 22இல் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறு, உயர்தர கல்வி மற்றும் தொழிற் தகைமைகளுடன் கூடிய பன்மைத்துவ மற்றும் தகுதிவாய்ந்த மனித வளங்கள் குழுவை வங்கி கொண்டிருக்கிறது.

### 13.3 மனித வள முகாமைத்துவம்

(அ) ஆட்சேர்ப்பு

2017இல், முகாமைத்துவ உதவியாளர், சட்ட அலுவலர், பாதுகாப்பு அலுவலர் (ஆண்), கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோருவதற்கும் முதன்மை நூலகர் பதவிக்கான பொருத்தமான போட்டியாளரை ஆட்சேர்க்கும் நடைமுறையை இறுதிப்படுத்துவதற்குமான செயற்பாடுகள்

முன்னெடுக்கப்பட்டன. மேலதிகமாக, வங்கியின் குறிப்பிட்ட போட்டி ஆட்சேர்ப்பினை நிரப்பும் முகமாக சமாந்தரமான விதத்தில் ஆட்சேர்ப்பு செயன்முறையின் கீழ் ஒரு மொழிபெயர்ப்பாளரை ஆட்சேர்ப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**(ஆ) செயலாற்ற முகாமைத்துவம்**

வங்கியின் செயலாற்ற முகாமைத்துவ முறைமையானது ஊழியர்களின் வேலை விபரணங்களைத் தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல், தனிப்பட்ட ஊழியர்களுக்கான இலக்குகளை நிர்ணயித்தல், ஊழியர்களின் செயலாற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் செயலாற்றத்தினை மதிப்பிடுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது.

செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறையின் கீழ், ஒவ்வொரு ஊழியரினதும் செயலாற்ற மட்டமானது மதிப்பீட்டு பிரமாணத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பொதுவான மற்றும் தொழில்நுட்பத் தகைமைகளின் அடிப்படையில் எய்தப்பட்ட செயலாற்றத்திற்குத் தரமிடல்களை வழங்குவதன் மூலம் மதிப்பிடப்படுகிறது. ஊழியர்களின் இறுதிச் செயலாற்ற புள்ளியிடலானது பதவி உயர்வுப் பிரமாணத்தின் தேவைப்பாடுகளில் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது.

மனித வளத் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் திட்டமிட்டவாறு ஊழியர்களின் செயலாற்ற மதிப்பீட்டுச் செயன்முறைகளை மேற்கொண்டது. மேலும், மனித வளத் திணைக்களம், திணைக்களங்களினது நடுவாண்டு செயலாற்ற மீளாய்வுச் செயன்முறைகளையும் மீளாய்வு செய்தது. இது, தொடர்புடைய தரப்பினர்களுக்கு இவ்வாண்டின் முதலரையாண்டு காலப்பகுதியில் உயர் பதவி அலுவலர்களது செயலாற்ற மட்டத்தினை புரிந்துகொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியது.

**(இ) பதவி உயர்வுகள்**

பிரயோகிக்கத்தக்க பதவி உயர்வு பிரமாணங்களுடன் இசைந்து செல்லும் வகையில், மனித வளங்கள் திணைக்களமானது, அவர்களது தொழில் முன்னேற்றங்களை உறுதிப்படுத்தும் விதமான ஊழியர்களிற்கான பதவி உயர்வினை வழங்கியதுடன், அதன் காரணமாக 2017இல் மொத்தமாக (148) அலுவலர்களுக்கு அவர்களது வகுப்பு மற்றும் தரப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. இதனடிப்படையில், இரு (02) உதவி ஆளுநர்கள் துணை ஆளுநர்களாகவும், ஆறு (06) திணைக்களத் தலைவர்கள் உதவி ஆளுநர்களாக உயர் பதவி விசேட தரத்திற்கும் பதவி உயர்த்தப்பட்டதுடன், இரு (02) திணைக்களத் தலைவர்கள் சிரேஷ்ட திணைக்களத் தலைவர்களாகவும் பதவி உயர்த்தப்பட்டனர். மேலும், முப்பத்து நான்கு (34) உயர் அலுவலர் தரம் ஐஐஐ (1) அலுவலர்கள் துணைத் திணைக்கள அலுவலர்களாக பதவி உயர்த்தப்பட்டதுடன் பன்னிரண்டு உயர் பதவியல்லாத அலுவலர்கள் உயர் பதவி அலுவலர்களாக பதவி உயர்த்தப்பட்ட அதேவேளை தொண்ணூற்று இரண்டு (92) அதிகாரிகள் அவர்களது தர பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொண்டனர்.

**(ஈ) வேலைச் சுழற்சி**

வங்கியின் செயன்முறையில் பல்வேறு துறைகளிலும் அனுபவத்தினைப் பெற்று தம்மை வளர்த்துக் கொள்வதற்காக ஊழியர்களிற்கு வாய்ப்பினை வழங்கும் குறிக்கோளுடன் மனித வளங்கள் திணைக்களமானது, வங்கியின் வருடாந்த வேலைச் சுழற்சிக் கொள்கையின் கீழ் 2017 சனவரி 02இலிருந்து நடைமுறைக்குவருமாறு பத்தொன்பது(19) உயர் பதவி அலுவலர்களையும் முப்பத்தொரு(31) உயர் பதவியல்லாத அலுவலர்களையும் இடமாற்றம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**(உ) தொழில்துறை சௌகன்யம்**

மனித வளத் திணைக்களம் முகாமைத்துவத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் நெருக்கமான கலந்துரையாடல்களைப் பேணுவதற்கான வசதி ஏற்பாட்டாளர் என்ற அதன் வகிபாகத்தினைத் தொடர்ந்தும் ஆற்றியது. இதற்கமைய, 2017ஆம் ஆண்டில் ஊதியம், பதவி உயர்வுகள், பயிற்சி, நலன்புரிச் சேவை, ஆட்சேர்ப்பு மற்றும் வங்கியின் பொது நிர்வாகம் தொடர்பாக சில பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக முகாமைத்துவத்திற்கும் தொழிற்சங்கங்களிற்கும் இடையில் 09 கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தது.

**13.4 திணைக்களங்களை மூடுதல் மற்றும் நிறுவுதல்**

புதிய வெளிநாட்டு செலாவணிச் சட்டத்திற்கிணங்க, மனித வளங்கள் திணைக்களமானது 2017 நவெம்பர் 20 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தை நிறுவும் அதேவேளை செலாவணிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தை மூடவும் ஏற்பாடுகளை மேற்கொண்டது.

**13.5 2017ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆளுநர் வெளிநாட்டில் பங்குபற்றிய கூட்டங்கள்**

(அ) 2017 மாச்சு 13 - 18 வரையான காலப்பகுதியில் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ, லாஸ் ஏஞ்சல்ஸ், பொஸ்டன் மற்றும் நியுயோர்க் ஆகிய நகரங்களில் இடம்பெற்ற வணிகமற்ற விளம்பர நிகழ்ச்சிகளில் பங்குபற்றினார்.

(ஆ) 2017 மாச்சு 27 மற்றும் 28 வரையான காலப்பகுதியில் ஐக்கிய இராச்சியம் மற்றும் மத்திய கிழக்கின் துபாய் ஆகிய இடங்களில் இடம்பெற்ற வணிகமற்ற விளம்பர நிகழ்ச்சிகளில் பங்குபற்றினார்.

(இ) 2017 செத்தெம்பர் 13இல் ஹொங்கொங்கில் இடம்பெற்ற 24ஆவது சிஎல்எஸ்ஏ முதலீட்டாளர் மாநாட்டில் காட்சியுடன் கூடிய முன்மொழிவொன்றினை வழங்குவதற்காக பயணமானார்.

(ஈ) 2017 ஒத்தோபர் 11 -14 காலப்பகுதியில் வசிங்கடனில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி 2017ஆம் ஆண்டின் வருடாந்த சந்திப்பில் பங்குபற்றியதுடன், 2017 ஒத்தோபர் 16இல் நியுயோக்கில் இடம்பெற்ற "இலங்கையில் முதலீடு" செய்யுங்கள் முதலீட்டாளர் மாநாட்டிலும் பங்குபற்றினார்.

**அட்டவணை II - 22**

**2017.12.31இல் உள்ளவாறு மத்திய வங்கியின் அலுவலர்களின் கல்வி தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள் வகைகள் கல்வி தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள்**

| வகைகள் | முனைவர் பட்டம் பெற்றோர் | பட்டப்பின் படிப்பு, முதற்பட்டம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | பட்டப்பின் படிப்பு மற்றும் முதற் பட்டம் | பட்டப்பின் படிப்பு மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | முதற்பட்டம் மட்டும் | முதற் பட்டம் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | தொழில்சார் தகைமைகள் மட்டும் |
|---|---|---|---|---|---|---|---|
| அலுவலர் தரம் | 20 | 87 | 174 | 50 | 159 | 17 | 15 |
| அலுவலர் தரமல்லாத | - | 14 | 24 | 15 | 52 | 14 | 30 |
| சிற்றூழியர் வகுப்பு | - | - | - | - | 7 | - | - |
| மொத்தம் | **20** | **101** | **198** | **65** | **218** | **31** | **45** |

(உ) 2017 நவெம்பர் 20இல் நியுயோக்கிலுள்ள ஐக்கிய நாடுகளின் சமாதான கட்டுமான ஆணைக்குழுவுக்கு, ஒன்றினைந்த நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலகத்தின் செயலாளர் நாயகம் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் இணைந்து "இலங்கையின் போருக்கு பின்னரான பயணம்" எனும் தலைப்பில் காட்சிப்படுத்தலுடன் கூடிய முன்மொழிவை மேற்கொள்ளுவதற்காக அமெரிக்கா பயணமானார்.

13.6 பதவி உயர்வுகள்/ நியமனங்கள்

(அ) திரு. கே. டி. ரணசிங்க, உதவி ஆளுநர், 2017 ஏப்பிறல் 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

(ஆ) திரு. சி. ஜே. பி. சிறிவர்த்தன, உதவி ஆளுநர், 2017 ஓகத்து 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

(இ) உயர் அலுவலர் வகுப்பு சிறப்புத் தரங்களுக்குச் செய்யப்பட்ட பதவி உயர்வுகள் மற்றும் நியமனங்களின் விபரங்கள்:-

(i) திருமதி. கே எம் ஏ என் டவுலகல, திருமதி எஸ் குணரட்ண, திரு. என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார, திருமதி. ரி எம் ஜே வை பி பர்னாந்து, திரு ஜே பி ஆர் கருணாரத்ன மற்றும் திருமதி கே குணதிலக ஆகியோர் 2017 ஓகத்து 31ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உதவி ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர்.

(ii) யு பி அலவத்தகே மற்றும் திரு எம் ஐ சுபியான் ஆகியோர் 2017 செத்தெம்பர் 14ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மூத்த திணைக்களத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

(ஈ) முனைவர் (திருமதி) வை எம் இந்திரரட்ண, மேலதிக பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், 2017 சனவரி 10ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(உ) யு பி அலவத்தகே, பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார். நியமிக்கப்பட்ட அவர் 2017 நவெம்பர் 20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

(ஊ) திரு. டீ. எம். ரூபசிங்க, பணிப்பாளர், பிரதேச அலுவலக முகாமைத்துவத் திணைக்களம் 2017 மே 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதன்பிறகு, 2017 செத்தெம்பர் 28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் பொதுப் படுகடன் திணைக்களத்திற்கு கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நியமிக்கப்பட்ட அவர் 2017 திசெம்பர் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(எ) திருமதி சி எம் டி என் கே செனிவிரத்ன, பணிப்பாளர், தகவல் தொழில்நுட்ப திணைக்களம், 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நாணயத் திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஏ) திரு ஏ எம் என் குணவர்த்தன, பணிப்பாளர், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஐ) திரு பி டபிள்யு ஜினசேன, பணிப்பாளர், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம், 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கியின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

(ஒ) திரு கே எச் ஏ எஸ் ஆரியரத்ன, செயலாளர், மத்திய வங்கி, 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நியமிக்கப்பட்ட அவர் 2017 செத்தெம்பர் 28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஓ) திருமதி எச் பி ரி விஜேசூரிய, மேலதிக கண்காணிப்பாளர், நாணயத் திணைக்களம், 2017 மே 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பிரதேச அலுவலக முகாமைத்துவத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நியமிக்கப்பட்ட அவர் 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஔ) திரு பி எல் ஜே எஸ் பாலசூரிய, மேலதிகக் கட்டுப்பாட்டாளர், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பிரதேச அலுவலக முகாமைத்துவத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(க) திரு ரி டி எச் கருணாரத்ன, மேலதிகப் பணிப்பாளர், தொடர்பூட்டல் திணைக்களம், 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ங) திரு கே வி கே அல்விஸ், மேலதிகப் பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ச) திரு டபிள்யு ரணவீர, பதில் மேலதிகப் பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், 2017 செத்தெம்பர் 04ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஞ) திரு ரி எச் பி சரத்சந்திர, கண்காணிப்பாளர், பொதுப்படுகடன் திணைக்களம், 2017 செத்தெம்பர் 28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ட) திருமதி யு எல் முத்துகல, மேலதிக முதன்மைக் கணக்காளர், நிதித் திணைக்களம், 2017 நவெம்பர் 20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதித் திணைக்களத்தின் பதில் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

(ண) முனைவர் எம் இசட் எம் ஆசிம், மேலதிகப் பணிப்பாளர், புள்ளிவிபரத் திணைக்களம், 2017 திசெம்பர் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

13.7 விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்

(அ) திரு. எஸ். ஆர். ஆட்டிகல, உதவி ஆளுநர், உதவி செயலாளராக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கு

(ஆ) திரு. கே எம் எம் சிறிவர்த்தன, உதவி ஆளுநர், மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

(இ) முனைவர் பி. கே. ஜி. ஹரிச்சந்திரா, உயர் பதவி அலுவலர் தரம் ஐஏ, பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளராக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கு

(ஈ) திரு. யூ. கெட்டியாராச்சி, உயர் பதவி அலுவலர் தரம் ஐஐஐ (2), பிரதம நிறைவேற்று அலுவலர்.'. பொது முகாமையாளராக எச்டீஎவ்சி வங்கிக்கு

(உ) திருமதி. எஸ். ரத்நாயக்க , உயர் பதவி அலுவலர் தரம் ஐஐ, நிருவாக உதவியாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

(ஊ) திருமதி. எஸ். அமிதா , உயர் பதவி அலுவலர் தரம் ஐஐ, பொருளியலாளராக, பன்னாட்டு நாணய நிதிய இலங்கை வதிவிட பிரதிநிதி அலுவலகத்திற்கு

(எ) திரு. எஸ். என். டபிள்யூ. கருணதாஸ, ஓட்டுநர், வலு மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி அமைச்சிற்கு

13.8 ஓய்வுபெறல்கள்

(அ) திரு. ரி எம் இசட் முதலிப், மேலதிகப் பணிப்பாளர், பேரண்ட முன்மதியுடைய திணைக்களம் 2017 சனவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்

(ஆ) திருமதி ஆர் பீ வீரசிங்க, பணிப்பாளர், பிரதேச அலுவலக முகாமைத்துவத் திணைக்களம் 2017 சனவரி 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்

(இ) திருமதி ஜே பி மாம்பிட்டிய, உதவி ஆளுநர், 2017 சனவரி 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

(ஈ) திருமதி என் எச் ஈ ஆர் சிறிவர்த்தன, மேலதிகப் பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 2017 சனவரி 28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

(உ) திரு எஸ் ஆர் சுமனசேகர, பதில் மேலதிகப் பணிப்பாளர், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் 2017 பெப்புருவரி 25ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

(ஊ) திரு எஸ் லங்காதிலக, துணை ஆளுநர், 2017 ஏப்பிறல் 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

(எ) செல்வி சரவணமுத்து, உதவி ஆளுநர், 2017 யூன் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

(ஏ) திரு யு எச் ஈ சில்வா, பணிப்பாளர், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் 2017 ஓகத்து 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

(ஐ) திரு எஸ் எஸ் ரத்நாயக்க, உதவி ஆளுநர், 2017 ஓகத்து 14ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

(ஒ) திரு பி சமரசிறி, துணை ஆளுநர், 2017 ஓகத்து 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

(ஓ) திரு ஏ ஏ சந்திரசேன, பதில் மேலதிகப் பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் 2017 ஓகத்து 23ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

(ஔ) திரு ஏ எம் ஆர் கே அத்தநாயக்க, மேலதிகப் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2017 திசெம்பர் 26ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

14. தகவல் தொழில்நுட்பம்

வங்கியின் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப தேவைகளை நிறைவேற்றும் பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது வங்கியின் மையக் குறிக்கோள்களை எய்துவதற்காக நிறுவனமட்ட ஒருங்கிணைக்கப்பட்ட பிரயோகங்களை வழங்குகின்ற இயக்கவாற்றல்மிக்க அதன் வகிபாகத்தினை தொடர்ந்தும் வழங்கியது.

ஆண்டு காலப்பகுதியில், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது ஐந்து பரந்துபட்ட துறைகளில் தனது பங்களிப்பினை செய்தது. அவையாவன, (அ) செலவு சிக்கனமான வியாபாரத் தீர்வுகளை வழங்குதல் (ஆ) வங்கிகள் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்தல் (இ) தேசியக் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பினை நிறுவுவதற்கு பங்களித்தல் (ஈ) தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு மற்றும் விரிதிறனை வலுப்படுத்துதல் (உ) ஊழியர் மத்தியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறமைகளை மேம்படுத்தல்.

அ. செலவுச் சிக்கனமாக வியாபாரத் தீர்வுகளை வழங்குதல்

இலங்கை அரசாங்கத்திற்காக பொது படுகடன் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற உள்நாட்டு கடன்பாடுகளின் வினைத்திறனையும் வெளிப்படைத் தன்மையினையும் அதிகரிப்பதற்காக திறைசேரி முறிகளின் முதனிலை வழங்கலுக்காக புதிய ஏல முறைமையொன்று மூன்று கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. வங்கித் தாள்களின் தொடர் இலக்கங்களை தனி நாணயத்தாள் பரிசோதனை இயந்திரங்களிலிருந்து இலத்திரனியல் ரீதியாக நாணய முகாமைத்துவ முறைமைக்கு கொண்டுவருவதற்கு புதிய இடைமுகப்பினை சேர்ப்பதன் வாயிலாக நாணயத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் நாணய முகாமைத்துவ முறைமை மேலும் மேம்படுத்தப்பட்டது. இதன் மூலம் வழங்குநரிடமிருந்தான நாணயத் தாள்கள் அனுப்புகைகளின் பெறுகைகள் செயன்முறை ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

சந்தைத் தகவல்களையும் சந்தைப் பங்கேற்பாளர் தகவல்களையும் கண்காணித்தலானது வங்கியின் நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த பாகமொன்றாகும். இது தொடர்பில், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்காக வங்கிகளின் மற்றும் வணிகர்களிடமிருந்து பணச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்ட அனைத்து தகவல்களையும் சேகரித்து பகுப்பாய்வு செய்து வெளிப்படுகின்ற அதேவேளை, புளூம்பேர்க் மற்றும் ராய்டர் முறைமைகளிலிருந்து உண்மை நேரத்தில் கொடுக்கல்வாங்கல்களை நேரடியாக

கொண்டுவருகின்ற மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு முறைமையும் நடைமுறைப்படுத்தப்பட்டது. வங்கிகள், முகவர்கள், குத்தகைக் கம்பனிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் போன்றவற்றினால் அறிக்கையிடப்படுகின்ற தகவல்களைக் கண்காணிப்பதற்கு பல திணைக்களங்களினால் பயன்படுத்தப்படுகின்ற மத்திய தரவுத்தள முறைமையானது (பின்நெற்) புதிய பகுப்பாய்வு அறிக்கைகள், விரிவாக்கப்பட்ட கண்காணிப்புகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துப் பதிவுக்கான வசதி போன்றவற்றின் அறிமுகத்துடன் மேம்படுத்தப்பட்டது.

நாட்டின் சகல பாகங்களில் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர் பரீட்சகர்களிடமிருந்து பொருட்கள் விலைகளை சேகரிப்பதற்கு டப்லட் கணனி அடிப்படையிலான புதிய முறைமையினை அறிமுகப்படுத்துவதனூடாக புள்ளிவிபரத் திணைக்களத்தின் நாடளாவிய தரவு சேகரித்தல் முறைமையின் வினைத்திறன் மேம்படுத்தப்பட்டது.

இலங்கையில் அனைத்து ஊ.சே.நி. அங்கத்தவர்களுடனும் தொடர்புபட்ட தகவல்களை முகாமை செய்கின்ற ஊ.சே.நி. முறைமையானது, அதன் பிரதான தகவல் தொழில்நுட்ப முறைமையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கான புதிய செயன்முறைப்படுத்தல் மற்றும் தகவல்சார் தேவைப்பாடுகளை கூட்டிணைப்பதன் மூலம் மேலும் மேம்படுத்தப்பட்டது.

**ஆ. வங்கியின் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை தொடர்ச்சியாக மேம்படுத்தல்:**

பல எண்ணிக்கையிலான முன்முயற்சிகளை எடுப்பதன் மூலம் வங்கியில் தகவல் தொழில்நுட்பப் பணிகளின் தொடர்ச்சியான மற்றும் வினைத்திறன்மிக்க சேவை வழங்கலினை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் உறுதி செய்தது.

ஆண்டின் போது நிறைவுசெய்யப்பட்ட பிரதான உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் ஒன்று நிறுவன வலையமைப்பினை வேறுபட்ட கூறுகளாக வகைப்படுத்தியமையாகும். இதன் விளைவாக தொழில் வெற்றிக்கான தகவல் தொழில்நுட்ப முறைமைகள் பொதுவான தகவல் தொழில்நுட்ப சூழலிருந்து வேறாக்கப்பட்டதுடன் இறுக்கமான தர்க்க ரீதியான அத்துடன் பௌதீக ரீதியான பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் அவற்றின் மீது நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், இம்முறைமைகள் மீதும் இம்முறைமைகளுக்கு அணுகுவழியினைக் கொண்டுள்ள பயன்பாட்டாளர் கணனிகள் மீதும் இணையத்தளத் தாக்குதல்களுக்கு பாதிக்கக் கூடிய தன்மை மற்றும் வெளிப்பாடுகளை குறைக்கின்ற இணையத்தள அணுகுவழிகள் மட்டுப்படுத்தப்பட்டதுடன் சிறப்புரிமைகளும் வேறாக்கப்பட்டன.

பல்வேறு வகைப்பட்ட மேம்பட்ட இலக்குவைக்கப் பட்ட இணையத்த தாக்குதல்கள் மற்றும் உள்ளகத் தகவல் அறிந்தோரின் அச்சுறுத்தல்கள் போன்றவற்றிலிருந்து வங்கியினைப் பாதுகாப்பதற்கான மேம்பட்ட அச்சுறுத்தல் பகுப்பாய்வுத் தளமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. நிறுவனத்திலுள்ள பயன்பாட்டாளரினதும் ஏனைய குழுமங்களினதும் நடத்தையினை அறிந்துகொள்வதற்காகவும் பல்வேறுபட்ட சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளை அறிந்துகொள்வதற்கும் அவைபற்றிய விழிப்புகளைத் தோற்றுவிப்பதற்கும் நிறுவன வலையமைப்பில் பல்வேறுபட்ட தரவு மூலங்களிலிருந்து இது தகவல்களை ஒன்றுசேர்க்கின்றது.

வங்கியில் காகிதங்களற்ற பணிச்சூழலொன்றினைத் தோற்றுவிப்பதற்கு தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ச்சியாக பாடுபடுவதுடன் முன்னைய ஆண்டின்போது இதுதொடர்பில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. நடைமுறையிலுள்ள கடதாசி அடிப்படையிலான சபைப் பத்திரங்களை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கும் சபைக் கூட்டங்களின் முழுமையான செயன்முறையினை டிஜிட்டல் அடிப்படையில் முகாமை செய்வதற்கும் தானியக்க மென்பொருளொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. சபை உறுப்பினர்களும் அத்தகைய கூட்டங்களின் ஏனைய பங்குபற்றுநர்களும் சபைக் கூட்டங்கள் தொடர்புபட்ட உள்ளடக்கங்களை இலத்திரனியல் ரீதியாக அணுகுவதையும் முகாமை செய்வதையும் இது இயலச்செய்தது. மேலும், ஆவண முகாமைத்துவ முறைமையொன்றினை வங்கிக்கு அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்பத் தேவைப்பாடு ஒன்றுசேர்த்தல் நிறைவுசெய்யப்பட்டது. இம்முறைமையானது கடதாசியற்ற சூழலொன்றை நோக்கிய முயற்சியினை மேலும் வசதிப்படுத்தும்.

**இ. தேசியக் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பு முறைமையினை நிறுவுவதற்கு பங்களித்தல்**

தேசிய கொடுப்பனவுச் சபையின் வழிகாட்டலுக்கமைவாக தேசிய நலன் சார்ந்த செயற்றிட்டங்களுக்கு ஆலோசகரொருவராகவும் தொழில்நுட்ப நிபுணரொருவராகவும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் செயலாற்றியது. ஆண்டின் போது தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அலுவலர்கள் பல தேசிய செயற்றிட்டங்களுக்கு தமது நிபுணத்துவப் பங்களிப்பினை வழங்கினர்.

நிதிச் சந்தை உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு மத்திய இணைத்தரப்பொன்றுடன் கூடிய இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளமொன்றினையும் முறித் தீர்வகமொன்றினையும் நிறுவுதல் செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய முக்கியத்துவமிக்க செயற்றிட்டமொன்றாகும். செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலுக்கான பொருத்தமான வழங்குநரொருவரைத் தெரிவுசெய்வதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அலுவலர்கள் பணியாற்றினர்.

ஸ்விப்ட் என்பது தேசியக் கொடுப்பனவு முறைமையில் பயன்படுத்தப்படும் பாதுகாப்பான நிதியியல் செய்தியனுப்புதல் தளமாகும். ஸ்விப்ட்டினால் அறிவிக்கப்பட்ட வாடிக்கையாளர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக, பிரதான குறும்பரப்பு வலையமைப்பிலிருந்து ஸ்விப்ட் வலையமைப்பினை தனிமைப்படுத்தல் மற்றும் ஸ்விப்ட் தொழிற்பாடுகளுக்காக மாத்திரம் முனையங்களை ஒதுக்குதல் போன்ற பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, செல்லிடத் தொலைபேசி செயலிகளுக்கான ஆகக்குறைந்த இணங்குவித்தல் தர நியமத்துக்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை வகுப்பதற்கும் அத்துடன் டயலொக் தரவுநிலையம், டயலொக் ஈசி கேஸ் மற்றும் டயலொக் போக்குவரத்து அட்டை முறைமை போன்றன மீது தளத்திலான பரிசோதனைகளைக் கொண்டு நடாத்துவதற்கும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்திற்கு தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அலுவலர்கள் உதவியளித்தனர்.

**ஈ. தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு மற்றும் விரிதிறனை வலுப்படுத்தல்**

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும் ஏதேனும் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தலிலிருந்து வங்கியின் தகவல் தொழில்நுட்பச் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும் பல நடவடிக்கைகளை எடுத்தது. முற்செயற்பாடுமிக்க அணுகுமுறையொன்றாக பாதிக்கப்படக் கூடிய தன்மையினை இனங்காண்பதற்கு தொழில் வெற்றிக்கான தகவல் தொழில்நுட்ப முறைமையின் மீது பாதிக்கப்படக் கூடிய தன்மை மதிப்பீடுகள் தொடர்ச்சியாக கொண்டு நடாத்தப்பட்டதுடன் அவற்றைக் குறைப்பதற்கும் இணையத் தாக்குதல்களின் தோற்றப்பாடுகளை குறைப்பதற்கும் அவசியமான இடங்களில் தேவையான பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முக்கிய பாதிக்கப்படக் கூடிய தன்மைகள் பற்றி ஊழியர்கள் அறிந்து கொள்வதற்கும் பயன்பாட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டதுடன் பாதுகாப்பாக இருப்பதற்கு உரிய நடவடிக்கை வழிமுறை விதந்துரைக்கப்பட்டது.

டிஜிட்டல் தகவல் வகைப்படுத்தலினை அறிமுகப்படுத்துவதற்கான தொழில்நுட்ப உட்கட்டமைப்பினைத் தாபித்தல் நிறைவுசெய்யப்பட்டதுடன் வங்கியின் தகவல் பாதுகாப்புக் கொள்கையினுள் உள்ளடக்கப்படுவதற்காக புதிய தகவல் வகைப்படுத்தல் கொள்கையொன்று வரையப்பட்டது.

**உ. ஊழியர் மத்தியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறமைகளை மேம்படுத்தல்**

வங்கியிலுள்ள அனைத்து ஊழியர்களினதும் தகவல் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் நோக் குடன் தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது விழிப்புணர்வுப் பதாதைகளைத் உள்ளக வலையமைப்பில் தொடர்ந்து வெளியிட்டதுடன் பாதுகாப்பு ஆலோசனை விழிப்பூட்டல்களை மின்னஞ்சலூடாக அனுப்பியது. மேலும், தொடர்புடைய துறைகளில் அறிவினையும் திறன்களையும் அதிகரிக்கும் பொருட்டு, தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் அலுவலர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குறுகிய கால பயிற்சிகளில் பங்கேற்றனர்.

**15. உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் 1951ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மத்திய வங்கியில் தொழிற்பாட்டிலிருந்து வருகின்றன. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் அலுவலர்களின் பணி, வேலையின் செயற்பரப்பு, பொறுப்புக்கூறும் தன்மை, சுயாதீனம் மற்றும் பொறுப்பாண்மை மற்றும் அதிகாரம் என்பன நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கணக்காய்வுகளானது உலகளாவிய நியமங்கள் மற்றும் தொழில்துறையின் மிகச் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டன. 2017ஆம் ஆண்டுக் காலத்தில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகின்றன.

**15.1 உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள்**

2018-2020 காலப்பகுதிகளை உள்ளடக்கிய மூன்று வருடங்களுக்கான உபாய உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் விருத்தி செய்யப்பட்டது. இந்த உபாய உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் அடிப்படையில், 2018ஆம் ஆண்டுக்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டம் விருத்தி செய்யப்பட்டது. உபாய உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் ஆகிய இரண்டும் நாணயச் சபையின் மதியுரைக் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதுடன் நாணயச் சபையின் ஒப்புதல் பெறப்பட்டது.

**15.2 கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்ளுதல்**

**அ. செயன்முறை மற்றும் தகவல் முறைமைக் கணக்காய்வுகள்ளு**

2017இல், இலங்கை மத்திய வங்கியின் பல்வேறு பரப்புக்களை உள்ளடக்கி செயன்முறை மற்றும் தகவல் முறைமைக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கணக்காய்வு ஒப்படைகளும் பொதுவாக, திட்டமிடல், செயற்படுத்தல், தொடர்பூட்டல் மற்றும் தீர்மானம் எடுத்தல் நடவடிக்கைகள் போன்ற நான்கு தொடர்ச்சியான படிமுறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. உலகளாவிய நியமங்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில், கணக்காய்வு பெறுபேறுகளைத் தொடர்பூட்டுவதற்காக நான்கு படிச் செயன்முறை பின்பற்றப்பட்டது. இந்நான்கு படிமுறைகளும் கணக்காய்வு அவதானிப்புக்களினை செல்லுபடியாக்குவதற்காக முடிவுறுத்தல் கூட்டங்களை நடாத்துதல், கணக்காய்வு அவதானிப்புக்களினை எழுத்து வடிவில் தொடர்பூட்டல், வரைபு கணக்காய்வு அறிக்கையினை வழங்கல் மற்றும் இறுதி அறிக்கையினை வழங்கல் போன்றனவாகும். தொடர்புகொள்ளப்பட்ட கணக்காய்வு விதந்துரைப்புக்கள் செய்முறை உரிமையாளரால் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக கிரமமான அடிப்படையில் பின்தொடர்தல் கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

**ஆ. உடன் கணக்காய்வுகளை மேற்கொள்ளல்.**

2017இல், தேவைப்படுத்தப்பட்டவாறு உடன் கணக்காய்வுகள் மேற்கொண்டதுடன், கணக்காய்வு முடிவுகள் செயன்முறை உரிமையாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கு தொடர்பூட்டப்பட்டது.

**இ. விசேட ஒப்படைகள்**

பன்னாட்டு நாணய நிதிய பாதுகாப்பு குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டவாறு, பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தினால் ஒதுக்கு பண தரவு தொடர்பில் விசேட மீளாய்வு நடாத்தப்பட்டு பரீட்சிப்பு திகதிகளில் பன்னாட்டு நாணய நிதியத்திற்குஅறிக்கையிடப்பட்டது.

**ஈ. கணக்காய்வுகளை மேற்கொள்வதில் அடையப்பட்ட முன்னேற்றங்களை அறிக்கையிடல்**

கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்வதில் காணப்படும் முன்னேற்றம் மதியுரைக் கணக்காய்வுக் குழு மற்றும் நாணயச் சபைக்கு காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடப்பட்டது. செயற்பாட்டு அறிக்கைகள் அரையாண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**15.3 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளித்தல் ஏற்பாடுகள்**

பூட்டான் றோயல் நாணய அதிகாரத்தின் அலுவலர்களுக்காக உள்ளகக் கணக்காய்வு தொடர்பில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டமொன்று உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும், “உள்ளக கணக்காய்வு வசதிப்படுத்தல் வழிகாட்டல்கள்” தொடர்பில் கணக்காய்வு ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கான காட்சிப்படுத்துலுடன் கூடிய விரிவுரையொன்று மேற்கொள்ளப்பட்டது. மனிதவளத் திணைக்களத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டமைக்கமைவாக, ஆண்டுக் காலப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் உள்ளகக் கணக்காய்வு மற்றும் தொடர்புடைய விடயங்களில் பட்டதாரி மாணவர்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கியது.

**15.4 நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு வசதியளித்தல்**

மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது நாணயச் சபையின் உப குழுவாக காணப்படுவதுடன் இக்குழுவானது நிதியியல் அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகளும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளும், இணங்குவிப்பு, தகவல் தெரியப்படுத்தல் மற்றும் மோசடி, உள்ளகக் கணக்காய்வு, வெளிவாரி கணக்காய்வு மற்றும் சபையினால் வழங்கப்படும் ஏதேனும் ஏனைய விடையங்கள் போன்றவை தொடர்பாக நாணயச்சபைக்கு ஆலோசனை வழங்குகின்றது. நாணயச் சபைக்கான செயலாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு செயலாளராக இருப்பார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உதவிச் செயலாளராகவும் இருப்பார். இதன்படி, ஆண்டுக் காலப்பகுதியில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கான செயலகப் பணி வசதிப்படுத்தல்களை வழங்கியது.

**16. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்**

நாணய விதிச்சட்டத்தின் நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கி நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளினை முகாமைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்கிறது. இது தொடர்பில் ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாட்டினை செயலாற்றுகின்ற மற்றும் அதன் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை கண்காணிக்கின்ற பொறுப்புக்கள் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நாணய விதிச்சட்டமானது, பன்னாட்டு ஒதுக்குகளின் பேணல் மற்றும் உள்ளமைப்பு,ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கான நடவடிக்கைகள், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகளின் செயற்பரப்பு மற்றும் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம் தொடர்பான நாணயச் சபையின் அதிகாரம் மற்றும்

பொறுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கும் விதத்தில் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பினை வழங்குகின்றது. இவ்விடயத்தில் சொத்துவகைகள், இணைத்தரப்பினர்கள், சாதனங்கள் மற்றும் வழங்குநர்கள் என்பன தொடர்பான சாராமாறிகளை நாணய விதிச்சட்டத்தின் 67ஆவது பிரிவு கையாள்கிறது. ஒதுக்கு முகாமைத்துவத்தின் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருமானக் குறிக்கோள்கள் என்பனவற்றை மேம்படுத்துவதற்காக, நடவடிக்கைகளின் நோக்கெல்லையினை மேலும் விரிவுபடுத்துவதற்கு நாணயச் சபை ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கை தொடர்பில் பணிப்புரைகளை விடுக்க முடியும்.

### 16.1 பன்னாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவம்

பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருமான குறிக்கோள்களின் பெறுபேறு என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு, வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நாணயச் சபையினால் திருத்தப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ வழிகாட்டல்களுக்கு இணங்க பன்னாட்டு ஒதுக்குகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பன்னாட்டு ஒதுக்குகள் பல முக்கிய நாணயங்களில் குறிந்துரைக்கப்படுவதுடன் அவை முக்கியமாக நிலையான வருமானப் பிணையங்கள், பணச்சந்தை முதலீடுகள் மற்றும் தங்கம் என்பனவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. நிலையான வருமான பிணையங்களின் சொத்துப்பட்டியல், உயர்ந்த வீதங்களைக் கொண்ட அரச பிணையங்கள், அரச உத்தரவாதப் பிணையங்கள், அரச முகவர்கள் மற்றும் உயர் தேசிய நிறுவனங்களின் பிணையங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. ஒதுக்கு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் கொடுக்கல்வாங்கல்கள், மத்திய வங்கிகள், உயர் வீதத்தினைக் கொண்ட வர்த்தக வங்கிகள் மற்றும் முதலீட்டு இல்லங்கள் என்பனவற்றுடன் மேற்கொள்ளப்பட்டதுடன், இவை வலுவான தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பனவற்றின் பரிசீலனையில் கொண்டு இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மூலமான அவசியமான வரையறை ஒதுக்கீடுகளுக்குட்பட்டு இணைத்தரப்பு கடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையில் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களுக்கமைவாக வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட இணைத்தரப்பினர்களாக காணப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்கு சொத்துப்பட்டியலின் சொத்துக்கள் மற்றும் நாணய உள்ளமைப்பினை தீர்மானிப்பதற்கு பரிசீலனையில் கொள்ளப்பட்ட முக்கிய காரணங்களாக திரவத் தேவைப்பாடுகள், படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், உள்ளடங்கியிருந்த அதேவேளை, இடர்நேர்வு முகாமைத்துவ பிரமாணங்கள், வருமான உருவாக்க இயலாற்றல்கள் மற்றும் நாணயச் சபையின் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள் என்பனவும் பரிசீலிக்கப்பட்டன.

உலகளாவிய மத்திய வங்கிகளின் கொள்கையைவழமைக்குக் கொண்டு வருவதன் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளூடாக பிரதிபலிக்கப்பட்ட படிப்படியான மேம்பாடொன்றினை உலகளாவிய பொருளாதாரம் அடையாளப்படுத்தியது. பொருளாதாரத்தின் பலம் மற்றும் மேம்படுகின்ற தொழில் சந்தை ஆகியவற்றின் அடிப்படையில் ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ் வங்கியானது அதன் தூண்டல் நிகழ்ச்சித் திட்டத்தினை 2017இன் போது வட்டி வீதங்களை மூன்று தடவைகள் உயர்த்தியது. ஐரோப்பாவில் தொழிலின்மை படிப்படியாகக் குறைவடைந்து,எதிர்வரும் 2018ஆம் ஆண்டில் வட்டி வீத அதிகரித்தல் ஒன்று உள்ளடங்கலாக, தூண்டுதல் வழிமுறையில் குறைப்பொன்றினை தூண்டுகின்ற வட்டி வீத அழுத்தம் உயர்ந்து வரும் பணவீக்க அழுத்தங்களுக்குச் சான்றாக விளங்கியது. இவ்வாண்டின் யப்பான் பொருளாதாரமும் அதன் பணவீக்க இலக்கினை நோக்கிப் படிக்கடியாக தள்ளப்பட்டது.

ஆண்டின் போது வடகொரிய அணுவாயுத அச்சுறுத்தல் காலத்துக்குக்காலம் தொடர்ந்திருந்ததுடன் இது பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் பன்னாட்டு பதற்றத்தினை ஏற்படுத்தியது. மத்திய கிழக்கிலும் வடகொரியாவிலும் ஏற்பட்ட இப்போராட்ட அணுகுமுறையானது உயர்ந்தளவிலான உலகளாவிய பதற்றத்திற்கு இட்டுச் சென்றதுடன் 2017இன் இரண்டாம் அரையாண்டின் போது, குறைந்த ஐக்கிய அமெரிக்க மற்றும் ஜேர்மன் முறி விளைச்சல்கள் மற்றும் வலுவான யென் போன்றவற்றுடன் "பாதுகாப்பான இடங்கள்" இற்கான விருப்பத்தினையும் அதிகரித்தது. ஒபெக் உறுப்பு நாடுகள் எரிபொருள் வழங்கலை மட்டுப்படுத்துவதற்கு இணங்கியதன் காரணமாக உலக எரிபொருள் விலைகள் மூன்றாம் காலாண்டில் அதிகரிக்க ஆரம்பித்தது. இத்தகைய இயக்கவாற்றல்மிக்க உலகளாவிய போக்கில், பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் பணச் சந்தை முதலீடுகளிலிருந்து பெறுவிக்கப்பட்ட கூப்பன் வருமானம் மற்றும் தங்கம், வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் நிலையான வருமான பிணையங்கள் மீதான சந்தைப்படியான இலாபங்களூடாக 2017ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொ. 153 மில்லியன் மொத்த வருமானமொன்றினை பெற்றுக் கொண்டது.

2017ஆம் ஆண்டில், இலங்கை மத்திய வங்கியானது உலக வங்கியின் ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்துடனான அதன் முதலாவது முழு ஆண்டினை நிறைவுசெய்தது. உலக வங்கியின் திறைசேரியினால் நடாத்தப்படுகின்ற ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம், வெளிநாட்டு நாணய ஒதுக்குகளினதும் ஏனைய முதலீட்டு சொத்துப்பட்டியலினதும் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தினை இயலச் செய்கின்ற ஆலோசனைச் சேவைகளையும் பயிற்சிகளையும் அலுவல்சார் துறைக்கு வழங்குகின்றது. 2017ஆம் ஆண்டின் போது இலங்கை மத்திய வங்கியானது எதிர்காலக் கொடுப்பனவுக் கடப்பாடுகள், மூலதனம் பேணுதல் மற்றும் மேம்படுத்தல் அத்துடன் வேறுபல வகையான, அதன் நடுத்தர - நீண்ட கால முதலீட்டுக் குறிக்கோள்களை எய்தும் விதத்தில் எந்நேரத்திலும் பொருத்தமான சொத்து ஒதுக்கீட்டினை விஞ்ஞான ரீதியாக நிர்ணயிப்பதன் மூலம் அமைக்கப்பட்டுள்ள அதன் உபாயச் சொத்து ஒதுக்கீட்டினை சீரமைத்தது. ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உயர்தர அரசாங்க, அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட மற்றும் உயர் தேசியப் பிணையங்களில் மூன்று வருட காலமொன்றுக்கு முதலிடுவதற்கு வெளிநாட்டு ஒதுக்குகளிலிருந்து ஐ.அ.டொலர்200 மில்லியன் ஒதுக்கீடு செய்ததன் மூலம்,உலக வங்கித் திறைசேரியானது இலங்கை மத்திய வங்கி ஒதுக்கு முகாமைத்துவத்திற்கான வெளிவாரி முகாமையாளரொருவராக நியமிக்கப்பட்டது.

2017 காலப்பகுதியில் உலக வங்கியின் தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியில் உள்ளகப்பயிற்சியாக வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவம் தொடர்பில் தொழில்நுட்ப உதவிக்கான மூன்று செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. உபாயச் சொத்து ஒதுக்கின் கீழ் சொத்துப்பட்டியல் முகாமைத்துவம், இடர்நேர்வு மற்றும் செயலாற்றுத்துறை அளவீடு மற்றும் அறிக்கையிடும் கட்டமைப்புகள் என்பன மீதான இயலளவினைக் கட்டியெழுப்புவதில் இச்செயலமர்வுகள் கவனம் செலுத்தியிருந்தன. இதற்கு மேலதிகமாக, ஒதுக்கு ஆலோசனை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்ட உறுப்பு நாடுகளின் பங்கேற்பாளர்களுக்காக இலங்கை மத்திய வங்கியில் 2017 பெப்புருவரியில் 5 நாள் பன்னாட்டு செயலமர்வொன்றினை உலக வங்கி ஏற்பாடு செய்தது. இந்நிகழ்விற்கு இலங்கை மத்திய வங்கி இணை ஏற்பாட்டாளராக செயற்பட்டது.

### 16.2 செயலாற்றப் பகுப்பாய்வு மற்றும் நடவடிக்கைகளை வசதிப்படுத்தல்

செயலாற்றப் பகுப்பாய்வு மற்றும் நடவடிக்கைகளை வசதிப்படுத்தலின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்கு முகாமைத்துவத்துடன் தொடர்பான பின்வரும் முக்கிய தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) செயலாற்ற அளவுமுறை

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது, மொத்த வருமானம் அணுகுமுறை மீது அதன் ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கையின் செயலாற்றத்தினை நாளாந்தம் மதிப்பிடுவதுடன் மாதாந்த, காலாண்டு அடிப்படையில் அதனை வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ

குழுவிற்கும் நாணயச் சபைக்கும் ஒதுக்கு நிலைமை மற்றும் அதன் போக்கு என்பனவற்றின் பகுப்பாய்வுடன் சேர்த்து சமர்ப்பிக்கின்றது. நாணயச் சபையினால் ஒப்புதளிக்கப்பட்ட உபாய சொத்து ஒதுக்கீட்டின்படி, நிலையான வருமான பிணைகளின் முதலீடுகள் ஊடாக உருவாக்கப்பட்ட வருமானம் தெரிவுசெய்யப்பட்ட அடித்தள அளவீட்டு குறியீடுகளுக்கு எதிராக அளவிடப்படுகின்றன. வணிகர்களினால் எடுகோள் கொள்ளப்படுகின்ற மேலதிக இடர்நேர்வு மேலதிக வருமானத்தினை போதுமானளவிற்கு எதிரீடு செய்கின்றதா என்பதனைக் காட்டுவதன் மூலம் அடிப்படை அளவுக்குறியீடுகளுக்கு எதிரான ஒப்பீடு ஒதுக்குகள் முகாமைத்துவ உபாயத்தின் காத்திரமான தன்மையினை நிர்ணயிக்க உதவுகிறது. 2018இல் செயலாற்ற பண்பு மதிப்பீட்டினை பயன்படுத்தி வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்தினூடாக ஈட்டப்பட்ட மொத்த வருவாய்களை மேலும் விரிவுபடுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, கண்டறியப்படுகின்ற பெறுபேறுகளை, உயர்வான நீண்டகால வருவாய்களை உருவாக்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்தில் பெறுமதி கூட்டல் உள்ளீடுகளாக பயன்படுத்தக்கூடியதாகவிருக்கும்.

**ஆ. திறைசேரி முகாமைத்துவ முறைமையின் நிருவாகம்**

திறைசேரி முகாமைத்துவ முறைமையின் பிரதான பயன்படுத்துநரான பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், முறைமையின் பொது நிருவாகத் தொழிற்பாட்டிற்கு பொறுப்பாகவிருப்பதுடன் ஏனைய பயன்பாட்டாளர் திணைக்களங்கள்,மென்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் உள்ளூர் பங்காளர் என்போரிடையே பொருத்தமான ஒருங்கிணைப்பினையும்உறுதிசெய்கின்றது. அதற்கிணங்க,திறைசேரி முகாமைத்துவ முறைமையானது தொடர்புடைய திருத்தங்கள்.'.இணைப்புகளுடன் இற்றைப்படுத்தப்படுகின்றமையினையும்திறைசேரி முகாமைத்துவ முறைமையின் வினைத்திறன்மிக்க தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக சுவிப்ற், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் பொதுப்பேரேடு போன்ற உள்ளக முறைமைகளுடனும் புளும்பேர்க் மற்றும் றொயிட்டர் போன்ற வெளிவாரி இடைமுகங்களுடனும் முழுமையாக இணைக்கப்பட்டிருப்பதனையும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உறுதிப்படுத்துகிறது.

நாளிறுதியில் மீண்டும் மீண்டும் பயன்படும் செயன்முறை தானாக நிகழ்வதற்கும் நடைமுறையிலுள்ள திறைசேரி முகாமைத்துவ முறைமையின் பாதுகாப்பினை மேலும் அதிகரிப்பதற்கும் புதிய உபாயச் சொத்து ஒதுக்கீட்டின் படி தொகுதிவாரியாக வெளிநாட்டு ஒதுக்குகளை வகைப்படுத்தும் பொருட்டு நடைமுறையிலுள்ள திறைசேரி முகாமைத்துவ முறைமைக்கு அவசியமான திருத்தங்களை மேற்கொள்வதற்கு 2017 காலப்பகுதியில் வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

**இ) நிதியல்லா இடர்நேர்வுகளையும் மற்றும் இணங்குவிப்புக்களையும் கண்காணித்தல்**

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், ஒதுக்குகள் முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்பான நிதியல்லா இடர்நேர்வு தோற்றப்பாட்டினை இனங்காண்பதுடன் நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கு தொடர்பான இடர்நேர்வு தணிப்பு நடவடிக்கைகளைஇடர் தணிப்பு காலாண்டு அடிப்படையில் முன்மொழிகின்றது.

**(ஈ) பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் என்பன தொடர்பில் தற்போதைய இணைத்தரப்பினர்கள் அதனைப் பின்பற்றியமை/ இணங்கிக் கொண்டமை பற்றி வருடாந்தம் மீளாய்வுகளை மேற்கொள்ளல்**

இலங்கை மத்திய வங்கியின் அனைத்து இணைத்தரப்பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் தொடர்பில் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், பன்னாட்டு சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக, 2017இல் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் முதலாவது “இலங்கை மத்திய வங்கி மற்றும் வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுக்காக உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் விதிகள்” இனை மேற்கொண்டது.

**16.3 உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச்சந்தை அபிவிருத்திகள்**

ஐ.அ.டொ. / ரூபா செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கண்காணித்து அதன் சீரான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை ஆரம்பித்தது. மாச்சில் ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் வங்கியினால் வட்டி வீதம் உயர்த்தப்படும் என்ற எதிர்பார்க்கையின் விளைவாகஅரசாங்கப் பிணையச் சந்தைகளில் ஏற்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் வெளியேற்றம் ஐரோப்பாவில் பிரித்தானியாவின் வெளியேற்றத்தின் பின்னரான அபிவிருத்திகள் மற்றும் வடகொரியாவுடன் தொடர்புபட்ட அதிகரித்த பதட்டம் என்பவற்றின் காரணமாக 2017இன் ஆரம்பப் பகுதியில் இலங்கை ரூபாயின் பெறுமானத் தேய்வின் மீதான அழுத்தம் தீவிரமடைந்தது. 2017இன் முதல் காலாண்டின் போது படுகடன் தீர்ப்பனவுகள் மற்றும் அதிகரித்த இறக்குமதிக் கேள்வி என்பன காரணமாக செலாவணி மாற்று வீதத்தின் மீதான அழுத்தம் மேலும் அதிகரித்தது. எவ்வாறாயினும் ஏற்றுமதியாளர்கள் மூலமான பெறுகைகள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் மூன்றாம் மற்றும் நான்காம் தொகுதிகளின் பெறுகை என்பனவூடாக தோற்றுவிக்கப்பட்ட சார்பான எண்ணப்பாங்கு போன்றவற்றுடன் நாணய மாற்று வீதம் மீதான அழுத்தம் 2017இன் இறுதியில் படிப்படியாக குறைவடைந்தது. 2017இன் போது நாணய மாற்று வீதத்தினை பாரிய நெகிழ்வுத் தன்மைக்கு இடமளித்ததுடன் கூடிய நாணய மாற்றத்தினை நிர்ணயிப்பதற்கு சந்தை சக்திகளை அனுமதிப்பதன் மீதான கொள்கை முன்னெடுப்புக்கள் இதற்கு மேலும் துணையளிக்கக் கூடியதாகவிருக்கும்.

2017இல்மொத்த வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2016இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 14.8 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 16.45 பில்லியனுக்கு அதிகரித்தது (அட்டவணை II - 23). உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலைமை மீது விதிக்கப்பட்ட மொத்த வரையறை ஆண்டின் இறுதியில் ஐ.அ.டொலர் 197 மில்லியனாக மாற்றமடையாதிருந்தது. மேலும் மத்திய வங்கியின் தலையீட்டினால், தேறிய விற்பனை 2016இன் (அட்டவணை II - 24) ஐஅடொலர் 768.16 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்காலப் பகுதியில் ஐஅடொலர் 1664.35 மில்லியனைக் கொண்ட தேறிய கொள்வனவு நிலையினைக் குறித்துக்காட்டுகிறது.

2017இல் உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தை கொடுக்கல்வாங்கல்களின் உண்மை நேர அறிக்கையிடல் மற்றும் கண்காணித்தலை வலுப்படுத்தும் நோக்குடன் தகவல் தொழில்நுட்ப மற்றும் உள்நாட்டுத் தொழிற்பாடுகளின் திணைக்கங்களின் கூட்டிணைப்புடன் தற்போதுள்ள உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டு நாணய அறிக்கையிடல் முறைமையின் பலவீனங்களை தீர்க்கின்ற “மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு” என்ற பெயரிலான ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு முறைமையொன்று உருவாக்கப்பட்டது. இப்புதிய அறிக்கையிடும் முறைமையானது வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல் தகவல்களை தன்னியக்கமாகப் பெற்றுக்கொள்வதற்கு புளூம்போ்க் மற்றும் தோம்ஸன் றொயிட்டர்ஸ் வர்த்தகப்படுத்தல் தளங்கள் மற்றும் சந்தைப் பங்கேற்பு நிறுவனங்கள் போன்றவற்றுடன் இப்புதிய அறிக்கையிடும் முறைமை இணைக்கப்பட்டுள்ளது. 2018 சனவரி 02ஆம் நாள் தொடக்கம் நேரலை தொழிற்பாட்டு அடிப்படையில் நடைமுறையில் இருக்கும்.

## பகுதி - II - இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

அட்டவணை II - 23
வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு - 2017

ஐஅடொலர் மில்லியன்

| மாதம் | உடன் | நாளை | காசு | முன்னோக்கிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 305.42 | 187.13 | 205.11 | 845.68 | 1,543.34 |
| பெப்புருவரி | 233.20 | 185.05 | 262.65 | 894.55 | 1,575.45 |
| மாச்சு | 186.25 | 193.80 | 276.40 | 1,052.34 | 1,708.79 |
| ஏப்பிறல் | 164.50 | 178.75 | 215.50 | 762.01 | 1,320.76 |
| மே | 116.50 | 89.95 | 172.06 | 676.33 | 1,054.85 |
| யூன் | 241.35 | 297.50 | 209.85 | 782.31 | 1,531.01 |
| யூலை | 314.31 | 277.15 | 339.71 | 542.24 | 1,473.42 |
| ஓகத்து | 296.43 | 207.74 | 300.66 | 541.07 | 1,345.91 |
| செத்தெம்பர் | 265.35 | 225.00 | 245.45 | 460.03 | 1,195.83 |
| ஒத்தோபர் | 294.72 | 179.35 | 277.10 | 434.05 | 1,185.22 |
| நவெம்பர் | 304.67 | 159.15 | 247.43 | 539.63 | 1,250.87 |
| திசெம்பர் | 291.01 | 224.83 | 255.04 | 494.79 | 1,265.67 |
| மொத்தம் | 3,013.69 | 2,405.40 | 3,006.97 | 8,025.06 | 16,451.12 |

மூலம் : பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அட்டவணை II - 24
மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனை - 2017

ஐஅடொலர் மில்லியன்

| மாதம் | கொள்வனவு | விற்பனை | தேறிய கொள்வனவு / (விற்பனை) |
|---|---|---|---|
| சனவரி | 64.66 | 204.50 | (139.84) |
| பெப்புருவரி | 145.09 | 297.25 | (152.16) |
| மாச்சு | 192.23 | 13.00 | 179.23 |
| ஏப்பிறல் | 257.91 | - | 257.91 |
| மே | 183.48 | 35.00 | 148.48 |
| யூன் | 136.00 | - | 136.00 |
| யூலை | 344.75 | - | 344.75 |
| ஓகத்து | 200.00 | - | 200.00 |
| செத்தெம்பர் | 186.50 | - | 186.50 |
| ஒத்தோபர் | 97.00 | - | 97.00 |
| நவெம்பர் | 206.00 | - | 206.00 |
| திசெம்பர் | 200.50 | - | 200.50 |
| மொத்தம் | 2,214.10 | 549.75 | 1,664.35 |

மூலம் : பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### 17. சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் தொடர்பில் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கும் தற்போதுள்ள சட்டங்களை மீளாய்வதற்கும், இணங்குவித்தல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன அத்துடன் இணங்குவித்தல் குறைபாடுகள் இனங்காணப்படுகின்ற போது முகாமைத்துவம் பொருத்தமான சீர்திருத்த நடவடிக்கையினை எடுக்கின்றது என்பதனை உறுதிசெய்யும் நோக்குடன் காத்திரமான இணங்குவித்தல் கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கும் அதன் மைய நியதிச் சட்டக் குறிக்கோள்களை எய்துவதில் அனைத்து சட்ட ரீதியான மற்றும் நடைமுறைசார் அம்சங்களிலும் இலங்கை மத்திய வங்கியின் ஒருமைப்பாட்டினை உறுதிசெய்யும் கடமை சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் சட்ட ரீதியான நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடனும் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் தற்காலப் பாங்கினை உறுதிசெய்வதற்கும் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் அதன் இயலளவிற்கு அமைய பரந்தளவிலான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இலங்கை மத்திய வங்கியின் உபாய முன்னுரிமைகளை நிறைவேற்றுவதற்கு பங்களிப்பதற்கும் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் வேண்டப்பட்டுள்ளது. 2017இன் போது சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

#### அ) அனைத்து சட்ட ரீதியான மற்றும் நடைமுறைசார் அம்சங்களிலும் இலங்கை மத்திய வங்கியின் ஒருமைப்பாட்டினை உறுதிசெய்தல்.

மீளாய்விற்குரிய ஆண்டின்போது, சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் கொள்கை உருவாக்கம் அதேபோன்று தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் சட்ட ரீதியான அம்சங்கள் மீதும் நாணயச் சபைக்கும் இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்களுக்கும் ஆலோசனைகளை வழங்கியது.

சட்டங்களுடன் இணங்கியொழுகுவதனை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தொடர்புடைய சட்ட ஏற்பாடுகளை மீறுகின்ற நிதியியல் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அவசியமாயின் அத்தகைய கம்பனிகள் பற்றிய வினைத்திறன்மிக்க தீர்மானத்தினை எடுப்பதற்கும் சட்ட மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் ஆலோசனைகளையும் தொழில்நுட்ப ஆதரவினையும் வழங்கியது.

அத்தகைய ஆலோசனைகளில் பெரும்பாலானவை நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை எய்துவதை நோக்காகக் கொண்டிருந்த அதேவேளை அதன் முகவர் தொழிற்பாடுகள் மற்றும் நிறுவனச் சேவைகள் போன்ற இலங்கை மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புகளுடன் தொடர்புடைய சட்ட ரீதியான பிரச்சனைகள் மீதும் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம் ஆலோசனைகளை வழங்கியது. இந்நோக்கில், இலங்கை மத்திய வங்கியால் கைச்சாத்திடப்படவுள்ள சட்ட உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களை மீளாய்தல் மற்றும் இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புபட்ட உறுதிப்பத்திரங்களினதும் வேறு சட்ட ரீதியான சாதனங்களினதும் நொத்தாரிசு பணிகளை நிறைவேற்றுதல், என்பன சட்ட மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

#### ஆ) வழக்காடல்

நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி அல்லது அதன் ஊழியர்கள் தரப்பினர்களாகவிருக்கின்ற வழக்காடல்களை சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளுடனான ஆலோசனையுடன் கையாளுவது சட்ட மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் பொறுப்பாகவிருந்தது. 2017ஆம் ஆண்டில், திணைக்களத்தினால் கையாளப்பட்ட வழக்குகள் எதுவும் வங்கிக்கெதிரான பாதகமான பெறுபேறொன்றினைத் தோற்றுவிக்க வில்லை.

#### இ) சட்ட மறுசீரமைப்பு

சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அறிமுகப்படுத்தலுக்கு வசதியளித்ததுடன் நாணய விதிச் சட்டம், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம், பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் போன்ற பிரதான சட்டவாக்கங்களின் மீளாய்வுகளையும் நடாத்தியது. அத்தகைய நடவடிக்கைகள் நிதியியல் துறை உட்கட்டமைப்பில் தோன்றிவரும் பிரச்சனைகளையும் இனங்காணப்பட்ட குறைபாடுகளையும் தீர்ப்பதனை நோக்காகக் கொண்டிருந்தன.

#### ஈ) இணங்குவிப்பு

இணங்குவிப்புடன் தொடர்புபட்ட அதன் குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது, இலங்கை மத்திய வங்கிக்காக அனைத்தையும் உள்ளடக்கிய இணங்குவிப்பு கைநூலினை தயாரிப்பதனை தொடர்ந்தும் முன்னெடுத்தது. இதற்கு மேலதிகமாக, சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம், தகவல்

தெரிவிக்கும் கொள்கையினை இறுதிப்படுத்தியுள்ளதுடன் அலுவலா்களின் பணி மற்றும் தொழில்சாா் ஒழுக்கங்களை மேம்படுத்துவதனூடாக இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளின் ஒருங்கிணைப்பினை உறுதிசெய்வதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஊழியா்களுக்கான நடத்தைக் கோவையொன்றினை வரைவதனை ஆரம்பித்துள்ளது. 2016இன் 12ஆம் இலக்க தகவலறிவதற்கான சட்டத்துடன் தொடா்புடைய தொழிற்பாடுகளில் சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது, இலங்கை மத்திய வங்கியின் தொடா்புடைய திணைக்களங்களின் ஆலோசனையுடன் செயற்பட்டது.

#### உ) பொதுமக்கள் விழிப்பூட்டல்

மத்திய வங்கித்தொழிலுடன் தொடா்புபட்ட சட்டங்களின் முன்னேற்றங்கள் பற்றியும், மற்றும் அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில், தடைசெய்யப்பட்ட திட்டங்கள் அத்துடன் நிதியியல் உள்ளடக்கம் போன்ற விடயப்பரப்புக்கள் பற்றியும் வேறுபட்ட ஆா்வலா்களின் விழிப்பூட்டலை ஊக்குவிக்கும் பொருட்டு நாடுமுழுவதும் பரந்தளவிலான அரங்கங்களில் சட்ட மற்றும் இணங்குவிப்புத் திணைக்கள அலுவலா்கள் வளவாளா்களாகப் பங்கேற்றனா்.

### 18. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

2007ஆம் ஆண்டு சிறந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது விருத்தியடையக்கூடிய மனிதத் திறன்களாலும் நிதியியல் முறைமையிலுள்ள முறைசாா் அபாயங்கள் மற்றும் சவால்களை மதிப்பிடக்கூடிய தொழில்நுட்பங்களாலும் உபகரணப்படுத்தப்பட்டிருக்கிறது. நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை பேணுதல் எனும் மத்திய வங்கியின் நோக்கத்திற்கு அனுசரணையாக நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையை பாதிக்கும் அபாயங்களைத் தவிா்ப்பதற்கு சிறந்த முறையில் கட்டுப்படுத்தக்கூடிய பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கருவிகளைக் கட்டமைத்துக் கொள்ளும் பணியானது இத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுகள், நிதியியல் நிறுவனங்கள் மீதான அழுத்தப் பரிசோதனை முறைமையிலுள்ள முன்னணி பங்குரிமையாளா்களிற்கிடையேயான இணைத்திருத்தல் தொடா்பான ஆய்வுகள் மற்றும் அளவீடுகள் என்பன மேற்கூறப்பட்ட நோக்கத்தை அடையும் முன்னெடுப்பில் பங்களித்தது. இவ்வருடத்தின் திணைக்கள ரீதியான முக்கிய பணிகளாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

#### (அ) பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

இதனது நோக்கத்தில் கூறப்பட்டதைப் போலவே, பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது, வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், வெளிப்படையாகப் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் போன்ற நிதியியல் நிறுவனங்கள் அதேபோல் நிதிச் சந்தைகள் மற்றும் பேரண்டப் பொருளாதாரம் போன்றவற்றின் நிதியியல் வலுவை மதிப்பிடும் நோக்கத்திற்காக பலவிதமான நிதியியல் வலுக்குறிகாட்டிகளை உருவாக்குவதை தொடா்ந்த வண்ணமேயுள்ளது. இதற்கு மேலதிகமாக, உள்நாட்டு நாணயங்கள் மீதான அழுத்தத்தை எதிா்வுகூறுவதற்கான முன்னெச்சரிக்கைக் குறிகாட்டியும் தொகுக்கப்பட்டது. இவ் மதிப்பீடுகளின் பெறுபேறுகள் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு தொடா்பான காலாண்டு நாணயச் சபைப் பத்திரங்களினூடாக நாணயச் சபைக்கு கிரமமாக எடுத்துக் கூறப்பட்டது.

இவ்வாறான மதிப்பீடுகளிற்கு தூய தரவுகளின் கிடைப்பனவு மிகவும் அவசியமானதாகக் காணப்படுகின்றது. ஆகவே வெளியகத்தரப்புக்களிடமிருந்து வினைத்திறனான தரவுகளை சேகரித்தலை செழுமைப்படுத்தும் முகமாகவும் அவ்வாறான தரவுகளை முரண்பாடற்ற விதத்தில் உள்ளகத் திணைக்களங்களிற்கிடையில் பகிா்ந்து கொள்ளும் முகமாகவும் திணைக்களங்களிற்கிடையேயான தொழில்நுட்பக் குழு ஒன்று பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

#### (ஆ) அளவீடுகள்

ஆண்டின் ஆரம்பத்திலேயே அரையாண்டிற்கொருமுறையான முறைசாரா இடா்நோ்வு அளவீடு மேற்கொள்ளப்பட்டு இலங்கை நிதி முறைமையில் உறுதிப்பாடு தொடா்பான பாா்வைகளும் முறைமை மீதான காத்திரமான அபாயங்களை அடையாளம் காணுவதற்கான நிதியியல் முறைமைசாா் தொழில்சாா் வல்லுநா்களின் பரந்தளவிலான அனுசரனையும் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், இலங்கையின் வீட்டுப் பணித்துறையின் கடன்படுநிலையின் அதிகரிப்புத் தொடா்பான நிதியியல் மற்றும் சமூக அக்கறைகள் அதிகரித்ததன் விளைவாக வீட்டுப் பணித்துறை அளவீட்டிற்கான திட்டமொன்று அமுல்படுத்தி இதன் விளைவாக பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது வீட்டுப் பணித்துறைக் கடன்படுநிலை மீதான அளவீடுகளை மேற்கொள்வதற்கும் தகவல்களைத் திரட்டுவதற்கும் மத்திய வங்கியின் புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்தது.

#### (இ) மத்திய வங்கியின் அறிக்கைகள் மற்றும் வெளியீடுகள்

பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது ஆண்டறிக்கையின் 8ஆம் அத்தியாயம் மற்றும் நிதி அமைச்சரிற்கு வழங்கும் அறிக்கை என்பனவற்றை ஒருங்கிணைத்து உருவாக்கியதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் சட்ட பூா்வ அறிக்கைகளிற்கு தனது பங்களிப்பை வழங்கியது. இதற்கு மேலதிகமாக அண்மைய பொருளாதார அபிவிருத்தி அதாவது நிதித்துறைசாா் அபிவிருத்திகள் மற்றும் உறுதிப்பாடு என்ற 8ஆம் அத்தியாயமானது இத்திணைக்களத்தாலேயே உருவாக்கப்பட்டது. குறித்த அத்தியாயத்திற்கான வரைவுப் பகுதிகள் மற்றும் அதற்கு முறையேயான தகவல்கள் போன்றவற்றை வழங்கிய நிதித்துறையுடனும் வெளியக பங்குரிமையாளா்களுடனும் ஈடுபாடுடைய வங்கியின் மற்றைய திணைக்களங்களுடன் இணைந்த முயற்சி ஒன்றாகவே இவ்வத்தியாயங்கள் காணப்பட்டன. நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு தொடா்பான வருடாந்த மீளாய்வை வெளிப்படுத்துவதையும் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் செயற்படுத்துகின்றது. நிதி நிறுவனங்கள், சந்தைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடா்பான பூரண உண்மை மற்றும் எண்ணியல் தரவுகளை வழங்குவதே இவ்வறிக்கைகளின் நோக்கமாக காணப்படுகிறது. இத்திணைக்களமானது நாட்டின் நிதி முறைமையின் ஒழுங்கமைக்கப்பட்ட அபிவிருத்திகள், வாய்ப்புக்கள், இணை அபாயங்கள் செயற்பாடுகள் தொடா்பாக பொதுமக்களை ஊக்குவிப்பதற்கு தொடா்ச்சியாக தீவிர முயற்சியெடுத்து வருகிறது.

### 19. கொடுப்பனவுகள் மற்றும் தீா்ப்பனவுகள்

நிதிகளின் மாற்றங்களுக்கான முறைமைகளை நிறுவுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் கொடுப்பனவுக் கடப்பாடுகளைத் தீா்ப்பனவு செய்வதற்கும் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முதன்மை விதிகளை விடுப்பதற்கும் மத்திய வங்கிக்கு அதிகாரங்களை வழங்குகின்ற நாணய விதிச்சட்டத்தின் கீழ் 62அ பிரிவின் கீழ் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கின்ற பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2002இல் கொடுப்பனவுகள் மற்றும் தீா்ப்பனவுகள் திணைக்களம் நிறுவப்பட்டது. மேலும், 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீா்ப்பனவுகள் முறைமைகள் சட்டம் இயற்றப்பட்டதுடன் இச்சட்டத்தின் கீழும் மத்திய வங்கியின் பொறுப்புக்களை ஆற்றுகின்ற கடப்பாடு, கொடுப்பனவுகள் மற்றும் தீா்ப்பனவுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

கொடுப்பனவுகள் மற்றும் தீா்ப்பனவுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் முக்கிய தொழிற்பாடுகளாக அதேநேர மொத்தத் தீா்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடு நிதியியல் கொடுக்கல்வாங்கள்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகளை வழங்குதல் சுவிப்ற் தொடா்பாடல் முறைமையின் முகாமைத்துவம், ஆசிய தீா்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தல், தேசிய கொடுப்பனவு ஆளியின் அபிவிருத்திக்கு வசதியளித்தல், கொடுப்பனவுகள் மற்றும் தீா்ப்பனவுகள் முறைமைகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பாா்வை என்பன காணப்படுகின்றன. 2017ஆம்

ஆண்டில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளின் சாரம்சம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**19.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடு**

(அ) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகவும் நேர முகாமைத்துவம் வாய்ந்த பாரிய பெறுமதியினைக் கொண்ட பங்கேற்பாளர்களுக்கிடையேயான கொடுப்பனவுகளை அதேநேர மொத்த அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதுடன் பங்கேற்கும் நிறுவனங்களின் ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி ஏற்பாடுகளை வசதிப்படுத்தல் கண்காணித்தல் என்பவற்றினை கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் தொழிற்படுத்துகின்றது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு திணைக்களம் முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களாக மத்திய வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், ஊழியர் சேம நிதியம் வங்கியல்லா முதனிலை வணிகர் கம்பனிகள் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை என்பன காணப்படுகின்றன.

(ஆ) 2017இன் இறுதியிலுள்ளவாறான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 36 ஆகக் காணப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை ரூ.92.303 பில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட 377,312 ஆகக் காணப்பட்டது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் சராசரியாக ஒரு நாளைக்கு ரூ.383 பில்லியன் பெறுமதி கொண்ட 1,566 பரிவர்த்தனைகள் தீர்ப்பனவுசெய்யப்பட்டன. சராசரியாக நாளொன்றுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியான பங்கேற்பாளர்களுக்கு ரூ.47.4 பில்லியன் விடுவிக்கப்பட்டது. பன்னாட்டு ரீதியான சிறந்த நடைமுறைகள் பின்பற்றுகின்றமையின் காரணமாக இவ்வாண்டுப்பகுதி அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கிடைப்பனவு உயர்ந்த நிலையான 99.71 சதவீத மட்டத்தில் பேணப்பட்டது.

**19.2 மத்திய வங்கியின் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலக பணிகளை வழங்கல்**

(அ) வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள் 2017ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்காக வழங்கப்பட்ட பின்னரங்க அலுவலகப் பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

I. வெளிநாட்டு செலாவணி வர்த்தகப்படுத்தல் மற்றும் நிதியிடல் பணச்சந்தை நடவடிக்கைகள், நிலையான வருமானப் பிணையங்கள், தங்க வர்த்தகம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் மற்றும் மீள்கொள்வனவு / நேர்மாற்று மீள்கொள்வனவு என்பவற்றுடன் தொடர்பான ஐ.அ.டொலர் 357.2 பில்லியன் தொகை கொண்ட 10,475 கொடுக்கல் வாங்கல்கள் 2017இல் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

II. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது பின்னரங்க அலுவலக தேவைப்பாடுகளோடு தொடர்புடைய திரைச்சேவை முகாமைத்துவ முறைமையினை மாற்றியமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டது.

**(ஆ) திறந்த சந்தை தொழிற்பாடுகளுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்**

திறந்த சந்தை பங்கேற்பாளர்களின் திரவத்தன்மை தேவைப்பாடுகளின் முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் விதத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடனான திறந்த சந்தை தொழிற்பாடுகளின் பின்னரங்க அலுவலக தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2017ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ரூ.3,327 பில்லியன் பெறுமதியான 1,212 மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.3,955 பில்லியன் பெறுமதியான 3,130 துணைநில் வைப்பு வசதி கொடுக்கல்வாங்கல்களையும் 2,130 பில்லியன் பெறுமதியான 2,844 துணைநில் கடன்வசதி கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.1,050 பில்லியன் பெறுமதியான 1,860 நேர்மாற்று கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும் 109 பில்லியன் பெறுமதியான 89 உடனடி விற்பனைகளும் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் வசதியளித்தது.

**19.3 சுவிப்ற் தொடர்பூட்டல் முறைமையின் முகாமைத்துவம்**

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது நிதியியல் தொழிற்பாடுகள் மீதான அதன் தொடர்பாடலில் சுவிப்ற் சேவையினைப் பயன்படுத்துவதுடன் மத்திய வங்கியின் அனைத்து பயனாளிகளின் சார்பாக சுவிப்ற் முறைமையினை முகாமைத்துவம் செய்கின்றது. மென்பொருள், வன்பொருள், செயன்முறை, நடவடிக்கைமுறை மற்றும் இடர்முகாமைத்துவ கட்டுப்பாடுகள் தொடர்பாக சுவிப்ற் தலைமையகத்தினால் வரையறுக்கப்பட்ட நியமங்களுக்கு அமைவாக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது முறைமையினைப் பேணுகின்றது. லங்கா பினான்சியல் சேர்விஸ் பீறு லிமிடட் ஊடான மறைமுகமான இணைப்பின் வாயிலாக, சிறந்த இணைப்பினைப் பேணுவதற்காகவும் சிறந்த சேவையினை வழங்குவதற்காகவும் இலங்கை மத்திய வங்கியானது சுவிப்ற் வலையமைப்பினைப் பெற்றுள்ளது.

பன்னாட்டு ரீதியாக அதிகரித்த, தொழிற்பாட்டு மற்றும் இடர்நேர்வு முறைமை என்பவற்றின் காரணமாக சுவிப்ற் இனை பயன்படுத்தும் சமூகத்திற்கு 2017ஆம் ஆண்டும் சவால்மிக்க ஒரு ஆண்டாக அமைந்தது. சுவிப்ற் முறைமையானது அதன் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட வசதிகளுடன் கூடியளவு வினைத்திறன்மிக்க பயணிகளை வழங்குவதற்காக புதிய பதிப்புடன் (பதிப்பு 7.1.40) பணிகள் வழங்குவோரால் தரமுயர்த்தப்பட்டது. இதற்கமைய சுவிப்ற்றினால் அறிமுகப்படுத்தப்பட்ட பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்வதற்காக மத்திய வங்கியும் புதிய பதிப்பினை வெற்றிகரமாக நிறுவியது. சுவிப்ற் பிரிவின் பாதுகாப்பு மட்டத்தினை பேணுவதனை நோக்காகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியானது ஆண்டுமுழுவதிலும் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்தியிருக்கின்றது.

2017இல் அனுப்பப்பட்ட மொத்த சுவிப்ற் செய்திகளின் எண்ணிக்கை 1,438,115ஆகவும் பெறப்பட்ட செய்திகளின் மொத்த எண்ணிக்கை 801,620 ஆகவும் அமைந்துள்ளது. பெறப்பட்ட மொத்த செய்திகளில் மத்திய வங்கியின் பரிவர்த்தனைக்காக பெறப்பட்டவை 230,819 ஆக இருக்கின்ற அதேவேளை மீதமானவை அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான பரிவர்த்தனைகளுக்காக பெறப்பட்ட செய்திகளாகக் காணப்படுகின்றன.

**19.4 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான தீர்ப்பனவுகளை வசதிப்படுத்தல்**

2017ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஒன்பது உறுப்பினர் மத்திய வங்கிகளுக்கிடையேயான தகைமையுடைய கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுகளுக்கு தொடர்ந்தும் வசதியளித்தது. ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறையூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 6,335 ஆகவும் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூ.533.6 பில்லியனாகவும் காணப்பட்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறையின் கீழ் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் பெறுமதி ரூ.459.7 பில்லியனாகக் காணப்பட்டது.

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பணிப்பாளர் சபை மற்றும் துணைநில் தொழில்நுட்பக் குழுவின் 46ஆவது கூட்டம் 2017 யூலையில் கொழும்பில் நடைபெற்றதுடன் ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் தலைவராக மத்திய வங்கியின் ஆளுநர் ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு

நியமிக்கப்பட்டார். ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் மற்றும் மத்திய வங்கி உறுப்பினர்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

### 19.5 தேசியக் கொடுப்பனவு ஆளியின் அபிவிருத்தியினை வசதிப்படுத்தல்

"லங்கா பே" என்ற வர்த்தக நாமத்திற்குள் கீழ் லங்கா கிளியர் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் நிறுவுதலுக்கு மத்திய வங்கி தொடர்ந்து வசதியளித்தது. நாட்டின் தேசிய கொடுப்பனவு ஆளியாக குறித்துரைக்கப்பட்ட பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளி ஐந்து ஆளிகளைக் கொண்டுள்ளது. உதாரணமாக பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிமாற்றல் ஆளி பகிரப்பட்ட தன்னியக்க கூற்றுப்பொறி பொதுவான விற்பனை மைய ஆளி மற்றும் பொதுவான செல்லிட ஆளி, அதன் முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தைக் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் கண்காணித்து கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் கண்காணித்து கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் 2015இன் 07ஆம் சுற்றறிக்கை மூலம் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியில் சேர்வதற்கு கால வரையறைகளை விதித்ததுடன் அப்பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

(அ) பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் முதலாவது கட்டமான பொதுவான தன்னியக்கூற்றுப்பொறி ஆளியானது 2013 யூலை மாதத்தில் நேரடி நடவடிக்கைகளைத் தொடங்கியது. 2017ஆம் ஆண்டு இறுதியில் பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்தது. 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.264.1 பில்லியன் பெறுமதியான 33 மில்லியன் பெறுமதியான கொடுக்கல்வாங்கல்களை பொதுத் தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி தீர்ப்பனவு செய்தது. பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி தீர்ப்பனவு செய்தது. பொதுத்தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி வலையமைப்புக்கூடாக முன்னெடுக்கப்படும் அட்டை கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பினை உயர்த்துவதற்காக பொது தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி உறுப்பினர்களால் நிறுவப்பட்ட தன்னியக்க கூற்றுப்பொறி இயந்திரங்களின் பொதுதன்னியக்க கூற்றுப்பொறி ஆளி உறுப்புரிமை கொண்ட வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன.

(ஆ) பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் இரண்டாவது கட்டமான பொது இலத்திரனியல் நிதி மாற்றல் ஆளியானது 2015 ஒகத்து 21ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது. பொதுவான அட்டை மற்றும் பொடுப்பனவு ஆளியானது தன்னியக்க கூற்றுப்பொறி இணையத்தொழில் வங்கியியல், செல்லிட வங்கியியல், கணிப்பகம் மற்றும் முகப்பு வழியாகப் பெறுதல் போன்ற பலகொடுப்பனவு வழிமுறைகள் ஊடாக கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கான பொதுவான உட்கட்டுமானத்தை வழங்குகின்றது. 2017இல் 11 நிதியியல் நிறுவனங்கள் பொது இலத்திரனியல் நிதி முறைமையின் உறுப்பினர்களை 33ஆக அதிகரித்து பொது இலத்திரனியல் நிதிய ஆளி முறைமையுடன் ஒருங்கிணைந்து கொண்டது. 2017இல் பொது இலத்திரனியல் நிதிய ஆளி முறைமையானது ரூ.273.7 பில்லியன் பெறுமதியான 3.2 பில்லியன் கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்தது.

(இ) இலங்கை சுங்கத்திற்கு அதேநேர கொடுப்பனவுகளை வசதிப்படுத்துவதற்காக 2017 யூன் 20ஆம் திகதியன்று லங்கா பே என்ற இணையத்தளம் ஊடான கொடுப்பனவுத் தளமானது தொடங்கப்பட்டது. தற்போது ஏழு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் லங்கா பே என்ற இணையத்தளம் ஊடான கொடுப்பனவுத் தளத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. இலங்கை சுங்கத்தின் அதே நேர தீர்ப்பனவுகளை வசதிப்படுத்துவதற்கு குறித்த கொடுக்கல்வாங்கல் குறியீடு ஒன்றினூடாக அதிகூடிய பெறுமதிகொண்ட கொடுக்கல்வாங்கல்களை அதிகரிக்கும் பொருட்டாக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் 2015ஆம் ஆண்டின் 1ஆம் சுற்றறிக்கைக்குப் பதிலாக பொது இலத்திரனியல் நிதி மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல் பெறுமதி மற்றும் கட்டணம் மீதான ஆகக்கூடிய மட்டம் பற்றியதான 2017ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க சுற்றறிக்கை மாற்றீடு செய்யப்படுகின்றது. லங்கா பே என்ற இணையத்தளம் ஊடான கொடுப்பனவுத் தளத்துடன் அரசிறை நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையினை ஒருங்கிணைப்பதற்கு உள்நாட்டு அரசிறையின் ஆணையாளரால் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளினை கருத்தில்கொண்டு லங்கா கிளியர் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவகத்திற்கு லங்கா பே என்ற இணையத்தளம் ஊடான கொடுப்பனவு தளத்தினை அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையுடன் இணைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

(ஈ) லங்கா கிளியர் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்திற்கு பன்னாட்டு அட்டை அளவுத்திட்டத்துடன் பங்காளராக இணைந்து தேசிய அட்டை திட்டத்தினை அமுல்படுத்த அனுமதியளிக்கப்பட்டது. அதன்படி குறைந்த செலவிலான கொடுப்பனவு அட்டை உற்பத்திகளின் அறிமுகத்தினை வசதிப்படுத்துகின்ற தேசிய அட்டை அளவுத்திட்டம் 2018இல் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய அட்டை திட்டத்தின் அமுல்படுத்துகையின் பின்னர் பொதுவான விற்பனை மைய ஆளியால் நேரலை தொழிற்பாட்டை ஆரம்பிக்கும்.

### 19.6 கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகளின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்புத் தன்மை மற்றும் செயற்றிறனை உறுதிப்படுத்துவதற்கான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் தனது ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. இதற்கேற்ப 2017இல் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் வருமாறு,

(அ) 2013இன் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிட கொடுப்பனவுகள் முறைமைகள் ஒழுங்கு விதிகளின் ஏற்பாட்டு நியதிகளின் அடிப்படையில் கொடுகடன் அட்டை விநியோகத்திற்கு கொடுப்பனவு அட்டையின் உரிமம்பெற்ற சேவை வழங்குநராக படுகடன் அட்டை விநியோகத்திற்கான அதிகாரம் வழங்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும், செல்லிட கொடுப்பனவு முறைமையின் சேவை வழங்குநராக தொழிற்படுவதற்கு கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்கலில் உரிமம் பெற்றவர்களாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது,

(ஆ) செல்லிட தொலைபேசிகள் அடிப்படையிலான இலத்திரனியல் பணமுறைகள் தொடர்பான இடர்நேர்வுகளை கருத்திற்கொண்டு சொல்லப்பட்ட முறைமைகளின் நம்பிக்கையான மற்றும் சீரான நடைமுறையை உறுதிப்படுத்துவதற்கு தொடர்பான சேவை வழங்குநர்களுக்கு பரிந்துரை வழங்குதலை அமுல்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது செல்லிட தொலைப்பேசிகள் அடிப்படையிலான இலத்திரனியல் பண முறைகள் மீது தளத்திலான மேற்பார்வையினை நடைமுறைப்படுத்துகின்றது.

(இ) நாட்டின் சில்லறை கொடுப்பனவு முறைமை பாதுகாப்பாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் இருப்பதனை உறுதிசெய்வதனை நோக்காகக்கொண்டு செல்லிட கொடுப்பனவுகளுக்கான வழிகாட்டல் கொடுகடன் அட்டைகளுக்கான வழிகாட்டல் மற்றும் ஏனைய ஒழுங்குமுறை விதிகளுடன் சேவைவழங்குநர்களின் இணக்கத்தை பரீட்சிப்பதற்கு தொடர்ச்சியான தலத்திலான மேற்பார்வை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

(ஈ) அவசரகாலத்தின்போது வர்த்தக நடவடிக்கைகளை தொடர்வதற்கான ஆயத்தத்தை உறுதிப்படுத்துவதற்கு லங்கா செட்டில் பங்கேற்பாளர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட தனியார் லங்கா கிளியரின் தடங்கலற்ற வர்த்தக திட்டங்கள் மதிப்பிடப்பட்டன.

### 19.7 தேசிய கொடுப்பனவு சபை

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் 2006இல் ஏற்படுத்தப்பட்ட தேசிய கொடுப்பனவுச் சபையின் நிறைவேற்று அலகொன்றாகத் தொழிற்படுகின்றது. தேசிய கொடுப்பனவு சபையானது கொடுப்பனவு முறைமைகள் மீதான தொழிற்துறை ஆலோசனை மற்றும் கண்காணிப்பு குழுவாகும். தொடர்பான மத்திய வங்கியின் திணைக்களங்கள் உரிமம்பெற்ற வங்கிகள் நிதியியல் துறை நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் மற்றும் செல்லிடக்கொடுப்பனவு சேவைகள் வழங்குநர்கள் ஆகியவற்றிலிருந்து அங்கத்தவர்களை தேசிய கொடுப்பனவு சபை கொண்டுள்ளது. வளர்ந்துவரும் புத்தாக்க கொடுப்பனவு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தலின் முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு நிதியியல் தொழில்நுட்பத் துறை மற்றும் சங்கிலித் தொடர் பதிவேட்டு தொழில்நுட்பம் என்பவற்றின் அபிவிருத்திகள் தொடர்பான கற்கைகளை முன்னெடுக்க தேசிய கொடுப்பனவு சபை நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

### 19.8 பொதுமக்கள் விழிப்புணர்வு

நாட்டில் தொழிற்படுகின்ற கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைகள் மீதான தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் பரப்புவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் இணைய தளத்தில் கொடுப்பனவுச் செய்தித் திரட்டு என்ற காலாண்டு வெளியீட்டினை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது. மேலும், கொடுப்பனவு முறைமைகள் மற்றும் ஏனைய தொடர்பான விடயங்கள் பற்றி பொதுமக்கள் மற்றும் வங்கித்தொழில் சமூகத்திற்கு அறிவூட்டுவதற்காக தேவையின் அடிப்படையில், 05 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவிக்கும் முகமாக பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் இலங்கை உள்ளக வங்கி கொடுப்பனவு முறைமை தொடர்பாக வாடிக்கையாளர்களை அறிவூட்டுவதற்காக தினசரி செய்திப் பத்திரிகைகளில் விளம்பரங்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறது.

## 20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டமிடல் செயன்முறைக்கு வசதியளிப்பவராகவும் வங்கியின் உபாயத் திட்டமிடலின் நடைமுறைப்படுத்தலை மீளாய்வு செய்பவராகவும் கொள்கைகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துபவராகவும் குறித்துரைக்கப்பட்ட கால அட்டவணையொன்றிற்குள் விரும்பத்தக்கப் பெறுபேறுகளை எய்தும் பொருட்டு உபாயத் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வசதியளிப்பவராக இருந்து வருகின்றது.

### 20.1 உபாயத் திட்டம் 2017 - 2021 இனைத் தயாரித்தல், முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடல்

"விஷ சுழற்சி வட்டத்தினை உடைத்தல்" என்ற தொனிப்பொருளின் கீழ் 2017 - 2021 காலப்பகுதிக்கான இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டம், 2017 சனவரி 02 அன்று நடத்தப்பெற்ற புத்தாண்டுப் பணி ஆரம்ப வைபவத்தில் தொடக்கி வைக்கப்பட்டது. அடுத்துவந்த வார காலப்பகுதியில் உபாயத் திட்டம் 2017 - 2021 தொடர்பில் விழிப்புணர்வுக் கூட்டங்கள் கொத்தணி அடிப்படையில் நடத்தப்பட்டதுடன் உபாயத் திட்ட வெளியீட்டின் பிரதிகள் அனைத்து ஊழியர்களிடையேயும் விநியோகிக்கப்பட்டன. உபாய/ நடவடிக்கைத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை மதிப்பீடு செய்வதற்காக காலாண்டு ரீதியாக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் உபாய நடவடிக்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய வேளையில் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளை எடுத்துக்காட்டுகின்ற முன்னேற்றம் பற்றியும் திணைக்கள ரீதியான உபாய/ நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு நடவடிக்கைகளை முழுமையாக நடைமுறைக்கிட முடியாமல் போனமைக்கான காரணங்களும் நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டன.

### 20.2 உபாய முன்னுரிமைகள் 2018 - 2020

தற்போதுள்ள உபாய திட்டமிடல் செயன்முறைக்குப் பொருத்தமான மேம்பாடுகளை உள்ளீடு செய்யும் பொருட்டு, கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், இங்கிலாந்து வங்கியின் உதவியுடன் உபாயத் திட்டம் 2017 மீது 2017 ஒத்தோபர் 03-04ஆம் திகதிகளில் ஆய்வரங்கொன்றினை ஒழுங்குசெய்தது. அதன் பின்னர் உபாயத் திட்டமிடல் மீளாய்வு 2017, ஒத்தோபர் 28 - 29 2017இல் நடத்தப்பட்டதுடன் இவ்வாய்வரங்கில் கிடைத்த ஆழ்ந்த சிந்தனைகள் தொடர்பில் மீளாய்வின் போது விரிவாக ஆராயப்பட்ட வேளையில் மூன்றாண்டு காலப்பகுதிக்கான வங்கி அடிப்படையிலான உபாய முன்னுரிமைகளை அடையாளம் காணும் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டமிடல் செயன்முறையின் குறிப்பிடத்தக்க மைல்கல்லினை நிறுவுகின்ற விதத்தில், 2018 - 2020 காலப்பகுதியில் வங்கி அடிப்படையில் உபாய முன்னுரிமைகளாக மூத்த முகாமைத்துவத்தினால் ஆறு (06) உபாய முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டன. குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட செயலணிக் குழுவினால் தெளிவுபடுத்தப்பட்ட அடுத்த மூன்றாண்டுகளுக்கான நேர கட்டமைப்பிற்குட்பட்ட உபாய நடவடிக்கைகள் கம்பனி முகாமைத்துவக் குழுவின் விதந்துரைப்புக்களுடன் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டன.

### 20.3 திணைக்கள ரீதியான நடவடிக்கைத் திட்டங்கள்

வருடாந்த திணைக்கள ரீதியான நடவடிக்கைத் திட்டங்களுக்கு புதிய மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதன் காரணமாக திணைக்கள ரீதியான நடவடிக்கைத் திட்டங்கள் (i) தொடர்பான ஆண்டில் வங்கி ரீதியாக உபாய முன்னுரிமைகளிலிருந்து தோன்றுகின்ற திணைக்களத்துடன் தொடர்பான உபாய நடவடிக்கைகள் (ii) ஆண்டின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளையும் தாக்கத்தினையும் கவர்ந்து கொள்ளும் பொருட்டு உபாய/ தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஒவ்வொரு திணைக்களத்தினாலும் பொருத்தமான முதன்மை செயலாற்றச் சுட்டெண்கள் அடையாளம் காணப்பட்டன. உபாய முன்னுரிமைகள் மற்றும் திணைக்கள ரீதியான நடவடிக்கைத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றங்கள் காலாண்டு அடிப்படையில் நேருக்கு நேரான கூட்டங்களில் மீளாய்வு செய்யப்படவுள்ளதுடன் கம்பனி முகாமைத்துவக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் முறையே அறிவிக்கப்படும்.

### 20.4 அமைச்சுக்களுக்கும் மற்றைய அரச நிறுவனங்களுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் - 2017இன் நடைமுறைப்படுத்தல் தொடர்பான கிரமமான நாளது வரையான அறிவித்தல்கள், இலங்கை மத்திய வங்கி தொடர்பான செயலாற்ற அறிக்கைகள் மற்றும் கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கான தேவையான தகவல்கள் என்பன தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு கேட்டுக் கொள்ளப்பட்டவாறு சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், வேறு ஏதேனும் அரச நிறுவனங்களினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு மற்றைய தகவல்களும் பொருத்தமான விதத்தில் உரிய நேரத்தில் வழங்கப்படும்.

### 21. பொதுப்படுகடன்

நாணயவிதிச் சட்டத்தின் 113 ஆவது பிரிவின் நியதிகளில் பொதுப்படுகடனின் முகாமைத்துவத்திற்கான அரசின் முகவராக இலங்கை மத்திய வங்கியின் சட்டரீதியான பொறுப்புக்களை ஆற்றுவதற்குப் பொறுப்பாகப் பொதுப்படுகடன் திணைக்களம் உள்ளது. இத்தகைய பொறுப்புக்களை நிறைவேற்றும் நோக்குடன் மத்திய வங்கி தொடங்கப்பட்ட 1950 ஓகத்து 28 நாளன்று பொதுப்படுகடன் திணைக்களம் நிறுவப்பட்டது. ஒதுக்குச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு பொதுப்படுகடன் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகள் அரசாங்கத்தின் மொத்தக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான நிதியங்களைத் திரட்டுதல், அரசபடுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை உரியநேரத்தில் நிறைவேற்றுதல், அரச பிணையங்களின் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுகள் சுமூகமாக தொழிற்படுவதனை வசதிப்படுத்தும் நோக்கில் லங்காசெகுயர் முறைமையினைப் பேணுதல் மற்றும் மத்திய வைப்பக முறைமையின் அரச பிணையங்களின் உரித்துப் பதிவினைப் பேணுதல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. மேலும், பொதுப்படுகடன் திணைக்களமானது நாட்டின் படுகடன் அரச பிணையங்கள் சந்தை அபிவிருத்திகளிலும் ஈடுபட்டது.

**21.1 ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு அரசின் மொத்தக் கடன்பாட்டுத் தேவையினைப் பூர்த்திசெய்வதற்கு நிதிகளைத் திரட்டுதல்.**

(அ) திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் போன்றவை 2017இல் அரசாங்கத்தின் மொத்தக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளை நிதியிடுவதற்கான பிரதான படுகடன் கருவிகளாகக் காணப்பட்டன.

(ஆ) நிதியங்களின் ஒவ்வொரு மூலங்களின் கீழான நடவடிக்கைகளின் சுருக்கமான அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II - 25
கருவிகள் மற்றும் ஏலச்செயலாற்றம் - 2016 மற்றும் 2017

| கருவி | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|
| | வழங்கல்கள் ரூ. பில்லியன் | ஏலங்களின் எண்ணிக்கை | வழங்கல்கள் ரூ. பில்லியன் | ஏலங்களின் எண்ணிக்கை |
| திறைசேரி உண்டியல்கள் | 1,635.4 | 52 | 1,624.3 | 52 |
| திறைசேரி முறிகள் | 663.6 | 23 | 548.8 | 16 |
| | வழங்கல்கள் (ஐ.அ.டொலர் மில்லியன்) | ஏலங்களின் எண்ணிக்கை | வழங்கல்கள் (ஐ.அ.டொலர் மில்லியன்) | ஏலங்களின் எண்ணிக்கை |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 1,365.9 | 6 | 2,231.4 | 4 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 1,500.0 | 1 | 1,500.0 | 1 |

(இ) 2017 இல் வெளிநாட்டு முதலீடுகளால் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்த தேறிய உட்பாய்ச்சலானது ஐ.அ.டொலர் 440.6 மில்லியனுக்கு வகைகூறியதுடன் இது திறைசேரி உண்டியல்களிலான ஐ.அ.டொலர் 80.5 மில்லியனையும் மற்றும் திறைசேரி முறிகளிலான ஐ.அ.டொலர் 360.1 மில்லியனையும் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினைக் கொண்டுள்ளது.

(ஈ) நாட்டுக்கான பன்னாட்டு முறிகள், கூட்டுக்கடன் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளிலான அதிகரித்த வெளிநாட்டு முதலீடுகளிலிருந்தான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களுடனான மேம்பட்ட சந்தை நிலைமைகள் உள்நாட்டு மூலங்களூடாக திறைசேரி முறிகளின் முதிர்ச்சியடைந்த முதல் தொகையினை மாத்திரம் தீர்ப்பனவு செய்வதற்கான அரச உபாயங்களுடன் இணைந்து, 2017இன் பின்னரை காலப்பகுதியில் இரண்டாம்தரச் சந்தை விளைவு வீதங்கள் தளர்வடைவதனை இயலச்செய்தன.

(உ) இறுக்கமடைந்த நாணயக் கொள்கை வட்டிவீதம் மற்றும் திரவத்தன்மை சூழ்நிலை போன்றவற்றினைக் கருத்திற்கொண்டு நீண்டகால பிணையங்களின் வழங்கல்கள் குறைவடைந்தமையின் காரணமாக, வெளிநிற்கும் உள்நாட்டுப்படுகடன் இருப்புக்களின் முதிர்ச்சிக்கான சராசரிக்காலம் 2016 இறுதியின் 5.98 வருடங்களிலிருந்து 2017 இறுதியளவில் 5.78 வருடங்களாகக் குறைவடைந்தது.

**21.2 பொதுப்படுகடன்களைத் தீர்ப்பனவு செய்தல்**

2017 காலப்பகுதியில், ரூ.1,213.5 பில்லியன் கொண்ட உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும், ரூ.389.6 பில்லியன் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளையும் உள்ளடக்கம் ரூ.1,603.1 பில்லியன் மொத்தப் படுகடன் தீர்ப்பனவு மேற்கொள்ளப்பட்டது.

**21.3 அரச பிணையங்களின் தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்**

லங்காசெக்குயர் முறைமையானது அரச பிணையங்களின் முதனிலை மற்றும் இரண்டாம் தரச்சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இம்முறையானது தங்கள் சார்பில் அல்லது தங்களது வாடிக்கையாளர்களாக இருக்கக்கூடிய ஏனைய முதலீட்டாளர்கள் சார்பில் கணக்குகளை வைத்துள்ள 33 முகவர் நேரடிப் பங்குபற்றுனர்களையும் (25 பட்டியலிடப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் 8 முதனிலை வணிகர் கம்பனிகள்) தங்களது சார்பில் மட்டும் கணக்குகளைக் கொண்டுள்ள 3 நேரடிப் பங்குபற்றுனர்களையும் (கொழும்புபங்கு பரிவர்த்தனை, இலங்கை மத்திய வங்கி மற்றும் ஊழியர் சேமலாபநிதி) கொண்டுள்ளது. பொதுப்படுகடன் திணைக்களமானது லங்காசெக்குயரின் தடங்கலற்ற அதேநேர தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தி தீர்ப்பனவுகளுக்கு வசதியளித்தல் மூலம் அதன் பிரதான பங்கினை ஆற்றுகின்றது. 2017 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு பத்திரங்களற்ற பிணையங்களினது உடமைகளின் மொத்த முகப்பெறுமதியானது ரூ.4,912.2 பில்லியனுக்கு வகைகூறியது. இது திறைசேரி உண்டியல்களின் ரூ.724.7 பில்லியனையும் திறைசேரி முறிகளின் ரூ.4,187.5 பில்லியனையும் உள்ளடக்கியுள்ளது.

**21.4 அரச பிணையங்களின் பதிவினைப் பேணுதல்**

பொதுப்படுகடன் திணைக்களத்தில் பேணப்படும் மத்திய வைப்பக முறைமையிலுள்ள அரச பிணையங்களின் உரித்துப் பதிவின் அதேநேர இற்றைப்படுத்தலுக்கான வசதியானது அரச பிணையங்களின் பாதுகாப்பினை உறுதிசெய்துள்ளது. ஆண்டு முழுவதும், மத்திய வைப்பக முறையில் கணக்குகளை வைத்திருப்போருக்கு அவர்களது உடமைகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பிலான காலாந்தரக் கூற்றுக்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. 2017 காலப்பகுதியில் பொதுபடுகடன் திணைக்களம் மத்திய வைப்பக முறையில் கணக்கு வைத்திருப்போருக்கு இலத்திரனியல் வடிவில் 2,022 கூற்றுக்களையும் 18,962 உடமைகளின் அரையாண்டு கூற்றுக்களையும் 49,887 கொடுக்கல்வாங்கல் மாதாந்த கூற்றுக்களையும் 24,029 கொடுப்பனவு கூற்றுக்களையும் அஞ்சல் மூலமாக அனுப்பி வைத்துள்ளது. மேலும், மத்திய வைப்பக முறைமையின் கணக்கு உடமையாளர்கள் இணையத்தளமூடாக அதேநேர கணனிவழி அடிப்படையில் அவர்களது கணக்கு விபரங்களைப் பார்வையிடுவதற்கான வசதியும் வழங்கப்பட்டிருக்கிறது. 2017 திசெம்பர் இறுதியில் மத்திய வைப்பக முறையில் பதிவுசெய்யப்பட்ட கணக்கு உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 93,203 ஆக காணப்பட்டது.

**21.5 முறைமை சீர்திருத்தங்கள்**

2017 ஆண்டு காலப்பகுதியில் வினைத்திறன், காத்திரதன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை போன்றவற்றினை மேம்படுத்துதல் அதேபோன்று அரச பிணையங்கள் சந்தையினை விருத்திசெய்தல் போன்ற நோக்குடன்

கீழ்வரும் முறைமை சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) திறைசேறி முறிகளின் புதிய வழங்கல் செயன்முறை**

திறைசேரி முறிகளுக்காக புதிய முதலாந்தர வழங்கல் முறைமையொன்று 2017 யூலை 27ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய முறைமையானது, 2015 பெப்புருவரியிலிருந்து நடைமுறையிலிருந்து வந்த திறைசேரி முறிகளுக்கான முழுமையான ஏலத்தினை அடிப்படையாகக் கொண்ட வழங்கல் முறைமைக்குப் பதிலாக இடம்பெற்றது. இப்புதிய முறையினை அறிமுகப்படுத்தியதன் முக்கிய நோக்கம் ஆகக்குறைந்த சாத்தியமான செலவுகளில் அரசாங்கத்தின் நிதியியில் செய்முறையின் வினைத்திறனை மேலும் மேம்படுத்தும் வேளையில், நிதியியல் ஒழுங்குபடுத்தல்களின் வெளிப்படைத்தன்மையினையும் பேணுவதேயாகும். புதிய முறைமையானது கிரமமான மாதாந்த திறைசேரி முறிகளுக்கான ஏலங்களை உள்ளடக்குகின்றது. ஒவ்வொரு மாதாந்த ஏலங்களும் வேறுபட்ட முதிர்ச்சிகளில் இரண்டு திறைசேரி முறி தொடர்களை வழங்குகின்றது. மேலும், புதிய முறைமையானது மூன்று கட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. கட்டம் I இல், பல்விலை ஏலமுறைமையின் கீழ் முன்வைக்கப்பட்ட தொகைக்குள் அனைத்து நியாயமான சந்தை விலைக் குறிப்பீடுகளையும் ஏற்றுக்கொள்ளல் தொடர்பில் ஆராயப்படும். கட்டம் II ஆனது கட்டம் I இன் ஏதேனும் குறைஒதுக்கிற்கான அளவு அடைப்படையிலான விலைக்குறிப்பீட்டின் சுயாதீனமான, முன்வைக்கப்பட்ட தொகையுடன் தொடர்புபட்டதாகக் காணப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் வழங்கலானது கட்டம் I இல் நிர்ணயிக்கப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் இடம்பெறுவதுடன், மேலதிகமாக வழங்கப்படும் சந்தர்ப்பத்தில், கட்டம் I இன் பங்குபற்றுனர்களின் வெற்றிகரமான ஏல செயலாற்றம் அடிப்படையில் ஒதுக்கப்படும். கட்டம் III இல் ஏதேனும் மீதித்தொகைகள் காணப்பட்டால், நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தின் கட்டாய அடிப்படையில் முதனிலை வணிகர்களுக்கு வழங்கப்படும். கட்டம் III இல் ஒதுக்கீடானது கட்டம் I மற்றும் கட்டம் II இன் ஒவ்வொரு முதனிலை வணிகர்களுக்கும் பெற்றுக்கொண்ட பங்கிற்கு எதிர்மாறானதாக காணப்படும். எனினும், கட்டம் IIIஇன் நிறைவேற்றதலானது கட்டம் I இல் முன்வைக்கப்பட்ட தொகையில் குறைந்தபட்சம் 60 சதவீதம் ஏற்றுக்கொள்ளப்படும் போது மட்டுமே சாத்தியமானதாகும்.

**(ஆ) திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் ஏலத்திற்கான கலண்டர்**

2017 காலப்பகுதியில், பொதுப்படுகடன் திணைக்களம் ஏலத்திகதி, தீர்ப்பனவுத் திகதி, காலம் மற்றும் தொகை மற்றும் தகவல்கள் (திறைசேரி முறிகளுக்காக) போன்றவற்றை உள்ளடக்கி திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான காலாண்டு கலண்டரினை வெளியிட்டது. இது பொதுப்படுகடன் திணைக்களத்துடன் தொடர்பூட்டப்பட்ட நிதியியல் தேவைப்பாடுகளின் அடிப்படையில் நிதியமைச்சுடன் இணைந்து வெளியிடப்படுவதுடன் முதனிலை ஏல செயன்முறைகளின் எதிர்பார்க்கைகளை மேம்படுத்தல், முதலீட்டாளர்களுக்கு முன்னரே தகவல்கள் கிடைக்கப்பெறுவதனை உறுதிசெய்தல் மற்றும் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்தல் போன்றவற்றிற்காகவும் வெளியிடப்படுகின்றது.

**21.6 முன்னோக்கிய பாதை**

(அ) புதிய முதலாந்தர வழங்கல் செயன்முறையினை திறைசேரி உண்டியல்களுக்காக விரிவாக்குவதன் சாத்தியங்களைக் கண்டறிவதும் அதேபோன்று உள்நாட்டுச் சந்தையிலிருந்தான அரசாங்க கடன்பாடுகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை மேலும் மேம்படுத்தலும்

(ஆ) ஆரம்ப வழங்கல்களுக்கான இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு ஒழுங்குகளுடன் சேர்த்து இலங்கை அபிவிருத்தி முறிகளை பத்திரங்களற்ற முறையில் வழங்குவது கண்டறியப்பட்டதன் மூலம் இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான இரண்டாந்தரச் சந்தையினை மேம்படுத்தல்.

(இ) அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தையினை ஆழப்படுத்தி அகலமாக்குவதற்கு தேவையான சட்ட சீர்திருத்தங்களுடன் இணைந்து அரச பிணையங்களுக்கு தனித்துவமானதொரு இலத்திரனியல் வர்த்தகத்தளம் மற்றும் மத்திய இணைத்தரப்பு ஒழுங்குபடுதல் நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இது வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்தல் மற்றும் சமச்சீரற்ற தகவல் இடர்நேர்வினைக் குறைத்தல் போன்ற நோக்குகளுடன் இரண்டாம்தரச் சந்தைகளில் படுகடன் கருவிகள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்கான முறைமையொன்றினை நிறுவும்.

(ஈ) பொறுப்பு முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை நிறுவனமயப்படுத்தல்

பொறுப்பு முகாமைத்துவ சட்டவாக்கத்தின் இயற்றலானது நிறைவடையும் இறுதிக்கட்டத்தில் காணப்படுவதுடன் 2018இன் தொடக்க மாதங்களில் அமுலுக்குவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதிக கிரயம் மற்றும் இடர்நேர்வு வினைத்திறன் அடிப்படையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன்களை முகாமை செய்வதற்கு அரசாங்கப் படுகடன் இருப்புக்களின் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை மேம்படுத்தும் எதிர்பார்ப்புடன் வெளிநிற்கும் படுகடன் இருப்புக்களின் முதிர்ச்சி தோற்றப்பாட்டினை மாற்றுவதன் மூலம் மாறிச்செல்லும் இடர்நேர்வினைக் குறைப்பதற்காகப் பொறுப்பு முகாமைத்துவ வழிமுறைக்கு முறையான கட்டமைப்பினை நிறுவனமயப்படுத்துவதற்கும் இச்சட்டம் எதிர்பார்க்கின்றது.

இது உரிய காலத்திற்கு முன்னரான (மாறிச்செல்லும் உச்சங்களைக் குறைக்கும்) மீள்நிதியிடல் தேவைப்பாடுகளின் ஒரு பகுதியை முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த விதத்தில் மேற்கொள்ளுவதனையும் வர்த்தகக் கடன்பாடுகளுக்கான (நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்) முதிர்ச்சிக் காலத்தினை நீடிப்பதனையும் இயலுமைப்படுத்தும். இது திறைசேரி முறிகளின் முதிர்ச்சி அமைப்பின் விரிவாக்கத்தினை இயலச்செய்வதுடன் கூப்பன் கொடுப்பனவு சுழற்சிவட்டத்தினை சுமுகப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பொறுப்பு முகாமைத்துவச் சட்டமானது மீள் கொள்வனவு செய்தல், மாறுதல் மற்றும் முன் நிதியிடல் ஒழுங்குகள் போன்ற தீவிரமான பொறுப்பு முகாமைத்துவ முன்முயற்சிகளுக்கு சட்ட அடிப்படையினை வழங்கும். உபாயமல்லாச் சொத்துக்களின் விற்பனைப் பெறுகைகளிலிருந்து திரட்டப்பட்ட விசேட நிதியங்களைப் பேணுவதனையும் இது இயலச்செய்யும்.

**(உ) தற்போதுள்ள சட்டவாக்கங்களைப் பலப்படுத்துவதற்கான வழிமுறைகள்.**

வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்தல் மற்றும் நடைமுறைச் சந்தை அபிவிருத்திக்கு நிகராக இருப்பதற்காக பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. அத்துடன் வெளிவாரிப் பொறுப்புகளுக்கான கணக்கியலின் பன்னாட்டு நியமங்களுடன் இணைந்து செல்லத்தக்க விதத்தில் 1957ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வெளிநாட்டு கடன்கள் சட்டத்தினை திருத்துவதற்கான யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(ஊ) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தளத்தின் பன்முகப்படுத்தலை இயலச்செய்தல் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அரசாங்கப் பிணையங்கள் சந்தையினை அணுகுவதனை இலகுபடுத்தல்

போன்ற நோக்கங்களுடன், பொதுப்படுகடன் திணைக்களமானது அரசாங்க பிணையங்களின் யூரோ தீர்ப்பனவின் சாத்தியக் கூறுகளை ஆராயும் செயன்முறையிலுள்ளது.

### 21.7 நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடல் மீளாய்வுப் பணியினை ஒருங்கிணைத்தல்

2017 இல், நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடல் கிடைப்பனவை உறுதிப்படுத்தும் நோக்கில் பொதுப்படுகடன் திணைக்களமானது பன்னாட்டுத் தரமிடல் முகவர்களின் (பிட்ஜ் றேட்டிங் லிமிடெட், மூடிஸ் இன்வெஸ்டர் சேவிஸ், ஸ்டாண்டட் அன்ட் புவர்) வருடாந்த தரமிடல் மீளாய்வுகளுக்கு வசதியளித்தது.

## 22. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மரபு ரீதியான கொடுகடன் தொழிற்பாடுகளை கொண்டு நடாத்துகின்ற அதன் தொழிற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துகின்ற விதத்தில் புதிய கொள்கை உபாயங்களை விருத்திசெய்து நடைமுறைப்படுத்துவதில் 2017இல் கால்பதித்தது. உள்ளீட்டு மற்றும் சமச்சீரான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்ற மற்றும் குறைந்த செலவில் மக்கள் அனைவருக்கும் நிதியியல் வசதிகள் கிடைப்பதனை ஊக்குவிக்கின்ற அதன் குறிக்கோள்களை ஒட்டுமொத்தமாக எய்துவதற்கு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் இயலளவினை வலுப்படுத்துவதற்கு இப்புதிய கொள்கை உபாயங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் இயலுமைப்படுத்தின.

2017இன் போது, பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், பல எண்ணிக்கையிலான கொடுகடன் குறை நிரப்புப் பணிகளை வழங்கிய அதேவேளை, பல்வேறு மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களைத் தொடர்ந்தும் ஒருங்கிணைத்து வசதியளித்தது. இச்சலுகைக் கொடுகடன் திட்டங்களுக்கு இலங்கை மத்திய வங்கி, இலங்கை அரசு, கொடையாளி முகவர்கள் மற்றும் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்கள் என்பன மூலம் நிதியளிக்கப்பட்டிருந்தது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு, நுண்பாக நிதி மற்றும் பேரண்ட, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித்துறை உள்ளடங்களாக பரந்தளவிலான துறைகளிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரக் கூட்டுமுயற்சிகளுக்கும் வசதியான நிதியியல் வசதிகளை வழங்குவதன் மூலமாக பணிகளை வழங்கியது. இலக்கிடப்பட்ட பிரிவிலுள்ள ஏனைய தனிப்பட்டவர்களிடையே இந்நன்மை பெறுநர்களும் ஆண்டுமுழுவதும் பிரதேச அலுவலக அபிவிருத்தித் திணைக்களம் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் அறிவுத் திறன் மற்றும் தேர்ச்சி விருத்தி நிகழ்ச்சித் தொடர்களிலிருந்தும் நன்மை அடைந்தனர். முறையான நிதியியல் துறைக்கு அணுகுவழியினை கொண்டிராதவர்கள் மீது விசேட கவனம் செலுத்தி குறைந்தசெலவில் மக்கள் அனைவருக்கும் நிதியியல் வசதிகள் கிடைக்கும் அளவினை அதிகரிப்பதற்கு நாடளாவிய அனைத்தையுமுள்ளடக்கிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடாத்தியது. இம்முயற்சியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது அச்சு, இலத்திரனியல் மற்றும் ஒளிபரப்பு ஊடகங்களை காத்திரமாகப் பயன்படுத்தியமையை அதிகளவில் உணரக்கூடியதாகவிருந்தது.

பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட வறிய வகுப்பினருக்கு பணியாற்றுவதற்காக பல கடன்திட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் தேசிய நிதியியல் உள்ளீட்டு உபாயமொன்றினை ஆரம்பித்தல் என்பனவற்றை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தொடங்கியமையினால் கொள்கை நோக்கில் 2017ஆம் ஆண்டானது பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சவாலான ஆண்டாக விளங்கியது. இவ்வாண்டின் போது அதிக முக்கியத்துவம் வாய்ந்த பல பிரதான செயற்றிட்டங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அதன் முழுமையான மனிதவள இயலளவினைப் பயன்படுத்தி திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியது. ஏனையவற்றிற்கு மத்தியில் பகுதியளவு கொடுகடன் உத்தரவாதத்திட்டத்தினை நிறுவுதல், வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியளிக்கப்பட்ட சிறுவுடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டங்களை நிறுவுதல், "சுவசக்தி - பத்து இலட்சம் தொழில்வாய்ப்புகளைக் நோக்கி" என்ற கடன்திட்டத்தினை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல் மற்றும் தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் "அத்வெல", மற்றும் "அனர்த்தத்திற்குப் பின்னர் பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான கடன்திட்டம்" என்ற அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீளஆரம்பிப்பதற்கு சலுகை நிதி வழங்குவதற்கான கடன்திட்டங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல் என்பனவற்றை இவ்வழிமுறைகள் உள்ளடக்குகின்றன. மேலும், பல்வேறு கடன்திட்டங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை தேவையின் அடிப்படையில் திருத்துவதற்கும் வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

மேலும், நிதியியல் உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்கு நிதியியல் முறைமையின் அனைத்து ஆர்வலர்களும் ஒரே நோக்கில் தொழிற்படுவதன் முக்கியத்துவத்தினை இனங்கண்டு பன்னாட்டு தோற்றப்பாடு மற்றும் அனுபவத்தினை கூட்டிணைத்து நாட்டில் முதலாவது தேசிய நிதியியல் உள்ளீட்டு உபாயத்தினை உருவாக்குவதில் உலக வங்கிக் குழுவின் பன்னாட்டு நிதியியல் ஒத்துழைப்பின் தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

### 22.1 சலுகைரீதியான நிதியியல் வசதிகளை வழங்குதல்

நிதியியல் ரீதியாக பாரிய செயல் விளைவுகளைக் கொண்ட சென்றடையும் தன்மையினை அதிகரிக்கும் நோக்குடன் 2017இன் போது பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது 15 மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் மற்றும் வட்டி உதவுதொகை திட்டங்களூடாக கடன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் விரிவுபடுத்தியது. இத்திட்டங்களில் "சுவசக்தி", "அத்வெல" மற்றும் "அனர்த்தத்திற்குப் பிந்திய பொருளாதார நடவடிக்கை மீட்புக் கடன் திட்டம்" என்ற பெயர்களிலான மூன்று கடன்திட்டங்கள் அரசாங்க தொழில் உருவாக்கம் மற்றும் அனர்த்தத்திற்குப் பிந்திய மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் 2017இன் போது அறிமுகப்படுத்தப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டங்கள் பற்றிய தகவல்கள் அட்டவணை II - 23இல் தரப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது இலங்கையில் வேளாண்மைத் துறையில் வேளாண்மை உற்பத்தித்திறனை, வினைத்திறனை அதிகரித்தல், சந்தை அணுகுவழிகளை மேம்படுத்தல் மற்றும் வேளாண்மைத் துறையில் பெறுமதி கூட்டலினை அதிகரித்தல் போன்றவற்றிற்கு ஆதரவளிப்பதை வசதிப்படுத்தும் நோக்குடன் 2017இல் உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட வேளாண்மைத் துறையினை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் ஓரளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்றினை நிறுவியுள்ளது.

2017இன் போது வலுவான நிதியியல் தளமொன்றுடனும் உயர்ந்தளவிலான சுய தாக்குப்பிடிக்கும் தன்மையுடனும் சவால்களை எதிர்த்து நிற்பதற்கும் நன்மைபெறுநர்களை இயலச்செய்கின்ற பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டங்கள் என்வற்றில் பங்கேற்பு நிதியியல் நிறுவனங்களூடாக 126,742 நன்மைபெறுநர்கள் மத்தியில் ரூ.19,251.03 மில்லியன் கொண்ட கடன்தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. இப்பகிர்ந்தளிப்புகளில் 57.7 சதவீதமான பாரியளவிலான கடன்கள் வட்டி உதவுதொகைத் திட்டங்களூடாக வழங்கப்பட்ட அதேவேளை, 42.3 சதவீதமானவை மீள்நிதியிடல் கடன்திட்டங்களூடாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இத்திட்டங்களின் நிதியளித்தல் தேவைப்பாடுகள் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம், இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் என்பனவூடாக நிறைவேற்றப்பட்டன. இந்நிதியிடல் மூலங்கள் முறையே 47.0 சதவீதம், 23.9 சதவீதம் மற்றும் 23.8 சதவீதம் என பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் கடன் பகிர்ந்தளிப்புகளுக்கு பங்களிப்புச் செய்தது. கடன் பகிர்ந்தளித்தலில் துறைசார் உள்ளமைப்பினைக் கருத்திற்கொள்ளும்

போது வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புக்காக கடன்களின் 73.0 சதவீதம் வழங்கப்பட்டிருந்ததுடன் கைத்தொழில்துறைக்கும் பணிகள் துறைக்கும் முறையே 19.4 சதவீதம் மற்றும் 7.6 சதவீதம் ஒப்படைக்கப்பட்டன.

2017இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன்திட்டங்களின் நிலை கீழே தரப்பட்டுள்ளது.

**22.2 இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**

2017இல் மொத்த கடன் பகிர்ந்தளித்தலுக்கு ரூ. 12,420.5 மில்லியன் அல்லது 23.8 சதவீத பங்களிப்புச் செய்வதன் மூலம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் கடன்கள் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டங்களுக்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் நிதியளித்தது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது 6 மீள்நிதியிடல் கடன்திட்டங்கள் மற்றும் 2 வட்டி உதவுதொகைத் திட்டங்கள் உள்ளடங்கலாக இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட 08 திட்டங்களை திணைக்களம் நடைமுறைப்படுத்தியது. இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டமான “சருசாற” திட்டமானது வட்டி உதவுதொகைத் திட்டமாகவும் கொடுகடன் உத்தரவாதத் திட்டமாகவும் செயற்பட்டது.

அ) இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் மத்தியில், புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டமானது 33 குறுகிய காலப் பயிர் இனங்களின் 71,397 சிறியளவிலான வேளாண்மையாளர்களுக்கான வட்டி உதவுதொகையினை வழங்குவதன் மூலம் 2017இன் போது குறிப்பிடத்தக்க செயலாற்றத்தினைக் காண்பித்தது. நிதியியல் செயலாற்றத்தைக் கருத்திற்கொள்கின்றபோது புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் ரூ. 7,845.2 மில்லியனைப் பகிர்ந்தளித்தது. இது, 2017இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மொத்தப் பகிர்ந்தளிப்புக்களின் 40.8 சதவீதத்தைக் கொண்டிருந்தது. மேலும், தனியே புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம், இலங்கை அரசாங்கத்தின் நிதியளிக்கப்பட்ட திட்டங்களினூடாக நாட்டின் வேளாண்மைத்துறை அபிவிருத்திற்காக 63.2 சதவீதத்தினைப் பகிர்ந்தளித்துள்ளது. எவ்வாறாயினும், புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டமானது நாட்டின் பிரதான பயிர்ச்செய்கை பிரதேசங்களில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதன் கடன் பகிர்ந்தளிப்புக்களில் 2.0 சதவீத சிறிய வீழ்ச்சியொன்றினைக் காட்டியது.

ஆ) புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கடன் பகிர்ந்தளிப்புகளின் புவியியல் ரீதியிலான பரம்பலானது, 2017இல் உயர்வான பகிர்ந்தளிப்புகளைப் பெற்றுக்கொண்ட மாவட்டமாக அம்பாறை மாவட்டத்தைக் குறித்துக்காட்டுகின்றது. இது கடந்த காலங்களில் நிலவிய தொடர்ச்சியான போக்கினைத் தகர்த்து இத்திட்டத்தின் கீழான மொத்த பகிர்ந்தளிப்புகளின் 12.6 சதவீதத்திற்கு (ரூ.976.8 மில்லியன்) வகை கூறியது. கடந்த காலங்களில் அதிகூடிய பகிர்ந்தளிப்புகளைப் பெற்ற அநுராதபுரம் மாவட்டம் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் இரண்டாவது அதிகூடிய செயலாற்றல்மிக்க மாவட்டமாக 11.5 சதவீத (ரூ.902.56 மில்லியன்) பெற்றுக்கொண்டது. பதுளை மாவட்டம் இதற்கு அடுத்தபடியாக 8.7 சதவீதத்தினை (ரூ.684.9 மில்லியனை) பெற்றுக்கொண்டது.

இ) அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட இரண்டாவது அதிகூடிய திட்டமாக எடுத்துக்காட்டப்பட்டிருந்த “சுவசக்தி கடன்திட்டம்” 2017இல் 9,664 நன்மைபெறுநர்களுக்காக 2,146.8 மில்லியனுக்கான மீள்நிதியிடல் தொகையினைப் பகிர்தளிப்புச் செய்தது. விசேடமாக இளைஞர்கள், இளம்பட்டதாரிகள், மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்றோரின் நிதியியல், தொழில்நுட்ப, சந்தைப்படுத்தல் மற்றும் தொழில்முயற்சி தேவைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தின் தலைமையிலான ஆதரவளித்தல் பொறிமுறையொன்று இருக்கவேண்டியதன் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கூட்டிணைப்புடன் “சுவசக்தி கடன்திட்டம்” 2017இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது அடுத்துவரும் 5 ஆண்டு காலத்தின் போது பத்து இலட்சம் புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் அரசாங்கத்தின் பரந்தகொள்கை நோக்கின் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்துகின்றது.

ஈ) இப்புதிய கடன்திட்டமானது கிராமங்களிலுள்ள தொழில் முயற்சியாளர்களாக வரக்கூடியவர்களின் திறன்களையும் திறமைகளையும் அத்துடன் வளங்களையும் இனங்காண்பதையும் சுயவலுவூட்டப்பட்ட நுண்பாகத் தொழில்முயற்சியாளராக தோற்றம் பெறுவதற்கு சந்தைப்படுத்தல் ஆதரவுடன் கூடிய அவசியமான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அவர்களுக்கு வழங்குவதனையும் நோக்காகக் கொண்டுள்ளது. “சுவசக்தி” கடன்திட்டமானது கொடுகடனுடன் சேர்ந்த திட்டமொன்றாவதுடன் நாடுபூராகவும் தொழிற்படுத்தப்படுகின்றது. ஆரம்பச் செலவுகளைச் சமாளிப்பதற்கான கடன்கூறுக்கு மேலதிகமாக புதிய தொழில்முயற்சியாளர்களுக்கு விசேட உதவுதொகை கூறொன்றினை வழங்குவது இத்திட்டத்தின் தனித்துவமான அம்சமாகும். அதிகூடிய உதவுதொகை ரூ.50,000 என்பதுடன் ஒவ்வொரு தொழில்முயற்சியாளருக்கும் பங்கேற்பு நிதியியல் நிறுவனங்களினூடாக ஆண்டுக்கு 5.5 சதவீத வட்டிவீதத்தில் ரூ.250,000 கொண்ட அதிகூடிய கடனொன்று வழங்கப்படுகின்றது. மீள்நிதியிடல் முதன்மைத் தொகையின் மீள்அறவீடுகள் 20 வருட சுழலும் அடிப்படையில் வழங்கப்படும்.

உ) அனர்த்தத்திற்குப் பிந்திய பொருளாதார நடவடிக்கை மீட்பு முயற்சிகளில் அரசாங்கத்தின் தலையீட்டின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு “அத்வெல” என்ற கடன்திட்டம் 2017 ஓகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கடன் திட்டத்தின் குறிக்கோள், இலங்கை அரசாங்கத்தினால் இனங்காணப்பட்ட ஏதேனும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கையினை மீளஆரம்பிப்பதற்கு ஆண்டுக்கு 2 சதவீதத்தில் சலுகை நிதியியல் வசதிகளை வழங்குவதாகும். முதலாவது படிமுறையாக, 2017 மேயில் நிலவிய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீளஆரம்பிப்பதற்காக நிதியியல் வசதிகளை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் ரூ.2,000 மில்லியனை ஒதுக்கீடு செய்தது. 2017 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு கிட்டத்தட்ட 4 மாத தொழிற்பாட்டுக்குப் பின்னர் பிரதேச அபிவிருத்தித திணைக்களம், ரூ.1,815.1 மில்லியன் தொகை கொண்ட 4,570 கடன்களைப் பதிவுசெய்தது. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பதிவுகளின்படி ரூ.887.8 மில்லியன் மொத்த தொகையுடைய கடன்கள் பங்கேற்பு நிதியியல் நிறுவனங்களின் மூலம் 2,094 நன்மைபெறுநர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. 2017 இறுதியிலுள்ளவாறு பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட 227 கடன்களுக்காக அவர்களின் வேண்டுதலின் பேரில் ரூ.100 மில்லியன் கொண்ட மொத்த மீள்நிதியிடலினை பங்கேற்கும் நிதி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்தது.

ஊ) மேலும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது ஏனைய நான்கு மீள்நிதியிடல் கடன்திட்டங்களை அதாவது, வறுமை ஒழிப்பு நுண்பாகநிதி செயற்றிட்டம் - சுழலும் நிதியம், வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்றிட்டம் II - சுழலும் நிதியம், சுயதொழில் ஊக்குவித்தல் முன்முயற்சி கடன்திட்டம் - கட்டம் II மற்றும் வட்டி உதவுதொகை திட்டமொன்றின் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் - தேயிலை தொழிற்சாலைகளுக்கான சுழலும் நிதியம் மற்றும் பணியாற்று மூலதனக் கடன்திட்டம் என்பவற்றை

நடைமுறைப்படுத்தியது. வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்றிட்டம் - சுழலும் நிதியம் மற்றும் வறுமை ஒழிப்பு நுண்நிதி செயற்றிட்டம் II - சுழலும் நிதியம், மீள்நிதியிடல் திட்டங்கள் கூட்டாக ரூ.1,582.24 மில்லியன் தொகையுடைய இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட பகிர்ந்தளிப்புக்களின் 12.7 சதவீதத்தினை பகிர்ந்தளித்தன. 2017ஆம் ஆண்டின் போது பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த இலங்கை அரசாங்க நிதியங்களில் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் - தேயிலை தொழிற்சாலைகளுக்கான சுழலும் நிதியம் மற்றும் பணியாற்று மூலதன கடன்திட்டம் 4.8 சதவீதம் கொண்ட ரூ.596.5 மில்லியனை பகிர்ந்தளித்த அதேவேளை "அத்வெல" மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு முன்முயற்சி கடன்திட்டம் - கட்டம் II ஆகிய கடன்திட்டங்கள் 2.0 சதவீதம் கொண்ட ரூ.249.68 மில்லியனை பகிர்ந்தளித்தன.

எ) இத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியங்களில் பெரும்பாலானவை வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு துறைகளுக்காக வழங்கப்பட்டன. இலங்கை அரசாங்க நிதியளித்தலின் 80.6 சதவீதத்தினைக் கொண்ட மொத்தமாக ரூ.9,997 மில்லியன் வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறைகளிலுள்ள நன்மைபெறுநர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட இத்திட்டங்களினூடாக நிதியளித்தலின் 14.8 சதவீதம் கைத்தொழில் துறைக்கு (ரூ.1,838.0 மில்லியன்) ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன். இதனைத் தொடர்ந்து பணித்துறைக்காக செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புகள் 4.6 சதவீதமாக இருந்தது (ரூ. 565.8 மில்லியன்).

ஏ) கொள்கை பக்கத்தில், தமக்கு உரித்தான சுயதொழில் செயற்றிட்டங்களை நிறுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட தொழில்பயிற்சி நிறுவனங்களினால் பயிற்றப்பட்ட இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படும் சுயதொழில் ஊக்குவித்தல் முன்முயற்சி கடன்திட்டம் - கட்டம் II இன் தொழிற்பாடு, நீண்டகாலமொன்றிற்கு அதன் நன்மைகளை அனுபவிப்பதற்கு பயிற்றப்பட்ட இளைஞர்களை இயலச்செய்யும் விதத்தில் 2019.12.31 வரை நீடிக்கப்பட்டது. கடன்திட்ட பாரிய செயல்விளைவினைக் கொண்ட சென்றடைவினை விரிவுபடுத்தி தேசிய தொழிற்தகைமை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தொழில்முயற்சி திறன் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் ஆகிய இரண்டினையும் உள்ளடக்குவதற்கு சுயதொழில் ஊக்குவித்தல் முன்முயற்சி கடன்திட்டம் - கட்டம் II கீழ் துணை கடன்பெறுநர்களின் தகைமையில் திருத்தம் செய்யப்பட்டது. மேலும், இளம்தொழில்முயற்சியாளர்கள் மீது சாதகமான தாக்கத்தினை கொண்டிருக்கக்கூடியவிதத்தினைக் கருத்திற்கொண்டு சுயதொழில் ஊக்குவித்தல் முன்முயற்சி கடன்திட்டம் - கட்டம் II இன் அதிகூடிய கடன் மீள்கொடுப்பனவு காலம் 4 வருடங்களிலிருந்தது 5 வருடங்களாக அதிகரிக்கப்பட்டது.

### 22.3 இலங்கை மத்திய வங்கியினால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

2017இல் சமச்சீரான மற்றும் உள்ளடக்குகின்ற பொருளாதார வளர்ச்சிக்காக பிராந்திய அபிவிருத்தியின் உபாய முக்கியத்துவத்தின் நோக்கில் இலங்கை மத்திய வங்கியானது மீள்நிதியிடல் மற்றும் கடன் உதவுதொகைத் திட்டம் என்ற முறையே சௌபாக்கியா கடன் திட்டம் மற்றும் வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்தி கடன்திட்டம் ஆகிய பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் இரண்டு பிரதான கடன்திட்டங்களுக்கு தொடர்ந்தும் நிதியளித்தது.

அ) பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முதன்மை மீள்நிதியிடல் கடன்திட்டமான சௌபாக்கியா கடன்திட்டம் ரூ.3,984.58 மில்லியனை பகிர்ந்தளித்தது. இது 2017இல் இலங்கை மத்திய வங்கியினால் நிதியளிக்கப்பட்ட மீள்நிதியிடல் திட்டங்களின் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியங்களின் 43.5 சதவீதத்தினை கொண்டதாகும். இவ்வாண்டின் போது சௌபாக்கியா கடன்திட்டமானது நாடுமுழுவதும் 7,363 நன்மைபெறுநர்களுக்கு பணியளிக்கக்கூடியதாக இருந்ததது.

ஆ) 2016இல் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ.4,767.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டின் போது சௌபாக்கியா கடன்திட்டம் 16.4 சதவீத குறைவொன்றினை அனுபவித்தது. இக்குறைவிற்கு சாட்டத்தக்க பிரதான காரணமாக 2017இற்கான கடன்திட்டத்தில் நிதிகிடைக்கக்கூடிய தன்மை அமைந்திருந்தது. எனினும், மீள்நிதியிடல் பகிர்ந்தளிப்புக்களுக்காக கிடைக்கத்தக்க ரூ. 4,000 மில்லியனில் இருந்து ரூ.3,984.6 மில்லியன் 2017இன் போது பகிர்ந்தளிக்கப்பட்டன. சௌபாக்கியா கடன்திட்டத்தின் 8 சதவீத வட்டியுடன் ஒப்பிடுகையில் குறைந்த வட்டிவீதமொன்றில் (ஆண்டுக்கு 5.5 சதவீதம்) 2017இன் ஆரம்பப் பகுதியின் தொழில் உருவாக்கத்தினை ஊக்குவிப்பதற்காக "சுவசக்தி" கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தலானது சௌபாக்கியா கடன்திட்டத்தின் நன்மைபெறுநர்களுக்கும் மாற்றுநிதியிடல் மூலமொன்றாக பணியாற்றியது.

இ) புவியியல் ரீதியான பரம்பலைக் கருத்திற்கொள்கின்ற போது, முன்னைய ஆண்டுகளின் போக்கின் தொடர்ச்சியாக குருநாகல் மாவட்டத்திலுள்ள நன்மைபெறுநர்கள் 2017இல் இத்திட்டத்தின் கீழ் அதிகூடிய பகிர்ந்தளிப்புகளை (13 சதவீதம்) பெற்றுக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து முறையே களுத்துறை மாவட்டமும் (10.7 சதவீதம்) கம்பஹா மாவட்டமும் (9.5 சதவீதம்) பெற்றுக்கொண்டன.

ஈ) பகிர்ந்தளிப்புகளில் ரூ.1,873.3 (47.0 சதவீதம்) உள்ளடக்குகின்ற சௌபாக்கியா கடன் திட்டத்தில் பெரும்பான்மையான பகிர்ந்தளிப்புகள் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்டிருந்த அதேவேளை ரூ.1,205.1 (30.2 சதவீதம்) வேளாண்மை மற்றும் விலங்கு வேளாண்மை துறைகளின் நன்மைபெறுநர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன. எஞ்சிய ரூ.906.2 மில்லியன் (22.7 சதவீதம்) ஏனைய துறைகளுக்கு வழங்கப்பட்டது.

உ) இலங்கை மத்திய வங்கியினால் நிதியளிக்கப்பட்ட வட்டி உதவுதொகை திட்டமான வர்த்தக அளவிலான பாற்பண்னை அபிவிருத்தி கடன்திட்டமானது பாற்பண்ணை தொழில்முயற்சியாளர்களுக்கான நிதியியல் வசதிகளை வழங்கும் நோக்குடன் 2017இன் போது தொழிற்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பாலில் தன்னிறைவினை எய்துகின்ற தேசியக் குறிக்கோளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு பாற்பண்ணையுடன் தொடர்புபட்ட அனைத்து நடவடிக்கைகளினதும் அம்சங்களையும் உள்ளடக்குகின்ற பாற்பண்ணையாளர்களுக்கு வட்டி உதவுதொகை வழங்கப்படுகின்றது.

ஊ) 2017இன் போது, நாட்டின் பாற்பண்ணையாளர்கள் மத்தியில் ரூ.1,648.5 மில்லியனை வர்த்தக அளவிலான பாற்பண்னை அபிவிருத்தி கடன்திட்டம் பகிர்ந்தளித்தது. பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் மற்றும் வட்டி உதவுதொகை திட்டங்களின் ஒட்டுமொத்த செயலாற்றத்தினை ஒப்பிடுகின்ற போது வர்த்தக அளவிலான பாற்பண்னை அபிவிருத்தி கடன்திட்டமானது மொத்த பகிர்ந்தளித்தலுக்கு 8.6 சதவீதம் பகிர்ந்தளிப்புச் செய்து நான்காவது இடத்தினை தனதாக்கக்கூடியதாகயிருந்தது.

எ) கூட்டுச் செயலாற்றத்தினை கருத்திற்கொள்கையில், இத்திட்டங்களின் நிதியிடலுக்காக இலங்கை மத்திய வங்கியினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியங்களின் பெரும்பாலானவை வேளாண்மை மற்றும் விலங்கு வேளாண்மைத்துறைக்கு வழங்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் நிதியளித்தலில் 50.7 சதவீததத்தினில் உள்ளடக்குகின்ற மொத்தமாக ரூ.2,853.61 மில்லியன் தொகை வேளாண்மை மற்றும் விலங்கு அபிவிருத்தி துறையிலுள்ள நன்மைபெறுவோருக்கு வழங்கப்பட்டது. நிதியளித்தலில் 33.3 சதவீதமானவை கைத்தொழில்துறைக்கு

வழங்கப்பட்டிருந்ததுடன் (ரூ.1,873.26 மில்லியன்) பணிகள் துறைக்கு மேற்கொள்ளப்பட்ட பகிர்ந்தளிப்புகளின் 14.1 சதவீதம் (ரூ.9,006.22 மில்லியன்) இதற்கு அடுத்தபடியாகயிருந்தது.

ஏ) கொள்கை நோக்கில், 2017 பெப்புருவரியில் இருந்து செயற்படும்விதத்தில் வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்தி கடன்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் அதிகூடிய மீள்கொடுப்பனவுக்காலம், பாற்பண்ணை செயற்றிட்டத்தின் தன்மையினை சார்ந்து ஒருவருட கால அதிகூடிய சலுகைகாலம் உள்ளடங்களாக 5 ஆண்டுகளிலிருந்து 6 வருடங்களாக நீடிக்கப்பட்டது. நீண்ட கருக்காலம் மற்றும் ஒப்பீட்டளவில் சிறியளவிலான பாற்பண்ணையாளர்கள் வர்த்தக ரீதியான மட்ட அளவிலிருந்து மாற்றம்பெறுவதற்கு எடுக்கின்ற நீண்ட காலப்பகுதி என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஆர்வலர்களால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து இக்கொள்கை வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

**22.4 கொடையாளி நிதியளிக்கப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதேச அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய கொடையாளி முகவராண்மையான வேளாண்மை அபிவிருத்திற்கான பன்னாட்டு நிதியத்தின் பங்களிப்பு 2017இன் போது குறிப்பிடத்தக்கதாகயிருந்தது. வேளாண்மை அபிவிருத்திற்கான பன்னாட்டு நிதியமானது 2017இல் தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் 4 மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் உள்ளடங்கலாக 6 மீள்நிதியிடல் கடன்திட்டங்களுக்கு ரூ.1,197.49 மில்லியன் பங்களிப்புச் செய்தது. மிக முக்கியமாக இலங்கை அரசாங்கத்தின் வேண்டுதலின் பேரில் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியமானது 2017இல் ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களுக்கு தமது அனர்த்தத்திற்கு பிந்திய பொருளாதார நடவடிக்கை மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் அனர்த்தத்திற்கு பிந்திய பொருளாதார நடவடிக்கை மீட்பு கடன்திட்டத்திற்கு நிதியளித்தது. 2017இன் போது, வேளாண்மை அபிவிருத்திற்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியளிக்கப்பட்ட கடன்கள் தொடர்பில் அவற்றின் சீரான தொழிற்பாட்டினை இயலச் செய்கின்ற பல எண்ணிக்கையிலான கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டம் 2017 திசெம்பரில் நிறைவு செய்யப்பட்டது.

அ) 2017இல் தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் அதாவது, நுண்நிதி, தருணதிரிய, வெளிப்பயிர்ச் செய்கை வேளாண்மையாளர்கள் (மூலதன மற்றும் பருவகாலக் கடன்திட்டங்கள்) மற்றும் அனர்த்தத்திற்கு பிந்திய பொருளாதார நடவடிக்கை மீட்பு கடன்திட்டம் என்பன வேளாண்மை அபிவிருத்திற்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியளிக்கப்பட்ட கடன்திட்டங்களின் கீழ் 86.9 சதவீதத்தின் உள்ளடக்குகின்ற ரூ.1,040.5 மில்லியன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அனர்த்தத்திற்கு பிந்திய பொருளாதார நடவடிக்கை மீட்பு கடன்திட்டம் தவிர்ந்த ஏனைய அனைத்து திட்டங்களும் வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறையிலுள்ள நன்மைபெறுநர்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டது.

ஆ) தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கடன்திட்டங்கள் மத்தியில் இரண்டு துணை கடன்திட்டங்களான அதாவது வெளிப்பயிர்ச்செய்கை வேளாண்மையாளர் மூலதன மற்றும் வெளிப்பயிர்ச்செய்கை வேளாண்மையாளர் பருவகாலக் கடன்திட்டங்களை உள்ளடக்கியிருந்த வெளிப்பயிர் வேளாண்மையாளர் - பெறுமதிச் சங்கிலி அபிவிருத்திக் கடன்திட்டம் மாத்திரம் அதன் நன்மை பெறுநர்கள் மத்தியில் ரூ.4,37.70 மில்லியனைப் பகிர்ந்தளித்தது. இத்தொகை, 2017இன் போது தேசிய வேளாண்மை அபிவிருத்திச் செயற்றிட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பகிர்ந்தளிப்புகளின் 42.1 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எனினும், தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் நுண்நிதி கடன்திட்டத்தின் தனிப்பட்ட ரீதியான செயலாற்றம் 2017இல் ரூ.334.10 மில்லியனை பகிர்ந்தளித்தது. இது இவ்வாண்டு முழுவதும் பகிர்ந்தளிக்கப்பட்ட வேளாண்மை அபிவிருத்திற்கான பன்னாட்டு நிதியத்தின் நிதியங்களின் 32.1 சதவீதமாகும்.

இ) வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் கோரிக்கையின் பேரில் 2017இன் போது தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புபட்ட பல எண்ணிக்கையான கொள்கை வழிமுறைகள் எடுக்கப்பட்டன. தொழில் உருவாக்கத்தினையும் தொழில்முயற்சி அபிவிருத்தியினையும் விரைவுபடுத்தும் பொருட்டு "தருண திரிய" கடன் திட்டத்தின் கடனளவு ரூ.150,000 இருந்து ரூ.1 மில்லியனாக அதிகரிக்கப்பட்ட அதேவேளை கடன் மீளச்செலுத்தும் காலம் 36 மாதங்களிலிருந்து 48 மாதங்களாக அதிகரிக்கப்பட்டது. மேலும், தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் தொழிற்படும் காலம், 2017.12.31 வரை நீடிக்கப்பட்டது.

ஈ) 2017இல் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கு புறம்பாக, மொனராகலை, குருநாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் உள்ள வறிய குடும்பங்கள் மத்தியில் வறுமையினை ஒழித்தல் மற்றும் வருமானம் உழைத்தல் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்ட வரண்ட வலய வாழ்வாதார ஆதரவு மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்ட சுழல் நிதியம் நிறைவுசெய்யப்பட்டது.

உ) பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கி இரண்டினாலும் நிதியளிக்கப்பட்ட திட்டங்களைப் போன்று கொடையாளி நிதியளித்த திட்டங்களூடாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்களில் பெரும்பாலானவை வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறைக்கு வழங்கப்பட்டது. இது 98.8 சதவீதமாக ரூ.1,183.52 மில்லியனாக இருந்த அதேவேளை ரூ.13.97 மில்லியன் பெறுமதியுடைய பகிர்தளித்தலின் எஞ்சிய 1.2 வீதம் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்டது.

ஊ) தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்குப் பதிலாக 2018இன் ஆரம்பத்தில் சிறுவுடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமை என்ற புதிய நிகழ்ச்சித்திட்ட மொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சிறுவுடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை என்ற புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் வர்த்தக நோக்காகக் கொண்ட உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையில் ஈடுபட்டுள்ள 57,500 சிறுவுடமையாளர்களின் வருமானத்தினையும் உணவுத்திட்ட தரத்தினையும் நிலைத்துநிற்கக்கூடியவாறு அதிகரிப்பதாகும். சிறுவுடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமை என்ற புதிய நிகழ்ச்சித்திட்டமானது அதன் நன்மைபெறுநர்களுக்கு கொடுகடன் மற்றும் ஏனைய கொடுகடனுடன் சேர்ந்த பணிகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கான குறைந்த செலவில் முறையான நிதியியல் பணியொன்றினை தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு வேளாண்மை அபிவிருத்திற்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியளிக்கப்படும் என்பதுடன் சிறுவுடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமை என்ற புதிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான இணைத்தரப்பு நிதியிடல் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும். சிறுவுடமையாளர் வேளாண்மை வியாபார பங்குடமை என்ற புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுகடன் கூறுக்கான நடைமுறைப்படுத்தல் முகவராண்மையாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக இலங்கை மத்திய வங்கி செயற்படும். இது நாட்டின் வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறையின் நிதியியல் தேவைகளை நிறைவுசெய்வதற்கு 6 மீள்நிதியிடல் கடன் திட்டங்களை உள்ளடக்கியிருக்கும்.

### 22.5 பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் முன்முயற்சிகள்

**(அ) வேளாண்மை துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டமும் ஓரளவு கொடுகடன் உத்தரவாதத்திட்டமும்**

அதிகரிக்கப்பட்ட வேளாண்மை உற்பத்தித்திறன், வினைத்திறன் மற்றும் சந்தை அணுகுவழிகளை மேம்படுத்தல் அத்துடன் அனைத்து ஆர்வலர்களின் மூலமான பெறுமதிகூட்டலினை அதிகரித்தல் என்பவற்றுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் வேளாண்மைத்துறை நவீனமயப்படுத்தல் திட்டமானது தனியொரு தளத்தினுள் பல்வேறு நிறுவனசார் ஆர்வலர்களைக் கூட்டிணைத்து பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் நிதியளித்தலுடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வேளாண்மை துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் அபிவிருத்தி நோக்கமானது செயற்றிட்ட பிரதேசத்திலுள்ள முறையான வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுக்கள், சிறுவுடமை உற்பத்தியாளர்கள் அமைப்புகள், கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் விவசாய வியாபார சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் போன்றவற்றின் வேளாண்மை உற்பத்தித் திறன், வினைத்திறன், சந்தை அணுகுவழிகளை அதிகரித்தல் மற்றும் பெறுமதி கூட்டலை மேம்படுத்தல் என்பவற்றுக்கு ஆதரவளிப்பதாகும். வேளாண்மை துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டமானது மூன்று கூறுகளை அதாவது, வேளாண்மை பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி, உற்பத்தித் திறன் அதிகரித்தல் மற்றும் பன்முகப்படுத்தல் அத்துடன் செயற்றிட்ட முகாமைத்துவம், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

வேளாண்மைத்துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்திற்கான ஒட்டுமொத்த கொள்கை மேற்பார்வை, வழிகாட்டல் மற்றும் செயற்றிட்ட கண்காணித்தல் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சில் நிறுவப்பட்ட மத்திய செயற்றிட்ட குழுவினால் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வேளாண்மை துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்திற்கான நடைமுறைப்படுத்தும் முகவராண்மைகளாக ஆரம்ப கைத்தொழில் அமைச்சு மற்றும் வேளாண்மை அமைச்சு என்பன செயற்படவுள்ள அதேவேளை வேளாண்மை துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் வேளாண்மை பெறுமதிச் சங்கிலி அபிவிருத்திக் கூறின் கீழ் பகுதியளவு கொடுகடன் உத்தவரவாதத் திட்டம் இலங்கை அரசாங்கம் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும். ஓரளவு கொடுகடன் உத்தவாதத்திட்டத்தினை தொழிற்படுத்துவதற்கு நிருவகிப்பவராக பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

துணை கடன்பெறுநர்கள் மூலமான கடன்தீர்ப்பனவு தவணை தவறுதல் இடர்நேர்வுகளுக்கு எதிராக பங்கேற்பு நிதி நிறுவனங்களை பிரதானமாக உள்ளடக்குகின்ற புதுமையான இடர்நேர்வு பகிர்வு கருவியொன்றாக செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பகுதியளவான கொடுகடன் உத்தவரவாத திட்டமானது நிதியியல் இடையேற்பாட்டாளர்களின் நடைமுறை மற்றும் மாறிவருகின்ற தேவைகளை தீர்க்கின்ற அதேவேளை வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் அபிவிருத்தி நோக்கத்திற்கு ஆதரவளிக்கும். இந்நோக்கில் பகுதியளவான கொடுகடன் உத்தரவாதத் திட்டமானது உயர் பெறுமதிமிக்க வேளாண்மை உற்பத்தி மற்றும் பெறுமதிசேர்த்தலுக்கான முறையான வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுக்கள், சிறுவுடமை உற்பத்தியாளர்கள் அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கம்பனிகள், உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் விவசாய வியாபார சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் என்பவற்றிடமிருந்தான முதலீடுகளுக்கு உந்துவிசையளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பகுதியளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டமானது தமது வேளாண்மைச் செய்கைக்கு அல்லது வியாபாரத்திற்கு நிதியளிக்கும் செயன்முறையில் பங்கேற்பு நிதி நிறுவனங்களின் பிணைய உறுதிகள் தொடர்பில் வேளாண்மையாளர்கள் மற்றும் விவசாய வியாபார தொழில்முயற்சியாளர்களினால் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகளை தீர்க்கின்ற அதேவேளை வேளாண்மைத் துறைக்கான கடன்வழங்குதல் இடர்நேர்வுக்கு எதிரான பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கு சொத்துப்பட்டியல் இடர்நேர்வுத் திரட்சி, மூலதன தேவைப்பாடுகள் போன்ற பிரதேசத்திலுள்ள இடையீட்டாளர் நிதியியல் சேவை வழங்குனர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் அதற்கமைய பகுதியளவு கொடுகடன் உத்தரவாதத் திட்டமானது நிதிக்கான அணுகுவழிகளை அதிகரித்தல், வேளாண்மைத் துறைக்கு கடன்வழங்குவதற்கு பங்கேற்பு நிதியியல் நிறுவனங்களை ஊக்குவித்தல், பங்கேற்பு நிதி நிறுவனங்களின் தவணை தவறுதல் இடர்நேர்வின் பாகத்தினை உள்ளடக்குதல் மற்றும் சொத்து கையகப்படுத்தலுக்காக நீண்டகால கடன்வழங்களினை ஊக்குவித்தல் என்பன மீது கவனம் செலுத்தும்.

**(ஆ) குறைந்த செலவில் நிதியியல் வசதிகள் கிடைக்கத்தக்கதாக இருப்பதற்கான தேசிய உபாயமொன்றினை உருவாக்குதல்.**

நாட்டில் குறைந்த செலவில் நிதியியல் வசதிகள் கிடைக்கும் தன்மையினை தூண்டுவதற்கான பன்னாட்டு வெளிப்பாடுகள் மற்றும் அனுபவத்தினை கூட்டிணைப்பதன் முக்கியத்துவத்தினை இனங்கண்டு, இலங்கை மத்திய வங்கியானது அனைத்தையும் உள்ளடக்கிய தேசிய குறைந்த செலவில் நிதியியல் வசதிகள் கிடைக்கத்தக்க உபாயமொன்றினை உருவாக்குவதற்கு உலக வங்கிக்குழு உறுப்பினரொன்றான பன்னாட்டு நிதியியல் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியினை நாடியது. அதற்கமைய, இவ்விடயம் தொடர்பில் 2018 சனவரியில் பன்னாட்டு நிதியியல் கூட்டுத்தாபனத்துடன் இலங்கை மத்திய வங்கி ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றினைக் கைச்சாத்திட்டது.

முன்மொழியப்பட்ட தேசிய குறைந்த செலவில் நிதியியல் வசதிகள் கிடைக்கத்தக்க உபாயமானது நாடு முழுவதும் நிதியியல் உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்கு மிகவும் காத்திரமான மற்றும் வினைத்திறன்மிக்க செயன்முறையொன்றினை ஊக்குவிப்பதனை இலக்காகக்கொண்டுள்ளது. பன்னாட்டு நிதியியல் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப உதவியானது நிதியியல் பணிகளுக்கான அணுகுவழிவசதிகளை விரிவுபடுத்துவதற்கு சான்று அடிப்படையாகக் கொண்ட, முன்னுரிமைப்படுத்தப்பட்ட சிறப்பாக வளம் அளிக்கப்பட்ட மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய அணுகுமுறையொன்றினை வழங்கும்.

தேசிய குறைந்த செலவில் நிதியியல் வசதிகள் கிடைக்கத்தக்க உபாயத்தினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக குறுகிய காலத்தினுள் நிதியியல் பணிகளின் பல்வகைத் தொகுதியொன்றின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கும், வாடிக்கையாளர் கல்வியினை மேம்படுத்துவதற்கும் அத்துடன் நிதியியல் பணிகளை வழங்குவதற்கான சூழலொன்றினை இயலச்செய்வதனை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலத்தில் போதியளவு, தரம்வாய்ந்த மற்றும் வசதியான நிதியியல் பணிகள் பலவற்றுக்கு வயதுவந்த ஒவ்வொருவரும் அத்துடன் தொழில்முயற்சியாளரும் அணுகுவழியினைக் கொண்டிருக்கின்ற அத்துடன் முழுமையாக பயன்படுத்தக்கூடியதாகவிருக்கின்ற குறைந்த செலவில் நிதியியல் வசதிகள் கிடைக்கத்தக்க முறைமையினை நாடு எய்தக்கூடியதாகவிருக்கும்.

## அட்டவணை II - 26
## 2017இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் / சலுகை கொடுகடன் திட்டம் பற்றிய தகவல்கள்

யுஅழரவெள ை சுள. அ

| நிதியிடல் மூலம் | பெயர் | நோக்கம் | மீள்நிதியிடல் / வட்டி உதவு தொகை | 2017இற்கான மொத்த நிதிய ஒதுக்கீடு | 2017இல் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்ட நிதியங்கள் | பகிர்ந்து அக்கப்பட வேண்டிய மீதி நிதியங்கள் | இறுதி கடன் பெறுநருக்கான வட்டி வீதம் - ஆண்டு இறுதி (ஆண்டொன்றிற்கு) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப் பட்டவை | வறுமை ஒழிப்பு நுண்நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | வருமான உருவாக்க நடவடிக்கைகளை ஊக்குவிப்பதனூடாக வறுமையையொழித்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குழுவினரை முறைசார்ந்த வட்டித் தொகை முறைமையுடன் இணைத்தல். | மீள்நிதியிடல் | 680.00 | 548.48 | மீள்அறவீடுகள் சுழல் அடிப்படையில் வழங்கப்படும். | 12% | |
| | வறுமை ஒழிப்பு நுண்நிதிச் செயற்றிட்டம் - II சுழலும் நிதியம் | | மீள்நிதியிடல் | 2,105.36 | 1,033.76 | மீள்அறவீடுகள் சுழல் அடிப்படையில் வழங்கப்படும். | கடன்பெறுநருக்கு பங்கேற்பு நிதி நிறுவனங்களிம் இருந்து 10% கடன் பெறுநருக்கு ஒபிஎ இடமிருந்து 14% | |
| | "சுவசக்தி" கடன் திட்டம் | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி துறைகளில் வருமானம் ஈட்டுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற புதிதாக நுழைகின்ற மற்றும் தற்போதுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல். | மீள்நிதியிடல் | 4,000.00 | 2,146.78 | 1,853.22 | 5.5% | |
| | அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான "அத்வெல" கடன்திட்டம் | இலங்கை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டவாறு ஏதேனும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கையினை மீள ஆரம்பிப்பதற்கு சலுகை நிதியில் வசதிகளை வழங்குதல். | மீள்நிதியிடல் | 2,000.00 | 100.00* | 1,900* | 2% | |
| | சுயதொழில் ஊக்குவிப்பு முன்முயற்சிக் கடன் திட்டம் (கட்டம் II) | அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்களினால் பயிற்றப்பட்ட இளைஞர்களுக்கு அவர்களுக்குரித்தான சுயதொழில் செயற்றிட்டங்களை நிறுவுவதற்காக நிதியுதவி வழங்குதல். | மீள்நிதியிடல் | 150.00 | 149.68 | 2018இற்காக இலங்கை அரசாங்கத்தினால் நிதியங்கள் ஒதுக்கப்படும் | 7% | |
| | தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | நீடித்து நிலைத்துநிற்கக் கூடிய அடிப்படையில் தேயிலை சிறு உடமையாளர்களின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் "எச்ஏசீசீபி" சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றுக்கு தேயிலை தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதனூடாக ஏற்றுமதிச் சந்தையின் தேவைகளை நிறைவு செய்வதற்கு அவசியமான உட்கட்டமைப்பினை விருத்தி செய்தல். | மீள்நிதியிடல் | 1,100.00 | - | நிறைவு செய்யப்பட்டது | 9% | |
| | புதிய அனைத்தைம் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் | நெல் மற்றும் குறுங்காலப் பயிர்களை பயிரிடுவதில் ஏற்பட்டுள்ள நுண்பாக மற்றும் சிறியளவிலான பண்ணையாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல். | வட்டி உதவுதொகை மற்றும் கடன் உத்தரவாதம் | கேள்வியினைச் சார்ந்தது | 7,845.22 | வி.கி.** | 7% | பங்கேற்பு நிதி நிறுவனங்களின் சொந்த நிதியங்களும் இலங்கை அரசாங்கத்தின் மூலமான வட்டி உதவு தொகைகளும் |
| | தேயிலைத் தொழிற் சாலைகளுக்கான தொழிற்படும் மூலதனக் கடன் திட்டம் | பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகள் அவற்றின் தொழிற்பாடு மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய உதவுதல். | வட்டி உதவுதொகை | நிதியங்களுக்கான கேள்வியில் தங்கியுள்ளது. | 596.53 | வி.கி.** | (எடபிள்யூபிஎல்ஆர் +1.0%-2.0%) | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சுபீட்சக் கடன் திட்டம் (சௌபாக்கியா) | நுண்பாக, சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சியினை அல்லது அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஏதேனும் நுண்பாக, சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சியினை ஆரம்பித்தல் அல்லது விரிவுபடுத்தல். | மீள்நிதியிடல் | 4,000.00 | 3,984.59 | மீள் அறவீடுகள் மீளச் சுழல விடப்படும். | 8% | |
| மத்திய வங்கியினால் நிதியிடப்பட்டது | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம் | வர்த்தக அளவிலான பாற்பண்ணைகளை ஊக்குவிப்பதனூடாக பால் மற்றும் பால் உற்பத்திகளில் தன்னிறைவடைவதற்கு ஆதரவளித்தல். | வட்டி உதவுதொகை | நிதியங்களுக்கான கேள்வியில் தங்கியுள்ளது | 1,648.50 | வி.கி.** | 6% | பங்கேற்பு நிதி நிறுவனங்களின் சொந்த நிதியங்களும் இலங்கை அரசாங்கத்தின் மூலமான வட்டி உதவுதொகைகளும் |
| கொடையாளிகளினால் நிதியிடப்பட்டவை | தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டம் - நுண்பாக நிதி | தெரிவுசெய்யப்பட்ட செயற்றிட்ட பிரதேசங்களிலுள்ள வறிய மக்களின் வருமான மட்டம் மற்றும் சமூகப் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தல். | மீள்நிதியிடல் | 334.10 | 334.10 | நிறைவுசெய்யப்பட்டது | 6.5% | வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியளிக்கப்பட்டது. |
| | தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செற்றிட்டம் - தருண திரிய | கிராமிய மட்டத்தில் வறிய இளைஞர்கள் சிறிய வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கும் ஏனைய சுயதொழில் செயற்றிட்டங்கள் வடிவில் அவர்களை தொழில் முயற்சியாளர்களாக்குவதற்கும் அவர்களுக்கு கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு உதவியளிப்பதற்கும் திட்டங்கள் அவர்களைச் சென்றடைதல். | மீள்நிதியிடல் | 268.80 | 268.80 | நிறைவுசெய்யப்பட்டது | 6.5% | |
| | தேசிய வேளாண் வியாபாரம் அபிவிருத்திச் செயற்றிட்டம் - வெளிப்பயிர்செய்கை வேளாண்மையாளர்கள் (மூலதன மற்றும் பருவகாலக் கடன் திட்டங்கள்) | விவசாய உற்பத்திகளின் உற்பத்தி, உற்பத்தித்திறன், தரம் மற்றும் பெறுமதி கூட்டலினை அதிகரித்தல். | மீள்நிதியிடல் | 437.60 | 437.60 | நிறைவுசெய்யப்பட்டது | 6.5% | |
| | தேசிய வேளாண் வியாபார அபிவிருத்திச் செயற்றிட்டம் - அனர்த்தத்திற்கு பிந்திய பொருளாதார நடவடிக்கை மீட்புக் கடன் திட்டம் | 2017இல் நாட்டில் ஏற்பட்ட அர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு சலுகை ரீதியான நிதியியல் வசதிகளை வழங்குதல். | மீள்நிதியிடல் | 134.52 | 134.52 | நிறைவுசெய்யப்பட்டது | 6.5% | |
| | வரண்ட வலைய வாழ்வாதார ஆதரவு மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் - சுழல் நிதியம் | மொனராகலை, குருநாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள வறிய வேளாண்மையாளர்கள் மத்தியில் வறுமையினை ஒழித்தல் மற்றும் வருமானமீட்டல். | மீள்நிதியிடல் | 0.46 | 0.40 | நிறைவுசெய்யப்பட்டது | 10% | |
| | சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் காணியற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | நன்மை பெறுவோர்களி ன் பொருளாதார நிலைமைகளையும் பொதுவான நலனோன்புகைகளையும் மேம்படுத்துவதற்கு கிராமிய வறியோருக்கான வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்காக முறைசார்ந்த கடனுக்கு வழிப்படுத்தல் | மீள்நிதியிடல் | 386.36 | 22.07 | மீள் அறவீடுகள் மீள சுழல் படுத்தப்படும் | 12% -14% | |

* 2017 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு ஏறக்குறைய நான்கு மாதங்கள் தொழிற்பட்டதன் பின்னர் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது "அத்வெல" கடன் திட்டத்தின் கீழ் ரூ.1,815.05 மில்லியன் தொகையுடைய 4,570 கடன்களைப் பதிவு செய்தது. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பதிவுகளின்படி ரூ.887.78 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையினைக் கொண்ட கடன்கள் பங்கேற்பு நிதியியல் நிறுவனங்கள் மூலம் 2,094 நன்மைபெறுநர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

**சுருக்கக் குறியீடுகளின் விளக்கம்

எச்ஏசீசீபீ : ஆபத்துப் பகுப்பாய்வு மற்றும் முக்கிய கட்டுப்பாட்டு நிலைகள்

வி.கி. : விபரம் கிடைக்கவில்லை.

### 22.6 திறன் அபிவிருத்தியும் இயலளவைக் கட்டியெழுப்புதலும்

குறைந்த செலவில் நிதியியல் வசதிகள் கிடைக்கத்தக்க தன்மையினை ஊக்குவிப்பதற்கு உத்தேசிக்கின்ற முதன்மை நிறுவனம் எதுவும் பொதுமக்களின் திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல் ஆகிய தவிர்க்கமுடியாத தேவையினைக் குறைத்து மதிப்பிடமுடியாது. காத்திரமான உபாயங்களை விருத்திசெய்து காத்திரமான நிதியியல் அறிவினையும் விழிப்பூட்டலினையும் பெற்றுக்கொடுக்கின்ற தலையாய முக்கியத்துவத்தினை இனங்கண்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2017இன் போது நிதியியல் அறிவு தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் திறன் விருத்தி என்பன மீது முக்கிய கவனம் செலுத்துகின்ற 150 விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.

விருத்தியடைந்த நகர்புற பிரதேசத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகவன்றி நிதியியல் ரீதியாக உள்ளடக்கப்படாமையின் காரணமாக தோற்றுவிக்கப்பட்ட பின்னடைவுகள் மீது விழிப்பூட்டலினை உருவாக்குவதனை நோக்காகக்கொள்கின்ற குறைவான நிதியியல் உள்ளடக்கத்துடன் கூடிய பிரதேசங்களைச் சென்றடைவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டது. முறைமைசார்ந்த நிதியியல் துறையினுள் நுழைதல் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்துதல் மீதான பயன்களை அடிப்படையில் எடுத்துக்காட்டுகின்ற இலக்கு சபையோரின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்நிகழ்ச்சித் திட்டங்கள் தேவைக்கேற்றவாறு வடிவமைக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்குக் குழுக்கள், சமூகத்தின் வேறுபட்ட வகுப்புக்களைச் சார்ந்த பல்வகைப்பட்ட தனிப்பட்டவர்கள் தொகுதியினைக் கொண்டிருந்தது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு சலுகைக் கடன்திட்டங்கள் பற்றி விழிப்பூட்டலினை உருவாக்குகின்ற அதேவேளை, சிறந்த வங்கித்தொழில் நடத்தைகள் நிதியியல், ஒழுக்கம் மற்றும் புதிய நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகள் பற்றி இலக்குக் குழுக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள் அட்டவணை II - 27 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை II - 27**

**2017இன் போது பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்**

| நிகழ்ச்சித் திட்டங்களின் வகைகள் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் அறிவு | 74 |
| திறன் விருத்தி | 57 |
| தொழில்முயற்சி அபிவிருத்தி | 18 |
| ஊடகப் பிரச்சாரம் | 1 |
| **மொத்தம்** | **150** |

### 23. பிரதேச அலுவலக முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கி உற்பத்தி வளங்களின் அபிவிருத்தியினை மேம்படுத்தும் பொருட்டும் பொதுமக்களுக்கு சிறந்த பணிகளை வழங்கும் பொருட்டும் நாணய விதிச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளில் ஆறு பிரதேச அலுவலகங்களினை நிறுவியுள்ளது. இதன்படி, இலங்கை மத்திய வங்கி மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை, திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் பிரதேச அலுவலகங்களினை நிறுவியுள்ளது. தற்போது, பிரதேச அலுவலகங்கள் பிரதேச மட்டங்களில் நிதியியல் நிறுவனங்களினை ஒருங்கிணைத்தல், பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், தொடர்புடைய பிரதேசங்களில் ஆற்றல்வாய்ந்த பொருளாதார நடவடிக்கைகளினை இனங்காணுதல் மற்றும் இலங்கை மத்திய வங்கி நடவடிக்கைகளினை பிரதேச மட்டங்களில் விரிவாக்கம் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது.

### 23.1 அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள்

2017ஆம் ஆண்டு காலப்பகுதியில், பிரதேச அலுவலகங்கள் பிரதேச ஏற்றத்தாழ்வுகளினைக் குறைக்கும் நோக்கில் அதிக நிலைத்திருக்கக்கூடிய மற்றும் சமச்சீரான பிரதேச அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி மற்றும் இயலளவினைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. பிரதேச அலுவலகங்கள் தொடர்புடைய பிரதேசங்களில் நிதியியல் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களினை நடாத்துவதில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளன. பிரதேச அலுவலகங்கள் முறைசார் மற்றும் தாங்கிக் கொள்ளக்கூடிய நிதியியல் பணிகள், அதிகாரமளிக்கப்படாத வைப்புகளையேற்கும் நிறுவனங்கள்/ திட்டங்கள், நிதிசார் அறிவு போன்றவற்றின் மீதான 234 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களினையும் நிதியியல் வசதிகளை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்களினையும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச அலுவலர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் போன்ற பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கிய 21,928 தனிநபர்களை இலக்காகக் கொண்டிருந்தது. மேலும், பிரதேச அலுவலகங்கள் தொடர்புடைய பிரதேசங்களின் கொடுகடன் வழங்கல் பொறிமுறையினை மேம்படுத்தி வெற்றிகரமாக 2,486 கொடுகடன் இணைப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. பல்வேறு காரணங்களினால் தவணைக் கடன்களினை மீளச்செலுத்துவதில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கும் 2,309 கடன்பாட்டாளர்களுக்கு கொடுகடன் ஆலோசனைப் பணிகளும் வழங்கப்பட்டன.

பிரதேச அலுவலகங்கள், தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, வெளிப்படுத்துகை விஜயங்கள்/ தொழில்நுட்ப மாற்றல் மற்றும் சிறந்த நடைமுறைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கி பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளன. இதன்கீழ், 2,325 பங்கேற்பாளர்கள் பயனடைந்த 30 தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், 696 பங்கேற்பாளர்கள் பயனடைந்த 18 வெளிப்படுத்துகை விஜயங்கள்/ தொழில்நுட்ப மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 3,053 பங்கேற்பாளர்கள் பயனடைந்த 62 சிறந்த நடைமுறைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் இதனூடாக நடாத்தப்பட்டன. வேளாண்மை, அலங்காரத் தாவரங்கள் மற்றும் மலர் வளர்ப்பு, காளான் வளர்ப்பு; உணவு உற்பத்தி செயன்முறை, ஆடைத்துறை; சுற்றுலாத்துறை தொடர்பான உற்பத்திகள் மற்றும் பணிகள் போன்ற ஒவ்வொரு பிரதேசங்களிலும் அடையாளங்காணப்பட்ட மற்றும் சாத்தியப்படத்தக்க பொருளாதாரத் துறைகளில் கவனம் செலுத்தப்பட்டு தொழில்நுட்ப மாற்றல்; புதிய தொழில்நுட்பம் மற்றும் சிறந்த நடைமுறை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. எவ்வாறாயினும், இவ்வகையின் கீழ் விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் பல்வேறு சூழல்நட்புறவுடைய தொழில்நுட்ப வழங்கல் திட்டங்களிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. மேலும், பல்வேறுபட்ட திறன்களை அபிவிருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் 1,765 பயனாளிகளிற்கு 36 திறன்/ முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

புதிய வியாபாரங்களை ஆரம்பித்தல், சந்தைப்படுத்தல்; கணக்கியல், வரி விதிப்பு, கணக்குப் பதிவு, வாடிக்கையாளர் பணி மற்றும் ஏனைய முறை போன்ற பல்வேறு தேவைப்பாடுகளின் மீது 65 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தி தொடர்புடைய பிரதேசங்களின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைகளைக் கட்டியெழுப்புவதற்கான பலமான ஆதரவு வழங்கப்பட்டது. மொத்தமாக 2,999 பயனாளிகள் அந்நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர். பிரதேச அலுவலகங்கள் சந்தை இணைப்புக்களை ஒழுங்குசெய்தல், வாங்குநர், விற்பனையாளர் கலந்துரையாடல்கள், பண்டிகைக்கால வர்த்தகக் கண்காட்சிகள் என்பவற்றினூடாக கடன்பாட்டாளர்களின் சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்கு உதவின. இதன்படி, பிரதேச மட்டத்தில் 14 வர்த்தகக் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் மொத்தமாக 903 முயற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

மாத்தளை பிரதேச அலுவலகம் “மத்திய வங்கி உங்களை நாடி

வருகிறது" எனும் பெயரில் ஓர் முழுநாள் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தி மத்திய வங்கியின் பணிகளான ஊழியர் சேம நிதியம், சேதமடைந்த நாணயத் தாள் பரிமாற்றம், நாணய அரும்பொருட்காட்சிகூடம், மத்திய வங்கி வெளியீடுகள் மற்றும் ஞாபகார்த்த நாணயக் குத்திகள் என்பனவற்றின் விற்பனை மற்றும் பல்வேறு சலுகைக் கடன் திட்டங்கள் தொடர்பான தகவல்கள் என்பனவற்றை வழங்கியது. கடன் சுமை தொடர்பில் கிராமிய சமூகங்களினால் எதிர்கொள்ளப்படுகின்ற பிரச்சினைகளை மீளாய்வு செய்வதற்கும் விளங்கிக் கொள்வதற்குமாக கிளிநொச்சி பிரதேச அலுவலகம் ஆளுநர் செயலகத்துடன் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்கு ஆளுநரின் சிறப்பு வருகையை ஒழுங்கு செய்ததுடன் அதில் கடன் சுமை தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான தந்திரோபாயங்கள் கலந்துரையாடப்பட்டன. பிரதேச அலுவலக முகாமைத்துவத் திணைக்களம், அநுராதபுர பிரதேச அலுவலகம் மற்றும் திருகோணமலை பிரதேச அலுவலகம் என்பனவும் 2017 நவெம்பரில் வடமத்திய மாகாணத்தில் நடாத்தப்பட்ட வீட்டுத்துறை கடன் சுமை மதிப்பீட்டில் பங்குபற்றின. பிரதேச அலுவலகங்களின் மேற்பார்வை செய்தல் மற்றும் முகாமைத்துவ தொழிற்பாடுகளுக்கப்பால் பிரதேச அலுவலக முகாமைத்துவ திணைக்களமானது பிரதேச அலுவலகங்களினால் உள்ளடக்கப்படாத கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய பிரதேசங்களில் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன. இதன்படி, ஆண்டின் பிற்பகுதியியல் களுத்துறை மாவட்ட செயலாளருடன் விசேட கூட்டமொன்று நடாத்தப்பட்டு பிரதேசத்தின் பயிற்சி குறித்த தேவைப்பாடுகளை விளங்கிக் கொள்வதற்காக தொடர்பொன்று ஏற்படுத்தப்பட்டது.

### 23.2 மத்திய வங்கியை பிரதேச மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தல்

06 பிரதேச அலுவலகங்களானது பிராந்தியங்களில் இலங்கை மத்திய வங்கி திணைக்களங்களின் பல்வேறு வகையான நிகழ்வுகளை நடாத்த உதவியதன் மூலம் மத்திய வங்கியை பிரதேச மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தின. தூய நாணயத் தாள் தொடர்பான நாடாளாவிய விழிப்புணர்வு, போலித் தாள்களை அடையாளங்காணுதல், அனுமதியளிக்கப்படாத நிதி நிறுவனங்கள், தடைசெய்யப்பட்ட திட்டங்கள், அரச பிணையங்கள் சந்தை, வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடுகள் மற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கல்வி நிகழ்வுகள் போன்ற பல நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச அலுவலகங்களால் இவ்வாண்டில் நடாத்தப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில் 3,386 பங்குபற்றுநர்களுக்கான தூய நாணயத் தாள் கொள்கை மற்றும் போலி நாணயத் தாள்களை அடையாளங்காணுதல் தொடர்பான 44 விழிப்புணர்வு நிகழ்வுகள், 2,276 பங்குபற்றுநர்களுக்கான அனுமதியளிக்கப்படாத நிதி நிறுவனங்கள் மற்றும் பிரமிட் திட்டங்கள் தொடர்பான 18 விழிப்புணர்வு நிகழ்வுகள், 5,480 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான 32 கல்வியறிவு நிகழ்வுகள், 1,313 பங்குபற்றுநர்களுக்கான பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் பொதுப்படுடன் தொடர்பான 11 விழிப்புணர்வு நிகழ்வுகள், 413 பங்குபற்றுநர்களுக்கான 04 வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 1,878 பங்குபற்றுனர்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் கடன் திட்டங்களுக்கான சட்டதிட்டங்கள் தொடர்பான 24 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகள் நிலையமானது பிரதேசமட்டத்தில் காணப்படும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கிளைகளைச் சேர்ந்த 1,209 ஊழியர்களுக்கு 15 பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கு பிரதேச அலுவலகங்கள் பங்காற்றின. நாடளாவிய ரீதியில் 79,476 ஊழியர் சேம நிதிய ஊழியர்களுக்கான பல்வேறு பணிகளை வழங்குவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

## 24. இடர்நேர்வு முகாமைத்துவம்

மத்திய வங்கி அதனது பன்முகத் தன்மை கொண்ட செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு உள்ளக மற்றும் வெளியகத் தரப்பினருடன் தொடர்புகளைப் பேணும் காரணத்தால் பல்வேறு எண்ணிக்கையான இடர்நேர்வுகளை எதிர்கொள்ள நேரிடுவதனால் அனைத்து மட்டங்களிலான முடிவுகளை மேற்கொள்வது தொடர்பிலும் இடர்நேர்வு முக்கியத்துவமுடையதொன்றாக உருவெடுத்துள்ளது. அதனால் வங்கியினுடைய இடர்நேர்வினை முகாமைத்துவம் செய்வதில் மூன்று கட்டப் பாதுகாப்பு கட்டமைப்பினை பின்பற்றுகின்றது. இத்தகைய கட்டமைப்பில் முதலாம் கட்டப் பாதுகாப்பு கட்டமைப்பின் பொறுப்பானது குறித்த வியாபார உரிமையாளர்களை அல்லது திணைக்களங்களை சார்ந்திருக்கும். இரண்டாம் கட்டப் பாதுகாப்பானது சுதந்திரமான இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாடாக காணப்படுகின்றது. இவை நிதியியல் இடர்நேர்வை மதிப்பிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றுக்கு பொறுப்பாக உள்ளது மூன்றாம் கட்டப் பாதுகாப்பாக உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு காணப்படுவதுடன் இது முதலாம் கட்ட மற்றும் இரண்டாம் கட்ட பாதுகாப்பு செயற்பாடுகள் பற்றிய சுதந்திரமான உறுதிமொழியினை நாணயச் சபைக்கு வழங்குகின்றது. ஆண்டு காலப்பகுதியில் இரண்டாம் கட்டப் பாதுகாப்பாக இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் அதனுடைய சுதந்திரமான இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாட்டை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதோடு வங்கியினுடைய இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பினை பலப்படுத்துவதற்கு முயற்சி எடுத்து வருகின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது தனது திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை கட்டம் கட்டமாக நிறைவேற்றி வருகின்றது. ஆண்டு காலப்பகுதியில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது நிதி திணைக்களத்தால் முகாமைத்துவம் செய்யப்படும் உள்ளக நிதியங்களின் முதலீடுகள் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீடுகள் போன்றவை தொடர்பிலான நிதியியல் இடர்நேர்வுகளை மதிப்பிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் போன்றவற்றில் பிரதானமாக ஈடுபட்டு வந்தது. இதற்கு மேலதிகமாக இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது ஊழியர் சேமலாப நிதி முதலீடுகள் தொடர்பில் இடர்நேர்வு முகாமைத்துவப் பணிகளை பொறுப்பேற்றதுடன் நிறுவன இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நோக்கி நகர்வதற்கான குறித்த முன் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளுதல் தொடர்பிலும் பணியாற்றி வந்துள்ளது.

2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 24.1 பன்னாட்டு ஒதுக்கு முதலீடுகளின் நிதியியல் இடர்நேர்வுகள்

வங்கியினால் எதிர்கொள்ளப்படும் பிரதானமான நிதியியல் இடர்நேர்வாக சந்தை இடர்நேர்வு மற்றும் கொடுகடன் இடர்நேர்வு காணப்படுகின்றது இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது பன்னாட்டு ஒதுக்கு முதலீடுகளின் முகாமைத்துவதிலிருந்து எழுகின்ற சந்தை இடர்நேர்வுகளை சுதந்திரமாக மதிப்பிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றை மேற்கொள்வதுடன் அவை பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்கள் மற்றும் முதலீட்டு கொள்கைகளுடன் இணங்கி செயற்படுகின்றனவா என உறுதிப்படுத்திக் கொள்கின்றது. நிலையான வருமானப் பிணையங்களின் முதலீடுகளுடைய சந்தை இடர்நேர்வு வெளிப்பாடானது காலஇடைவெளி மற்றும் இடர்நேர்வு ஏற்பு பெறுமதி என்பவற்றைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் குறித்தொதுக்கப்பட்ட இலக்கிடல்களுக்கிடையில் இடர்நேர்வு மட்டங்கள் பேணப்படுவதனை உறுதி செய்தது.

பிட்ச், ஸ்டாண்டர்ட் அன்ட் புவேர்ஸ் மற்றும் மூடீஸ் போன்றவற்றினால் வழங்கப்படுகின்ற கொடுக்கடன் தரப்படுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு நாளாந்த அடிப்படையில் இணைத்தரப்பின் கொடுக்கடன் இடர்நேர்வு கண்காணிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம், இணைத்தரப்பினர்கள் மற்றும் வினயோகத்தர்கள் தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவதிலிருந்து தவறக்கூடிய நிகழ்தகு இடர்நேர்வை கட்டுப்படுத்தும் பொருட்டு இணைத்தரப்பினர் கொடுகடன் முகாமைத்துவ ஒழுங்குபடுத்தல்களுக்கமைவாக பல்வேறுபட்ட இணைத்தரப்பினர்களின்

## சிறப்புக் குறிப்பு 13
## மத்திய வங்கிகளின் ஒன்றிணைந்த ஆளுகை மற்றும் நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவம்

### அறிமுகம்

மத்திய வங்கிகள் வழமையாக இடர்நேர்வு தவிர்ப்பு நிறுவனங்களாக பார்க்கப்படுகின்றன. இருப்பினும் மத்திய வங்கிகள் படிப்படியாக முழுமையான அளவிலான இடர்நேர்வுகளை எதிர்கொள்பவையாக இனங்காணப்பட்டமையால் இந்த எண்ணக்கருவானது நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை என்பதுடன் இடர்நேர்வு தவிர்ப்பு நிறுவனங்கள் என்பதை விட இடர்நேர்வு விழிப்புணர்வு நிறுவனங்களாக வளர்ச்சி பெற்றன. மத்திய வங்கிகள் அவற்றின் செயற்பாடுகளின் சிக்கல் தன்மைகளின் பிரதிபலிப்பினால் பல ஆண்டுகளாக பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டமையே இதற்கான காரணமாகும். மத்திய வங்கிகளின் தற்போதைய வகிபாகமானது நிறுவன ரீதியான இடர்நேர்வு மற்றும் வருவாய் என்பவற்றிற்கு மேலதிகமாக அதிகளவிலான பன்முகத்தன்மையான பொறுப்பாணையை கொண்டதாக அமைவதுடன் அது அவற்றிற்கு தேசிய நலன்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியானதும் அரசியலமைப்பு சார்ந்ததுமான பொறுப்புக்கள் மீது கவனம் செலுத்துவதற்கான பொறுப்பாணையை வழங்குகின்றது. வெளிப்பக்கத்தில் நிலையற்ற, நிச்சய தன்மையற்ற, எதிர்வுகூற முடியாத சூழலில் உலகளாவிய ரீதியில் தொழிற்படும் மத்திய வங்கிகள், தமது சொந்த நிறுவனங்களுக்குள் வினைத்திறனான இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டினை பெற்றுக்கொள்ள கொள்கை வகுப்பாளர்கள் பாரியளவான முயற்சிகளை எடுக்க வேண்டியிருக்கின்றது. மேலும், ஆளுகைகளின் தோல்விகள் மற்றும் நிதியியல் சந்தைகளில் ஏற்படும் ஊழல்கள் என்பன காரணமாக மத்திய வங்கிகள் மீதான பொதுமக்களின் விழிப்பு மற்றும் எதிர்பார்ப்பு என்பன துரிதமாக உயர்வடைந்து வருவதுடன் இந்த நிறுவனங்களை நற்பெயர்சார் இடர்நேர்வுகளுக்கு அதிகளவுக்கு உட்படுத்துகின்றன. நற்பெயர்சார் இடர்நேர்வூடான நம்பகத்தன்மை இழப்பானது மத்திய வங்கி கொள்கைகளின் காத்திரத் தன்மை மீது பெரியளவிலான எதிர்மறையான தாக்கத்தினை உருவாக்குகின்றது.

தரப்பட்ட பரப்பில் உலகளாவிய ரீதியில் காணப்படும் பல மத்திய வங்கிகள் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான நம்பகமான கட்டமைக்கப்பட்ட ஒழுக்கவியல் சார்ந்த அணுகுமுறையினை கண்டறிய முற்பட்டு நிறுவனங்களுக்கிடையிலான, நிலவும் மற்றும் நிகழக்கூடிய இடர்நேர்வுகளின் முகாமைத்துவத்தினை வசதிப்படுத்துவதற்கான வினைத்திறன்மிக்க உபாயமாக நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை தழுவத் தீர்மானித்துள்ளன. நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவமானது அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்டதாகவும் முழுமையானதானதொரு முயற்சியாகவும் இருப்பதுடன் அதில் ஒவ்வொரு பங்குதாரரும் அதன் வெற்றிகரமான நிறைவேற்றுகைக்காக தனித்துவமான வகிபாகம் மற்றும் பொறுப்புக்களை கொண்டிருப்பர். நிறுவனங்களுக்குள் உச்ச அளவிலான ஆளுகை உறுதித்தன்மையினை கற்பித்தலே இங்கு மிக முக்கியமானதாக அமைகின்றது.

### மத்திய வங்கியின் ஆளுகை

ஓர் தசாப்தத்திற்கு மேலாக கவனத்தை ஈர்க்கின்ற ஒரு விடயமாக மத்திய வங்கிகளின் ஆளுகை அமைந்துள்ளது. ஆளுகையை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் உண்மை நிலை சவால்கள் காரணமாக இதன் வினைத்திறனான பிரயோகமானது விவாதத்திற்குரியதாக அமைகின்றது. இது பல நன்மைகளை வழங்குவதோடு மட்டுமல்லாது, தாமாகவே தமக்குரிய தார்மீக கடப்பாடுகளை உருவாக்கிக்கொள்வதற்கு அவர்களால் அமுல்படுத்தப்படுகின்ற ஆளுகை வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதற்கு தமது கண்காணிப்பின் கீழான நிறுவனங்களுக்கு மத்திய வங்கிகள் அறிவுரை மற்றும் பொறுப்பாணையினையும் வழங்குவதனால் இந்த தந்திரோபாய முக்கியத்துவமானது குறைத்து நோக்க இயலாததாக காணப்படுகின்றது. அதன் வினைத்திறனான அமுல்படுத்துகையுடன் இணைந்த பிரச்சினைகளுக்கு அப்பால் நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான வெற்றித்தூண்களில் ஒன்றாக ஆளுகை நோக்கப்படுகின்றது. ஆளுகை மற்றும் நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவம் ஒருவரிடம் இருந்து இன்னொருவரின் கைக்கு மாறுவதுடன் ஒன்றையொன்று பூரணப்படுத்தி ஒன்றிலிருந்து மற்றையது நன்மை பெற்றுக் கொள்கின்றது.

### தொழில் முயற்சிசார் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை வசதிப்படுத்துவதான ஆளுகை

இடர்நேர்வு பற்றிய எண்ணம் மற்றும் முகாமைத்துவம் உள்ளடங்கலாக நிறுவனமொன்று எவ்வாறு இயங்கவும், முகாமை செய்யப்படவும் வேண்டும் என்பதை ஆளுகை சுட்டி நிற்கின்றது. "வழிகாட்டல்", "சுதந்திரம்", "பொறுப்புக்கூறும் தன்மை" மற்றும் "வெளிப்படைத் தன்மை" மீதான தூண்கள் மூலம் வினைத்திறனான ஆளுகை வளம் பெறுவதுடன், அதேபோல நிறுவனம்சார்இடர்நேர்வு முகாமைத்துவத்தின் வெற்றிக்கான அடிப்படை முன்நிபந்தனை தேவைப்பாடுகளாக இவை அமைகின்றன. சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவமானது இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய தமது உறுதியளிப்புக்கள் மற்றும் வழிகாட்டல்களை தெளிவாக குறிப்பிட்டு உச்ச அளவிலான நன்மையினை உருவாக்கிக் கொள்ள வெண்டும். தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் செயற்பாட்டு, தொழிற்பாட்டு மற்றும் அறிக்கையிடல் சுதந்திரம் என்பவற்றினை இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பானது வசதிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். சபை, குழுக்கள், திணைக்களங்கள் மற்றும் தனிநபர்கள் உள்ளடங்கலாக நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் கீழான அனைத்துப் பங்குதாரர்களின் பொறுப்புக்கூறும் தன்மைகளும் முன்னரே வரைவிலக்கணப்படுத்தப்பட வேண்டும். உட்புற மற்றும் வெளிப்புற கவனத்துடன் கூடிய தொடர்பூட்டல் அலைவரிசைகளை நிறுவுவதன் மூலம் சபை, குழுக்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் என்பவற்றினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்படல் வேண்டும். தெளிவான அறிக்கையிடல் எல்லை, தீர்மானக் கட்டமைப்புக்கள், தகவல் பாய்ச்சல்கள், வகிபாகம் மற்றும் பொறுப்பு என்பவற்றினை ஆரம்பத்திலே தீர்மானித்துக் கொள்வதானது நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவ பங்குதாரர்களை அதிக நோக்குள்ளதும் வினைத்திறன்மிக்கவர்களாகவும் ஆக்குகின்றது. அது நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அமுல்படுத்துகையினை தாமதப்படுத்தும், வளங்களை வீணாக்கும், நிறுவனங்களின் நல்லிணக்கத்தினை குழப்பும் வகையிலான தேவையற்ற அதிகார நடைமுறைகள் மற்றும் தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள் என்பவற்றைத் தடுக்கின்றது.

### ஆளுகையின் வசதிப்படுத்தலாளரான நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவம்

நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவமானது நிச்சயமற்ற தன்மைகள், முக்கிய வாய்ப்புக்கள், முயற்சி வீணாதலைத் தடுத்தல், முன்னுரிமை நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றை விளங்கிக்கொள்ள உதவுவதுடன் நேரத்துடனான அறிவிக்கப்படும் பங்குபற்றுகை மற்றும் இடர்நேர்வு விழிப்புணர்வு தீர்மானம் எடுத்தல் என்பவற்றிற்கு வழிசமைக்கின்றது. மத்திய வங்கியின் நீண்டகால நிலைத்திருப்பு மற்றும் நற்பெயர் என்பவற்றினைப் பாதுகாப்பதற்கு சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவமானது இடர்நேர்வு பற்றிய பகிரப்பட்ட புரிந்துணர்வினைக் கொண்டிருத்தல் வேண்டும். இது நல்லாட்சியின் முக்கிய அம்சமாக அமைவதுடன் அதற்காக நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவமானது வினைத்திறன்மிக்க அமுல்படுத்துகைப் பொறிமுறையாக கருதப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கி ஆளுகை தொடர்பான எழுத்து ஆவணங்களானவை நிறுவனமொன்றிற்கு அது அச்சுறுத்தலைவிடுக்கின்ற பல்வேறு வழிவகைகள் காணப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றன. திறமையற்ற ஆளுகை அல்லது ஆளுகை இடர்நேர்வுக்கு பங்களிப்பு செய்கின்ற அத்தகைய காரணங்களில் சில் தந்திரோபாயத்தினை விட அன்றாட நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்தும் சபை, சபைக்கு வழங்கப்படுகின்ற தகவல்களின் தரம் தாழ்வானதாக,

தாமதப்படுத்தப்பட்டதாக, போதுமற்றதாக, அதிக எண்ணிக்கையானதாக காணப்படல், நிறுவனத்திற்கான சரியான தந்திரோபாயத் திட்டமின்மை அல்லது இருக்கின்ற திட்டம் முறையாக நிறைவேற்றப்படாமை போன்றவையாகும். மேலும், சபையானது மிகச் சிறிய அல்லது பெரிதாகத் தேவைப்படும் திறன் மற்றும் அறிவு என்பவற்றின் போதாத்தன்மை மற்றும் சிக்கல் தன்மை, சபை திறமையற்றதாக அல்லது இயங்காமல் இருத்தல், நன்கு பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன இல்லாமை மற்றும் இடர்நேர்வுகள் புறக்கணிக்கப்பட்டவையாக அல்லது திறமையற்ற முகாமைத்துவம் செய்யப்பட்டவையாக இருத்தல் போன்றவையும் மத்திய வங்கிகளின் திறமையற்ற ஆளுகையின் பங்களிப்புக் காரணிகளாக அமைகின்றன. நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் அமுல்படுத்துகையானது நிறுவனங்களின் உச்ச அளவிலான ஆளுகை நியமங்கள் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்வதாக இருக்கும்.

### இலங்கை மத்திய வங்கியின் முன்னோக்குப் பாதை

நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவமானது அதன் முக்கிய அம்சமான உச்ச ஆளுகை நியமங்களுடன் தழுவியதாகக் காணப்படும் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான வெற்றிகரமான அணுகுமுறையாக உலகளாவிய ரீதியிலுள்ள பல்வேறு மத்திய வங்கிகளினால் தொழில் முயற்சிசார் இடர்நேர்வு முகாமைத்துவமானது பரந்துபட்ட அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது. மத்திய வங்கிகளின் புதிய போக்குகளுக்கு இயைபாக வங்கிக்குள் வினைத்திறனான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை பின்பற்றுதலின் அவசியத்தினை உணர்ந்து இலங்கை மத்திய வங்கியானது அதன் 2018-2020 ஆண்டிற்கான தந்திரோபாயத் திட்டத்தில் முக்கிய தந்திரோபாய முன்தெரிவுகளின் ஒன்றாக இலங்கை மத்திய வங்கியினுள் "நிறுவனம்சார் இடர்நேர்வுக் கட்டமைப்பினை அமுல்படுத்தல்" ஆனது அடையாளம் காணப்பட்டிருக்கின்றது.

நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நோக்கிய நகர்வில் முதற்படியாக வங்கிக்குள் "இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பின் தந்திரோபாய அமுல்படுத்துகையை" உள்ளடக்குகின்றது. இது தொடர்பில் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பு என்பவற்றினை உள்ளடக்கியதான 2018ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படவிருக்கும் இடர்நேர்வு ஆளுகைக்கட்டமைப்பினை இலங்கை மத்திய வங்கியானது ஏற்கனவே உருவாக்கியுள்ளது. இடர்நேர்வு முகாமைத்துவத்திற்காக இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது "மூன்று கட்டப் பாதுகாப்பு" மாதிரியைக் கொண்டுள்ளன. மூன்று கட்ட பாதுகாப்பு கட்டமைப்பானது மூன்று குழுக்களுக்கிடையில் தொழிற்பாடுகள் பற்றிய தெளிவான வரையறையினை வழங்குகின்றது. முதலாவது கட்டமானது இணங்குவிப்புக்கான பொருத்தமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்தி கண்காணிப்பதுடன் இடர்நேர்வுகளினை இனங்கண்டு மதிப்பீடுசெய்து முகாமைத்துவம் செய்தலை உறுதிப்படுத்துவதற்காக வியாபார உடமையாளர்களின் பொறுப்புக்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. இரண்டாவது கட்டமைப்பானவை வசதிப்படுத்தல் இடர்நேர்வு மற்றும் இணங்குவிப்போடு தொடர்புடைய விடயங்கள் மீதான சுதந்திரமான மேற்பார்வை மற்றும் பொதுவான இடர்நேர்வு மற்றும் இணங்குவிப்புக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றிற்கு பொறுப்பான தொழிற்பாடுகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. முதலாம் மற்றும் இரண்டாம் கட்டத் தொழிற்பாடுகளின் உறுதித் தன்மை மீது சபையினருக்கு சுதந்திரமான, இலக்கினை உறுதிசெய்தல் என்பவற்றினை வழங்குகின்ற கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மூன்றாவது கட்டம் கொண்டுள்ளது. பாதுகாப்பின் ஒவ்வொரு அடுக்குகளும் தத்தமது தனித்துவமான முறையில் தகவல்களைக் பகுப்பாய்வு செய்து வழங்குவதுடன், சபை முழுமையான பார்வை ஒன்றினை விருத்திசெய்து கொள்ள உதவுவதுடன், போதுமான தகவலளிக்கப்பட்ட நிலையில் இடர்நேர்வுகளை அறிந்துகொண்டுள்ள நிலையில் தீர்மானமொன்றினை முன்னெடுக்கவும் புதிய கட்டமைப்பின் கீழ் பெறப்படும் கூட்டு உறுதிப்பாட்டின் மீதான அனுகூலத்தினை பெற்றுக்கொள்ளவும் உதவுகின்றது.

இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பானது சுதந்திரமான அறிக்கையிடல், மேற்பார்வை மற்றும் இடர்நேர்வு ஆளுகை என்பவற்றினை வசதிப்படுத்துகின்ற 'குழு கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. நிறைவேற்று மட்ட இடர்நேர்வு குழு மற்றும் சபையின் உபகுழுக்களைக் கொண்ட இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பினூடாக வருகின்ற தகவல்கள் நாணயச்சபையிடம் அறிக்கையிடப்பட வேண்டும். தகவல் அறிக்கையிடல் மற்றும் தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் நோக்கு மற்றும் சுதந்திரம் என்பவற்றினை பாதுகாக்கின்றது. இந்தக் குழுக்கள் முறையான தீர்மானம் எடுத்தலை வசதிப்படுத்துவதற்கும் உருவாக்கப்படுகின்றது. இந்தக் குழுக் கட்டமைப்பானது உண்மைத்தன்மை, பூரணத்தன்மை நேரத்துடனான தகவல்களை கிடைக்கச் செய்வதன் மூலம் அதன் ஆளுகை மற்றும் இடர்நேர்வு மேற்பார்வை பொறுப்புக்கள் என்பவற்றினை நிறைவேற்ற சபைக்கு உதவுகின்றது.

### முடிவுரை

நிறுவனத்துக்கிடையில் இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்வதற்கான உச்ச அளவிலான காத்திரமான பொறிமுறையாக நிறுவனம்சார் இடர்நேர்வானது உலகளாவிய ரீதியில் மத்திய வங்கிகளால் இனங்காணப்பட்டுள்ளது. அதிகளவான இணைந்த மற்றும் ஒழுங்கமைப்பு ரீதியில் நிறுவனத்தின் இலக்குகள் மற்றும் நோக்குகளை அடைய இது பங்களிப்புச் செய்கின்றது.

எனினும், ஆளுகைக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்காத சூழலில் அமுல்படுத்தப்படுமாயின் மிகச் சிறந்த தந்திரோபாயம்கூட தோல்வியடையும். நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவததின் முன்தேவைப்பாடான ஆளுகை காணப்படுவதனால் ஒன்றிணைந்த ஆளுகை மற்றும் நிறுவனம்சார் இடர்நேர்வு முகாமைத்துவத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு ஓர் உறுதியான அத்திவாரத்தை இட்டுக்கொள்வதற்காக இலங்கை மத்திய வங்கி உட்பட உலகளாவிய அளவில் காணப்படும் பல மத்திய வங்கிகள் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புக்களை உருவாக்கியுள்ளது.

வெளிப்படுத்துகை எல்லைகள், விநியோகஸ்தர் எல்லைகள் மற்றும் சாதன எல்லைகள் என்பன தரப்படுத்தல் மாற்றங்களுடன் இணங்கிச் செல்லும் வகையில் மீளாய்வு செய்யப்பட்டது. தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்கள் மற்றும் இணைத்தரப்பினருடைய இடர்நேர்வு மட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட எல்லை கட்டமைப்புக்கு அமைவாக பன்னாட்டு தொழில்பாடுகள் திணைக்களத்தின் அனைத்து முதலீட்டு கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படுவதனை உறுதி செய்யும் வகையில் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது பன்னாட்டு தொழில்பாட்டு திணைக்களத்துடன் நெருக்கமாக செயற்பட்டு வருகின்றது.

நிலையான வருமானப் பிணையங்களினைக் கையாளும் இணைத்தரப்பினருடன் ஒப்பிடுமிடத்து பண சந்தை இணைத்தரப்பினர் கொடுகடன் இடர்நேர்வுக்கு கூடுதலாக உட்படுவதனால் செயற்பாட்டிலுள்ள பண சந்தை இணைத்தரப்பினருடைய பங்கு சந்தை விலைகள் மற்றும் கொடுக்கடன் தவறுகைப் பரிமாற்றம் என்பவற்றின் அசைவுகளை நாளாந்த அடிப்படையில் மதிப்பிடுவதுடன் அதற்கேற்ப அவர்களது இடர்நேர்வு மட்டங்களை உயர்வு, நடுத்தரம் மற்றும் தாழ்வு என வகைப்படுத்தப்பட்டு போக்குவரத்து சமிக்கை குறியீடுகளான சிவப்பு, மஞ்சள் பச்சை ஆகியவற்றுக்கு இணைவாக தொடர்புபடுத்தப்படுகின்றது. பண சந்தை இணைத்தரப்பினருடன் குறுங்கால முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனத்தில் கொள்ளும் வகையில் இத்தகவல்கள் பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களத்துக்கு அறிவிக்கப்படுகின்றது. இடர்நேர்வின் புதிய மூலங்களை அறிந்து கொள்வதற்காக பண சந்தை இணைத்தரப்பினரின் கொடுக்கடன் தவறுகை பரிமாற்றம் மற்றும் பங்கு சந்தை விலைகள் என்பவற்றின் போக்குகளை தொகுப்பதுடன் சர்வதேச ரீதியில் இடம்பெறும் நிகழ்வுகளின் இடர்நேர்வுகள் மற்றும்

அவற்றின் நிகழ்தகு விளைவுகள் என்பவற்றையும் குறிப்பிட்டு மாதாந்த சந்தை அறிக்கைகளை இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் தயாரிக்கின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது பன்னாட்டு ஒதுக்கீடு தொடர்பான மதிப்பீடுகளையும் இடர்நேர்வு அளவீடுகளையும் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் சமர்ப்பிப்பதுடன் இது தொடர்பில் நாணய சபைக்கு காலாண்டு அடிப்படையில் அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றது. இதற்கு மேலதிகமாக இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கின் அடிப்படையில் பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீடுகள் தொடர்புடைய புதிய முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதுடன் தந்திரோபாய சொத்து ஒதுக்கீட்டு தயாரிப்புக்கான உள்ளீடுகளையும் வழங்குகின்றது. ஆண்டுக் காலப்பகுதியில் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது ஏற்கனவே உள்ள பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்களை மீளாய்வு செய்வதுடன் 2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தவிருக்கின்ற நிறுவன இடர்நேர்வு கட்டமைப்புக்கு இணைவாகவும் உலக வங்கியின் நிகழ்ச்சி திட்டத்துக்கு அமைவாகவும் பன்னாட்டு ஒதுக்குகளுக்கான முதலீட்டு கொள்கை அறிக்கையினை தயாரித்து வருகின்றது

### 24.2 உள்ளக முதலீட்டு நிதியங்கள்

இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அடிப்படையில் உள்ளக முதலீட்டு நிதியங்களின் முதலீடுகளை பகுப்பாய்வு செய்வதுடன் ஏற்கனவே உள்ள வழிகாட்டல்களுடன் அவை இணங்கி செல்கின்றனவா என்பதையும் பரிசோதித்து அதன் அடிப்படையில் இடர்நேர்வு முகாமைத்துவதை பலப்படுத்துவதற்கு தேவையான முன்மொழிவுகளை வழங்குகின்றது. இத்தகைய பகுப்பாய்வானது மாதாந்த அடிப்படையில் மேற்கொள்வதுடன் நாணயச் சபைக்கு காலாண்டு அடிப்படையில் இடர்நேர்வு அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது மத்திய வங்கியில் நடைமுறைப்படுத்தவிருக்கின்ற நிறுவன இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்புக்கு அமைவாக ஏற்கனவே உள்ள முதலீட்டு வழிகாட்டல்களை மீளாய்வு செய்வதோடு முதலீட்டு கொள்கை அறிக்கையினை தயாரிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளது.

### 24.3 ஊழியர் சேமலாப நிதியம்

இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது ஊழியர் சேமலாப நிதியத்தின் முதலீடுகள் தொடர்பிலான நிதியியல் இடர்நேர்வுகளை மேற்பார்வை செய்யும் வேலையை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது. இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பில் ஏற்கனவே காணப்படக்கூடிய இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு தொடர்பில் ஆராய்ந்து அதன் முதலீடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாடுகளின் செய்முறைகளை மேலும் விருத்தி செய்வது தொடர்பிலான விதப்புரைகளை சமர்ப்பித்தது. இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது ஏற்கனவே உள்ள முதலீட்டு கொள்கை அறிக்கை மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

### 24.4 நிறுவன இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை நோக்கி நகர்வதற்கான முன்னெடுப்புக்கள்

வங்கியினுடைய இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாடு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ கலாச்சாரத்தினை வலுப்படுத்தும் மேலதிக நடவடிக்கையாக இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது 2018 - 2023 தந்திரோபாய திட்டமிடல் காலப்பகுதியில் இதனை நடைமுறைப்படுத்தும் நோக்கோடு நிறுவன இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை நிறுவ முன்முயற்சி எடுத்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த தந்திரோபாய திட்டமிடல் செய்முறையில் நிறுவன இடர்நேர்வு முகாமைத்துவம் வங்கியினுடைய ஓர் முக்கிய தந்திரோபாய முன்னுருமையாக இனம்காணப்பட்டுள்ளமையானது இந் நடவடிக்கைக்கு அதிக முக்கியத்துவத்தையும் நிறையையும் அளித்துள்ளது. இலங்கை மத்திய வங்கிக்குள் இடர்நேர்வு கலாச்சாரத்தினை உருவாக்கும் நோக்குடன் வங்கியியல் கற்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து கருத்தரங்குகளை ஒழுங்கமைப்பதன் மூலம் நிறுவன இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான இயலளவை அதிகரிக்க செய்யும் நடவடிக்கையில் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் ஈடுபட்டுள்ளது. அத்துடன் இடர்நேர்வு தொடர்பான விடையங்களை ஒருங்கிணைப்பதற்கு வசதியாக ஒவ்வொரு திணைக்களங்களுக்குமான இடர்நேர்வு அலுவலர்களை நியமித்துள்ளது. ஆண்டு காலப்பகுதியில், இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது நிறுவன இடர்நேர்வு முகாமைத்துவத்தை வங்கியில் வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கு தேவையான அடிப்படைக் கட்டுமானமாக கருதப்படும் இடர்நேர்வு ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்புக் கொண்ட ஓர் புதிய இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பினை வடிவமைத்து விருத்திசெய்வதில் ஈடுபட்டுள்ளது.

### 24.5 நிதியியல் சாரா இடர்நேர்வு

இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது நிதியியல் சாரா இடர்நேர்வு முகாமைத்துவ குழுவில் அங்கம் வகிக்கும் 17 திணைக்களங்களின் நிதியியல் சாரா இடர்நேர்வுகளைக் கொண்ட இடர்நேர்வு உருவரைபை தயாரித்து வருகின்றது. இனங்காணப்பட்ட இடர்நேர்வுகளை, கொள்கை இடர்நேர்வுகள், செயற்பாட்டு இடர்நேர்வுகள் மற்றும் ஏனைய நிதியியல் சாரா இடர்நேர்வுகள் என மூன்று பிரதான இடர்நேர்வு வகுதிகளாக வகுத்துள்ளதுடன் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது இத்தகைய இடர்நேர்வு பகுப்பாய்வை மூன்றுக்கு மூன்று தாய உரு மூலமும் இடர்நேர்வு வகைப்படுத்தல் பொறிமுறை மூலமும் பகுப்பாய்வு செய்து உருவாக்கியுள்ளது.

### 24.6 நாளாந்த சந்தை தகவல்

இடர்நேர்வு திணைக்களமானது அரச கடன்படல் தேவைப்பாடுகள், அரச பிணையங்கள் சந்தையின் விளைவு வளையியின் போக்குகள், பன்னாட்டு ஒதுக்குகளில் தாக்கத்தை செலுத்தக்கூடிய வகையில் பன்னாட்டு சந்தையில் காணப்படும் நிதிப்பாச்சல்கள் மற்றும் விலை மாற்றங்கள், உள்நாட்டு பண சந்தையின் குறுங்கால வட்டி வீத போக்குகள் மற்றும் சந்தை திரவத்தன்மை நிலைமைகள் என்பவற்றைக் கொண்ட நாளாந்த சந்தை நிலவர பகுப்பாய்வை தொடர்ச்சியாக ஆளுநருக்கு சமர்ப்பித்து வருகின்றது.

### 24.7 ஏனைய செயற்பாடுகள்

இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது ஆளணியினுடைய இயலுமையை அதிகரிப்பதில் கவனம் செலுத்தி வருகின்றது. இது தொடர்பில் பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின் அடிப்படையில் கருமமாற்றக் கூடிய வகையில் உலக வங்கியின் நிகழ்ச்சி திடத்தின் கீழ் ஆளணி அங்கத்தவர்களுடைய தொழில்நுட்ப அறிவினை விருத்தி செய்தது. இதற்கு மேலதிகமாக வழமையான பயிற்சி நெறிகளுக்கு அப்பால் அறிவினைப் பங்கிட்டுக் கொள்ளும் வகையிலான திணைக்கள மட்டத்திலான கலந்துரையாடல்கள் அதன் ஆளணி அங்கத்துவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் இடர்நேர்வு முகாமைத்துவ ஆளணியினர் பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் திறைசேரி முகாமைத்துவ முறைமையினை மேம்படுத்தும் செயற்திட்டத்தில் இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கில் பங்களித்து வருகின்றனர்.

## 25. செயலகம்

செயலகத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் முதலில் நிறுவப்பட்ட திணைக்களங்களில் ஒன்றாகும். செயலகத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாவன பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு, ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல், விடுப்புத் தொடர்பாக கொள்கைகளை நடைமுறைப்படுத்தல், இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் பட்டப்பின் கற்கைகள், வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் போன்றவை தொடர்பான

கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத சாதனங்கள் மீதான அளவீட்டுச் சபை தொடர்பான நடவடிக்கைகளை கையாளுதல், பொது விழாக்களை ஒழுங்குபடுத்தல், தபால் அறை பணி வழங்குதல் மற்றும் ஆளுநருக்கு தேவையான செயலக மற்றும் உபசரணைப் பணிகளை வழங்குதல் ஆகும். இத் தொழிற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் சுமுகமான தொழிற்பாட்டிற்கு பாரியளவில் பங்களித்தன. 2017 இறுதியிலுள்ளவாறு செயலகத் திணைக்களத்தில் 91 அலுவலக உறுப்பினர்கள் பணியாற்றினர்.

**(அ) பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு**

2017 காலப்பகுதியில் செயலகத் திணைக்களம் சரியான நேர திட்டமிடல்களுடன் பிரதானமாக விலைக்கோரல்களினூடாக ரூ.107 மில்லியன் பெறுமதியான மூலதனம் மற்றும் மூலதனமல்லாப் பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்தது. இலங்கை மத்திய வங்கிக்கு பொருட்கள் மற்றும் பணிகளின் நேரம் பிந்தாத வழங்கலை உறுதிசெய்யும் பொருட்டு, கொள்வனவுத் திட்டமிடல் 2017 இலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, செயலகத் திணைக்களம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் மொத்தக் கொள்வனவுத் தேவைப்பாடுகளில் 87 சதவீதத்தினை நிறைவு செய்யக்கூடியதாக இருந்தது. மேலும், செயலகத் திணைக்களம் பகிரங்கப் பொறுப்புக் காப்புறுதி உள்ளடங்கலான இலங்கை மத்திய வங்கியின் அனைத்துச் சொத்துக்களுக்கும் செலவுச் சிக்கனமானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான காப்புறுதியினைப் பெற்றுக்கொண்டது.

**(ஆ) ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல்**

செயலகத் திணைக்களம் மத்திய வங்கியின் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் மத்திய வங்கி ஓய்வூதிய நிதியம் என்பன தொடர்பான கொடுப்பனவு மற்றும் ஏனைய தொடர்பானவற்றையும் தொடர்ந்து நிருவகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 2000 இற்கு மேற்பட்ட பயனாளிகள் தொடர்புபட்டிருந்தனர்.

**(இ) விடுப்புத் தொடர்பாக கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்**

2017 காலப்பகுதியில் செயலகத் திணைக்களம் ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் அலுவலக வெளிநாட்டுப் பயணங்களுக்காக 610 அனுமதிகளை வழங்கியுள்ளது. ஆண்டுக் காலப்பகுதியில் செயலகத் திணைக்களமானது வியாபார ஒன்றியங்கள், கழகங்கள், அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கிய பணிகள் தொடர்பான விடயங்களை கையாண்டது.

**(ஈ) இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் பட்டப்பின் கற்கைகள், வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் போன்றவை தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்**

2017 ஆண்டுக் காலத்தில், செயலகத் திணைக்களமானது 45 ஊழியர்களின் பட்டப்பின் கற்கைகளுக்கான கொடுப்பனவை வழங்கியிருந்ததுடன், 477 ஊழியர்களுக்கான குறுகியகால வெளிநாட்டு பயிற்சிகளுக்கான பயிற்சி படிகளையும் வழங்கியிருந்தது.

**(உ) வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத உபகரணங்கள் மீதான அளவீட்டுச் சபை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அஞ்சல் அறைப் பணிகளை வழங்குதல்**

ஆண்டுக் காலத்தில், இலங்கை மத்திய வங்கியின் கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு அமைய, வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத அலுவலக உபகரணங்களை அகற்றுவதற்காக அளவீட்டுச் சபையுடன் தொடர்பான நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் நடாத்தப்பட்டன. 2017இல் செயலகத் திணைக்களம் புதுவருட ஆரம்ப வைபவம் மற்றும் நீண்டகால பணிக்கானவிருது வழங்கும் வைபவம், 1996ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இறந்தவர்களை நினைவுகூறும் வைபவம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் 67ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்ட வைபவம் போன்ற பல்வேறு ஞாபகார்த்த நிகழ்ச்சிகளினை ஒருங்கிணைத்து ஒழுங்குமுறைப்படுத்தியது. 2017இல், செயலகத் திணைக்களமானது அதன் அஞ்சல் அறை பணியூடாக நாட்டிற்குள்ளும் வெளிநாட்டிற்கும் 58,515 அஞ்சல்களையும் 1051 பொதி அஞ்சல்களையும் அனுப்புவதற்கு வசதிப்படுத்தியுள்ளது.

**(ஊ) ஆளுநருக்குத் தேவையான செயலக மற்றும் உபசரணைப்பணிகளை வழங்குதல்**

ஆண்டுக் காலப்பகுதியில், செயலக திணைக்களமானது ஆளுநருக்கு செயலக மற்றும் உபசரணைப் பணி வசதிகளை வழங்கியது. வழங்கப்பட்ட செயலக உதவிகளாக நியமனங்கள் மற்றும் கூட்டங்களை அட்டவணைப்படுத்தல், காட்சியுடன் கூடிய விரிவுரைகள், பேச்சுக்கள், குறிப்புக்கள், கட்டுரைகள் போன்றவற்றினை தொகுத்தலும், தயாரித்தலும், நிதிச் சந்தை தகவல்கள், ஊடக சுற்றறிக்கைகளை மற்றும் ஏனைய அறிக்கைகளை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன. உபசரணைப் பணிகள் ஆளுநரின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணங்கள் மற்றும் ஆளுநர் மற்றும் பிரதி ஆளுநர்களின் விருந்துபசாரப் பணிகள், ஆளுநர் மற்றும் வங்கியின் மிக முக்கிய நபர்களின் விஜயங்களுக்கான பணியினை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது.

**26. பாதுகாப்பு பணிகள்**

பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது, இவ்வாண்டுக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள், கட்டடங்கள், சொத்துக்கள் மற்றும் தருவிக்கப்பட்ட நாணயங்களை கொண்டுசெல்லல் போன்றவற்றினை பாதுகாப்பதற்காக அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்ட வேளையில் கீழே சுருக்கிக் கூறப்பட்டவாறு முறைமைகளின் மேம்பாடு மற்றும் பயிற்சி முறைகள் என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகவுள்ளது.

**26.1 முறைமைகளின் மேம்பாடு**

ஆண்டுக் காலப்பகுதியில் தலைமை அலுவலகத்திலும் வேறு வெளிவளாகத்திலும் அமைந்திருக்கும் அனைத்து தீயணைப்பு உபகரணங்களின் செயற்பாட்டு நிலைமைகள் ஒழுங்கு முறையில் சோதனை செய்யப்பட்டு, திருத்தப்பட்டு மற்றும் மீண்டும் அதே இடத்தில் வைக்கப்பட்டன. இராஜகிரியா, வங்கித்தொழில் கற்கைகள் நிலையத்திலுள்ள சவறின் கற்கை நிலையத்திற்கென தனியான அணுகுமுறை கட்டுப்பாட்டு முறைமையொன்றினை நடைமுறைக்கிடுவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் என்பவற்றினால் நடாத்தப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டப் பயிற்சிகளில் பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது பங்குபற்றி ஒத்துழைப்பினை வழங்கியது.

**26.2 பயிற்சிகள்**

**(அ) தீ தடுப்பு, தீ எதிர்ப்பு மற்றும் முதலுதவி நிகழ்ச்சித் திட்டங்கள்**

கொழும்பு மாநகரசபையின் தீயணைப்புப் பணிகள் திணைக்களம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மையம் போன்றவற்றின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியிலுள்ள அனைத்துத் திணைக்களங்களிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட தீ அணைப்பு மேற்பார்வையாளர்களுக்கு தீத்தடுப்பு, தீயெதிர்ப்பு, முதலுதவி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான இரண்டு நாள் பரந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. மேலும் 2017 மார்ச்சில் விமானப்படை மற்றும் கொழும்பு தீயணைப்புப் படை போன்றவற்றின் உதவியுடன் தலைமையலுவலகத்திலுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தீயெதிர்ப்பு மற்றும் தீப்பயிற்சி மீதான செயன்முறை விளக்கம் வழங்கப்பட்டது.

**(ஆ) திறன்கள் மற்றும் தகுதிகளைக் கட்டியெழுப்புதல்**

பாதுகாப்பு அலுவலர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில், பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது அதன் அலுவலர்களுக்கு அனேக கல்விச் செயற்றிட்டங்களை ஒழுங்குபடுத்தியது. அக் கல்விச் செயற்றிட்டங்கள் பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம், ஊக்கமூட்டும் மனோபாவ நிலைமாற்ற அம்சங்கள், வாடிக்கையாளர் தொடர்புகள் மற்றும் தலைமைத்துவம் போன்றவற்றின் பிரதான பரப்புக்களை உள்ளடக்கியிருக்கிறது.

**(இ) ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் துப்பாக்கி சூட்டுப் பயிற்சி**

ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் இலங்கைத் தரைப்படையுடன் இணைந்து அனைத்து பாதுகாப்பு அலுவலர்களுக்கும் ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் துப்பாக்கி சூட்டுப் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

## 27. அலுவலர் பணிகள் முகாமைத்துவம்

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் ஆண்டு முழுவதும் அனைத்துப் பயன்பெறுநர்களுக்கும் வினைத்திறனுடனும் பயனுறும் விதத்திலும் நலன்புரி வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இத்தகைய நலன்புரி வசதிகள் அலுவலர் வீடமைப்பு (ஈட்டு) கடன் திட்டம், சேமநிதியக் கடன் திட்டம் மற்றும் அலுவலர் நன்மைகள் திட்டம் என்பனவற்றின் கீழ் கடன்களை வழங்குதல், தொழில்தருநர் பங்களிப்பு, மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் செலவுகளை மீளளித்தல் மற்றும் மருத்துவ நிலையம் மற்றும் உணவக வசதிகளை வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் 2017இன் இறுதியில் உள்ளவாறு ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், விதைவைகள்/விதுரர்கள் மற்றும் அவர்களின் பதிவுசெய்யப்பட்ட தங்கியிருப்போர் ஆகியோரை உள்ளடக்கி ஏறத்தாழ 10,000இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட நன்மைபெறுநர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

2017ஆம் ஆண்டுகாலப்பகுதியில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் வீடமைப்புக் கடன்கள், சேமநிதியக் கடன்கள், ஊர்திக் கடன்கள், கணனிக் கடன்கள் மற்றும் அலுவலர் நன்மைகள் திட்டத்தின் கீழான ஏனைய கடன்களை உள்ளடக்கி 2,026 கடன்களை வழங்கியது. தொடர்பான அனைத்து ஆவணங்களுடனும் விண்ணப்பதாரரால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டபின்னர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் இக்கடன்களை வழங்குவதற்கான வழிமுறைகளை அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. கடன் கண்காணிப்பு முறைமை ஊழியர்களுக்கான கடன்களின் பகிர்ந்தளிப்பினை வினைத்திறனுடன் மேற்பார்வை செய்வதனை இயலச் செய்தது.

இலங்கை மத்திய வங்கியின் உணவகம் சாத்தியமான மிகவுயர்ந்த தரத்திலான அதன் பணியினை மத்திய வங்கி அலுவலர்களுக்கு வழங்குவதனைத் தொடர்ந்தும் மேம்படுத்தியது. மேலும், 2017ஆம் ஆண்டுப் பகுதியில் உணவக நிலைமையினை மேம்படுத்துவதற்கும் உணவக வசதிகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மருத்துவ நலன்புரித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து நன்மை பெறுநர்களினாலும் உறப்பட்ட மருத்துவச் செலவினங்களைத் தொடர்ந்தும் மீளளித்தது. 2017இல் மருத்துவச் செலவினம் மொத்தமீளளிப்புத் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஐந்து சதவீதத்தினால் அதிகரித்தது. ஊழியர்களும் ஒய்வுபெற்ற ஊழியர்களும் அவர்களின் மருத்துவச் சிட்டைகளின் கோரல் மீளளிப்புகளின் நிலைமைகளை தெரிவிப்பதற்கான மின்னஞ்சல் அறிவித்தல்களை அனுப்புவதற்கான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மருத்துவ நிலையத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மருத்து வவசதிகள் பணிநேரங்களில் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டன. மருத்துவப் பரிசோதனைகளும் ஆய்வுகூடவசதிகளும் நியாயமான கட்டணங்களில் மருத்துவ நிலையத்தில் வழங்கப்பட்டன. ஆண்டுகாலப்பகுதியில், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் முக்கிய நலப் பிரச்சனைகள் தொடர்பான அறிவினை அதிகரிப்பதற்காக ஆறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. மேலும், 2017 இல் இறப்பு நிவாரண நிதி மற்றும் இறப்புகொடைத் திட்டம் போன்றவற்றிற்கான உறுப்பினர் கட்டணம் மற்றும் நன்மையை பெற்றுக் கொள்வதற்கான வரையறை போன்றவை திருத்தப்பட்டன.

## 28. புள்ளிவிபரவியல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் தனது தொழிற்பாடுகளான தரவுகளைச் சேகரித்தல், தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல், எதிர்வுகூறல் மற்றும் பரப்புதல் என்பவற்றைக் காத்திரமான முறையில் ஆற்றியதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற குறிக்கோளினை எய்துவதனை நோக்கித் தொடர்ந்து பங்களித்தது. 2017இல் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக, அளவீடுகள், ஆராய்ச்சிகள் மற்றும் வேறுபட்ட மூலங்களினூடாகத் தரவுகளையும் தகவல்களையும் சேகரித்தல், விலை, சொத்து மற்றும் கூலிச் சுட்டெண்கள் மற்றும் இலங்கை சுபீட்ச சுட்டெண் என்பவற்றை தொகுத்தல், மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கணித்தல், குறுங்காலப் பேரண்டப் பொருளாதார மாறிகளை எதிர்வுகூறல், தரவுகள் மற்றும் ஏனைய தகவல்களை வெளியீடுகள் மற்றும் பத்திரிகை வெளியீடுகள் மூலம் பரப்புதல் மற்றும் தரவுக் களஞ்சியத்தைப் பேணுதல் என்பன காணப்பட்டது. மேலும், உலகளாவிய சுட்டெண்களில் இலங்கையின் நிலைமையினைக் கண்காணித்து அவற்றில் நாட்டினது தரப்படுத்தலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையிலும் புள்ளிவிபரவியல் திணைக்களம் ஈடுபட்டதுடன் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அமைப்புக்களுக்குத் திறனை வளர்க்கும் முயற்சிகளுக்கு வளங்களை வழங்குவதிலும் ஈடுபட்டது.

### 28.1 அளவீடு மற்றும் ஏனைய தரவு மூலங்களினூடாக தரவுகளைச் சேகரித்தல்

**அ) வியாபார மனோபாவ அளவீடு**

குறுங்கால சந்தை அபிவிருத்திகளை அறிந்து கொள்ளவும் நடைமுறைப் பொருளாதார நிலைமைகளைக் கண்காணிப்பதற்குமான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு 2017 ஆண்டுப்பகுதியிலும் காலாண்டு அடிப்படையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இது எதிர்கால பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பில் நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் குறிகாட்டியாக விளங்குகின்றது. இவ்வளவீட்டின் இலக்கிடல் குடித்தொகையாக பொருளாதாரத்தின் மூன்று முக்கிய நடவடிக்கைகளையும் (வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள்) உள்ளடக்கிய பாரியளவு தொழில்முயற்சிகள் காணப்பட்டன.

தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் அளவீடு மொ.உ.உற்பத்தி எதிர்வுகூறலில் நேரகாலத்துடனான குறிகாட்டிகளாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக மாதாந்த அடிப்படையில் திரட்டப்பட்டு வருகின்றன. மேலும், இச்சுட்டெண்கள் ஆய்வாளர்கள், பொருளாதார ஆய்வாளர்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் வியாபார கொள்கை வகுப்போர்களினால் கைத்தொழில் நிலைமைகளைச் சிறந்த முறையில் விளங்கிக் கொள்வதற்கு மேலதிகத் தரவுத் தொகுதிகளாகப் பயன்படுத்தப்படலாம். தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீட்டினைப் பொறுத்தவரை, தயாரிப்புக் கைத்தொழில்களின் கொள்வனவு முகாமையாளர்கள் இலக்கிடப்பட்ட குடித்தொகையாக விளங்கிய வேளையில், பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீட்டிற்கு நிறுவனங்களின் வியாபார நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த அறிவினைக் கொண்ட பொருத்தமான அலுவலர்கள் இலக்கிடப்பட்ட குடித்தொகையாகக் கொள்ளப்பட்டது. அளவீடானது மேல் மாகாணத்தில் முக்கியமாக குவிந்து காணப்படும்

பொருளாதாரத்தின் தயாரிப்பு மற்றும் பணிகள் துறை இரண்டிலுமுள்ள 100 நிறுவனங்களிலிருந்து ஒவ்வொரு மாதத்தினதும் இறுதி வாரத்தில் மேற்கொள்ளப்பட்டது.

வேறுபட்ட மாறிகளைக் கண்காணிப்பதன் மூலம் கட்டுமானக் கைத்தொழில் முன்னேற்றங்கள் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்வதற்காக 2017ஆம் ஆண்டுப்பகுதியில் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடு கட்டுமானத் துறைக்கும் விரிவாக்கப்பட்டது. இவ்வளவீட்டிற்கான மாதிரிக் கட்டமைப்பானது கட்டுமானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு செய்யப்பட்ட கட்டுமானக் கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு விருத்தி செய்யப்பட்டது. கட்டுமானக் கைத்தொழிலுடன் தொடர்பான எதிர்வுகூறலின் வளர்ச்சியை வலுப்படுத்தும் நோக்குடன் விரைவான கால இடைவெளிகளைக் கொண்ட குறிகாட்டியினை அபிவிருத்தி செய்து கொள்ளும் பொருட்டு 2017 யூலையிலிருந்து அளவீடானது மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

கொடுகடன் சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பல்பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட கொடுகடன் நிலைமைகள் அளவீடு 2017ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொடர்ந்தது. இது கேள்விப்பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வதற்கு வடிவமைக்கப்பட்ட கொடுகடன் கேள்வி அளவீட்டினையும் கொடுகடன் சந்தைகளின் வழங்கல்பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட கொடுகடன் வழங்கல் அளவீட்டினையும் உள்ளடக்குகிறது. கொடுகடன் கேள்வி அளவீட்டினைப் பொறுத்தவரையில் இலக்கிடப்பட்ட குடித்தொகையாக மேல் மாகாணத்திலும் இலங்கை மத்திய வங்கி பிரதேச பிரசன்னங்களைக் கொண்ட மாகாணங்களிலுமுள்ள பொருளாதாரத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் காணப்பட்டன. கொடுகடன் நிரம்பல் அளவீடானது நாட்டிலுள்ள அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்குகிறது. கொடுகடன் நிலைமை அளவீட்டின் பெறுபேறுகள் கொள்கை வகுப்பு நோக்கங்களுக்காக அரையாண்டு அடிப்படையில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டன.

**ஆ) பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு**

பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு 2006இல் அது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து மாதாந்த அடிப்படையில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நடைமுறை அளவீடு மூன்று முக்கிய வகை பதிலிறுப்பாளர்களான கம்பனித் துறை, வீட்டுத் துறை மற்றும் கல்வியியலாளர்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. இதில் கல்வியியலாளர்கள் 2017இன் பிற்பகுதியில் பதிலிறுப்பாளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். புள்ளிவிபரத் திணைக்களம் 2017இல் மீளமாதிரிப்படுத்தல் செயன்முறையினைக் குறிப்பாக கம்பனித் துறையில் நிறைவு செய்து கொண்டுள்ளது. பதிலிறுப்பாளர்கள் நடைமுறைப் பணவீக்க அனுமானங்கள் மற்றும் பணவீக்க அதிகரிப்புக்கள் மீதான கணியம்சார் மற்றும் தரம்சார் தகவல்கள் இரண்டையும் 12 மாதங்கள் முன்னாலுள்ள காலப்பகுதிக்காக வழங்குகின்றனர். மாதாந்த அடிப்படையிலான அளவீட்டின் பெறுபேறுகள் கொள்கைத் தீர்மானங்களை வகுக்கும் செயன்முறைக்காக முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

**இ) தொழிற்படை தகவல்கள் மற்றும் அரச துறை தொழில்நிலை அளவீடு**

தொழில் சந்தைத் தரவு பகுப்பாய்வினைப் பொறுத்தவரையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் ஏனைய தரவு வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் தொழில்நிலை, தொழிலின்மை, வெளிநாட்டு தொழில்நிலை, தொழிலாளர் உறவுகள், தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள் மற்றும் தொழிலாளர் உற்பத்தித்திறன் என்பன தொடர்பான பகுப்பாய்விற்குட்பட்டது. கொள்கை உருவாக்கச் செயன்முறைக்கு உதவும் பொருட்டு தேசிய மற்றும் பன்னாட்டு முகவர்களுடன் ஒத்துழைப்பு தரவுப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டது.

அரச துறை தொழில்நிலையின் அபிவிருத்திகளைக் கண்டறிவதற்காக அனைத்து அரச துறை நிறுவனங்களையும் உள்ளடக்கி அரையாண்டு அடிப்படையில் அரச துறை தொழில்நிலை அளவீடு நடத்தப்பட்டது. எனினும், நிதி அமைச்சின் முகாமைத்துவப் பணிகள் திணைக்களமும் இதே போன்றதொரு அளவீட்டினை நடத்துவதனால் முகாமைத்துவப் பணிகள் திணைக்களம் முன்னரே தீர்மானிக்கப்பட்ட இடைவெளியில் தேவையான அரச துறை தொழில்நிலை தொடர்பான தரவுகளை 2018ஆம் ஆண்டிலிருந்து வழங்குவதற்காக புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் ஒத்துழைப்பதற்கு இணங்கியிருக்கின்றது. இந்த அளவீட்டின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் பொதுமக்களின் தகவல்களுக்காக மத்திய வங்கியின் வருடாந்த வெளியீடுகளினூடாகப் பிரசுரிக்கப்பட்டது.

**ஈ) தனியார் நலப் பணிகள் அளவீடு**

மொ.உ.உற்பத்தி எதிர்வுகூறலை மேம்படுத்துவதற்காக தனியார் துறை நலப் பணிகள் மீதான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக புதிய சுட்டெண்ணினை அறிமுகப்படுத்துகின்ற நோக்குடன் புள்ளிவிபரத் திணைக்களம் இவ்வளவீட்டினை முன்னெடுத்தது. இது தொடர்பில், நாட்டில் தனியார் நல நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கத்தக்க விதத்தில் பொருத்தமான மாதிரியொன்றினை அடையாளம் கண்டு கொள்வதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாக இலங்கையிலுள்ள தனியார் வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களினால் சிகிச்சையளிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையினைக் கணக்கெடுப்பதற்காக இவ்வாண்டுப்பகுதியில், தனியார் நலப் பணிகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட இலக்கிடப்பட்ட வைத்தியசாலைகளின் தொகையினை இலக்கிடும் வேலைகளைத் திணைக்களம் முதலில் நிறைவு செய்தது. தொகைமதிப்புப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு 2017இன் 2ஆம் காலாண்டிலிருந்து வெளிநோயாளர் அதேபோன்று அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மீதான சேகரிக்கப்பட்ட மாதாந்த தகவல்களின் அடிப்படையில் மாதிரி அளவீடொடன்று நடத்தப்பட்டது. இந்த அளவீடு தனியார் துறை நலப் பணிகளில் ஏற்பட்ட பெறுமதிகூட்டப்பட்ட வளர்ச்சியை எதிர்வுகூறுவதற்கான அளவுக்குறிகாட்டியொன்றாகத் தனியார் நலப் பணிகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்கின்றது.

**உ) சிறப்பு அங்காடி சில்லறை வர்த்தகத்தின் அளவீடு**

நாட்டின் நவீன சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் எதிர்கால வாய்ப்புக்களை அடையாளம் காணும் விதத்தில், அளவுக்குறிகாட்டியினைத் தொகுப்பதற்காக நாட்டில் தொழிற்படுகின்ற முக்கிய சிறப்பு அங்காடி சங்கிலி அமைப்பினை இலக்காகக் கொண்டு 2017 ஆண்டுப்பகுதியில் திணைக்களம் அளவீடொன்றினை ஆரம்பித்தது. இது புள்ளிவிபரத் திணைக்களத்தின் குறிகாட்டியை அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உற்பத்தி எதிர்வுகூறலின் புதிய குறிகாட்டியொன்றாக உள்ளடக்கப்பட வேண்டிய சிறப்பு அங்காடி சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் போக்கினைக் கண்டறிய உதவும். மேலும், இது பொருளாதாரத்தின் நுகர்வோர் செலவிடல் மாதிரியினைப் பகுப்பாய்வு செய்வதற்கான பதிலியாகப் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**ஊ) கூட்டுறுதித் தொடர்மாடிமனைகளின் சந்தை அளவீடு**

கூட்டுறுதித் தொடர்மாடிமனைகளின் விளம்பரப்படுத்தப்பட்ட விற்பனை விலைகளைச் சேகரிப்பதற்காகவும் வரவிருக்கும் கூட்டுறுதித் தொடர்மாடிமனைகளின் எண்ணிக்கையை அடையாளம் காண்பதற்காகவும் நிறைவுசெய்யப்பட்ட மற்றும் நடந்து கொண்டிருக்கும் திட்டங்களில் விற்பனைகளைக் கண்டறிவதற்காகவும் சந்தையிலுள்ள பிரதான கூட்டுறுதித் தொடர்மாடிமனைகளை நிர்மாணிப்பவர்களை உள்ளடக்கி 2017 சனவரி மாதாந்த அடிப்படையில் இணைய மற்றும் தொலைபேசி அடிப்படையிலான அளவீடு நடாத்தப்பட்டு வருகிறது. எனினும், பரிவர்த்தனை செய்யப்பட்ட விலைகள் உடனடியாக கிடைக்கத்தக்கதாக இல்லாமையாலும் விலை அசைவுகளுக்கான காரணங்களை அடையாளம்

காண்பதற்காகவும் காலாண்டு அடிப்படையிலான வினாக்கொத்தை அடிப்படையாகக் கொண்ட அளவீட்டை மேற்கொள்வதற்கு புள்ளிவிபரத் திணைக்களம் தீர்மானித்தது. எனவே, கூட்டுறுதித் தொடர்மாடிமனைகளை நிர்மாணிப்பவர்களை இலக்காகக் கொண்டு உண்மையான விற்பனை விலைகள், கேள்வி, விலை மாற்றத்துக்கான காரணங்கள், ஏற்கனவே நடந்து கொண்டிருக்கும் மற்றும் எதிர்வரும் வீட்டலகுகளின் எண்ணிக்கை, வசிப்பதற்காக உபயோகிக்கவுள்ள திட்டங்கள், கொள்வனவாளரின் முதலீட்டு விபரம் மற்றும் நிர்மாணிப்போரின் முன்னோக்கிய அனுமானம் என்பனவற்றின் மீதான தகவல்களைச் சேகரிப்பதற்கு அளவீடுகளை மேற்கொள்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் ஆண்டின் இறுதிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. இத்தகவல் கொள்கை உருவாக்க நோக்கங்களுக்கு விலைப் போக்குகளை முன்கணிப்பதற்கு உதவும். பூர்வாங்க அளவீடு 2017 செத்தெம்பரில் நடத்தப்பட்டதுடன் பங்கேற்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டல்களும் உள்ளடக்கப்பட்டதுடன் புள்ளிவிபரத் திணைக்களம் 2018 இலிருந்து காலாண்டு அடிப்படையில் அளவீடுகளை ஆரம்பித்தது. மேலும் இவ்வளவீட்டினூடாகத் திணைக்களம் இத்துறையின் கிரமமான அபிவிருத்திகளைக் கண்காணிக்கும் பொருட்டு சந்தை தொழிற்பாட்டாளர்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேண எண்ணியுள்ளது.

எ) நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை

1978இல் தொடங்கப்பட்ட நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை நுகர்வுப்பொருட்களின் சில்லறை மற்றும் உற்பத்தியாளர் விலைகள், முறைசாரா தனியார் துறையின் நாளாந்தக் கூலிகள் மற்றும் அண்ணளவாக்கங்கள் மற்றும் வேளாண்மை மற்றும் மீன்பண்டங்களின் எதிர்கால உற்பத்தி மட்டங்களின் எறிவுகள் என்பன வாராந்த, மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. முறைமையின் கீழ் சேகரிப்பட்ட தரவுகள் விலை மற்றும் விலைகளில் பருவகால வேறுபாடுகள் மற்றும் பிராந்திய வேறுபாடுகள், விலைச் சுட்டெண்களின் தொகுப்பு மாகாண மொ.உ.உற்பத்தி மற்றும் இலங்கை சுபீட்சச் சுட்டெண், விலை அசைவுகளை எதிர்வுகூறல், விலைகள் மீதான கொள்கை மாற்றங்களின் தாக்கத்தின் மதிப்பீடு, தேசிய செலவினம் மற்றும் வருமானத்தின் மதிப்பீடு மற்றும் பொதுமக்களுக்கு விலைகள் மற்றும் கூலிகளைப் பரப்புதல் என்பனவற்றிற்காகப் பரந்தளவிற்குப் பயன்படுத்தப்பட்டன.

ஏற்கனவேயுள்ள முறைமையின் கீழ் தரவுகள் தீவுமுழுவதனையும் உள்ளடக்கிய தரவுச் சேகரிப்பு மையங்களுக்காகப் தரவுப் பரீட்சகர்களாக பணியாற்றிய அரச பாடசாலை ஆசிரியர்களூடாகச் சேகரிக்கப்பட்டன. மேலும், இம்முறைமையானது புறக்கோட்டைச் சந்தை, மரடஹகமுல்ல அரிசிச் சந்தை, தம்புள்ள மற்றும் நராகென்பிட்டியவிலுள்ள சிறப்புப் பொருளாதார மையங்கள் மற்றும் நீர்கொழும்பு, பேலியகொட மீன்சந்தைகள் என்பனவற்றிலிருந்து மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைகள் மீதான தரவுகளை நாளாந்தம் மற்றும் வாராந்த அடிப்படையில் அறிக்கையிடுவதற்காக ஆசிரியர்களல்லாத தரவுச் சேகரிப்பாளர்களைப் பயன்படுத்திக் கொண்டது. முகாமைத்துவத் தகவல் முறைமையினை வலுப்படுத்தும் பொருட்டு திணைக்களம் தெரிந்தெடுக்கப்பட்ட சந்தைகளிலிருந்து பல்வேறுபட்ட உணவுப் பண்டங்களினது மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகளை நேரடியாகச் சேகரித்ததுடன் பொதுவான தகவல்களை நாளாந்த அடிப்படையில் வெளியிட்டது.

நேரடி அடிப்படையிலான தரவுச் சேகரிப்புப் பரிமாற்றம், கூட்டுத்தொகையாக்குதல் மற்றும் பரப்புதல் ஒழுங்குகளை உயர்ந்த தரத்துடன் பேணும் முறைமைக்கு தரவுச் சேகரிப்பு ஒழுங்குகளில் வினைத்திறனை உயர்த்துவதற்காக தற்போதுள்ள நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினைத் உயர்தரத்துடன் திருத்தியமைப்பதற்காக 2017ஆம் ஆண்டுப்பகுதியில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினைத் திருத்தியமைப்பதன் முக்கிய குறிக்கோள், கொள்கை வகுப்புச் செயன்முறைக்கு உரிய நேரத்தில் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அசைவினை எதிர்வு கூறுகின்றமையினை வசதிப்படுத்துவதற்கான சில்லறை விலைகளைச் சேகரிப்பதேயாகும். திருத்தியமைக்கப்பட்ட நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையின் கீழ் டப்லட் கணனிகளினூடான இ-தரவுச் சேகரிப்பு ஒழுங்குகள் மீதான புதிய ஆசிரியர் பரீட்சகர் வலையமைப்பிற்காக 2017இன் நான்காம் காலாண்டுப் பகுதியில் பயிற்சி ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன. தரவுச் சேகரிப்பு பிரயோகத்துடன் கூடிய டப்லட் கணனிகள் அனைத்து ஆசிரியர் பரீட்சகர்களுக்கும் தரவுச் சேகரிப்பு தொடர்பான அனுபவங்களை அறிக்கையிடுவது பற்றி அவர்கள் அனுபவத்தினைப் பெறும் விதத்தில் பயிற்சியளித்தல் என்பன ஆய்வரங்கின் போது அறிமுகப்படுத்தப்பட்டன. தரமுயர்த்தப்பட்ட முறைமையின் கீழ், இலத்திரனியல் தரவுச் சேகரிப்புத் தளம் உத்தியோக பூர்வமாக 2018 சனவரி 01ஆம் நாளிலிருந்து ஆரம்பமாகியது.

### 28.2 சுட்டெண்களைத் தொகுத்தல்

அ) வியாபார மனோபாவச் சுட்டெண்

வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு வியாபார மனோபாவச் சுட்டெண்களான வியாபார நிலைமைகள், இலாபத்தன்மை, தேர்ச்சி பெற்ற தொழிலாளரின் கிடைப்பனவு, விற்பனைகள், கேள்வி மற்றும் இயலளவுப் பயன்பாடு என்பன கணிப்பிடப்பட்டன. பெறுபேறுகள் நாணயக் கொள்கைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் கொள்கை வகுத்தல் நோக்கங்களுக்காக முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், தெரிந்தெடுக்கப்பட்ட சுட்டெண்கள் வெளிப்புற பாவனையாளர்களுக்காக கூட்டுத்தொகை வடிவத்தில் காலாண்டு ரீதியாக இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

புதிய கட்டளைகள், உற்பத்தி, தொழில்நிலை, நிரம்பலர் வழங்கல் நேரம், கொள்வனவுகளின் இருப்பு என்பனவற்றின் துணைச் சுட்டெண்களுடனான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்புத்துறை மற்றும் புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கை, தொழில்நிலை, வேலைகளின் நிலுவை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றின் துணைச் சுட்டெண்களுடனான பணிகள் துறைக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் என்பன கணிக்கப்பட்டு, மாதத்திற்கு மாத மாற்றம் மதிப்பிடப்பட்டதுடன் கொள்கைத் தீர்மானத்தினை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக நாணயக் கொள்கைக் குழுவிற்கும் மூத்த முகாமைத்துவத்திற்கும் அறிக்கையிடப்பட்டதுடன் பொதுமக்களுக்காக பத்திரிகை அறிவித்தலும் வெளியிடப்பட்டது.

ஆ) சொத்து விலைச் சுட்டெண்கள்

காணி விலைச் சுட்டெண்ணானது கொழும்பு, தெஹிவளை, ஹோமஹம, கடுவெல மற்றும் கெஸ்பாவ பிரதேச செயலகப் பிரிவுகளின் 51 உபபிரிவுகளுக்கான மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டுத் தரவுகளைப் பயன்படுத்தி 2017ஆம் ஆண்டுப்பகுதியில் அரையாண்டு அடிப்படையில் தொடர்ந்து கணிப்பிடப்பட்டது. வதிவிட ரீதியான வர்த்தக ரீதியான மற்றும் கைத்தொழில் ரீதியான சொத்துக்களை உள்ளடக்கி மூன்று தனித்தனியான சுட்டெண்கள் தொகுக்கப்பட்ட வேளையில் ஒட்டுமொத்த காணி விலைச்சுட்டெண் இச்சுட்டெண்களின் இலகுவான சராசரியொன்றாகும். மேலும், புள்ளிவிபரவியல் திணைக்களம் தற்போதுள்ள சுட்டெண்களை புவியியல் ரீதியாகவும் முறையியல் ரீதியாகவம் மேம்படுத்துவதன் மூலம் உண்மைச் சொத்து ஆதன சுட்டெண்களின் உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்காக பல முன்னெடுப்புக்களை எடுத்திருக்கிறது. மேலும், முதற்றடவையாக, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் பொதுமக்களின் தகவல்களுக்காக காணி விலை அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

வதிவிட சொத்துச் சந்தையின் கூட்டுறுதி தொடர்மாடிமனைப் பிரிவில் காணப்படும் அபிவிருத்திகளை அறிந்து கொள்வதற்காக புதிய சுட்டெண்ணினைத் தொகுக்கின்ற முயற்சிகளைத் திணைக்களம் முன்னெடுத்திருக்கிறது. சுட்டெண்ணானது கொழும்பு மாவட்டத்தினை உள்ளடக்கி கூட்டுறுதித் தொடர்மாடிமனை சொத்துச் சந்தையின் விலை

அசைவுகளைக் கண்காணிப்பதற்காக, பகிரங்கமாகக் கிடைக்கத்தக்க தகவல்களைப் பயன்படுத்தி 2017 சனவரியிலிருந்து மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டு முகாமைத்துவத் தகவல்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வினாக்கொத்தை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறுதி தொடர்மாடிமனை சந்தை அளவீட்டினூடாகப் பெறப்பட்ட தகவல் தற்போதுள்ள சுட்டெண்ணின் அசைவினை விளக்கக்கூடியதாக இருந்ததுடன் உண்மையான கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்ட புதிய சுட்டெண்கள் தொகுக்கப்படுவதனையும் இயலுமைப்படுத்தியது.

**இ) கூலிச் சுட்டெண்கள்**

புள்ளிவிபரத் திணைக்களம், பொருளாதாரத்தில் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் அசைவுகளை மதிப்பிடுவதற்காக கூலி வீதச் சுட்டெண்களைத் தொகுத்தது. இது தொடர்பாக அரச, முறைசார்ந்த தனியார் துறை மற்றும் முறைசாராத் தனியாரின் கூலி அசைவுகளைத் தனித்தனியாக பகுப்பாய்வுகள் செய்யப்பட்டன. அரச துறைக்கான பெயரளவு மற்றும் உண்மைக் கூலிகள் வீதச் சுட்டெண்கள் பொது நிருவாகச் சம்பள சுற்றறிக்கைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டன. முறைசார்ந்த தனியார் துறையின் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்கள் கூலி நிர்ணய சபை வர்த்தகங்களிலுள்ள ஊழியர்களுக்காக தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பெயரளவு கூலி வீதச் சுட்டெண்களைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டது. தற்போதுள்ள சுட்டெண்களின் பல்வேறு குறைபாடுகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, 2017இல் முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்களின் கூலிப் போக்குகளைப் பிரசன்னப்படுத்தும் வகையில் புதிய சுட்டெண்ணினைத் தொகுப்பதற்கு ஆரம்பித்தது. முறைசாரா தனியார் துறைக் கூலி அசைவுகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் நியதிகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

**28.3 முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளின் எதிர்வுகூறல்**

புள்ளிவிபரவியல் திணைக்களம் குறுங்கால நுகர்வோர் பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி வீதம் என்பவற்றை மாதிரி மற்றும் மாதிரியல்லா தொழில்நுட்பங்களை உபயோகித்து எதிர்வுகூறுகிறது. இவ்வெதிர்வுகூறல்கள் அலுவலர்மட்ட கூட்டம், நாணயக் கொள்கைக் குழு முன்னைய கூட்டம் மற்றும் நாணயக் கொள்கைக் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு மற்றும் கலந்துரையாடப்பட்டு, கொள்கை தொடர்பான முடிவுகளை எடுப்பதற்காக நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

பணவீக்க எதிர்வுகூறல்கள் பிரதானமாக அண்மைக்கால விலைப்போக்குகள், பொருளியலளவை நுட்பங்கள் மற்றும் சந்தை அபிவிருத்திகளுடன் தொடர்புடைய எதிர்பார்க்கப்பட்ட விலை அசைவுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குறுங்காலப் பணவீக்க எதிர்வுகூறல்கள் முக்கியமாக அண்மைய விலைப் போக்குகள், பொருளியலளவையியல் நுணுக்கங்கள் மற்றும் சந்தை அபிவிருத்திகளுடன் இணைந்த எதிர்பார்க்கப்பட்ட விலை அசைவுகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன. திணைக்களமானது, பணவீக்க எதிர்வுகூறல் மாதிரிகளை தெரிவு செய்வதனை மேம்படுத்துவதற்காக பணவீக்கத்தின் மீதான நிரம்பல் மற்றும் கேள்விப்பக்கத் தாக்கங்கள் இரண்டினையும் பிரதிபலிக்கின்ற புதிய மாறிகளை பணவீக்க எதிர்வுக்கூறல் கண்டறிந்தது. உண்மையில் அடையப்பட்ட மற்றும் உணரப்பட்ட மாற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் அடிக்கடி இற்றைப்படுத்தப்பட்டது. இது அவதானிக்கப்பட்ட நுகர்வோர் விலைகளின் அசைவுகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அளவீடுகளில் கண்டறியப்பட்டவற்றினூடாகப் பிரதிபலிக்கப்பட்டவாறு உள்ளீடு மற்றும் வெளியீட்டு விலைகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளுடன் சேர்ந்து அதன் அடிப்படையில் பணவீக்கத்தின் மீது தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

வளர்ச்சி எதிர்வுகூறல்கள், குறிகாட்டிகள் மற்றும் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட தொழில் நுணுக்கங்களின் அடிப்படையில் பொருளாதாரத்தின் ஒவ்வொரு துணை நடவடிக்கை தொடர்பான முதலாந்தர மற்றும் இரண்டாந்தரத் தரவுகளைப் பயன்படுத்திக் காலாண்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்டன. முன்னணிப் பொருளாதாரக் குறிகாட்டிகள், அளவீட்டில் கண்டறியப்பட்டவை மற்றும் பொருளாதாரத்தின் துணை நடவடிக்கைகள் தொடர்பான ஏனைய தகவல்கள் என்பன குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்களுக்கான நிபுணத்துவ நியாயப்படுத்தல்களுடன் இணைக்கப்பட்டன. மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட குறுங்கால எதிர்வுகூறல்களை வலுப்படுத்தும் பொருட்டு, 2017 காலப்பகுதியில், அதன் தொழில் நுணுக்க விடயங்களுக்கு குறுங்கால இயக்கவாற்றல் காரணி மாதிரியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

உள்ளக எதிர்வுகூறல் கட்டமைப்பிற்குப் புறம்பாக, புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் எதிர்வுகூறல் கொள்கை பகுப்பாய்வு முறைமைக்குத் தொடர்ந்தும் பங்களித்தது. இது, பணவீக்க மற்றும் மொ.உ.உற்பத்தியின் தேவைப்படுத்தப்பட்ட குறுங்கால எதிர்வுகூறல்கள் தொடர்பான பகுப்பாய்வுகள் மற்றும் ஏனைய தகவல்களுடன் ப.நா. நிதியத்தின் தொழில்நுட்ப உதவியின் கீழ் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்துடன் கூட்டாக அபிவிருத்தி செய்யப்பட்டது.

**28.4 பிரதேச புள்ளிவிபரங்களைத் தொகுத்தல்**

**அ)இலங்கை சுபீட்சச் சுட்டெண்**

நாட்டினதும் அதன் ஒவ்வொரு மாகாணங்களினதும் சுபீட்சத்தின் ஒட்டுமொத்த அந்தஸ்தினை மதிப்பிடுவதற்காக புள்ளிவிபரத் திணைக்களம் 2017இல் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினைத் தொடர்ந்தும் தொகுத்தது. நாட்டினதும் மாகாணங்களினதும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற கலப்புக் குறிகாட்டியாக இது விளங்குகிறது. இச்சுட்டெண், 43 பிரதிநிதித்துவ மாறிகளைப் பயன்படுத்தி அளவிடப்பட்ட மூன்று துணைச் சுட்டெண்களான பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல், மக்கள் நலனோம்புகை மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு ஆகிய சுட்டெண்களை உள்ளடக்கியுள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த சுபீட்சத்தின் பிரசன்னத்தினை மேம்படுத்தும் பொருட்டு, திணைக்களம் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் மாறிகளையும் முறைகளையும் மேம்படுத்துவதற்கான வழிகளைத் தொடர்ச்சியாக கண்டறிந்து வருகின்றது. இதன்படி, சுட்டெண்ணின் தரத்தினை வலுப்படுத்துவதற்காக 2017ஆம் ஆண்டுப்பகுதியில் மாகாண சபை உறுப்பினர்களிடையே பெண்களின் பங்கேற்பினை அளவிடுவதற்கான புதிய மாறியொன்று சமூக பொருளாதார உட்கட்டமைப்புப் பிரிவிற்கு உள்ளடக்கப்பட்டது.

**ஆ) மாகாண ரீதியாக மொத்த உள்நாட்டு உற்பத்தி**

தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தேசிய கணக்குகளின் மதிப்பீடுகளை புள்ளிவிபரத் திணைக்களம் மாகாண மட்டத்தில் தொடர்பான குறிகாட்டிகளைப் பயன்படுத்திப் பிரித்ததன் மூலம் பெயரளவு நியதிகளில் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியைக் மதிப்பிடப்பட்டது. 2016இற்கான எண்தொகைகளும் 2015ஆம் ஆண்டிற்காக மீளத்தொகுக்கப்பட்ட எண்தொகைகளும் 2017 ஒத்தோபரில் வெளியிடப்பட்டன. மதிப்பீடுகளின் நம்பகத்தன்மையினை மேம்படுத்துவதற்கு தேசிய எண்தொகைகளை மாகாண மட்டத்தில் பகிர்வதற்குத் திணைக்களம் பொருத்தமான குறிகாட்டிகளைக் கிரமமாகக் கண்டறிந்து வருகின்றது. மிகவும் இற்றைப்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்களைப் படிப்படியாக ஒருங்கிணைக்கும் எண்ணத்துடன் பொருத்தமானவிடத்து கலப்புக் குறிகாட்டிகளம் பயன்படுத்தப்பட்டன. இதன் விளைவாக, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் மொ.உ.உற்பத்தியுடன் இசைந்துசெல்லும் விதத்தில், கட்டுமானம், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளுக்கு மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

### 28.5 தகவல்களைப் பரப்புதல்

2017ஆம் ஆண்டுப்பகுதியில், புள்ளிவிபரத் திணைக்களம் வெளிவாரி தரவுப் பயன்படுத்துநர்களின் நன்மைக்காக இலங்கை மத்திய வங்கியின் வெப்தளமூடாக "தரவுநூல்நிலையம்" ஒன்றை ஆரம்பித்தது. இது இலத்திரனியல் தரவுத்தளத்தின் பகுப்பினை மேலும் மேம்படுத்தியதுடன் இது உள்ளகத் தரவுத் தேவைப்பாடுகளுக்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்திலிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்டது. தரவுத்தளமானது ஒன்பது உள்ளகத் திணைக்களங்கள் மற்றும் ஒரு சில வெளிவாரி நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட உண்மை, நாணயம், இறை, வெளிநாடு மற்றும் நிதியியல் துறை போன்ற பரந்துபட்ட பல்வேறு விடயங்கள் மீதான நேரத்தொடர் தரவுகளை உள்ளடக்கியது.

மேலும், திணைக்களம் அதன் இரண்டு பிரதான வருடாந்த வெளியீடுகளான "இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூக புள்ளிவிபரங்கள் - 2017 தொகுதி XXXIX இனை ஒகத்திலும் "இலங்கை சமூக பொருளாதார தரவு 2017 தொகுதி XL" இனைச் செத்தெம்பரிலும் மும்மொழிகளிலும் அச்சு வடிவிலும் இலத்திரனியல் வடிவிலும் வெளியிட்டது. திணைக்களம் தெரிந்தெடுக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களின் நாளாந்த விலை அறிக்கையையும் மாதாந்த மற்றும் வாராந்த பொருளாதார குறிகாட்டிகளையும் தொடர்ந்து 2017இல் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளமூடாக பொதுமக்களுக்கு உடனடியாகக் கிடைக்கச் செய்தது. திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அறிக்கை என்பனவற்றின் இரண்டு அத்தியாயங்களுக்கு பங்களிப்புச் செய்ததுடன் இலங்கை மத்திய வங்கியின் மாதாந்தச் செய்தித்திரட்டிற்கும் தரவுகளையும் வழங்கியது. மேலும், பத்திரிகை வெளியீடுகளூடாகப் பொதுமக்களுக்குப் பெருமளவு தகவல்கள் பரப்பப்பட்டதுடன் ஆண்டு முழுவதும் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் செயன்முறைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

### 28.6 உலகளாவிய தரமிடலில் இலங்கையின் நிலைமையினை மேம்படுத்தல்

#### அ)"வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல்" தரமிடல்

2016இல் அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு "வியாபாரம் செய்தலை இலகுபடுத்துங்கள்" தரமிடலில் இலங்கையின் நிலைமையின் மேம்படுத்துதலைப் பிரதான குறிக்கோளாகக் கொண்ட புதிய பணிக் குழுவானது உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் முதலீட்டிற்கான சூழலை சீர்திருத்துவதற்கான வழிகாட்டலொன்றை உருவாக்கி வெளியிட்டது. மேலும், புதிய பணிக்குழுவானது நிர்ணயிக்கப்பட்ட சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தும் முன்னேற்றத்தின் மீது தனிப்பட்ட செயலணிக் குழுவுடன் நெருக்கமாகக் கண்காணித்தது. எனவே, 2017ஆம் ஆண்டுப்பகுதியில் திணைக்களம் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை இறுதிப்படுத்துவதற்காக பல்வேறு கூட்டங்களிலும் கலந்து கொண்டது. தேவையான உள்ளீடுகளை வழங்குவதற்காக முன்னேற்றம் தொடர்பான கூட்டங்கள்/ செயலமர்வுகளில் கலந்து கொண்டது. நாட்டின் நிலைமையினை முன்னேற்றுவதற்காக பன்னாட்டு ஆய்வரங்குகளில் இலங்கையின் பங்கேற்பினை ஒருங்கிணைத்ததுடன் மற்றும் தரமிடலின் கீழ் தொடர்பான அதிகாரிகளுக்கு மாறிகளை உரிய நேரத்தில் கிடைக்கச் செய்வதனை முக்கிய கவனத்திற்கொண்டு தரவுகளைப் பரப்பியது.

#### ஆ) ஏனைய உலகளாவிய தரமிடல்

உலகளாவிய ஆளுகைக் குறிகாட்டிகள், உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண், பொருளாதார சுதந்திரச் சுட்டெண், மானிட அபிவிருத்திச் சுட்டெண், உலக சுட்டெண்ணில் பொருளாதார சுதந்திரம், ஊழல் நோக்கியல் சுட்டெண், இயலுமைப்படுத்தும் வர்த்தகச் சுட்டெண் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திகான அமைப்பின் நாட்டின் இடர்நேர்வு வகைப்படுத்தல் என்பன தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டதுடன் தரமிடலை மேம்படுத்துவதற்கான நாட்டின் நிலைமை மற்றும் உபாயங்கள் என்பன முகாமைத்துவத்திற்கும் தேவையானவிடத்து மற்றைய உயர் அதிகாரிகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன. பேரண்டப் பொருளாதாரத் தகவல்களும் ஏனைய தரவுகளும் மேற்குறிப்பிட்ட சுட்டெண்களின் இணங்குவிப்பாளர்களுக்கு வாராந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் வழங்கப்பட்டன.

### 29. நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வை

நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களமானது 2016இல் 06ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டத்தினால் எடுத்துரைக்கப்பட்டவாறாக நுண்பாக நிதித்துறையினை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் பொறுப்புகளுடன் தாபிக்கப்பட்டது. ஆகக் குறைந்த உரிமம் வழங்குதல் தேவைப்பாடுகளை நிறைவுசெய்கின்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுக்கு உரிமம் வழங்குதல், உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல், உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல், அரசசார்பற்ற நுண்பாக நிதியியல் அமைப்புக்களை ஆளுகின்ற விதிகளை வெளியிடுவதற்கு தொண்டு சமூகசேவை அமைப்புக்களின் பதிவாளருக்கான கோட்பாடுகள் மற்றும் தர நியமங்கள் என்பவற்றை வழங்குதல் ஆகியன நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பிரதான தொழிற்பாடுகளாகும்.

நுண்பாக நிதிச் சட்டத்தின் கீழ் உரிமத்திற்காக 2017இன் இறுதியளவில் ஒன்பது விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. விண்ணப்பங்களை மதிப்பிடலும் விண்ணப்பக் கம்பனிகளுக்கு பூர்வாங்க விஜயங்களை மேற்கொள்ளலும் 2017இன் போது இடம்பெற்றன.

மேலும், 2017இன் முதற் காலாண்டின் போது, தொண்டு சமூக சேவை நிறுவனங்களின் பதிவாளர்களுக்கான அரசசார்பற்ற நுண்பாக நிதியியல் அமைப்புக்களின் முன்மதியுடைய தேவைப்பாடுகள் மீதான கோட்பாடுகளும் தரநியமங்களும் மற்றும் வழிகாட்டல்களும் நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன. அரசசார்பற்ற நுண்பாக நிதி அமைப்புக்களை ஆளுகின்ற விதிகளை வழங்குவதனூடாக அக்கோட்பாடுகளை, தர நியமங்களை மற்றும் வழிகாட்டல்களை செயற்படுத்துவதற்கு தொண்டு சமூகசேவை அமைப்புக்கள் வேண்டப்பட்டுள்ளன.

#### அ) விழிப்பூட்டலும் இயலளவினைக் கட்டியெழுப்புதலும்

2017இன் போது நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் இலங்கை நுண்பாக நிதி நடைமுறைப்படுத்துநர்கள் அமைப்புடன் கூட்டிணைந்து நாடுமுழுவதும் ஏழு பொதுமக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

இந்நிகழ்ச்சித்திட்டங்களின் பிரதான குறிக்கோள், நுண்பாக நிதியியல் வாடிக்கையாளர்களின் அறிவினை வளர்ப்பதும் அவர்கள் மத்தியில் நிதியியல் உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதுமாகும்.

மேலும், பொருத்தமான கொள்கைகளை விதந்துரைக்கும் பொருட்டு நுண்பாக நிதியியல் துறையுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை இனங்காண்பதற்கு கிளிநொச்சி, நுவரெலியா மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களிற்கு நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினால் மூன்று ஆய்வு விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 30. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தினதும் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் கீழ், முறையே உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்து வருகிறது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திடம் முதனிலை வணிகர்களின் மேற்பார்வையும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் உரிமம் பெற்ற நிதியியல் நிறுவனங்களின் நியதிச் சட்ட ரீதியிலான பரீட்சிப்புக்களை நடத்துவதனையும் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்வதனையும் உள்ளடக்கியிருந்த வேளையில், ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடானது முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல் என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்பட்டது. முக்கிய தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் அதிகாரமின்றி நிதி வியாபாரங்களை மேற்கொள்வதாக குற்றம் சாட்டப்படும் கம்பனிகளைப் புலனாய்வு செய்தல், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், இத்துறையின் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல், நீதிமன்ற வழக்காடல்களுக்கு வசதியளித்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனித்தல் போன்ற மற்றைய பல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது.

2017 இறுதியில் திணைக்களத்தின் அதிகாரவரம்பிற்குள் 45 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் 6 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் 15 முதனிலை வணிகர்களும் காணப்பட்டனர். மேலும் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழ், 68 பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடுகின்ற நிறுவனங்களுக்கும் உரிமங்கள் வழங்கப்பட்டதுடன் இது சிறப்பியல்பு வாய்ந்த கம்பனிகளையும் உள்ளடக்குகிறது. இவ்வுரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் மற்றும் முதனிலை வணிகர்களின் பெயர்கள் இப்பிரிவின் இறுதியில் தரப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் விடுக்கப்பட்ட பணிப்புரைகளும் ஒழுங்குவிதிகளும் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளும் நடவடிக்கைகளும் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 30.1 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் மேற்பார்வை

#### அ. நியதிப் பரீட்சிப்புக்களை நடத்துதல்

i. திட்டமிடப்பட்டவாறு 2017ஆம் ஆண்டுப்பகுதியில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பில் வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களம் 30 வருடாந்த நியதிப் பரீட்சிப்புக்களை நடத்தியது. பரீட்சிப்பில் முக்கியமாகக் கண்டறியப்பட்ட விடயங்கள் குறைந்த வினைத்திறன், கம்பனி ஆளுகை தொடர்பான பிரச்சனைகள் கடன் இழப்புக்களுக்கான ஒதுக்கம் போதுமானளவில் இல்லாமை, உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள தவறுகள், சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும் வியாபார மாதிரிக் கணக்கிலிருந்து தோன்றுகின்ற உறுதிப்பாட்டுடன் தொடர்பான பிரச்சனைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

ii. நாணயச் சபை நேரக் கட்டமைப்புடன் கூடிய நடவடிக்கைத் திட்டங்களுக்கும் இப்பரீட்சிப்புக்களின் விதந்துரைப்புக்களுக்கும் ஒப்புதலளித்ததுடன் அவை பணிப்பாளர் சபையினதும் சபைத் துணைக் குழுக்களினதும் கவனத்திற்காகத் தொடர்பான கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டதுடன், இணங்கப்பட்ட நேரக் கட்டமைப்பிற்குள் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளம் சரிசெய்யும் வழிமுறைகளை எடுத்திருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

#### ஆ. தொடர்ச்சியான கண்கணிப்பினை மேற்கொள்ளுதல்

நடைபெற்று வருகின்ற திரவத்தன்மைப் பிரச்சனைகளின் காரணமாக வியாபாரத்தினை மேற்கொள்ளாத இரண்டு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் தவிர்ந்த அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பின்நெட் முறைமையினூடாக சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் தகவல்களினை அடிப்படையாக்க கொண்டு தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டன. நிதியியல் நிலைமைகள பற்றிய மதிப்பீட்டுச் செயன்முறையினை முன்னேற்றும் நோக்குடனும் மிக விரைவில் நேரிடக்கூடிய பிரச்சனைகளின் நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் சமிக்ஞைகளை அடையாளம் காண்பதற்குமாக இவ்வாண்டுப்பகுதியில் புதிய தொடர்ச்சியான கண்காணிப்பு முறையொன்று இவ்வாண்டுப்பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட்டது. இவ்வாண்டுப்பகுதியில் கிளை பரம்பல் தொடர்பான பின்நெட் கூற்று கிளை திறப்பு, மீளமைத்தல் மற்றும் மூடிவிடுதல் என்பன தொடர்பில் புதிதாக விடுக்கப்பட்ட பணிப்புரைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் திருத்தியமைக்கப்பட்ட வேளையில் புதிய கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் புதிய கூற்றுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தொடர்ந்துவரும் கண்காணிப்புக்களுக்கு மேலும் ஆதரவளிக்கும் விதத்தில் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் முகாமைத்துவக் கடிதங்கள், வெளிநாட்டுத் தரமிடல்கள் மற்றும் பத்திரிகை அறிவித்தல்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் "நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் முறைமையினூடாக" சாத்தியமான இடர்நேர்வுத் துறைகளை அடையாளம் கண்டதுடன் அத்தகைய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான மீட்பு நடவடிக்கைகளும் விதந்துரைக்கப்பட்டன. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் நிதியியல் பலத்தினையும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் அடிப்படையாகக் கொண்டு அவற்றைத் தரமிடுவதற்காக உள்ளக மேற்பார்வைத் தரமிடல் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இத்துறையின் பிந்திய அபிவிருத்திகள் பற்றி மூத்த முகாமைத்துவத்தினருக்குச் சரியான முறையில் தகவலளிக்கப்பட வேண்டுமென்பதனைக் கருத்தில் கொண்டு தொடர்ச்சியான கண்காணிப்பில் கண்டறியப்பட்ட விடயங்களும் துறையின் செயலாற்றமும் கிரமமான அடிப்படையில் நாணயச் சபைக்கு அறிவிக்கப்பட்டன.

#### இ. நலிவடைந்த உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மீதான தீர்க்கமான நடவடிக்கைகள்

2017ஆம் ஆண்டில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய கவனமாக, கடந்த பல ஆண்டுகளாகக் கடுமையான திரவத்தன்மை நெருக்கடிகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் கடன் தீராற்றலற்ற கம்பனிகளைக் கலைத்து விடுவதன் மீது காணப்பட்டது. நம்பகமான முதலீட்டு முன்மொழிவுகளை இறுதிப்படுத்த முடியாமல் இருக்கும் மூன்று செயற்படாத இடர்ப்பாட்டிலுள்ள கம்பனிகளை ஒடுக்கிவிடுவதற்கு நாணயச் சபை கொள்கையளவில் ஒப்புதலளித்துள்ளது. இதன்படி, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்ட உரிமத்தினை இரத்துச் செய்வதற்கான அறிவித்தலை விடுத்ததுடன் தற்பொழுது இது கம்பனியினை ஒடுக்கிவிடுவது தொடர்பான சட்ட தீர்மானங்களில் ஈடுபட்டு வருகின்றது. இன்னொரு கம்பனி தொடர்பில் முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்களிடமிருந்து பெறப்பட்ட அநேக முன்மொழிவுகளிலிருந்து நாணயச் சபை முதலீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட மூலதன உள்ளீட்டினை மேற்கொள்ளும் முன்மொழிவிற்கு கோட்டுபாட்டு ரீதியில் ஒப்புதலளித்தது. மற்றொரு கம்பனியினைப் பொறுத்தவரை, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் முதலீட்டாளர்களாக வரக்கூடிய முதலீட்டாளர்களுடன் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தை நடத்திய வேளையில், கம்பனி வைப்பாளர்களினால் தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகளிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. மேலும், பலயீனமான மூன்று கம்பனிகளுக்கெதிராக மூலதன உள்ளீடு மற்றும் அக்கம்பனிகளை மீளமைப்பதற்கான நெருங்கிய கவனிப்பினைச் செலுத்தியதன் மூலமும் அநேக முதலீட்டாளர்களாக

வரக்கூடியவர்களுக்கு வசதிகளை வழங்கியதன் மூலமும் அவற்றிற்கெதிரான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு கம்பனிகள் தொடர்பில் வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன் முன்னேற்றத்தினைக் கண்காணிப்பதற்காக இக்கம்பனிகளின் பணிப்பாளர் சபைகளுடனும் மூத்த முகாமைத்துவம் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடனும் கிரமமான கூட்டங்கள் நடத்தப்பட்டன.

### 30.2 முதனிலை வணிகர்களின் மேற்பார்வை

#### அ. நியதிப் பரீட்சிப்புக்களையும் தொடர்ச்சியான கண்காணிப்பினையும் மேற்கொள்ளுதல்

2017ஆம் ஆண்டுப்பகுதியில் இரண்டு முதனிலை வணிகர்களின் நியதிப் பரீட்சிப்புக்கள் நிறைவடைந்த வேளையில், அனைத்து முதனிலை வணிகர்கள் தொடர்பிலும் தொடர்ச்சியான மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டது. மேற்பார்வை வழிமுறைகளாக பெர்பெட்சுவல் ரெசரீஸ் லிமிடெட் மற்றும் பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் பிஎல்சி - முதனிலை வணிகர் பிரிவு என்பனவற்றின் வியாபார நடவடிக்கைகள் ஆறு மாத காலப்பகுதிக்கு (பெர்பெட்சுவல் 2017 யூலை 06ஆம் திகதியிலிருந்தும் பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் 2017 ஓகத்து 15ஆம் நாளிலிருந்தும்) இடைநிறுத்தப்பட்டன. மேலும், என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி 2017.07.24ஆம் திகதியலிருந்தும் அரச பிணையங்கள் முதனிலை ஏலங்களில் பங்கேற்பதிலிருந்தும் தடைசெய்யப்பட்டது. வங்கி முதனிலை வணிகர் பிரிவின் மேற்பார்வை, பரீட்சிப்பு மற்றும் புலனாய்வு மற்றும் காலாந்தரச் செயலாற்ற மதிப்பீடு என்பன தொடர்பான தொழிற்பாடுகள் 2018.01.01 இலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்கு நாணயச் சபை ஒப்புதலளித்தது. அரச பிணையங்கள் சந்தை மற்றும் சந்தை நடத்தையின் அபிவிருத்தி தொடர்பில் அனைத்து முதனிலை வணிகர்களுக்கும் (வங்கியல்லா முதனிலை வணிகரின் மற்றும் வங்கி முதனிலை வணிகர்கள் பிரிவு) தொடர்ந்தும் ஒழுங்குவிதிகளையும் பணிப்புரைகளையும் விடுப்பதற்கு பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டஅ வேளையில் வங்கியல்லா மேற்பார்வைத் திணைக்களம் முதனிலை வணிகர்களுக்கான முன்மதியுடைய தேவைப்பாடுகள் மீது பணிப்புரைகளையும் வழிகாட்டல்களையும் விடுக்க அதிகாரமளிக்கப்பட்டது.

#### ஆ. என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி மீதான தீர்மான நடவடிக்கைகள்

என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சியின் ஆற்றலற்ற நிதியிடல் நடைமுறைகளின் விளைவாக திரவத்தன்மையற்ற நிதியியல் நிலைமை தொடர்பில் 2016ஆம் ஆண்டில் முறையியல் சார்ந்த கரிசனைகள் தோன்றின. பிணையிடப்பட்ட மீள்கொள்வனவு மற்றும் உடனடி முதலீடுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டதுடன் நிதி குற்றவியல் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி இற்காக முன்மொழியப்பட்ட தீர்மானப் பொறிமுறையின் நடைமுறைப்படுத்தலுக்காக நாணயச் சபை ஒப்புதலை வழங்கியுள்ளதுடன் அதற்கேற்ப தீமானப் பொறிமுறை தற்பொழுது கலந்துரையாடல்களின் கீழிருந்து வருகின்றது.

### 30.3 முன்மதியுடைய ஒழுங்குவிதிகள், கொள்கை வடிவமைப்புக்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்களுக்கு ஒப்புதல் வழங்குதல்

#### அ. பணிப்புரைகளையும் முன்மதியுடைய தேவைப்பாடுகளையும் வழங்குதல்

**i**. உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகள்

உந்து ஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகள் 2017ஆம் ஆண்டிற்கான தேசிய வரவு செலவுத்திட்ட முன்மதியுடைய இசைந்து செல்லும் விதத்தில் திருத்தப்பட்டன. இதன்படி, பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான உயர்ந்தபட்ச வரையறைகள் பின்வருமாறு:

| ஊர்திகளின் வகை | | பெறுமதிக்கான கடன் விகிதம் (%) |
|---|---|---|
| முதல் பதிவிற்குப் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவுசெய்யப்படாத மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் | | |
| (i) | வர்த்தக ஊர்திகள் (சரக்கு வண்டிகள் மற்றும் பார ஊர்திகள்) | 90 |
| (ii) | உந்து ஊர்திகள், கடுவழிப்பயன் ஊர்திகள் மற்றும் வான்கள் | 50 |
| (iii) | முச்சில்லு வண்டிகள் | 25 |
| (iv) | வேறு ஏதேனும் ஊர்திகள் | 70 |
| முதல் பதிவிற்குப் பின்னர் ஓராண்டிற்கும் குறைவான காலப்பகுதியில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டுவரும் பதிவுசெய்யப்பட்ட ஊர்திகள் | | 70 |

மேலேயுள்ள வரையறைகள் சுற்றுலாவில் அத்துடன் அல்லது போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிக்கு அவர்களின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக பயன்படுத்தப்படவுள்ள ஊர்திகள் தொகுதியின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது. அத்தகைய ஊர்திகள் முதலாவது பதிவுத் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் எவரேனும் ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்கு மாற்றல் செய்யப்படக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டனவாகும்.

**ii.** குறைந்தபட்ச மைய மூலதனத்தின் மீதான பணிப்புரை

மூலதன நிலைமையினை வலுப்படுத்தும் நோக்குடனும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளை ஈர்த்துக்கொள்ளும் விதத்தில் இயலாற்றலை அதிகரித்துக் கொள்வதற்காகவும் படிப்படியான அடிப்படையில் நிறைவுசெய்து கொள்வதற்காகவும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான குறைந்தபட்ச மைய மூலதனத்தினை அதிகரிக்க வேண்டியிருந்தது. இதன்படி, குறைந்தபட்ச மைய மூலதனம் ரூ.400 மில்லியனிலிருந்து 2018.01.01 அளவில் ரூ.1.0 பில்லியனுக்கும் 2019.01.01 அளவில் ரூ.1.5 பில்லியனுக்கும் 2020.01.01 அளவில் ரூ.2.0 பில்லியனுக்கும் 2021.01.01 அளவில் ரூ.2.5 பில்லியனுக்கும் அதிகரிக்கப்படவுள்ளது.

**iii.** வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்பிலான சலுகைகள்

தேசிய நலன் கருதி வியாபாரம் மற்றும் வழமையான தொழிற்பாடுகளின் புனரமைப்பிற்கு வசதியளிப்பதற்காக பின்பற்றப்பட்ட தேசிய கொள்கையின் நியதிகளில் வெள்ளம், மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்குப் பின்வரும் சலுகைகளை வழங்குவதற்கு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் அனுமதிக்கப்பட்டன.

i. அனைத்துச் செயற்படும் கொடுகடன் வசதிகள் தொடர்பிலும் 3 மாதங்களை விஞ்சாத சட்ட இசைவுத் தாமமொன்றினை வழங்குவதற்கு

ii. மேலே சட்ட இசைவுசத் தாமதத்தின் கீழுள்ள கடன்பாட்டாளர்களின் மீதும் மற்றும் அவர்களது வியாபார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கு/ மீள ஆரம்பிப்பதற்காக மீளஅட்டவணைப்படுத்தல் நியதிகளில் தமது கடன்களைத் தீர்ப்பனவு செய்ய விரும்புகின்ற மேலேயுள்ளவாறு

பாதிக்கப்பட்ட செயற்படாக் கடன்பாட்டாளர்களுக்கான தண்ட வீதத்தினைத் தளர்த்துதல்

**iv. மூலதனப் போதுமை மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு தொடர்பான முன்னேற்றப் பணிகள்**

இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான வலுவான வலியுறுத்தல்களுக்கு ஆதரவளிப்பதனையும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளிதும் இடர்நேர்வுகளை மதிப்பிடும் இயலாற்றல்களில் இடம்பெற்றுவரும் முன்னேற்றங்களை ஊக்குவிப்பதனையும் நோக்கமாகக் கொண்டு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய மூலதனப் போதுமை கட்டமைப்பு 2018 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும். மூலதனப் போதுமை கட்டமைப்பு தொடர்பான வரைவுப் பணிப்புரை தொழில் துறையினரின் நோக்கு/ அவதானிப்புக்களுக்காக அவர்களுக்கு அனுப்பு வைக்கப்பட்டிருப்பதுடன் அதன் பின்னர் வரும் காலத்தில் இப்பணிப்புரைகள் விடுக்கப்படவுள்ளன. மேலும், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு இறுதிப்படுத்தப்படும்.

**ஆ. ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல்**

i. தொடர்ச்சியான கண்காணிப்பின் ஒரு பகுதியாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் அமைப்பு அகவிதிகளின் திருத்தம் துணைக் கம்பனிகளை உருவாக்குதல், படுகடன் சாதனங்களை வழங்குதல், பங்கு மூலதனத்தினை அதிகரித்தல், புதிய முதலீட்டாளர்களின் மூலம் மூலதனத்தினை அதிகரித்தல், வெளிமூலங்களிலிருந்து வியாபாரத் தொழிற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளுதல், புதிய பணிப்பாளர்களையும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களையும் நியமித்து, பதிவு செய்யப்பட்ட முகவரியினை மாற்றுதல், வியாபாரத் தலங்களை வேறு இடத்திற்கு மாற்றுதல் சொத்துடமையினை மாற்றுதல் மற்றும் 49 புதிய கிளைகளைத் திறத்தல் என்பனவற்றிற்காக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்கியது.

ii. இவ்வாண்டுப்பகுதியில் இரண்டு நிறுவனங்களை இணைக்கும் வேலைகள் நிறைவடைந்தன. சிலோ பினான்ஸ் பிஎல்சி றிச்சார்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டதுடன் இசுறு லீசிங் கம்பனி சென்றல் பினான்ஸ் பிஎல்சியுடன் இணைக்கப்பட்டது.

**30.4 அதிகாரமின்றி நிதித் தொழிலை கொண்டு நடாத்துகின்ற ஆட்கள் மீதான விசாரணைகள்**

சந்தைத் தகவல்கள் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கமைய திணைக்களமானது அதிகாரமின்றி நிதி தொழிலினை மேற்கொள்பவர்களின் மீது விழிப்புடன் தொழிற்பட்டது. 2017 இறுதியிலுள்ளவாறு, அதிகாரமளிக்கப்படாது நிதித் தொழிலினை மேற்கொள்கின்றது எனத் தீர்மானிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மீது சட்ட நடவடிக்கையினை ஆரம்பிப்பது தொடர்பில் மாண்புமிகு சட்டமா அதிபருடன் ஆலோசனைகள் நடத்தப்பட்டன.

**30.5 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் பொதுமக்கள் விழிப்புணர்வினையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புதல்**

**அ. பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்களிலும் முதலீட்டுத் திட்டங்களிலும் முதலீடு செய்வதிலுள்ள இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கத்துடன் வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களம் 8 பொதுமக்கள் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதுடன் 10 இலத்திரனியல் ஊடக விளம்பரங்களையும் ஒலிபரப்பியது. இவ்வாண்டுப்பகுதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் பட்டியலையும் ஏனைய பயன்மிக்க தகவல்களையும் உள்ளடக்கிய ஏறத்தாழ 9,000 துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட்டன.

**ஆ. துறையின் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல்**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான காலாண்டுக் கூட்டங்களை ஆளுநரின் தலைமையில் நடத்தியது. இக்கூட்டங்கள், பொருளாதாரம் தொடர்பான விடயங்கள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்தி விடயங்களில் மத்திய வங்கிக்கும் கம்பனிகளுக்குமிடையில் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் அரங்கமாகச் செயற்பட்டன. மேலும், திணைக்களம் கம்பனி மற்றும் துறையுடன் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கும் சீர்செய்யும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குமாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுடனும்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுடனும் வெளிவாரி கணக்காய்வாளர்களுடனுமான கூட்டங்களை நடத்தியது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்திலும் பிரதேச அலுவலகங்களிலும் நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களில் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

**30.6 அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளுக்கு வசதியளித்தல்**

**அ. கோல்டன் கீ கிறடிற் கார்ட் கம்பனி லிமிடெட்**

கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட்டின் பிணைய வைப்பு உடமையாளர்களுக்கு 3 தொகுதிகளாக மீள்கொடுப்பனவைச் செய்கின்ற உயர் நீதிமன்றத்தினால் ஒப்புலளிக்கப்பட்ட மாதிரிகள் தொடர்பில் கோல்டன் கீ கிறடிட் கார்ட் கம்பனி லிமிடெட் 3ஆவது தொகுதியினைச் செலுத்தும் செயன்முறையில் காணப்படுகிறது. அரசாங்கம் தவணை அடிப்படையில் 3ஆவது தொகுதி நிதியத்தினை விடுவிப்பதற்கு தீர்மானித்திருப்பதுடன் மொத்தமாகத் தேவைப்படும் ரூ.4,055 மில்லியனில் ரூ.3,000 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. நிதியம் கிடைத்ததும் மீதி வைப்பாளர்களின் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

**ஆ. மற்றைய அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள்**

திணைக்களமானது, பினான்ஸ் அன்ட் கறண்டி புறெப்பெட்டி டெவலப்மென்ட் பிறைவேற் லிமிடெட் மற்றும் எவ் அன்ட் ஜி றியல் எஸ்டேட் கம்பனி லிமிடெட் என்பனவற்றின் வைப்பாளர்களினால் 2015இல் தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகளுக்குத் தொடர்ந்தும் வசதியளித்தது.

**30.7 பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கையாளுதல்**

திணைக்களமானது நியாயமற்ற வாடிக்கையாளர் நடைமுறைகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக்குவிடும் கம்பனிகளுடன் அவர்கள் மேற்கொண்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலும் நிவாரணங்களைப் பெறுதல் தொடர்பிலும் பொதுமக்களிடமிருந்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் பற்றி பெறப்பட்ட பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு காண்பதற்கும் மத்தியஸ்தம் வகித்தது.

இணைப்பு II - 3

## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினால் மேற்பார்வை திணைக்களத்தினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்கள் (2017இறுதியில் உள்ளவாறு)

**உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்**

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
6. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
7. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
8. பிராக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
9. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
10 சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி[அ]
11 சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
12. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
13. கொலம்பு ட்ரஸ்ட் பினான்ஸ் பிஎல்சி
14. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
15. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
16. ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்
17. எச்என்பீ கிறமீன் பினான்ஸ் லிமிடெட்
18. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
19. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
20. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
21. எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி
22. மெல்ஸ்ரா றீகல் பினான்ஸ் லிமிடெட்
23. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
24. மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி
25. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
26. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
27. ஓறியன்ட் பினான்ஸ் பிஎல்சி
28. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
29. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
30. றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்
31. சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட்
32. செங்கடகல பினான்ஸ் பிஎல்சீ
33. செரன்டிப் பினான்ஸ் லிமிடெட்
34. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
35. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
36. சியப்பதா பினான்ஸ் பிஎல்சி
37. சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி
38. பிறைம் பினான்ஸ் பிஎல்சி (முன்னர் சமிற் பினான்ஸ் லிமிடெட்)
39. சுவர்ணமஹால் பினான்ஸ் சேர்விஸ் பிஎல்
40. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
41. த ஸ்டான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
42. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
43. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
44. யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
45 வெலிபல் பினான்ஸ் பிஎல்சி

(அ) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட மீள்கட்டமைப்புக்குட்பட்டதுமான நிறுவனம். அதேவேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்**

**(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. அமானா வங்கி பிஎல்சி
2. இலங்கை வங்கி
3. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
4. டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
5. அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. நஷனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
8. நேஷன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி
9. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. செலான் பாங்க் பிஎல்சி
12. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**(ஆ) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
2. லங்காபுத்ர டெவலப்மன்ட் பாங்க் லிமிடெட்
3. பிரதேசிய சங்வர்தன பாங்க்
4. சணச டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்

**(இ) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

1. அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
2. கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட்
3. எல்ஓஎல்சி மைக்ரோ கிரடிட் லிமிடெட்
4. நியூவெஸ்ட் கப்பிட்டல் லிமிடெட்
5. எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி
6. யுனிசன்ஸ் கப்பிட்டல் லீசிங் லிமிடெட்

(ஈ) மேலே பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

முதனிலை வணிகர்கள்

1. அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட்
2. இலங்கை வங்கி
3. கப்பிட்டல் அலையின்ஸ் லிமிடெட்
4. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
5. என்ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி(அ)
6. பர்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் பிஎல்சி
7. நற்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட்
8. என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட்
9. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் பிஎல்சி(ஆ)
10. மக்கள் வங்கி
11. பேப்பச்சுவல் ரெஷரீஸ் லிமிடெட்(இ)
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. செலன் பாங்க் பிஎல்சி
14. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
15. வெல்த்ரஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட்

(அ) அரச பிணையங்கள் முதனிலை ஏலங்களில் பங்கேற்பது 2017.07.24 இலிருந்து விலக்கப்பட்டது.

(ஆ) 2017.08.15 இலிருந்த நடைமுறைக்குவரும் விதத்தில் ஆறு மாத காலப்பகுதிக்கு முதனிலை வணிகர் ஒருவராக வியாபாரங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதிலிருந்தும் இடைநிறுத்தப்படுகிறார்.

(இ) 2017.07.06 இலிருந்த நடைமுறைக்குவரும் விதத்தில் ஆறு மாத காலப்பகுதிக்கு முதனிலை வணிகர் ஒருவராக வியாபாரங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதிலிருந்தும் இடைநிறுத்தப்படுகிறார்.

## 31. பயிற்சி மற்றும் அபிவிருத்தி

வங்கியின் மனித மூலதன அபிவிருத்திகளில் உருவாகிவரும் தேவைகளைப் பூர்த்திசெய்தல் நோக்குடன் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் 2015 யூலையில் நாணயச் சபையினால் நிறுவப்பட்டது. பயிற்சித் தேவைப்பாடுகளை அடையாளம் காணுதலும் பயிற்சி இடைவெளியினை நிரப்புவதற்கான உபாயங்களை உருவாக்குதலும், வருடாந்த பயிற்சித் திட்டத்தினை தயாரித்தலும் நடைமுறைக்கிடலும், அறிவுத்திறன் இயலளவை கட்டியெழுப்புவதற்கு வசதிப்படுத்தல், வங்கி அலுவலர்களுக்கு அவர்களின் பட்டப்பின் படிப்பிற்கு உதவுதல், வங்கி அலுவலர்களுக்காக வெளிநாட்டு/ உள்நாட்டு குறுகிய காலப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் மற்றும் அலுவலர்களுக்கிடையே அறிவினைப் பகிர்ந்துகொள்வதற்கு வசதிப்படுத்தல் போன்றவை பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளாகும்.

### 31.1 பட்டப்பின் கற்கைகள்

2017 காலப்பகுதியில் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், உயர்வகுப்பு அலுவலர்களின் பட்டப்பின் கற்றைகளுக்கு அனுசரணை வழங்குதலுக்கு வசதியளித்தது. அவுத்திரேலியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் 5 அலுவலர்கள் முனைவர் நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கும் 09 அலுவலர்கள் முதுமானிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் தொடர்வதற்கு அனுசரணை வழங்கிய வேளையில் அலுவலர் ஒருவருக்கு உள்நாட்டு பல்கலைக்கழகத்தில் முனைவர் நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான அனுசரனையினை வழங்கியது. அதேவேளை, ஆண்டுக்காலப்பகுதியில், முனைவர் நிகழ்ச்சித் திட்டத்தினை நிறைவுசெய்த 6 அலுவலர்களும் முதுமானிப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினை நிறைவு செய்த 18 அலுவலர்களும் வங்கிப் பணிக்குத் திரும்பினர் (அட்டவணை II - 28).

### 31.2 குறுங்காலப் பயிற்சி

வங்கி அலுவலர்களின் தகைமை இடைவெளிகளைக் குறைக்கும் நோக்குடன் 1,572 குறுங்கால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் வங்கி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இத்தகைய பயிற்சி இடைவெளிகள் 2016இன் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த தகைமைகள் திட்டமிடல் செயன்முறையினூடாக அடையாம் காணப்பட்டன.

#### 31.2.1 குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி

ஆண்டுக் காலப்பகுதியில், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தினால் 308 குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள், புகழ்பெற்ற வெளிநாட்டுப் பயிற்சி நிறுவனங்கள், இங்கிலாந்து வங்கி, டியூச்புண்டஸ் வங்கி, இந்திய றிசேர்வ் வங்கி, மலேசிய நெகரா வங்கி, கொரிய வங்கி, ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் வங்கி மற்றும் சிங்கப்பூர் நாணய அதிகாரம் போன்ற முக்கிய மத்திய வங்கிகள் போன்றவற்றினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள், ஆய்வரங்குகள், மாநாடுகள், கற்றல் சுற்றுலா மற்றும் கூட்டங்கள் போன்ற முறைகளில் வழங்கப்பட்டன. மத்திய வங்கி அலுவலர்கள், பன்னாட்டு நாணய நிதியம் (ப.நா.நி), உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, தென்கிழக்காசிய மத்திய வங்கிகள், பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கி, இந்திய தொழிநுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு, மலேசியா புத்ரா பல்கலைக்கழகம் போன்ற பன்னாட்டு நிதியிடல் முகவர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றினால் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களிலும் பங்கு பற்றியிருந்தனர். 2017இல் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தினால் டியூச்புண்டஸ் வங்கி - ஜேர்மனி, பங்காளதேசத்தின் ஆசிய பசுபிக் கிராமிய மற்றும் வேளாண்மை கொடுகடன் சங்கம் மற்றும் இந்தியா லங்கா கிளியர் லிமிடெட் போன்றவற்றிலான 03 கற்கை விஜயங்களுக்கு வசதியளித்திருந்தது. (அட்டவணை II - 29 ).

அட்டவணை II - 28

**இலங்கை மத்திய வங்கியின் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டப்பின் படிப்பைத் தொடங்கிய மற்றும் நிறைவு செய்த அலுவலர்களின் எண்ணிக்கை. (2013 - 2017)**

| கற்கைகள் | 2013 | | 2014 | | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் | தொடங்கியோர் | நிறைவு செய்தோர் |
| முனைவர் பட்டம் | 6 | 0 | 5 | 2 | 3 | 5 | 4 | 3 | 6 | 6 |
| முதுமானிப் பட்டம் | 11 | 19 | 24 | 11 | 19 | 21 | 15 | 18 | 9 | 18 |

**அட்டவணை II - 29**
**குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி - 2017**

| துறை | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நாணயக்கொள்கை, பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரம் | 51 | 74 |
| நிதியியல் முறைமை உறுதிப்பாடு | 71 | 96 |
| இடர்நேர்வு முகாமைத்துவம், சட்டம் மற்றும் இணங்குவிப்பு | 11 | 14 |
| சொத்துப்பட்டியல் முகாமைத்துவம் | 23 | 28 |
| மத்திய வங்கித் தொழில் | 6 | 14 |
| தகவல் தொழில்நுட்பம் / கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு | 10 | 13 |
| நாணய முகாமைத்துவம் | 8 | 11 |
| மனிதவள முகாமைத்துவம் | 10 | 26 |
| நுண்பாக நிதி | 7 | 11 |
| ஏனையவை | 12 | 21 |
| **மொத்தம்** | **209** | **308** |

பயிற்சித் திட்டங்களினூடாக பெறப்பட்ட அறிவினையும் வெளிப்படுத்தல்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பல்வேறுவகையான ஒப்படைகளின் மூலம் தொடர்பான அலுவலர்களினால் பெறப்பட்ட குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சியின் செயல்திறனை தொடர்ந்து மதிப்பிட்டது. இந்நடவடிக்கைகள் பயிற்சிக்கு பின்னரான கண்காணிப்பு தொடர்பில் பயிற்சிக்கான துணைக் குழுவொன்றினால் கண்கானிக்கப்பட்டது. 2017 காலப்பகுதியில், 2 பயிற்சிக்கான துணைக்குழு கூட்டம் நடைபெற்றது. இதன்படி, 2017 இல், குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய 34 அலுவலர்களில் 27 ஒப்படைகள் நிறைவு செய்யப்பட்டன. (அட்டவணை II - 30).

**அட்டவணை II - 30**
**2017 இல் குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களினால் நிறைவு செய்யப்பட்ட ஒப்படைகள்**

| வகை | ஒப்படைகளின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கான வழிகாட்டல்கள் | 2 |
| கட்டுரைகள் மற்றும் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகள் ஊடாக அறிவினைப் பகிர்ந்துகொள்ளுதல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு | 16 |
| முறைமைகள் மற்றும் செய்முறைகளை மேம்படுத்துவதற்கான முன்மொழிகள் | 9 |
| **மொத்தம்** | **27** |

### 31.2.2 குறுங்கால உள்நாட்டுப் பயிற்சி

ஆண்டுக் காலப்பகுதியில், பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், வங்கித் தொழில்கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் மற்றும் ஏனைய புகழ்மிக்க உள்நாட்டு நிறுவனங்கள் போன்றவற்றில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வரங்குகள், செயலமர்வுகள், போன்ற முறைகளில் வங்கி ஊழியர்களுக்கு 1,264 குறுங்கால உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியது. இவை முக்கியமாக, பொருளாதாரம், புள்ளிவிபரம், கணக்கியல், வங்கித்தொழில், தகவல் தொழில்நுட்பம், சட்டம், கணக்காய்வு, நிதிய முகாமைத்துவம், இடர்நேர்வு முகாமைத்துவம், செயலக நடைமுறைகள், மனித மூலதன அபிவிருத்தி, வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, நிதியியல் சந்தைகள், வெளிநாட்டுச் செலாவணி, நாணயம் மற்றும் பிரதேச அபிவிருத்தி போன்ற விடயங்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டுக்காலப்பகுதியில், வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநிலையம் மற்றும் ஏனைய நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை முறையே 756 ஆகவும் 508 ஆகவும் காணப்பட்டது.

### 31.3 செயலமர்வுகள் மற்றும் அறிவினைப் பகிர்வு

2017இல் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திணைக்களமானது “பன்னாட்டு வர்த்தகமும் வெளிநாட்டுத் துறை பிரச்சனைகளும்” எனும் கட்டமைக்கப்பட்ட உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை ஒழுங்குபடுத்தியிருந்தது. மேலும், பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி திணைக்களமானது வெளிநாட்டு பயிற்சிகளில் பங்குபற்றி திரும்பிய மற்றும் பட்டப்பின் படிப்பினை முடிவுசெய்து பணிக்கு திரும்பிய இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளை மேற்கொள்ள வசதியளித்திருந்தது.